உ

திருச்சிற்றம்பலம்.

சுத்தாத்வித சைவசமயாசிரியராகிய

ஸ்ரீமத். வாலஸகுருசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பாடல் திரட்டு.

திருச்சி, பெரம்பலூர் கஸ்பா போர்ட்பஞ்சமர்
பாடசாலை உபாத்தியாயர். ம-ள-ள-ஸ்ரீ
ந. மு: அருணாஜலம் நாயனாரவர்களால்

பெரம்பலூர் கஸ்பா
ம-ள-ள-ஸ்ரீ ப. பழனிமுத்துஅடியார்
அருணாசை. செல்லமுத்து அடியார்.

இவர்கள்பொருட்சகாயத்தினால்

சென்னை பழைய வண்ணாரப் பேட்டை
நாயனார் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.
பிரமாதீச௵ சித்திரைமீ
1913.

இதன்விலை. ரூபா. 2-4-0

Registered copy Right

OFFICE OF THE REGISTRAR REGISTERED 7 AUG 1913 448 MADRAS

1915 894.8111.08 448 77009 82:417 N13

உ

சரஸ்வதிதுணை.

# முகவுரை.

ஸ்ரீ கைலாசப் பரம்பரைத் திருவருட் பிரகாசவள்ளலாராய்த் தலைமுறைகடோறும் மகாமகத்துவம் விளங்கிவரும் ஸ்ரீமத். சங்கராகிய ஆள்கொண்டசுவாமி- ௧. ஸ்ரீமத். முத்தானந்தசுவாமி ௨. ஸ்ரீமத். திருச்செந்தூர் குமரகுருவாகியமாதாபிதாசுவாமி. ௩. ஸ்ரீமத். சட்டைப் பரதேசிசுவாமி. ௪. ஸ்ரீமத். வாலைகுரு குணங்குடிமஸ்தான்சுவாமி. ௫. ஸ்ரீமத் திருவள்ளுவ நாயனாராகிய கொள்ளிமலை வண்டி சித்தர், ௬. ஸ்ரீமத் காஷிகோஷாபிசட்டி சுவாமி ௭. ஸ்ரீமத் பரமுத்தங்குணங்குடி கருவூர் கந்தபரதேவஸிமஸ்தான் ௮. ஸ்ரீமத். சங்கிலி சுவாமிகளுடன் இந்த நூலாசிரியர் வீடு தேடிவந்து குருசமேதராக யிருந்து ஷை சுவாமியால் சோடஷோபசாரமாய் அர்க்கபாத்திரமளித்து பூசனை செய்தவராக யிருக்கும்போது உபமன்னிய உபாசன முகூர்த்தமாய் உபதேசம் செய்தருளப் பெற்று ஷை சுவாமி தசவிதத் துறவுகளில் சிலவிதத்துறவுகள் செய்துவரும்போது சகசாநுபூதியாகத் தானடைந்தச் சுவாநுபூதிநிஷ்டாநுகூலத்தால் திருவாய்மலர்ந்தருளிய திருப்பாடல் திரட்டை ஷை சுவாமிகளுக்கு மடாலயம், குளம், நந்தவனம், ஓமபாகம், தவம், எக்காலமும் செய்து நிறைவேறும்படி விலைப்புத்தகமாக்கிச் சேர்ந்த திரவியசகாயத்தைக் கொண்டு முடியும்பொருட்டு திருச்சினாப்பள்ளி- ஜில்லா பெரம்பலூர் தாலுக்கா கஸ்பா போர்டு பஞ்சமர் ஸ்கூல் உபாத்தியாயர் ந.மு. அருணாஜலம் நாயனாராகிய எனது வேண்டுகோளால் ஷை தாலுக்கா மகாசிவபக்தியுடைய ப. பழனி

முத்து அடியாராலும், அருணை. மு. செல்லமுத்து அடியாராலும் தங்களால் கூடியப் பொருளுதவிச்செய்தருளப்பெற்று ம-ா-ா-ஸ்ரீ கனம் சேலம் கிச்சிப்பாளைய மிருக்கும் சிவதருமோத்திரம் நடாத்திவரும் அ. குழந்தையானந்த நாயனுர் அவர்கள் சகோதரரும் ஸ்ரீ-பாலையானந்த சுவாமிகள் சீடருமாகிய, அ. கு. மஹாலிங்க நாயனுர் இவர்கள் அநுமதியைக் கொண்டும் பதிப்பிக்கப்பட்டது.

இங்ஙனம்.
ந. மு. அருணாஜலம் நாயனுர்.
பெரம்பலூர் கஸ்பா
போர்டு பஞ்சமர் எலிமெண்டரி
பாடசாலை உபாத்தியாயர்.

# புத்தகவிளம்பரம்.

இப்புத்தகம் தேவையானவர்கள் திருச்சினுப்பள்ளிஜில்லா பெரம்பலூர் தாலுக்கா கஸ்பா போர்டு எலிமெண்டரி பஞ்சமர்ஸகூல் உபாத்தியாயர் ந. மு. அருணஜலம் நாயனுரிடத்தில் புத்தகமொன்றிற்கு 2-அணு-4 ஆ வி. பி. மார்க்கத்திலாவது இன்னும் எவ்வித முகாந்திரத்திலாவது பணம் கொடுத்து வாங்கிக் கொள்ளலாம்.

உ

கடவுள் துணை.

சுத்தாத்துவிதசமயாசாரியராகிய

# ஸ்ரீமத். வாலகுரு சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# திருப்பாடற்றிரட்டு.

## அறிவானந்த மௌனபொருள்.

பதினான்குசீர்க்கழி நெடிலடியாசிரியவிருத்தம்.

அகாரமுத லாயாதி யந்தநடு முடிவிலா
தகண்டசின் மய சோதியா
யத்துவித ஞானபூ ரணமாயுஞ் சச்சிதா
னந்தபெரு வெளி யாதியா
யிகபர மனைத்துமுயி ருணர்வாகி பூதமா
யிருந்த தெது யவைபேதமா
யின்பதுன் பங்களெது யினிகால மூன்றுமாய்
விரித்தெடுத் துரைப்ப தெதுதன்
சுகவாஸ னத்தினொடு சும்மா யிருக்கவரு
டோன்றநிறை நினைவு மெதுமுன்

துணையெனவு மடுக்காக வண்டகோ டிகளெலாஞ்
சொப்பனித் திருப்ப தெதுமெய்
நிகரொப்ப யென்றுமுனை நியமநே மாதியுட
னிருந்ததெது அழி யாமலே
நினைவுநிலை நிலைத்துநிசி பகலறமெய் யுள்ளொளிர்
நிறையருளை போற்றி செய்வாம். (க)

நித்யசிவ கருமமுயர் தவசாந்த நேமவணு
நிர்மலவி தேக முத்தி
நிஷ்களா னந்தசிவ ராஜாங்க மௌனமொடு
நினைவுசுப ஜெய மென்னவே
சத்யமொடு வுபநிடத சத்துவா பத்திவெகு
தருமமொடு அஷ்ட சித்துஞ்
சாகாத கல்வியுய ரைராவதம் மாளுகை
சகலபா ஷைக ளடிமையும்
பத்தியொடு நிலைநிற்க பெற்றபல னென்னயிரு
பார்வையற குந்தி தன்னுள்
பகலிரவு மற்றநடு வீட்டிலா னந்தபர
வசமாக சமாதி யெட்டும்
அத்திமத கரிமூல வனலூதி யென்றுநா
னத்துவித முறையில் சும்மா
ஆதியேவந்தநடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பொருளே. (உ)

தூதாக யென்மனந் துசங்கட்டி செல்லவைம்
பொறிபூத புலன் கருவிகள்
சுழல்காற்றெனச் செறுமி தழல்மெழுகி லுருகமத
சுவடுபுதர் வாயில் பற்ற
வாதாக பிறவிசா கரக்கல்வி யிடமேவல்
வருவினைகள் விவ கரிக்கு

மதிகரும மெண்ணிலோ பெரிதுசிறி துலகமத
மன்னு:கோபாதி பேய்கள்
சூதாக கன்மவிந் திரியமல மூயவச்
சாகரமீ தைய வையோ
சுருதிமறை யடியிட்டு தொழும்பெரிய தெய்வமே
தொக்கு சட்சாதி குடிலை
ஆதார மாகவொய் நினைவான தொட்டியி
லழல்போலு முருக தகுமோ
ஆதியே வந்தருடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பொருளே. (ங)

மூதுநன் னெறிகற்று மருளு சுகவாசன
முழு திருக்து சுவாசமாய்
முடங்கிபே ரின்பபெரு வெளிசோதி யமிர்தகலை
முழுஞான வின்ப யோகம்
போதுநா னுறையிட்டு சொல்லிய வனைத்து மீது
பூரண னந்த மடுவில்
புத்தியொடு வெகுபேத நெறிகளற நிருவிகற்
பாதிக்கு புனித மிகுவாய்
சூதுகவ டிடும்பாதி படிருண வக்களவு
தா.றுகொலை யாதி கன்மஞ்
சோறிடுமும் மலவாபி லூணுறக் கங்களிது
சொல்லவோ துணை யொன்றிலை
யாதுசொல் லிடி னுமுன திரக்கமொன் றிலையேது
ஐயவுன் னருளை விடுகேன்
ஆதியே வந்தருடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பொருளே. (ச)

ஒன்றான பெருங்கருணை ஞானமபே ரின்பமே
யோராறு வீட்டி னிலை

யுயரைந்து பூமியிடை யவஸ்தாதி கருவியற
வுசுவாச நிசியற வெனுள்
நன்ருக ரேசித்து பூரித் தொடுங்குமிரு
கலேனேரெனக்கும் பகம்
நடுவாகவுங் கவலே யற்றபரி பூரண
ராஜயோ கங்கள் சொல்வார்
கொன்றுதீ தறவாசி சாதனைகள் பழகுவார்
குருவான மூல வட்டக்
குண்டலியி லொருநான்கு கலேகட்டி துருவணையில்
குறியொக்க நிற்ப தெளிதோ
அன்ருலி னிழல்நான்கு மறநின் றுணர்த்து மொரு
வற்புத வரூப வறிவே
ஆதியே வந்தநடு முதலான தெய்வமே
அறிவானந்த மௌன பொருளே. (ரு)

கலேடாயு மாகாய வட்டநடு யிரவுபகல்
கண்ணுக்கு செவி பொறியுடன்
காலாடு தசவாய் வெனப்பெரிய மதலோப
கவடுபொறை யினக் கருவிகள்
புலேகொலேகள் மேலிட்ட கன்மதீ மேலுமுடல்
புந்தியோ டுண்டு றங்கி
பொழுதென விழித்தெழுந் துபநிடத மனுக்யான
போதுநெறி முதலுரைப் பேன்
நிலேயற்ற யிவ்வுடல நிலேயென் றிருக்கவெகு
நீத தவ விரத சீலம்
நிஷ்டைசிவ ஞானநிலே யநுமான விவகார
நியமமொடு விவ கரிப்பேன்
அலேவற்ற நிர்ச்சிந்தை யாக்கவரு ளறிகிலேன்
ஆயென்ன புதுமை பாமே

ஆதியே வந்தருடு முதலான தெய்வமே
அறிவானந்த மௌன பொருளே. (௬)

போதிக்கு மாதியொரு பொருளல்லவோ யெந்தை
பூரணனந்த குருவே
புருவணையி லுருவுவெளி புதுவீடு கட்டிநான்
பொறைகருவி யற பிராணன்
தூதிடுபொய் வழக்கற்று சும்மா யிருக்குமொரு
சுயஞ்சோதி கருணாகரஞ்
சூழமுத யாதியரு ளோலிட சிறந்தமூர்த
சுருதியநு பூதி காட்டும்
பாதயருட் டாரக மிசைந்தபூ மிக்குள்யான்
பதுமா சனங்க ளிட்டு
படிந்தொழுகு வித்வதா ரணைக்குமருள் பொதுவிட்டு
பகர்ந்தறியு தேவ தருவே
யாதுமுறை சொல்லினு முளத்துவித குணசாந்த
வரூபவெளி யொன்று தருவாய்
ஆதியே வந்தருடு முதலான தெய்வமே
அறிவானந்த மௌனபொருளே. (௭)

வெளிமண் டலங்கருணை சபைமண் டலம்பெரிய
யுகமண் டலஞ் சுயம்பு
வேதமறை யொலியிட விளங்குமருள் மண்டலம்
விண்ணுமண் ணுளர் தேடிடும்
ஒளியிட்ட வறிவொழுகு மதிமண்டலங் கதிர்சூ
ழுயருமண் டலங் கடந்து
மொலிவிந்து நாதாந்த மண்டலமி ருறுகலை
யுறையுமண் டல மறிவிலாத்
தெளிவுற்ற வத்தனையு முயிரென விளங்கவரு
தெக்ஷணா திக்க மூர்த்தி

செயலிலென்ன பிரம்மனுதியர் பேசுமாங் காங்கு
சின்மயா னந்த வெள்ள
மளிக்குமொரு மனுவாதி யாதுமற தருகுமறு
யார்பெறுவ ரமலர் கோவே
ஆதியே வந்தநடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பொருளே. (அ)

பெருவெளி யொன்றுறுவ சிவசிந்தை யசையாத
பேசாப் பெருமையருள் புரியவும்
பிறப்பிறப் பில்லாத பேசாத மோனநிலை
பேரின்ப மருள்புரியவும்
குருவான நந்திகொலு பிரபைவெளி வட்டமாங்
குண்டலியு னருள் புரியவும்
குந்தியுட் கார்ந்துசிவ அஷ்டாங்க யோகமுறை
குருநீதி யருள்புரியவுங்
தெருவாறு தாண்டிமன வாய்வற்ற பரவெளி
செயலென்று மருள்புரியவுஞ்
சித்தாந்தங் கண்டுசிவ வேதாந்த மறியுமருள்
செயலென்று மருள் புரியவும்
அரூபவெளி நடுவில்வெகு சுருக்காக ஆதியெனு
மையர்வந் தருள் புரிகவே
ஆதியே வந்தநடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பொருளே. (கூ)

ஆதிநடு வந்தவெளி காட்டிமன முடங்குமொரு
அறிவுதந் தருள் புரியவு
மத்துவித விவேகமெடுத் துரைக்கவருள் வெளிவந்து
அன்புமே லருள்புரியவுஞ்
சோதியென மனுவாகி சொல்லாமல் சொல்லுமுப
தேசமொன் றருள் புரியவுஞ்

சுணங்கனைப் போல்மனஞ் சுழலாது சுரமாஞ்
சுழுத்தியொன் றருள் புரியவும்
பர்திமறை யிட்டவெளி நாதவிந் தாதியுடன்
பகலென்று மருள்புரியவும்
பத்திமறை யடியிட்ட பரத்தைமற வாதவொரு
பராபூசை யருள்புரியவு
மாதித்த னென்னகுரு வகத்தீச னுமிருகண்
ணறிவுவந் தருள் புரிகவே
ஆதியே வந்தநடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பொருளே. (௰)

வர்தமனு வானகுரு பாதமற வாதகதி
வரந்தந்து அருள் புரியவும்
மவுனமொடு சதாநிஷ்டை பரிபூரணக் கருணை
மதிதந்து அருள் புரியவும்
புந்தியொடு வாதாடு மலகைதெரு வகலுமொரு
புத்திதந் தருள்புரியவும்
புனிதமொடு யென்றைக்கும் பூருவக் கியானமுறை
பொருள்நிஷ்டை அருள் புரியவும்
எந்தையெழு பிறப்புமறி வானகுரு நாதனன்
னெழில்கருணை யருள்புரியவும்
எண்ணாது கண்மூடி யிகபர மிரண்டிலுயிர்ப்
பென்னூரு மருள் புரியவும்
அந்தகா ரங்களற தந்தையெனு மென்குரு
அகத்தீசர் வந்தருள் கவே
ஆதியே வந்தநடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பொருளே. (௰க)

தந்தையெனு மென்குணங் குடியான பரமகுரு
தந்தைவந் தருள் புரியவுந்

தாயாக வமுதூட்டு சச்சிதா னந்தகுரு
சைவன்வந் தருள் புரியவும்
மந்தியென குசாலாடு மனக்குரங் கடங்குமொரு
வாசிவச மருள் புரியவு
மதிகலை யடங்கவு மிரவிகலை சூடவு
மவுனம்வர வருள் புரியவும்
முந்தாது மனவாசி மேலேறி முச்சந்தி
மேல்நோக்க வருள் புரியவு
மூலகுண் டலிவாசி தாணுகை வூதுமொரு
மூலமொன் றருள் புரியவும்
அந்தமென சாயாத ஆகாய வட்டிமேல்
அகத்தீசர் வந்தருள் கவே
ஆதியே வந்தநடு முதலான தெய்வமே
அறிவானந்த மௌன பொருளே. (டுஉ.)

பூரண விலாசவெளி கிடந்திருந தெழுந்துவரு
புரம்புத்தி அருள் புரியவும்
புருவநடு வணை தூக்கி துரியாதி வீட்டிலிர
புனிதம்வந் தருள் புரியவும்
காரண மறியவுந் தூலவுடற் சூக்ஷமங்
கடந்துநிலை யருள் புரியவுங்
கடவுளென தருமை திரு மூலகுரு வானமனு
கடவுள்வந் தருள் புரியவும்
வாரண மடுக்கபணி பூரகங் கடந்தசிவ
நந்திவீ டருள் புரியவும்
வாசிய துறங்கிமன மாயையை பொசுக்கவரு
மகாஞான மருள் புரியவும்
ஆரண விலாசமறை வேதாக மங்கள்சொலு
மகத்தீசர் வந்தருள் கவே

ஆதியே வந்தநடு முதலான தெய்வமே
அறிவானந்த மௌன பொருளே. (௰௩)

அதுவாக சாக்ஷிசிவ ஞானயூ கங்கள்சொல
அத்துவித மார்க்க மாகு
மலைகடற் றரும்பெனவு மந்தகா ணங்களொடு
அசையுமரு ளிருக்க கன்மம்
இதுவாக பருகுமுயர் மதிவீடு கட்டிநா
ணியற்றவே மவுன முண்டாய்
இகபரமு முயிரான நடுவீட் டிருநதுண்டு
யிரவுபக லற்ற வமுதம்
பொதுவாக வுங்கருணை பெற்றபே ரின்பநலம்
பூரித்து பரிபூ ரணப்
புத்தியொடு தூங்கிபுரி யட்டமது பாயாது
புலன் பொறிகள் பூதமறவே
அதுவான கருணைமே லிட்டொழுகு மதீதமே
அரூபவெளி தந்தருள் கவே
ஆதியே அந்தநடு முதலான தெய்வமே
அறிவானந்த மௌன பொருளே. (௰௪)

வஸ்துவினு மிக்கபரி சுத்தனு யென்னையே
வழிவிடற் கருள் புரியவும்
மகனேநீ வாவென்று வாலைமணி தாய்வந்து
வசனிக்க வருள் புரியவுங்
கஸ்திபல தூருபுடை கருவியா திகளற்ற
கருணைவெளி யருள் புரியவுங்
கருத்தற்ற பயலென்று வாயார பேசாது
கனிந்தழைத் தருள் புரியவும்

முஸ்தீபெ லாஞ்சொலிக் கண்மூடி வாசியா
மூலவன லருள் புரியவும்
முத்திதரு சச்சிதா னந்தவெளி முச்சந்தி
முடிதாண்ட அருள் புரியவும்
அஸ்தியென வுயிரெலா மறிவான அகத்தீஸ
ரருகில்வந் தருள் புரிகவே
ஆதியே அந்தநடு முதலான தெய்வமே
அறிவாநந்த மௌன பெருளே. (௰௫)

# சச்சிதாநந்தபொருள்.

சற்குருவெனப்பெரியதாரணைகளாறினுந்
தானறநின்றறிவடுக்குஞ்
சாதனைபயிற்றிநடுவீட்டில்நானுண்டுண்டு
சமரஸவேதாந்தஞானம்
கற்பிக்கதுங்கியுறங்காதசிவநிஷ்டாறு
கலையினிற்கலந்துசும்மா
கருவிகாணங்களறகாட்டுமொருபெருமையெது
கல்லாதபுலையனொருவன்
துற்புத்திகற்றுசிவநற்புத்தியில்லாத
துட்டனைச்சிறக்கதூறு
சொல்லிபிரபஞ்சவழல்சுழலிலேபற்றுமெனை
தொடர்ந்துநீயாள்வதற்கே
சற்புத்திசொல்லுமெனதன்னையிலுமேலான
தந்தைநீ கருணை கூராய்
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (க)

மேலாறுவீட்டிலுங்கலைவாசிபாயவாய்
வீணைய்ப்பிதற்றியமரு
மெய்த்தவமிருக்கநானென்றபுறைதிமிறுமிது
செயலடிமைவைத்ததெவர்முன்
காலாறுமடங்கமதிரவிபாய்ந்திராதபெரு
கருணைவீடொன்றுசெய்து
கற்பனைசிறந்தபரி பூரணவிலாசவரை
கட்டிதனையறிந்ததெதுபின்
தூலசூக்ஷமமேலுங்காரணஞ்சிறந்தவொரு
தொகுநிவசமாகியருளுஞ்

சொரூபமொடுசித்தாந்தவருணிலையைபேசிமண
தொழிலிட்டிருந்ததெவரோ
சாலமிதுயென்றைக்குஞ் சகசாநுநிஷ்டைபெற
தகுதியிதுகருணமெந்தாய்
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (உ)

சதாகாலமன்றியுகவதிசயஞ்சிறந்தவெளி
தனிவரையிலாதியந்தம்
சகசவநுபூதியுடனசையாதுநடுவணையில்
சத்தாதிபரிசபொறிகள்
சிதாகாசபூர்த்தியாய்வளர்மாயமனந்தீய
திருநந்தி மௌனி முறையில்
சிந்தைபரிபூரணவிலாசவறிவானந்த
சிற்பரம்விளங்கலென்றே
நிதானமொடுபழகுமுபசாந்தநிருமலரகித
நிருவிகற்பாதிநிலயம்
நித்யசிவமயகருணைநிறைசூன்யவருள்சகித
நிஷ்களவபூதநிலையாய்த்
ததாவெனும்பெரியகருணையானந்தமே
சதாகாலம்வந்தருள்கவே
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (௩)

மற்றுமொருகருமமூண்டகமாயதந்திர
மகற்றநகைபுரியவைந்தும்
வசனநிகமனமயர்ப்பொறிகருவிமலஞ்சாறு
வாழ்க்கைநமதாகவேதங்

கற்றபடிதவறுததவசீலபிராணுய
கற்பனைகளுளவுமேலுங்
கதியருளிநினைவுவெகுகபடெனவுமாசைபுரி
கருமங்களெடுத்து வுலகப்
பற்றலொடுநாணுவிதச்சொப்பனங்கள்பெற
பகுத்தெடுத்திருப்பனுன்னை
பணியதினமெண்ணிலோபரமார்த்தமன்றிபெரு
படுகுழியில்விழுவர்போலுஞ்
சுதிசெய்யுமிடையூறெலாங்கதிர்ப்பனியெனத்
தானேகவருள்புரியவுந்
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (௪)

இடையுமனமணுவளவுநேசநிலைபெருகாது
யிழுக்கிழுக்குறைமூடியென்
னிதையமுறவாடுபுலைகதிமூழ்குமிருமைதுய
ரிமையின்றியமரரின்புக்
கொடையருளுமிகயூககளவுசிலைமதமுண்ணு
கோளரசுபரிமாறிடுங்
குணமிக்கதனகனவிரட்டமிடுசுகசாந்த
குறைவிலாவறிவுமற்றும்
படையொடுமிருந்துஜயபேரிடமரகங்கொட்ட
பழமைநூலறிவுபேசி
பகலெனமிரட்டிவாயுறைமீளவம்பிடுவன்
பரதேசியென்றுவுலகில்
தடையறவுபாசித்துறங்கிணனப்பிரளி
சடுதியிதுதருமநன்றே
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (௫)

சமயநெறியாளரிடுகோபாதிவழக்குமலஞ்
சாருசோறிடுதுருத்தி
சங்கற்பமன்றிமுறைபயிலுதடைதமர்தார
தந்தைதாயுறவுசகல
வமதிசிவதருமசாஸ்திரநீதியன்றியறி
வாய்மைபொருளருச்சிப்பரவ்
வறிவாளரிடுகொடுமைஅநியாயமவரில்சிவ
யோகியெனவாய்மடுத்து
நிமைப்போதுமறவாதநெறிபேசிபின்றூது
நிலையாகிபொய்மதிதமேல்
நீசமனமேசவாய் மதங்கொண்டுதூற்றுவர்
நிர்மூடர்நியமநேமந்
தமையறியவொருவர்திருகருணைவழியாகுமோ
சதாநிஷ்டைதந்தருள்கவே
தருபரமதிருநந்தி பிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (கூ)

பெருமைதருதுரகபரிசெலுத்திவருவீரன்பர்
பேசுமுன்வருவரெதிரே
பேதமனமடங்கசிவஞானமதிபேசுவீர்
பேரின்பசண்டைசெய்வீர்
தெருவாருங்காட்டிசெயல்முறையெழுதிசிந்தைவச
மாகாதுரைத்திருப்பீர்
செத்தசவம்போலட்டசித்துவுபதேசிக்கு
ஞானநித்திரையளிப்பீர்
கருவாகவுங்கனகமாற்றுககற்பொடிகள்
கனதவசுகாக்கிவைப்பீர்
கற்பித்ததெல்லாமுணடுண்மையேகடவுளெனு

கலந்தாடுகின்றபொருளே
தருமமுடனென்றைக்குமுபாத்தியாராகமிக
சலுதிவந்தாளுதற்கே
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (எ)

அருளொழுகவானந்தபொருளுருவமருளிரு
வபேதநிலைவெருவமலநீர்
இருளறுகநிறைஞ்சனவருருவகருணைலம்ப
இன்பநிறைகலைமருவதா
னிருகலையுமறுவரைகண்பெறுகருணைதிருமக
ளென்புறுகவெளியுமேரு
பருபதமுமொருபெருமைகருவியறபுலனுதி
பார்வைபொறிபருகமாயை
துருவதிமிரொழுகநுகரெறிகருவிமதநெருவ
சுருதிமருபுயர்கிரியிலூர்
தெருவணையிலிரவியிடைகலைபுருவசிறுமணையிற்
றிருகடவுள்தருவிசையவுஞ்
சருவபரம்பரையிலுயர்குருவானவென்னிருகண்
தந்தயெம்மகத்தீசனே
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே (அ)

படமெனவுளிடறுயிர்கணிடமகவிடமிர்தமல
பாயுமறிவுசிதகமனம்
பற்றுடலெடுத்தடவிமுற்றுமடமிடுமேவல்
பகடிதினமமையகவடு
விடவரவுகடியதொடரிருளொடிருகண்புலனின்
வேட்கைபலநாளுமுளதே

மிடற்குழைடமுளைதசவிராடனிரணியனிடுவ
மிகைகருமமரியவெருவேவய்
நடமிடுபொய்தடவுலகசடியமரிலிடியநுகர்
பொறிகடியுமெனையுருகவே
நடுவிலுருபெறநினைவுஅடிமைகெடவொலியுகமை
நசகசறேகவிறவுநேர்
சடமொடுயிர்பெறமறைகளுறைறதிடவிகடகுறிகள்
வருகமுறைதினமமதையீ
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (கூ)

நினைவானபரியேருமிருள்மாயையெனும்பெரிது
நிமையூறுமனப்பழக்கம்
நிலைமையுயிரெனவலையுமிகவதிககருமபுல
னிலைவழக்குயர்பூமியில்
எனையன்பருடனுளுபரமகுருவானநீ
ரேதுலகபகடிபேசும்
இன்பதுன்பங்களுடனகைபேசிபிரபஞ்ச
யிழிவழக்குயர்வநேகம்
முனைசொருபமதியூகமுத்திவழியுத்திமறை
முன்னுதிதொடக்குடமைநீ
முழுநீதிபடைத்தவருமபுருபமானபொருள்
முறைசொல்லவெளிதல்லவென்
றனையறியநினைவுதருசம்புசிவசங்கரா
தடமொன்றுதந்தருள்கவே
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதாநந்தபொருளே. (ம)

கருணையமுதொழுகவருள்பூரித்துபூரணக்
கலையொழுகுமவுனமலரில்
கண்டேங்கினானெனுங்கவலையறகற்பகந
னீழலிலிருந்துவறியும்
பெருங்கருணைமடைபாயுமுயர்வீடுகட்டிநான்
பேசாதுபெற்றபெரியோர்
பிராணயதீபமொடுபழகிமனமசையாத
பிரமமொன்றருள்புரியவும்
வரும்போவெனத்திகழுகாலமூன்றுக்குமேல்
வருவாசியருள்புரியவும்
மனமந்த்ரதந்திரவுபாதிபேதங்கள்கெட
மௌனோபதேசமருளும்
தரும்பெரியதருமமிதுசமரசசதானந்த
தனிச்சோதிமவுனநிலையே
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதானந்தபொருளே. (கக)

நினைவானபொருளினலரசானயிவ்வுடல
நிஷ்டையநுபூதியற்ற
நிகரற்றமனமாதியிந்த்ரியபூதப்பேய்
நிசம்போலிருந்துபொய்யாம்
மனையென்றுமக்கள்பெண்டீர்தந்தைதாய்மைந்தர்
மருவுவெகுபாசவழறில்
மரிக்கின்றமனமாடுவரிகொம்பிலிரவுபகல்
வழிமாறியெழுந்துறங்கும்
அனைவர்களுமிகவாழ்க்கையானுலுமியானொருவ
னாதியெனபொருள்பேசிபின்
னலைந்துசோறிடுவாயிலோரொன்பதனல்நாறு
மூத்தையுடல்வளர்கவறிவேன்

தனையறியவேதுளவுகருணைபூரணவெளியில்
சதாநிஷ்டைதந்தருள்கவே
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதானந்தபொருளே. (கஉ)

நீதிநெறிசொல்லவொருநாளாகினுங்கேட்டு
நினைவானகாலதச்சன்
நின்றறியசவுபானமுடனுதிநீழ்மோன
நிலையினைபிடித்துசும்மா
போதிக்குமவுனவெளிசுபசாந்தவருணிட்டை
பொருந்தியறிவாளனுகி
பூரணம்விளங்கசிவஞானபூதிக்யான
புத்தமிர்தபோகமிலதாய்
வேதிக்குதென்னேரமுங்கருணைமூறிலோ
வெளிமாயையொருவர்காணர்
விதமென்னபிரமாதிசிவசித்தரியாவரும்
வெருண்டோடிபிச்சையுண்டார்
சாதிகுலசமையமேதப்பனே அப்பனே
தாராளமாகவருள்வீர்
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதானந்தபொருளே. (கங)

தன்னையறியாமலேசாகப்பிறந்தயெனை
சதகோடிமறைபிலிற்றுஞ்
சமாதிசொலுமறுவிதத்தாரகப்பூமியில்
சாதனைசிறந்துமூலக்
கன்னலெனப்ராணயகனல்வாசியறியாமல்
காலற்றுவூதிஞானக்

கண்ணூடுகேவலையறவேதாந்தசித்தாந்த
சமரசானந்தகருணை
மன்னுமதிமண்டலத்தவசமறகுடியாகி
வாழுமுபசாந்தலிகிதம்
வைத்தென்னைகூப்பவருகுருயவுனியேயென்ன
வம்பாகிவைத்துகொண்டீர்
தன்னுளெனும்பெரியயோகபூமிக்குளெனை
சண்மார்க்கமுத்திதருவீர்
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதானந்தபொருளே. (கச)

வேதமானதுசொல்லிவருவரெதிர்கோடிபேர்
வித்வதாரணையிலங்க
வித்தைமதியூகஞானங்களுடன்ணிமாதி
பேசிவருபவர்கள்கோடி
நாகமண்டலமுட்டநாலாம்படிக்கென்று
நகர்ந்துவருவார்கள்கோடி
நடுவீடுகட்டிமதியுண்டுசிவஞானமொடு
நமநந்திவருவர்கோடி
ஆதவனுமதிகோடிமின்னலுடனறிவான
அப்பனேஎன்பர்கோடி
அனலிட்டுருக்கமனகாலனெடுஒருவனெனை
வேண்டாமென்றலட்டிமாயை
சாதனையிலடுக்கவும்வாதனையில்விடுகவுஞ்
சதிசெய்ததழகாகுமோ
தருபரமதிருநந்திபிரபைவெளிவீட்டில்வரு
சச்சிதானந்தபொருளே. (கரு)

---

# பிரமம்.

கடவு ளொன்றமொழி யறிவ னல்லதுன்
கழல் பணிந்திலேயா னப்பனே
காடுவீடென பொய்கரும சாகரமூழ்
கட்டைபற்றி மனநடுவனும்
முடவனுளிதுவென் றடிக்குமூய் கருவி
பிராண விந்திரிய மும்மல
முடங்கு நித்திரை விவாதபோர் சகல
வித்தை சோறிடவளர்த்து; வீண்
திடவுபாய மொடுஞான யூகம்வெகு
ஜாலநூல்பட சிரித்துநாய்
சிலுகவுங் கரியகாகமோடுநரி
தின்றுநாறிடு சேறிட மலம்
தொடரு மாணுவவிடக் கருவியற
துரியபூமி யிடைவைக்கு வீர்
சோதியே வுயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்பிரமமே. (க)

ஞான விந்திரிய கரணமோடு சிவ
நிஷ்டைபெற் றிருகண் மூடவோ
நாதவிந் தொடுமெய் நித்ய நிற்மல
நிருவிகற்ப சிவ சமாதியில்
கானல் நீரெனமின்கருது மிவையெலாங்
கற்றவாருலக பேதமே
கவையுமெய் நெறிகளிட்ட ஜாலங்கன
வாதி பூமிகளி னேழினும்
ஈனமிக் கமலசேறு பூசியுட
லென்றுநா னெனவு மிருக்கவும்

எனக்குள் நானெனை விடும்பைபேசி வயிற்
பிழைக்க பட்டபடுபாடு வீண்
தோணவும் பெரிய பாசமான மன
மசைவிலாது சிவ மருள்கவே
சோதியே வுயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்பிரமமே. (உ)

புருவநன் னடுயிதழகெனப் பெறபொய்
பூத மோடரசு செலுத்தியே
புத்திநன் னெறிகளோதி ஆகமநூல்
போதமிக்க வாய்பிதற்றி பின்
கருகாலறநான் விழிதுயின்று கன
காமவேட்கை யனல் வீசவும்
காலனுன மனகவறு வெங்கொலேவேய்
கலே யிலக்கமுத லிதுவெனத்
திருவுளச் சேயனுமில்லே வாழ்க்கை நலஞ்
சேதனம் படவு தாசினஞ்
சித்த மோடுசிவசமய மோலிடத்தென்
புலமை தீரகடன் பேசிடும்
துருவுமிமய நருளோ உவருகுமுடல்
துணையெவர்க் குமுயிர் சொல்லவோ
சோதியே உயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்பிரமமே. (௩)

ஓதிநாள்பட வுகாந்தமில்லே யென
வுணர்த்துமாக மநூலநேகமா
யுறவு கொண்டுலக பாசமோடு மனே
மக்கள் சுற்றமுரன் முறைபெற

சாதிநற் சமயவழக் கிழுக்குவுயர்
வயதுதோலிட யிரும்புடல்
சகலகேவல வவஸ்தைமே லெனமுன்
சாடுமாணுவமும் மலவிதம்
நீதிநூல்பட விரித்துரைப் பரடி
யார்களென்றுடல் வளர்க்க வீண்
நினைவுகண்டு முறியிட்ட பேய்படபெய்
நிலை தவிர்ந்துமுணு முணுக்கவும்
சோதிநீழ் படநின்றருள் விடிந்துயரும்
துணைகைபற்றி யெனைவிடுக்கவோ
சோதியே உயிர்கடோரு மாதிநடு
வந்தமாகிய மெய்ப்பிரமமே. (௪)

கனவுகண்டன யிவ்வுலகமோடு பெரு
கனகமேடையு மைராவதங்
கமழுபுட் பவணைசோபனுதி சுப
மங்களடமர பேரிகை
நினைவு கொண்டபடி யோகவாசிகம
னுதிமோக்ஷமுயர் கோலமும்
நிகரிலாத வெகுகளவு பற்றமன
வாசைபோலுடல மென்று நான்
சனகனுதி சிவகணங்க ளோடுதிரு மூல
ரென்றுமனு வாகிநீ
சாரதித்தொழில் நடத்தி யன்பரொடு
சமயநீதியுயர் வழக்கிடும்
துணைகைபற்றி செகஜால நீதியற
ஞானயோக ரானுரங்கமே
சோதியே உயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்ப்பிரமமே. (௫)

வானுலாவியிரு கலைகள்சென்று வரும்
வாசிகால்பிணை யிருத்தியே
மனமெனும் பெரியபிராண கோஸமீ
ரைந்து நாடியுட லோடிமீன்
தேனுலாவுமதி கதிர்கள் சூழ்புருவ
ஞக்குணக்கு நடுதீபமாய்
சித்ரபொம்மை யசையாத ஞானவா
னந்தபூமி யிடைவைகியே
நானும் நின்னடியரோடு நிஷ்டையாது
பூதிகண்டு சிவ மவுனமாய்
நந்திசாம்பசிவ மாடுந்திரை கடந்
தாவலோடு வெளிபுக்கியே
தோனுமாருகமை நீதிபற்றி யுல
காதிசொல்விடு மெனெந்தையே
சோதியே உயிர்கள்தோறு மாதிநடு
வந்தமாகிய மெய்பிரமமே. (௬)

சித்ரைசோம்பு மைதுனங்களிட்டவுடல்
நீரு சோறிடு துருத்தியை
நிமிடமேனு முனைசிந்தி யாதபுலை
நீதிநூன் மறைமுன் பேசிடும்
வெத்திபெற்றுலகமாளு மாண்பரோடு
விடுதிகொண்ட கொலைநாயிற்கீழ்
வீம்பிடும் பெனும்வாயிடுக்க பேதமுறை
விபரீத பாவனை யிலக்கமோ
பத்திநன் னெறிசாதனைகள்பற்றிசரி
தாதிக்கடமை நெறி செலுத்தியே
பழமைமிக்கவருள் துரவுகொண்டதிரு
தொண்டராதி பதஞ்சலியர்போல்

துற்றுமேழை யடியேனு மென்றமொழி
தொகுதி கண்டிலாய் துணையுநீ
சோதியே வுயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்ப்பிரமமே. (எ)

மொழிபயிற்ற முறைசருவ பூதனே
முதலிருந்து மறைசெயவினல்
மூலவிந்திரிய கருமசஞ்சித
முடங்கவத்தைமல முடலொடு
விழிதுயின்றுபசியமர்ந்து நற்பொருள்
விளங்கபேசி வினைமுடிணல்
விபரமோடு கதைபுராண காவியம்
விரித்துறைப்பனென தறிவினல்
சுழுத்திபற்றிவரு கால யோகதிசை
சூழுமின்னம் வெகுசூஸனே
சொல்லிவிக்கமலே மேருகூடென
சுருங்கவைத்ததெவை யாதிலுங்
தொழில்படைத்த குரு வானபோ தமிது
சொல்லவுங் கருணே யில்லேயோ
சோதியே வுயிர்கடோரு மாதிநடு
வந்தமாகிய மெய்ப்பிரமமே. (அ)

இல்லேயென்றறிய வுணர்வு பெற்றுவரு
மெண்ணமோடிருமை வுடலிஞ
லியற்கைபோ லுருவமைந்து வேதமுறை
எடுத்து மூதறிவெலாம் பெயர்
தொல்லேகட்டி யுலகாளு மிறைப்பெருமை
சோடசக்கலே பின்மாறிஞல்
தொலேவிலாத பிணிமூப்பருந்தசுடு
காடுவீடெனும் பொய்சொப்பனம்

எல்லைகண்டு சிவமாடு மேகவெளி
யிருந்து நிஷ்டைபெரு நினைவினால்
என்னையுங் கருணைபெற்ற வன்பரொடு
யிருந்துபேசு முறவாகுமோ
சொல்லவுந்திறமை போதுமென்றறிவு
சொகுசுபெற்ற தெவரையனே
சோதியே வுயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்பிரமமே. (சு)

வெரிருந்தறிய மவுன நிஷ்டையொடு
யிருமையற்ற சிவ யோகியாய்
யிரவுபக லறபொய் நிலைபயிற்று மன
நினைவுபோரிடு மிடுக்கெலாங்
கவறமெய் கருமமுற்ற சாதனைசெய்
கருணையோ டிருகண் மூடியான்
கலைகள்மாறி வருமுதைய பானுமதி
கலந்துலாவு மதிமண்டலம்
தவசுபெற்ற சனகாதி ரிஷிமுதல்வர்
சார்ந்த நன்னெறியி லிருக்கவுஞ்
சற்றுமோகனவு நினைவு பாழுறதன்
னறிவினால் சருவ மூலமாய்த்
துவித பாழுறதன் னிலையில் பெற்றுதுரி
யாதி மேலுமேல் சொல்லவுஞ்
சோதியே வுயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்பிரமமே. (எ)

நாதவிந்தொடுமெய் நித்யநிர்மலநன்
னிருவிகற்ப சிவஞானமே
நாட்டமென்ற குணமாதி யந்தநடு
வீட்டிலென்று மொருநான்குமாஞ்

சாதனைக்கு மிகமேலெனக் கருணை
தந்தைநீ தயவு கூர்வையோ
சாதல் மிக்கவுடற்கருது மெனையெலாந்
தாதையே வுலகமோடிர
யீதலெய்க் கமலசேறு பூசிநான்
வயிற்பிழைக்க படுபாடுவீண்
எவையுமெய் நெறிகளிட்ட ஜாலங்கன
வாதி பூமிகளி ளேழினுஞ்
சோதனைப்பெற விளைத்த தென்னதொழு
தொண்டனுச்குளவு புகலவே
சோதியே வுயிர்கடோறு மாதிநடு
வந்தமாகிய மெய்பிரமமே. (௰க)

# அகிலாண்ட நாயகி வணக்கம்.

மூலவட்டமொடு ஆறு வீட்டையுங்
கடந்துவோடு மன வாயுவை
முடங்கி நிஷ்டையநுபூதி பெற்றுவர
நிகளபந்த மிடுமும் மலச்
சாலமிட்டயறது விதபேதனஞ் செய்
சாக்ஷிரூப வசனுதியுஞ்
சகலகேவல வவித்தை தூலமொடு
வேத மோதிய குலாலனே
டேலவும் பெரியமறைகள் வைத்ததெவ
ரிருமையோ டுனேதுணைப் பெற
என்னைதன் கருணைபெற்று;சொல்லசிவ
ஞானல் நூபெருமை வைத்தபேர்
காலமோடு பசியற்ற வட்டசித்
துகமைநூல் கடந்தோதினுர்
கதிரருந் துகைலாய மேருவகி
லாண்டநாயகி யென்னம்மையே. (க)

——

## சுகவாரி மவுனகுரு.

மதியிலே மனமாயைச் செல்கின்ற கதியிலே
மனமாறு விதி நினைவிலே
மடமாந்த ரிடுகவட மிகசூது நினைவிலே
வாதுசொலு மாசைமோகங்
கதிக்கின்ற கயற்கன்னி வலியநிகரெதிரிலே
கன்மம்வரு சூதிருளிலே
கன்னெஞ்சம் பழகுமத கட்பாசபொறிபூத
கனலிழியும் பதியிலேதன்
முதியவர் முன்னிட்ட மறையறிவிலே பிசகாத
முனைதுதியில் நிற்கவென்றால்
மோதிவயிர் வளர்சாத்ர விதிகாசபோரிலே
மூநிளமை மனிதரிதிலே
சதிபேசு சமயவாதிகள் சாதிபொதுவிலே
சத்ய நிகரநிபதியிலே
சாதிக்குமொருபெரிய கடவுளருள் சாதனைச்
சற்றாகிலுங் கிட்டிலோ!
புதியதெனவுறவாடு மகமேரு கிரிவளரு
புத்தியொடு வசனமீறும்
போக்கில்நிக ரிடுபிரம நெட்டிவிடுவரிகயறு
பூதியி லிருந்துசித்தம்
பிதிர்மோக்ஷ நிலையிதென பேசாதவன்பினொடு
பேசுமல பிரமைகவறும்
பேதிப்பிலே அஷ்டவெற்பு நிகரிலையெனும்
பெருமாயை வெளிச்சதியிலே
துதியற்ற நாய்க்குமொரு கதிதருவரெவராதி
தொன்மையே யொருவருளரோ
சோதியென அடியிட்டு தொழும்பெரிய தெய்வமே
சுகவாரி மவுனகுருவே. (௧)

## நிஷ்களாநந்தஉமை வணக்கம்.

ஒருமைமனதாகி வெளியொளி யொழுக வுறைபரனு
மதியொக்கப்புனல் சூடியென்
வுடல்பொருளாவியு மீளவரம் பேசுமுண்மையே
வுயர் மூலப்ராண னாதி
பருமை சிறிதறவகண்டாதார வடக்குநிலை
பகலெனதிரந்து மின்போல்
பரமகுருவாகியருள் வொளிவீடுகாட்டு மிள
மதியிரவிபூத்த முகிலே
யிருமையறசித்தரொடு நடுவணையி லரியிட்ட
யிறைவி திருமகள் பார்வதி
என்றுமருட்டாரக விதேகமொடு யேகபெரு
வண்டகோடிகள் படைக்கும்
நிருவியேநினைவான பெருமைதரு வேதாந்த
சித்தாந்த தமிழ்யென்னம்மை
நீதிநெறிபஞ்ச அஷ்டாக்ஷர சொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (௧)

சித்தாந்ததமிழ்பேசு மிளஞ்சோதி கருணையே
சின்மயானந்த வீட்டில்
திருமருவுகைலாஸ வரையுயரு மகிலாண்ட
தெருவாறில் மவுனநிலையே
மத்தமதற்கரிமூல வட்டதிரு சுழிவாசி
வலமிடமு மாறியூதும்
வழிகடவு நெறியருளுமாலிசிவ காமிமன
கவடுபெரு மாயைமூடும்
மித்துருவெனப்பொறுமி சித்தமொடுபழகிவரு
மிகவடுமை கருவியோடு

வினைபேசு மிருளலங்காரியெனு துளபமுலை
வித்வமணி சோதிவிளக்கே
நித்தியமு மறவாதகருணை தரு மம்மையே
நிகரற்ற நிஷ்டைதருவாய்
நீதிநெறிபஞ்ச அஷ்டாக்ஷர சொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (உ)

கருணைதருமம்மையே யருணிறிய வருவாசி
கலையுறுவ தெருவாறிலுங்
கரணமரு சிரகிரியிலொளிபெருக மணிவீடு
கலைபெருக சிரித்தவெளியில்
துருவதாரணையுயர தொகுதிபெறயிதையமலர்
சுருதி மொழிமாதுவல்லி
சொரூபிணிக்கமலவித ழொருநாலு மிருநாலு
முதையமலர் விரிவட்டமே
மருவுகுருநந்தியொடு வல்லபையெனும்பெரிய
மரகதம் பூத்தவாமி
மணிமந்த்ரவபிடேக மன்றிமானதபூசை
வரிசைபெரு மமிர்தகலையே
நிருவிகற்பாதிக்கு மெட்டாத மவுனவீ
டெண்ணுமுன் னிலைநிற்கவே
நீதிநெறிபஞ்ச அஷ்டாக்ஷர சொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (௩)

எட்டாதமதிவீடு கிட்டாதசோதிநக
ரொட்டாது மனமாயையால்
யிட்டபடி கரணாதிகட்ட விழயிரவியிடை
கலையோடி வருவாயலில்

துட்டமிடு கருவிதொண்ணூற்ருறு பேதமன
தொடு சரங்கட்டி தன்போல்
துப்பற்றமநுநீதி கற்பித்த தல்லவோ
துரைபெணுமை கலசவாணி
புட்பமலராறுகோண புருவநடுவிரிகிரண
புரவெளியி லொருமடந்தை
புத்தியுட னுனைபோற்ற வாவெனதுமகனென்று
போதித்து வமுதமூட்டும்
நிட்டானுபூதியே நெட்டிட்டுதள்ளுமன
நினைவொன்று தந்தருள்கவே
நீதிநெறிபஞ்ச அஷ்டாக்ஷர சொரூபியே
நிஷ்களாநந்த வுமையே. (௬)

மனமிட்டகோண ஓயாடு மலமாயைதெரு
வலகை நுளைவாயிலொன்ப
தெனதாசைபூதபொறி யிருமையுலகச்செயலி
லிடவலஞ் சொல்லுமறிவாய்
யெந்தைசிவ சம்புசங்கரச் சோதிநிறைசூன்ய
வேகபூ ரணமடுக்கும்
நினைவானயெனதாதி கைலாய மரபில்வரு
நிஷ்டாநு பூதிசெல்வம்
நெறிபயிலுமிளமாது சந்திர புஷ்கரணி
சரஸ்பதி அழகபுளக மதியாள்
முனைமீதிலிருமையற கற்பகாலஞ்சொல்லு
முறைபுதுமை யொருவர் சொல்லார்
நினைபோற்று முன்னுதி யகத்தீஸருக்கருளு
நிலையோது முதல்தருகவே

நீதிநெறிப்பஞ்ச அஷ்டாக்ஷர சொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (ரு)

ஓதுமருட்டாரணி யென்னுனைந்துப்பூத
முடனுரவு செயுங்கருவி கரணம்
வுண்டாகிவினைபேசு மிகசூதுநானெனு
கருமமெரடு மறைபரிசுமுன்
தூதுறைகளுறையிட்டு வைத்தனிலை யெண்ணிலோ
சொற்பூரி நூல்தருக்கம்
சுகமகிதமதடம்ப லோபகோபாதியுடல்
சுழிமிறித்துயில் விழிப்பு
வாதுபரிகாசமல மூறுசுனை பசிக்கென்றும்
வளர்க்கவெகு யறிவுதூய்மை
மனமற்றநின்னடிய ரிடுபரிசுநினையவோ
மாத்தானி தெனநினைக்கும்
நீதிநெறிகலைகற்று மமதைகொளு மென்போலு
நீசநினை வில்லையம்மா
நீதிநெறி பஞ்சஅஷ்டாக்ஷர சொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (சு)

சிந்தைசெயபரிசுபெற் றென்னேரமுஞ்சோறு
துயில்வேண்டு மென்றறிவைமேல்
சொக்குபொடியிட்டு நடைகண்ணிலேசுரிகுழலி
னிடைப் பட்டிலேகபோகம்
அந்தமிகுஅவள்கூந்த லழகிலேமதிபிறையி
லொளிர்பொட்டு புருவணையிலே
அன்னமெனசெல்லுமணி நிலையிலேகைபூசு
முலையிலே யகமகிழ்ந்து

சொந்தமென யேரிட்டுபார்க்கு மநியாயமோ
தொலையாத கருமபாவம்
சுத்தவருள் நிலையாளனுக்கி பேரின்பசுகஞ்
சொல்லவெகு நாள்செல்லுமோ
நிந்தையிது யெனைபெற்ற நிற்குணாதீதமே
நிமிடமற நின்றருளுவாய்
நீதிநெறிபஞ்ச அஷ்டாக்ஷரசொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (எ)

அடியிட்டகுண்டலியி நடுவட்ட கோணமிரு
நிதிபாய்ந் திராததீப
மறிவிட்டபூர்த்தியா யழகிட்டவெளிதிட
மாகியரு ளென்றுவிளையும்
துடியிட்டமதியிளங் குடியிட்டவற்புத
தொழிலிட்டு துட்டபாதத்
தொடைதட்டுகருமவிந் திரியரனல்சூரைபட்
டுருவருவ மானதுரையில்
படியிட்டசாயுச்ய பதவிமேலீறுறை
பங்கிட்டு வுண்டுவுண்டு
பட்டாங்கிலுள்ளபடி பகலிரவுமற்றநடு
பூமியிலிருந்து காட்ட
நெடியநிருமலவீட்டில் நெட்டிட்டுதள்ளாமல்
நிஷ்டைசெய பரிசுதருவாய்
நீதிநெறிபஞ்சஅஷ்டாக்ஷர சொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (அ)

பிறைகளிருநாதவிந் தாதிசூழ்மால்பூர
கத்திலிரு நிதிகோணமாய்

பிறுதுஇருமை துயரடராதுரேசித்து
பிராணயபூரணித்து
பறைநாதமுழங்க யீராறுகலைகட்டிமதி
சோடசவுபான மூர்த்தம்
பன்னகநற்சௌபாக்ய சம்பந்தனுகிப்
பசிதாக மோகமற்றத்
துறைராஜக்ரீடிப்ரகாச வருட்டாரணைகள்
சுபசோபனங் களிக்கத்
தொண்டரிருநேத்திரத்தா லெட்டிபார்த்துபார்த்
தேகமே சோதிவெள்ளம்
நிறைசுப்ரகோலமே என்றெழுகுமன்னையே
நீசனொரு மகனல்லவோ
நீதிநெறிபஞ்ச அஷ்டாக்ஷரசொரூபியே
நிஷ்களானந்த வுமையே. (சூ)

—

# அகிலாண்டநாயகி வணக்கம்.

மதியூறுமவுனவறை யுண்டுசெய்தத்துவித
மறைபேசு ஞானவெளியில்
மனமாயையற்றுசிவ ஆதாரமேலுமொரு
வத்துவாய் விளங்குமுதலை
துதிசெய்துமதியிரவி சோடசக்கலையமரு
சுயஞ்சோதி பூத்தவருளில்
சும்மாயிருக்கவுந் தசவாய்வைபூரித்து
வுறங்காது கருவியற்று
முதிற்கொம்பில்பாயாது யாதுபாவிக்கினும்
முன்னான்கு வீடுகட்டி
முக்கணுடனென்றுமொரு பொழுதாகிபேசாத
முத்திநெறி தந்தருள்கவே
அதீதமிகுசரிதாதி கிரிகையனுவிறந்தசெய
வியாவுமொரு பொருளல்லவோ
அதுவறியபொதுநிலையி லதுவாய்விளங்குமகி
லாண்ட நாயகியம்மையே. (க)

# அறிவு.

அறிவிற்கறி வானந்தவெள்ள
வமிர்தே அத்துவிதமுறைக்குங்
குறியற்றகண்டா காரமயக்
குணமேஅன்ப ரிதையமிரும்
பெரிதுசிறிது மற்றநடுப்
பேசாவருணீழ் பெற்றவர்தன்
தெறிவேதென்று மமரரொலிச்
செவிபூந் தேமாந்தறியேனே. (௧)

ஏனோஎன்போ லாசைமல
மிழிவிற்றூறு மிதையாளர்
வானோயண்டப் பரப்பனைத்து
மானோயிலிப் பொய்யிறப்பிறப்புந்
தானாய்விளங்கு முகிலினம்போல்
தழுவித்தழுவி நினைவெனுமோர்
நானாயமருங் கருவிகன்ம
நலியால்மெலிந்து நண்ணுவதே. (௨)

ஆருண்டாவா வெனக்குழறி
யப்பாஅண்ணா ஆருயிர்தன்
சீருள்வாழுந் தேவருட்டு
சென்னிமன்னுந் திருக்களிற்று
பேரூரென்பேன் பீறற்குடி
பெற்றென்போல் னானெனுங்கொடுமை
பாருமரசே யிவ்வுலகி
லொருவரிலை யென்செய்வேனே. (௩)

இலையென்றுனோநா னடுத்துகொண்டே
னினியேதெனை நீவிடவேண்டாம்
புலையுங்கொலையும் பிறுமனப்
பேயால்பிறவிப் பொலிவுற்றேன்
கலையும்பணியு மணிக்கடவுள்
கருணாகரமே வுனைவேண்டே
னலைநீர்த்துரும்பு போலாடு
மகமார்க்குறைப்பே னாரணமே. (௪)

ஆரணம்பூத்தருள் வெளித்திரந்து
அறிவற்றென்போ லாதாரப்
பூரணம்பூத்து அகமெழுகா
யுறுகியாவா வேனக்குழறி
காரணங்கண்டுக் கட்பொறிகள்
கருவிமலமற் றிருப்பதென்னாள்
எரணிக்கலைமே திருவருட்க
ணைந்தையென்பொலா பிழைபொறுத்தே. (௫)

பொருத்து நீயெனையாண்டு கொளரசே
போதுமாருயிர் பூரணப்பொருளே
சருத்திற்பிசைய வழல்வினையூ
டாடுங்கன்ம மிகப்பெரிதோ
ஒருத்தர்திருச் சிற்றம்பலத்தோ
யுண்டோயின்ன மொருதெய்வம்
வெருக்குமலநீ ழைவையதனை
விருகவெரித்தா லதுதகுமே. (௬)

தருமோதுணை தான் தொழும்போதே
தாதாய்த்தன்னந் தனிச்சுடரே

நகுமென்பிறப்பு முடலசுர
நலிதீமலமீ ருயிரில்லை
புதுமுழ்வாயிற் புலைபொல்லாப்
பூதப்படையால் போதசுறப்
பஃலீதப்பா பராபரமே
பலநாள்பாச வயிருளாவே. (எ)

வேறு.

உள்ளபடிக்கவ்வுமெது வதனைபடிற்பொருட்டா
லுன்னன்புபற்றறுது பற்றமனக்கருமங்
கள்ளமனபுலனொடுங்க கவிழுமதமாழுங்கும்
கற்பனைமுன்னொப்பியநீழ்கறத்தினிக்குங்கண்ணே
தெள்ளியமெய்த்தெவிட்டாத சிற்பரமதருவே
சித்தமொடுசபலமற வொருநாளுமில்லை
தள்ளிவிட்டாலீதழகோ சமரசவானந்த
சச்சிதானந்தசிவ சைவபழம்பொருளே. (அ)

சிவசமயந்தழைக்கவருஞ் சின்முத்திராங்க
தேவரீர்தேசிந்தைமன்ன வூறியபேருணர்வே
கவனமுடன்விசாரிக்குங் காமியவேய்மலங்கள்
கடம்வளரும்படிக்களவு புலையமருங்களவு
சவலமறப்பெற்றுரங்கி சாகரங்கொண்டலையும்
தன்னையறியாதெவையும் பேதிக்கக்கவறும்
பவமுறைப்பாராரெனைப்பின் பார்த்துபரவெளியில்
பங்கிட்டுல்பலகலையும் பசுருமொருமுதலே. (௯)

பரவெளியிலுன்னன்பர் பகுக்காதகருணைப்
பங்கிட்டுயிராப்பகலன் றொருபொழுதாய்ச்சும்மா
சிரவணஞ்செய்ச்சின்மயவா னந்தவெள்ளம் விழுங்கி
சிவஞானக்கற்பனைவா ளமிர்கலையுண்டார்
திரமிலிநானொருநாயிற் கீழ்ப்படுமென்றிரனமைச்
செவிபுலனூமம்பிறக்கச் சித்தமொடுவலையும்
மறப்புநினைப்பன்றிதனை யறியுமொருவன்பு
மதிக்கேடனெனக்கில்லை வாயுறைப்பொய்வாழ்த்தே.

போய்யுறையற்றிருப்பதுவே போதமதிநீழும்
புத்தமிர்தபூரணமா யன்றுநால்வருக்கும்
மெய்யருள்கண்டிருக்கசதுர் வஞ்சகநீபெய்த
விருப்பமன்றேஎன்மலநீழ் வெறுப்பதிகமெந்தாய்
எய்யுமனவசனதி ராகதுவேஷங்க
ளேதனவிருள்மறிக்க வறிவுபற்றுதலையுந்
துய்யவருளூரியச் சிற்றூந்றேயென் [தடிறே.
றூலவிடும்பமைதிநெருப் பிட்டவனலெனமெய்த்(மக

மேய்த்தடிற் வயிர்வளர்க்கும் வீம்புறவுங்கல்வி
வித்தகந்தேடியமதியும் விவகரிக்குதெந்தாய்
ஐயமுடன்புசிப்புக்கா வெனுமின்பமீயா
திருணெறிபூந்துறுமன்பர் மேலுமுபமானம்
பையுமிதுப்பெருமைகொண் டாயெனக்குமருள்பேசி
பயிலுமொருத்தருமமுண்டோ பராபரமேஎன்னல்
தொய்யுமிருளுனக்கதிகஞ் சுத்தசிவமயமாய்
தோன்றுமொருபெருவெளியே சொல்விடுமாறிலையே

பெருவெளியேநானெனும்பொய்
பிறங்கவைத்தெத்ததனுல் பேரின்பஞானம்
அருள்விடிந்தானந்தமறைப் பொழியுநிலையன்பா
லந்தகரணங்களற வறிந்ததெதுதன்போ
லொருபெரியகருணையின்ப மிருக்குமெனவுணர்ந்து
யிருமையறயாருயிரும் நினைந்ததெதுவெல்லாந்
திருக்கருணையால்னுக்கு மிடமிருவர்த்தேட
சிரமுடியுமாயெழுந்த தெதுகடவுட்டிருவே. (கங)

திருவருளொன்றுதையமுண்டாய் சிறந்தவகந்தீமைச்
செயலறத்தன்போலறியாச் சிவஞானமூழ்கி
பருகுமறிவானந்தத் தற்பரமெவ்வுயிர்க்கும்
படர்ந்தொருமைப்படனேக்க மூன்றுடையச்சோதி
குருவருள்பூரணமடுவிற் குறியறவேதாந்தக்
குணமலகசச்சிதா னந்தவருட்சிறக்கும்
பொருளெதுயீதேதுமறச்சும் மாநின்றன்பர்
பூத்தமலர்வாசனையூ றியவறிவிற்பொழிந்தே. (கச)

ஏதுமறயென்னன்பு தசவாய்வீறு
மிருமைகலைத்துயரனைத்து மாகுமிதுவென்றே
பூதவுடற்கருவியறத் தற்பரமாய்விளங்கும்
பூரணவானந்தவெளி புகுந்துநிஷ்டைபுரியுஞ்
சாதுரியமிக்நன்று தனையறியுநிலைதான்
சகத்துக்கேவொவ்வாதீ தொவ்வுமெனநடுவார்
சூதுகவடிந்திரியத் தொழில்கவறுதென்றுஞ்
சுத்தவத்துவிதக்கருணை சூடிருநாளென்றே. (கரு)

என்றுமருள்விடிந்து யாதுமறச்சும்மா
யிருந்துயென்பொலாப்பொறியூ தப்புலனொழிவதெது
துன்றுமுடல்விவகார மன்றுநடுவிளங்குஞ் [முன்
சுழுத்திமுதலவத்தைவளர் மாயைமுனிந்திருக்கும்
நன்றுதீதெதுவொழிந்த நாலானப்பதவியெது
நாதாந்தவேதமுட லிருந்தறியுமறிவாய்
மன்றுமானந்தமொழி வளமையெதுதன்போல்
வசனிக்குமுகமையொரு மறபருந்துமதியே. (கசு)

வசனிக்குமெமைவயதுதான் சுகதுக்கமாகி
வாய்மையின்பத்தழுந்திமுதலொருவருண்டாய்மதிக்குந்
துசங்கட்டிநடுநிகழுங் துறவுநிலைப்பற்ற
சுத்தவசுத்தங்களிரண் டறப்பழமைகூறும்
நிசம்போலுமிருந்துடலம் பொய்யுலகத்தென்றும்
நிஷ்டைபற்றிநினைவறச்சு காரம்பவெளியை
வசஞ்செய்துநிலைபெறத்தற் புருடநிலையாகி
வாயுவைப்பூரித்திடமும் வலஞ்சேரமுடங்கும். (கஎ)

முடங்குமறுதாரணையு முசுவாசமாகி
முக்கணுடனிருந்துதனை தரிசனஞ்செய்திருக்கும்
சடமுடனென்றென்றுமழி யாநிருவிகற்ப
சாதனைசெய்தானந்த சதுஷ்டயங்கைகூடப்
படமெனநின்றட்டசித்தும் பயிலுமிதுவெல்லாம்
பரபர்மேஅறிந்திருந்தும் படியுமனப்பாசம்
விடமுண்டாயாரணிக்கும் விபரமெறுஅண்ணு
வித்தகவேதாந்தமெடுத் துறைக்குமொருமுதலே. (கஅ)

உரைநிறைந்தா தாரமறி வகண்ட சிவமயமா
யுணர்வாய்கண் மெழுகெனப்பொய் கமழுபுரக்கருவி
நிறைசூன்யமறத்தானே தன்மயமாய்விளங்கும்
நிகரதற்குவறிவாள ரறிவுகொடைப்பயிலும்
திறைநிலைப்பொய்செடிபசெவி புரங்கவியுமிருகண்
திரிபிரபஞ்சபொரு ளொதுவதனைப்பார்க்கு
முறைபலவாஞ்சித்தசா பல்யமுரல்நாக்கு
முனைகவியுந்தருமலர் தெலாமுகமைப்பொருட்டே (கஅ)

உகமைபெறநின்றிலகும் புலன்கருவியனைத்து
மொப்புண்டோவபிரனைத்து மூறியவேதாந்தம்
இகபரமாயத்துவித வாரணங்கொண்டறியா
வற்புதவபூதநிலை யபூகிதுவதன்றுச்
சுகதுக்கம்பாயுமொரு பொருளாகியமையச்
சோர்வுபலக்கருமவிந் திரியமொடுபிருமைந்
சகத்துக்கேவசித்நியவா தொருபெரியக்கருணைச்
சூட்டினைத்தன்போலுறிய சுகாரம்பத்துணையே. (உ0)

துணைநலமேயென்பொல்லாக் கொடுமையொன்றுசும்மா
சூடியபொய்கருவிமலத் தொடக்கனைத்துமில்லா
பிணைநிலமாறமிர்துபெறப் பேசாதமவுனம்
பித்தாகப்பிதற்றியன்பர் பிரியமுடன்தேடும்
அணைத்துயிர்க்குஞ்சச்சிதா னந்தவருள்மூடு
மறிவன்றோ அந்தகரணங்க ளறக்கூடும்
புணைநிலமுதறிவருநதும் புந்தமிர்தஞானப்
பூரணவாதாரமுடற் பொருளருதான்படவே. (உக)

ஞானவானந்தபரி பூரணமேபாவும்
நடுநிலபற்றறிவகண்டா காரமயந்திகழ

மீனமரும்பொறிபுலன்றா னுறவுகொளுமிறிய
யிகபரவாருபமினியவியல் பருந்துமதுபோல்
தானறத்தற்பரநிலைக்கண் டறிவடங்குந்தக்கோர்
சாதனைச்சொல்லியவருளைத் தேடிபுறங்கிடமூப்
மோனநிலைப்பெய்தெல்லா முடிந்தசுகநிஷ்டை
முத்திபெற்றோர் நினைவறப் பிரமானந்தமொழிந்தே (௨௨)

மொழிக்குமொழிருசிக்குமருட் டாரகநீழ்வெற்பே
முற்றிலுநானெனுங்கல்விக் கருமமலந்தீயிற்
பழியில்மிகப்பற்றன்றிப் பாவையெதுந்தன்னைப்
பாராமல்பார்த்துபுலன் கருவியரும்பொருளோ
டழிவற்றப்பேரின்ப மாவலரும்பசிமே
லாவாவாவெனக்குழறி யறிவனந்தாசாரம்
விழிமடவாராசையின்று யிராப்பகலோர்நிலையாய்
வேதாந்தச்சைவவரு ளுதையவெளித்திறந்தே. (௨௩)

வெளிக்குள்வெளியொளி விளங்கும்வித்தகர்கள்தேடும்
வேதாந்தச்செல்வமென்றும் விழப்பொருளாய்த்தோன் [றும்
தெளிவருந்துந்தெள்ளமிர்தத் திரவியமீதெவர்க்குந்
தேடுவதற்கரிதன்பர் சித்தமதில்விளங்குங்
களிப்பன்றியாவுமொருப் பொருளாகிமூன்றுக்
கண்ணுடன்கல்லாலடியிற் கற்பகவாரணமாய்
ஒளிவருந்துமவுனியொரு கடவுள்மனுவாகி
யுயிர்க்குயிராய்க்கலந்துண்மைச்சிறக்குமதிநிழலே. (௨௪)

மதிநிழலோடறிவருளி யவஸ்தாதிபூமி
வழங்கிபொதுநிலையன்றோ வாழ்த்தியவேதாந்தக்

கதியருளினனெனநின் றூரணிக்குங்கருமு
கட்டன்றோகருதியவெல்லாந் தானேநிறைவாய்த்
துதியருளுமொருகருணைத் துணையலவோயெல்லாத்
தோற்றமுமாய்ச்சுத்த அத்துவிதப்பொருளாயுயிரா
யதிவிதமாய்நனவாதிக் கனவருந்துநன்றே
நாயினுங்கீழெனைப்பெற்ற அப்பாயென்னரசே. (உரு)

எனைநானீயெனுமீரற் றிலங்குபொதுநிலையே
ஏசற்றுப்பேசாதப் பெருவெளியாய்மவுனி
தனைமறுத்துவேதாந்தச் சமரசநன்னீதித்
தத்துவச்சாதனைவாசி யுயருமருள்வாய்மை
நினைந்தின்றய்நாளையாய் நிமிடம்வெகுயுகமாய்
நிஷ்டைபரிபூரணமாய் நிற்குநிலைதனக்கே
உனைநினைந்தேன்மலமாதிப் பிரபஞ்சவாசை
வுலோபமறவுண்மைதெளிந் துள்ளபடியுணர்ந்தே. (உசா)

உள்ளபடிநானெனும் பொய்ப்பூதபொறிப்பிணங்கோ
டுணர்வயர்த்தந்தோவது போலூரியவென்னிதைய
மெள்ளளவுமிறக்கமிலைத் தூரியநாதாந்த
மிருவினைமூறியமாயை வெளிகரணநெழிவு
தெள்ளியநூலாகமங்கள் தெளியதிரிகரணச்
செயல்தானேநடந்தினிக்குஞ் சித்தம்வெகுச்சபலம்
வள்ளலருட்சுயஞ்சோதி வாருதியேஞான
மதியூறமரமளிக்கு மகண்டசிவமயமே. (உஎ)

---

# முழுமுதல்.

முழுமுதலே ஆவரென் றறவிழுங்கி
முத்திநெறிக்காட்டி மனக்கருவியாதி
தொழுங்கருணைப்பராபரத்தைத் தூலமூன்றுந்
துடைத்தறிவுக்கறிவாகி விழுங்கும்வீட்டில்
விழுப்பொருளேயானெனும்பொய் மாயையின்ப
விடுக்கிலெனைவிட்டுவிட்டா லென்னேஎன்னே
சுழுத்திமுதலாங்கீழ மேலுமுப்பாழ்
கிளைத்தபொதுக்கற்பனையென் றிரங்கும்வாழ்வே. (௧)

ஆகியப்பாழெழுபிறப்பு மறிவானந்தம்
அற்புதவபூதநிலை அழகீதன்றுத்
தேகியொப்பமறைபிலிற்றுஞ் சிலுகைமற்றுஞ்
சிறப்பணிவீடுய்யுமருள் தோய்ந்தநீதி
யூகமநுஷ்டானமுய ரொழுக்கங்கற்பு
வுயரைந்துஎழுத்துமுத லோமங்கன்மம்
பாகித்துமெய்போல் பொய்யுறவுகொள்வர்
பரம்பரையாதினுமருவும் படைப்பீதென்றே. (௨)

னெறுமருட்டுரியாதி உதையந்தானே
எழுந்தருளியிரவிமதிக் கலையீரற்றுக்
துன்றியவதோமுகந்தூ விடிந்தயின்பஞ்
சுருதிஎடுத்துரைக்க அத்துவிடவீடாகி
நன்றுதீதறப்பாழ்த்த பிரபஞ்சந்தா
நானெனவேவிவகரிக்கு மிருள்தீமூலக்
குன்றிலெழும்வாசி கனலூதிவூதிக்
குறையாதவமிர்தவருள் குடிக்குமாறே. (௩)

சூடிக்குமாறென்குறைப்போய்க் குடிலையாலுங்
கொலைபுலைவெங்காம பொறைவைந்தும் நாளும்
நெடியவிடமாம் பொசிப்புக்கலைந்துலைந்து
நினைவு மின்பமன்றி திருவருளைச்சேரும்
படிநிகளத்துகளபந்தப் பாசநீரும்
பத்திநெறியிலைநிஷ்டைப் பொருள்கைக்கூடும்
விடியுமருட்டுறவில்லை யெவரென்றேங்கி
வினையிலியென்றிறைஞ்சி சும்மாயிருப்பதற்கே. (௪)

இருப்பதற்கேயெண்ணியெண்ணி யிறைஞ்சேன்றூய
வுடல்பொருளாவியுமொப்ப யிருதாள்போற்றி
மருப்புயர்ந்தமனநெறிதா னிகரொப்பாது
மன்றலவிழுதுகண்டா யடங்குந்தன்போல்
வெருப்புன்மேலனவில் மிக்கவாசைமோக
விடும்பைச்சோறுண்டு மச்சையிரதம்பூர்க்கு
உருப்பெற்றேனென்னுயிர்த்தா யின்பத்தேவே
ஒப்பற்றமணிச்சுடரே அப்பாசொன்னேன். (௫)

சொல்லாயுஞ்சொல்லிறந்தச் சுடருமாயுந்
தோய்ந்தவருட்பாழாயுஞ் சுகராதிக்கு
அல்லுபகலற்றநடுத் தீபமாயு
மாதியெனமருள்திரந்த சோதிசுத்த
மெல்லாமாய்த் தற்பரானந்தபோத
மெடுத்துரைக்கவேத வாகமங்கள்சொல்லுங்
கல்லாதயானொருவ னுலகவேட்கை
களவுகற்றுக்கொண்டிருந்தேன் கடவுள்தேவே. (௬)

வேறு.

எப்படியென்புலன் பொறிப்பூத
வவத்தைக ளொழியவருண்
மெய்ப்பொருள்கண்டுநா னறவிழித்துறங்
காவருள்வெளியூற்
கைப்பொருளிது வெனவைத்துக்கண்ணீர்
மல்கக் கசிந்துருகி
அப்பனையொப்பிலா தவனையெப்படிக்
கண்டுநான் பணிவதுவே. (எ)

பணிந்திருக்கரணு லாவவேலாடன்புப்
பற்றமெய்யடி பிணைந்தழுதுப்
பிணியெனும்பிறவிப் பிறப்பெனுமிறப்பு
எனக்கெனு மாயவாரின்பந்
தணிசையிற்றேவே சருவபூரணமே
தற்பரானந்தசிற்பரமே
துணிந்திலன்சும்மா சுகநிஷ்டையோடு
துறவுகண்டறிந்தி லன்சுடரே. (அ)

வேறு.

சும்மாயிருக்கச் சுகநிஷ்டையென்றுச் சொல்லி, சுழல்சோ றிடுதுருத்தி நீரிடுநேம நியமமுறைத், தெம்பெருஞ்சோதியி னையபூரணமே யிருவினைகள்பற்ற, என்னிருள்மூடி யிருந் தெழுந்துறங்கிமெய் யகஞ்சிறந்து, உம்பர்தன்றேவே வுறையி லாப்பொருளே உலகவாதனைப்பொருளுடற்கே, உயிரெனத் தேடி உணவுடன்புசித்து வுறங்கிவிட்டேன், பொம்மைகூத்

தாடியச் சித்திரப்படம்போல்பூரித்து வாயுதாரணையுடலாடிப் போம்பொழு தடங்கியெபுதுமைவீடென்னைப் போற்றினன் பூரணப்பொருளே. (கூ)

---

## ஞானநூல்.

ஞானநூலியம்ப நடுநிலைக்கண்டாற்கு
நல்வினைத்தீவினைப் பயிற்பேநலமதாகுங்
கானல்நீர்ப்போல்காணு மனைத்தும்யானே
கலவியிலை பத்தாழ்ந்தி யுலகோடுக்காம
யீனமிகுமாணுவத்தீவிச யீகைக்
கொடைமுதல்சோறிடுதுருத்தி யிடமேவேண்டும்
ஆனாலுமென்போல் வாய்ஞானய்பேசி
யிருவினைத்தீமூழ்கயிருந் திருந்தாரின்றே. (க)

இன்றையாவரசேயெவ் வுயிர்கடோறு
மிலகியமுக்கண்ணுடைய அப்பாஅண்ணா
நன்றையாதீதையா யிரண்டினோடு
நலிப்பேசும்நானொருநா யென்றப்பாவி
நின்றையாவறிவே யென்றேங்கியேங்கி
யிளைத்திளைத்தென் னிருகையுங்கூப்பியோயா
மன்றுளினீழிருந்தக் கடவுள்சோதி
மன்னியவானந்தவெள்ள வாழ்வேபோற்றி. உ)

ஓயாதப்பெருங்கருணை மலரக்கண்ணீ
ராராகிப்பெருகியழ துறைகள்மாறத்

தேயாதப்பிறையணிந்தப் பாண்டியப்பாச்
சிரித்துபுறமெரித்த சிவக்குருவேவேதம்
ஆயாதக்கலைமுதலே அகண்டசச்சி
தானந்தமாயாறு வீட்டினீழுங்
தூயவருட்டாரணையாய்த் துவாதசாந்த
நுருவெளியாயத்துவித மானத்தேவே. (௩)

தேவேயிச்சுகமாயா மயக்கஞ்சித்தச்
சுழுத்திவிசாரணைத்தீர்க்குஞ் செயலீதெல்லாங்
கோவேபொய்க்கொலையிலா விரதமொன்றே
குறித்தாற்குக்குறைவொன்று மில்லையில்லை
காவேமெய்க்கயிலை சிவக்குன்றேமேரு
கிரிவெற்பேசுருவிசுர ஞாதியெல்லாம்
தூவெளியொன்றுண்டு பண்ணித்துணைநீயாகுஞ்
சுயஞ்சோதிப்பூத்தவருட் டுரியவாழ்வே. (௪)

ஆகியவென்வாழ்வனைத்து மறியச்சேனு
மாணுவமுய்க்களவு காரியங்கள்மாயை
ஏகியப்பொய்நினைவு துணிவிவகாரங்க
ளேடணைராசாதியுடல் வளர்க்கும்வார்த்தை
தேகிநானெனும் கன்மம்வித்தையூகந்
திடச்சிந்தைவேண்டு மறிவானந்தஞானம்
யூகித்தென்போலான்மச் சித்தசுத்தி
புணர்வேனின்போ லாருண்டொப்பிலானே. (௫)

ஒப்புண்டோயுபிரனைத்து மொன்றேயாவு
முள்ளபடிப்பிரபஞ்ச பேதமாகிச்
செப்புதற்கு அறியவே சாந்தமெல்லாந்
தேடுவதற்கரிதாகிப் பிராணபத்தீபச்

சுப்பிர்மசுத்தவைதீக சிவானந்தச்
சுருதிபிரமாணமணுவறச் சரிதைக்கிரியை
முப்போதுங்காலமறவாத வருட்தியான
முறைபடிச்சாதனைச் சிறந்தோர்தனையறிவதற்கே (சு)

அறிவதற்கேயத்துவித விபரமெடுத்துரைக்கு
மாதையினாலாதார மாறுமுண்டாயதிலே
தெறிவதற்கேமௌனியொருக் கடவுள்மனுவாகி
தெளியசிவநிஷ்டைக்கோ ரைந்தெழுத்தினியல்பாய்ப்
பறிவதற்கேகேவலவா வரணநினைவற்று
பாசமறப்பண்மலர்க்கண் படலெனமுன்பறித்துக்
குறிப்பதற்கேயெனையடிமைக் கொண்டபெருங்கருணைக்
குற்றாலத்தென்சோதிக் குருவானப்பரமே. (எ)

—

# சோதிமௌனி.

சோதிமவுனியாகவருட் டுறவு கடந்தப்பெருவெளியாய்
சொல்லால்பொருளா லழியாதப்
பாதியொருபாகந்தரித்துப் பற்றறப்பற்றி
யிருந்தாற்போல்பரமேயிருந்த வதிசயந்தா
ஞதியந்தம்நடுவீட்டிலரசே முக்கண்ணேயிருந்து
அறியவேதவாகமங்க ளநேகயுகாந்தக்காலமேலாம்
போதித்துறங்காவரு ணிஷ்டைப்பொருந்திமன்று
லடியிருந்தப்பொருளே போற்றிநமச்சிவமே. (க)

அடியிருந்தக்கற்பகவா ரணச்சோதிக்குருவே
அத்துவிதமாய்த்தனதுவருள் கையைநீட்டி
படியாறுங்காட்டி பரவெளிவீடுங்காட்டும்
பத்திநெறி அருட்சோமக் கலைஞானட்பசரும்
விடியுமொருச்சிவஞ்சோதி பழுத்துணருமூல
மிருந்தின்றுய்நாளையா யிருந்துகொள்வதென்றே
கொடிமுடியென்பரங்குன்றப் பொருளேயெவ்வுயிர்க்குங்
குருவானசதாசிவமே கும்பிட்டேனின்றே. (உ)

நின்றேனுனைருமூடனிஷ்டை பற்றும்நினைவில்
னினைந்தன்புட்பற்றவறிவாய் விளங்குந்திறமை
என்றுதைப்பொருளேயென்போல் பாழ்த்தக்கன்ம
மிருமைபெறயினித்துறங்கி எண்ணியலேவாரு
முன்சோதிவெளியுயர்ந்த வீட்டிலென்றுமுடங்கி
மலநீருமுத்திநெறியருளியபே ராரென்பேன்முதலே
துன்றும்விவகாரங்கள் துடைத்தாதியொன்றே
தொல்லையிரும்பிறவியிருந்தே னெனையுந்தொடரே.

தோடறுமுபர்துவாதசாந்தச் சுத்தவெளிவீட்டில்
சொப்பனச்சாக்கிரச்சுழுத்தி தொலைந்துதுரியாதி
இடம்பொருளேவலுமுண்டா யாதுமருவிகளு
மில்லையென்றுமுக்கணுட னென்றுமொருபொருளாய்
திடந்தானேபற்றுமொரு சிவச்சிந்தையில்லை
சிரவணஞ்செய்தறிவகண்டா காரபொருளுறைக்குந்
தடந்தானேயேதுமற நிற்சிந்தையுடனே
தனைமறந்துவறிவருளுந் தனைப்பார்த்துக்கொண்டே

பார்த்துகொண்டபோதேதுங் குறையிலனுனென்றும்
பகராதவதிசயந்தா னுனியுமாகிக்
கார்த்துகொண்டுகற்பனையொப் பரவாதிநீழுங்
கலைஞானவாகமநூ லறிவாகியோதுஞ்
சாஸ்த்திரத்தேனூறியமெய் ஞானசுயஞ்சோதி
சதுர்மறையேசச்சிதா னந்தவருட்டோர்யும்
மாத்திரந்தான்வேண்டுமென்று மொருப்போதாய்க்கால
மறவாதப்பேரின்பப் பெருவெளியாய்நிறைந்தே. (ரு)

நிறைந்தமுதலெடுத்துமலை யிலக்கசிவக்கயிலை
நிதிப்பாழுமிரவிமருப் புயர்ச்சோதிக்கருணை
யுறைந்துபனிமூடியப்பூம் பொழுதுகனற்காயு
முவப்புண்டோவெனயாது மற்றபரவெளியில்
குறைவறநன்னீதியொக்கக் குந்தியருட்காயுங்
கும்பிடுதலொன்றீத லுன்கடமைத்தானே
திறைத்தீருஞ்சிவஞானச் சாதனமேலாகுஞ்
சித்தசிவமயச்சோதிச் சின்மயசற்குருவே. (சா)

சிற்பரமேயருட்பெரிய ஞானவழக்காடுஞ்
சித்தாந்தமுழுமுதலே சிரம்விளங்கும்நடுவே,

தற்பரமாய்நின்றபொது வற்புதத்தாரணமே
சமரசவேதாந்தமெடுத் துறைக்குமநிவிதமே
சற்பரமேதானெனநின் றாரணிக்கவேங்குஞ்
சத்தாதிக்கருவியுடல் கற்பனையாரென்றும் [யோர்
பொற்பொதுவாய்விளங்கிடுமித்தொழில்முதலாய்ப்பெரி
பூரணமாய்த்திகழுசுயஞ் சோதிநடுவிருந்தே. (எ)

இருந்தபடிநானியற் றறநின்றவீட்டில்
நியமாதிச்சோடசோபக் கலைஞானமூறும்
பெருஞ்சோதிநிகழுமின்பப் பேராசையன்றுப்
பேயுலகவவத்தையறு சமயமுடனிலகும்
வருஞ்சாதியிழுக்கெனும்பொய் மலநாறும்வயறு
பிடும்புடன்வாய்மதம் பேசியிகபராஜாலங்கள்
தருந்தூதுமர்சுநடம் புரியுமுலகந்தோ [பொய்பேயே
தத்துவப்பேய்ச்சாஸ்த்நிரபேய் தந்தைதாயெனும்

பேயுலகவாழ்வனைத்தும் பிதற்றிலொன்றுமில்லை
பிறப்பிறப்புமிருள்விளையும் பெருமாயச்சிறப்பும்
வாயுறைக்கொண்டருமறைநூல் செப்பினதுமன்றி
வாய்மைநெறியாளர்றைப்போல் மலமாதியற்றத்
தூயவருள் தூறியவானந்த பொருள்படிப்பார்
துறவாதிச்சாதனை யாகாதிகிரமங்கள்
ஆயுமறைஞானயோகங்க ளரசுறைப்பார்
ஆனாலுமிவ்வுலக வாழ்விருளின்படைப்பே. (அ)

படைப்பனைத்துமாயவிருள் மூறியராஜாங்க
பகட்டிலட்டச்சித்து உபமானம்வெதுகன்மம்
விடைப்புரியுமாறெனைநீ விளத்தகுந்தநீதி [ன்
விடக்கிலெனைவிட்டாய்ப்பின் விவரமெடுத்துரைப்பே

சொடைப்பயிலுமாளுகைப் பொய்ஜாலமிந்த்ரசித்தும்
பூரிக்குங்கோகரணக்காலத்திவெகுவித்தை
உடைக்கோவணங்களவுப் புசித்துறங்குஞான
வறிவுபலவநித்தியவே தாகமுரைப்பவரே. (௰)

உறைப்பரின்னமுயர்ச்சாதிக் கோலமருட்டிரவு
முசுவாசநிசுவாசமாய்ப் பூரித்தலையு
முறைப்பெரியோர்சற்குரு முத்திநிலைமுழுது
மூகமுடன்வயற்றிழைக்கும் ராஜநீதிபலவும்
குறைவறச்சோடசமூலங் குருவெனமுன்பகட்டுங்
குற்றேவலடிமைசிவ பத்தியநுட்டானம்
இறைவர்கடன்முதுநெறி யறம்பிரமக்கோல
மிதுச்செயலெல்லாமியற்கைபோலு மிரும்பவமே.(௧௧)

இயற்கையில்தன்போல்பிறவி யனைத்துமெழப்பூத
வடிவாகியிருமையிலே மூழ்கிநின்றிரியும்
மயக்கமலமிராகாதி எடனைப்பூமிசளு
மற்றுமனமிடும்வழக்கும் வாய்மைநிலையனைத்துந்
துயர்ச்செய்பலவாங்கருமத் தொழில்பலவுநாளே
தொழும்பெரியதெய்வமறு வீட்டினையுங்கட்டி
உயர்மோக்ஷபதியிதென வுட்கார்ந்துச்சும்மா
யுறங்கியுறங்காதிருக்கு முண்மைநிலைப்பெற்றே.(௧௨)

பெற்றபெருங்கருணையின்பம் பேசாதுப்பிறவா
பிராணையவாசிபிறங்கா திரண்டுச்கலையுங்
கற்றபடிவான்சென்று ஓடாதுக்கருவிக்
காலறத்தன்போல்தீபக் கற்பனையொன்றாகிப்
பற்றறவில்லறந்துறவுப் பரிசனைத்துமில்லாப்
பான்மைக்கேபண்பானேன் பராபரமேயெனக்கும்

முற்றுமுயர்ஞானசாதனை யருளுமூன்று
மலமறவேதாந்தமெடுத்துரைக்குமொருமுதலே (கங)

வேதாந்தமெடுத்துறைக்க விளங்குபெருவெளியே
விந்துநாதங்கடந்த விழுப்பொருளேயுணர்வாய்
போதமெடுத்துறைக்காதுப் பேசாதுபேசும்
பூரணப்போதாகுமுயிர்க் குயிராகுமொன்றே
ஆதாரமூலவகண்டாதாரங் கடந்தவுய
ராதாரமாயளவி லாதவருட்குன்றே
ஓதாதார்க்குண்டாமோ வுயரொழுக்கமீகை
யுண்மைநெறிமனுநீதி வுலகியற்கைத்தானே. (கச)

தானேதானுதியந்த நடுவாகித்தழுவுஞ்
சமர்த்தன்றேசகலமே வலமற்றப்போதம்
நானுதும்நிற்சிந்தை நழுவுமுடறெதற்கும்
நன்றுதீதாகமநூல் சடியநெறிப்பயிலும்
ஆனாலுமிவ்வுலக மகித்தியமுண்டுண்டு
நகைபுரியுமிடம்பொருளேவலும்பற்றப்புலையும்
ஊனுண்டாய்க்களவுபொறைப் பொய்மகிதங்கொள்வே
னுண்டோயென்போலுலகைப்படைத்தழிக்குமுதலே

உண்டெனவுமிருந்த நினைவாதிபுலன்கவிழு
மோதுசிவநெறியாள ருணர்த்தபொதுவாகி
கண்டுயிலுமறிவாகிக் கருவிகரணமுங்
கற்பித்தச்செயலெனவுங் கருதுமொருபொருளே
விண்டுமறைக்களையும் வெகுவிவேகமெடுத்துரைக்கும்
வீம்பிடும்புமேலாகி மெய்நிலையுமழியும்
தொண்டாகியனைத்துயிருந் தொழுவாராருண்டுத்
துணையுண்டாய்நினையவயிற் வழக்குணர்த்துவாறே.

துணையென்றுமுழுதுமருள் நெறிபடைக்குஞ்சுத்தச்
சுயஞ்சோதியேவெளியே முக்கணுடன்தூண்டா
புணர்ந்துருவுமாதாரப் பாதமடிமுடியும்
பூத்தமலர்போல் வாசமூறுகின்றநடுவும்
வணர்ந்துநிஷ்டையநுபூதி வாய்மையென்றுமருவும்
வளமையொன்றேமிகநன்று மனவாசியலையாக்
குணமதுவேண்டுங்கடவுள் சன்னிதிப்பயிலுங்
குறைவறப்பொய்க்கொலைகளவு மாயைநெறியின்றே.

இன்றேயெம்பவமாயைச் சாமியம்பொய்நினைவு
ஆணுவப்பூரணங்கமழ மறிவினுக்கேயமரும்
தன்னையறிவானந்தத் தூயவருளாக்குஞ்
சச்சிதானந்தவருட் டுறவுநிலையில்லை
முன்னாதிப்பொருளுனக்கு முன்னாதிவிளக்கே
முறைபல தூங்குறைத்துமுனக் கிறக்கமிலையெந்தாய்
தூன்றிடுந்தானறவிழுங்கிச் சும்மாநின்றிடத்தே
தோன்றிடுமானந்தவெள்ளச் சோதிபழம்பொருளே.

---

# சச்சிதானந்தம்.

சச்சிதானந்தவருட் டுரியத்தூவின்பச்
சகஸநிஷ்டைத்தனிலென்று மகப்படுமெய்நிலையே
மெய்ச்சுடரே அருள்விடியு மமிர்தமதிப்பகுத்து
விலைபேசும்வித்தகரோ டொத்தனமேயென்றும்
துச்சமனம்பகுத்துவருஞ் சொப்பனச்சாக்கிரமுஞ்
சுழுத்திமுதலாம்பூமி யிடையிருந்தேனெச்ச
முச்சுடர்மூலாதார முளைத்தெழுந்தவாசி
முனையோடுசென்றாதி முழித்தெழுந்திலனே. (௧)

வாசிவாவாவெனவழைக்கு மதிநிறைந்தசோதி
மலரணையிலறிவனந்த மாகவெடுத்துண்ணும்
பேசிலருள்பிறவாமல் பிறக்குமதுதானே
பிணையுமெதுவாகிலதுப் பெருவெளியுண்டாகுந்
தேசிகசின்மயம்பழுத்தச் சிவமேநின்னுசைச்
சேர்ந்துவிடச்சிற்பரமாய்ப் பொதுமொழியுந்தன்னை
பூசித்துவுறங்கியுறங்கா வருளைப்போற்றிப்
பூரணங்கண்டிருப்பரென்றும் புண்ணியநூலோரே (௨)

நூல்பயிலாரெவ்வெவர்தன் கருமமதைக்கொள்ளார்
நூறியதன்பயன்மகித முறையுணராருகமைப்
போலுறவுமாகாதநெறி நில்லாருகமைப்
பொய்ச்சமயத்தாருடனே போந்துதிரியார்கள்
ஜாலமூடநோன்பு அஷ்டசித்துவித்தைமுதலாய்த்
தர்க்கசாஸ்த்திரம்பேசி சரிதைமறவார்கள்
தூலவிடற்சுமையகிலப் பேதமுணர்ந்திருமைச்
சூழ்தளையைநீக்கிப்பரி பூரணங்கொள்வாரே. (௩)

இருமைசூழ்தளைநீக்கி யிருந்துகொண்டதெவரோ
யிதையபரிபூரணமா யிராப்பகலன்றிடத்தே
ஒருபெரியச்சிவமனுவாய் நினையுமருள்வெளியி
லுறைக்குமுண்மையதுபோல் தாஞகியவீடருளிப்
பெருமையின்பப்பிணக்காற்றில் பேய்போல்நின்றழியும்
பேதமனமோபிறவிச் சாகரம்பூந்தலையும்
குருவானச்சதாசிவமே குணக்குன்றேகயிலைக்
கோவேமெய்ச்சிறந்தவருள் கோலவெளிப்பொருளே.

அருட்கோலவெளித்தானே யருட்கோலமாகும்
யாதுமறவானந்த அற்புதங்கண்டறியும்
இருள்மலவாணுவக்கயிற்றை யிடையுநெருப்பாகி
ஏசறநாமென்றுமருள் வெளிபார்த்துயிருக்கத்
தெருளுமருள்சிரவணங்கொண் டமுதருளுமாங்கே
சென்றவற்கெல்லாம் பிறப்பிமிறப்பு மடத்தேறும்
திருவருளாலெனையுமந்த நெறிக்கேநீவந்து
சேர்ந்தாதாய்க்கோத்தும்பீ சின்மயமாம்பொருளே.

நெறிக்கேநீவந்துமன மற்றசிவானந்த
நிஷ்டகளானந்த நிறைவாகிமலநீறும்
பறிபாகப்பக்குவங்கொண்டார்க் கென்னகுறைவு
பயிலுமறையாகமநூல் பரிசொன்றுக்கேண்மோ
கறியவிழ்ந்தென்கண்மூடிக் கற்பனைப்போல்மவுனக்
கருணைபழுத்துறங்கு நிஷ்டையநுபவமேவேண்டு
முறைப்படிச்சாதனைஞானச் சதுஷ்டியங்கைகூடு
மோனமுத்திமாங்கமுதற்பூமி யிருந்தறிநதே. (சூ)

அறிந்தபொருள்தெளிந்தறிவுக் கூறுமனுக்கியான
நறிவுடையக்குருநீதிப் புகலுதிருமூலர்க்

குறித்தவருட்டிரவுகொண்ட வழிப்பெருமைத்தானே
னோதுமயலாணுவப்பொய்க் கொலைதொழில்மற்றது
பெறிதூசிறிதறப்பேசா மவுனமண்ணிக்கரணப் [வும்
பெட்பன்றேபிராணாய மூதாமலூதும்
அரிதரிதின்னிலைக்கயிலை மறபாதிப்பெரியோ
ராதியெனுமொருபெரியபொருள் கருணைக்கொண்டே

கருணைபெருக்காறில்தினங் குழித்துமனமாயைக்
கபடறத்தன்வசயாகிக் கடவுள்பராபரத்தை
தருணமென்றுமெய்க்குழியத் தாராளமாகிச்
சமரசஸவேதாந்தமெலாந் தானறக்கைகாட்டும்
ஒருநிலையேநமக்கென்றுஞ் சதாநிஷ்டையாகு
முயர்மூச்சையடக்கிமன மயர்ந்துநிலைப்பெயர்வா
ரரும்பொருளைமறந்துமனக் கதிவீழுமூலக
வாணுவநீழ்படிந்துணரு மவர்கருமமன்றே. (௮)

மன்றுதியுயருதிமதி மாணிக்கவெளியே
மனமிறந்ததூயவருட் குழவுமருட்பாழே
நின்றுங்குநிறைசூன்ய வடிவாகிநீழும்
நிலைத்தானேநிஷ்டை பரிபூரணமாயறியும்
நன்றுதியந்தநடு வற்றசிவமயமே
நாதவிந்தாதிக்யநடு வெழுமுதையமதியோ
டென்சோதிப்பராபரமே யிடம்பொருளேவலுமா
யிருமாந்துப்பயிலுமருள் மவுனவறையிருந்தே. (௯)

பயிலுமருள்மவுன வீடாகியதிற்சோமப்
பருதிமதிக்கலைதீர்ந்துப் பார்க்குமொருவெளியில்
துயின்றுசிவஞானயோ கத்திருந்துச்சுமுகம்
சுகவாசனத்தமர்ந்து பதுமமொடுயென்போல்

செயல்தானேசுகர்முதல்வா மருமூதுநெறியை
சொல்லிசுகநாட்டமுடன் சுழுத்தியிதையந்தான்
சுயப்புசுயஞ்சோதியமு திறங்குமொருதுணையாய்ச்
சுருதிவாய்மடுக்கவகம் பற்றியெலாங்களைந்தே. (ய)

எல்லாமாயிருக்குமனக் கருவிபுலனற்று
யெவ்வுயிர்க்குமறிவாகு மிடந்தானேபொதுவாய்ச்
செல்லாமல்துரியாதி நிழல்நின்றுவறியுஞ்
சுருதிமறைமுடிந்தபொருளாகிமேலதீதம்
அல்லாமலநேகயுகந் தேடியுங்கண்டறியா
அத்துவிதவீடாகி யறிவகண்டாகாரத்
துல்லபஞ்சென்றறியுமொரு மொழிதானேமனுவாய்ச்
சொல்லவந்தக்குருவேமெய்ச் சோதிபராபரமே. (கக)

சோதிபராபரமேநான் சொல்மொழிக்கேட்டருளும்
தொண்டர்கள்தன்னகங்குழைய துணையென்றுக்கூறி
வாதிமனப்பேயாலு மாயைபடைப்பாலு
மருண்டேமைக்கனவுகண்ட வாறுபோல்திமிர
நீதிநெறியாலுமுண்மை நிலையூறும்நிஷ்டை
நியமாதிச்சோடசோபச் சாரமுதலாலும்
ஆதியெனமௌனபஞ்சா க்ஷரத்தீயையெழுப்பி
அத்துவிதவருள்நெறியைப் பெற்றுணருவாறே.(கஉ)

உணருவாராக்கை நமதல்லவெனும்பான்மை
வுடல்பொருளாவிகள்மூன றுண் டாயறிவர்த்தானே
புணருவார்ப்பொறிபுலன்பூ தங்களுளப்பேதம்
போதரவற்றறியாமை யறிந்திருளைப்போர்த்து
இணங்குவார்த்துயிலறத்தன் னுளம்விடிந்தவுதைய
மிருமையறநின்றரா வமிர்தமிதையத்தில்

பிணக்கறப்பேசாதுண்டு யிறப்பிறப்பும்வீழ்ப்பார்
பெற்றபடிநானுமந்தப் படிபருகத்தானே. (௬௩)

நானுமந்தப்படித்தானே மாசுமருவில்லா
நாதாந்தக்கதிமூழ்கி வேதாந்தம்பயிலும்
பானுமதிக்கடந்தபர வெளிநின்றுப்பகரும்
பண்ணவர்விண்ணவர்காணுப் பங்கயக்கண்மலர
வானுலவுங்கலைத்தாணுய்ப் பரவியருள்விடியும்
மார்க்கமதுப்போதுமென மவுனகுருநீயு
மாணுவென்றருகிருத்தி வாவெனதுமகனே
வாழிமலமற்றெனைப்போல் மௌனமுடனிருந்தே.

மௌனமுடனிருந்தவரார் மூலர்குருவாதி
மறபுசிவஞானமதி வழங்கிநிலைநின்றார்
தவநேமஞ்சாதனையோ காதிகிரமங்கள்
சத்தியம்பொய்க்கொலையறமெய் யுபதேசஞ்செய்தார்
கவனமொருப்போதும்விடார்க் கண்டுயிலார்க்கனவு
நனவறமெய்யருள்கொழிக்குந் துரியாதிப்பூமித்
திவலைப்பெறவுஞ்சிந்தை மெழுகெனமெய்யுருகச்
சேடித்தாரென்றோதிச் சிரவணஞ்செய்வதற்கே (௬௫)

செய்யும்வகைக்குறியாது சிறந்துசிற்றம்பலத்துள்
சென்றுசிவக்கருமநெறித் தெளிந்துசிவமாகும்
பொய்யுடன்மூதுறக் கமலப்பொறையனைத்துமில்லாப்
போதமுண்டாய்பூரிக்குந்தசவாய்வைம்பூதம்
மெய்ப்பொருளாராய்ந்தறியும் வேதாந்தசூக்ஷ
மேலாதாரங்கடந்து மிக்கவருளுறையுந்
துய்யபெருவெளிச்சோதி துறவுகலைப்புகட்டுஞ்
சுருதிமறையாகமனூல் தொழும்புசெயும்பொருளே.

# அழகுகாதலிப்பெண்ணம்மை.

கலைபிரிந்துயிருநிதிகள் சென்றுவருங்
காலபிணைந்துமதி யுருகிவாழ்
கண்புதைந்தவரு ளுதையமாகிபொறி
புலன்குறைந் தறிவினால்பெரும்
நிலையிருந்துநினை வற்றதொட்டியில்
முடங்கிநின்றறி வெலாந்தரும்
நிஷ்டைபற்றிமத மருங்குமாயைமல
நிகரழிந்துநிலை நிற்கவும்
புலையருந்து கொலைகளவுவா துறவு
வஞ்சநெஞ்சனும் பொய்ப்பொருந்தவும்
புத்தியற்றயிவை யாவுமில்லையென
போதமேவிடு மெய்ப்பூரணம்
அலைந்துலைந்து தடுமாறுமென்னையுநீ
யடிமைகொள்ளவு நாளாகுமோ
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (க)

என்னைநீயடிமை யாக்கவென்றும்பரி
சுத்தனாகிமதித் தவிழ்ந்துசென்
றேகபூரணவெளிக்கு ளென்றுமிரா
பகலுமற்று நடைபயிலவும்
பொன்னையென்னிரு கண்மணியைப்புத்தமிர்த
போதம்நீழ் கருணைபூரணைப்
புனிதகற்பகநன் னிழலைப்புஷ்கரணை
பூவைபோற்றி மனங்குவியுமோர்

தன்னைநிஷ்களவரூபசாந்தசுக
சகலகேவல வவஸ்தைபோய்
தனிமைநானுமுனை விழிகசிந்துருகி
தாரணுநியறு வீட்டிற்கண்
டன்னைபெற்றவரு ளொழுகும்நகமுகமெய்
வல்லிமுக்க னுடன்வருகவே
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (உ)

ஆசிந்துளாகியருள் விளைந்தவீட்டிலிரு
கண்கள்மூடி மயிர்சிலுககைக்
கட்டிவாய்பிணைந் தப்பனெப்பிலா
வமலனேயருவி பாய்ந்துகார்ப்
பசியருந்தநாளென்று யென்கொலோ
பங்கயிப்பரி புராதனி
பகலருந்துநவ சித்ரகட்டொழுகு
நாதவிந்தி நடுநிகழுதார்
வசியபேதனவா கிருடமோகன
முடங்குமாயை யெழுபருவநீ
வஸ்துமிக்கவெளி கமலதாரணை
வடுக்கடுக்கென வழுங்குமேல்
அசிபதம்பெரிய தொம்பதார்த்தமுட
னம்மையென்றும் வரவறிவனோ
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (௩)

உண்மைபெற்றுனது அன்பர்செய்கருணை
யொருங்கபெற் றருகிலுய்யவு

முசிதவட்டவர வணையிமாதவிநா
    னுள்ளவாறறிய; மறைகள்சொல்
கண்ணின்மாமணியை அறிவைதூயவெளி
    கருணைபடற்கலச மதியைமெய்க்
கலந்துஞானமுறை நிலைசமாதிசுக
    ராதிபேசு மருள்வாரியை
எண்ணிஞனிரவு பகலுமிந்திரிய
    வியமனேவு மலமிடைவிடா
தேங்கவும்பெரிய லோபமோகமெவர்
    வைத்ததா ரிருமைபேசிமுன்
அண்ணல்பாக மரகதஞ்சிறந்தொளிரு
    மன்னைவல்லபை பெண்ணறிவையே
ஆதியேகருணைஞான நடுவொளிரு
    மழகுகாதலிப்பெ ணம்மையே. (௪)

பொன்னைபூவைமன பொருளைபொதியமல
    புண்புலானுடல மென்றுநான்
பொய்யுடன்பெரிய மத்தமோகபுலை
    சமயகோப மதமருங்கணை
என்னையுங்கவலை யாக்கியன்பரொடு
    யிருந்துலாவுமுற வாக்கிபின்
ஏழையான்கனவு நினைவுகண்டிரவு
    பகலறத்துவித நிலைபயின்
றுன்னையென்னிருகண் ணருவிநீர்ப்பொழிய
    ஏக்கமேலதிக மாகிவா
முண்மைகற்றுயித மகிதமற்றவொரு
    யிதையபூரண நீயாக்கிவைத்

தன்னையென்றழுதிராறுமுக்கணுட
    னடங்குநற்கருணையருள்கவே
ஆதியேகருணைஞான நடுமொழியு
    மழகுகாதலிப்பெ ணம்மையே. (ரு)

பூதபேதமுயி ராதியாதிவுமூழ்
    விளங்கநற்சமயம் வகுத்துபொய்ப்
பிறர்வெங்குடிலை வளர்த்துவாய்மகித
    போதநூல்கலை புராணமோ
தேதமின்றிவெகு நாளிருந்துசுடு
    காடுபோகு மெண்ணமெண்ணமோ
ஏவலோடுபொரு ளிடங்கள்தேடியெமக்
    காலதச்ச னுறைக்கவிழுமுன்
பேதமிக்கவெகு பேதமென்னிருகண்
    மணிப்பொதிந் தறியுமம்மையே
பேருபேருசனகாதி சித்தர்க்குயிர்
    பெருமைப்பேசு மௌனப்பெற்றதாய்
ஆதலாலுமுனை யனவில்மிக்கமன
    முருகிப்பேசும்வித மருள்வையோ
ஆதியேகருணைஞான நடுமொழியு
    மழகுகாதலிப்பெ ணம்மையே. (சு)

தெய்வமென்றிருகை யிதையமிக்கவுல
    கேற்றிபோற்றி மனமகிழ்ந்துழயத்
தேகசஞ்சல விடுக்கபூதமல
    கருவிவென்றிட பொய்த்திகழுநாள்
மெய்வருந்துமறை யிட்டசெய்திவெறு
    விழல்கருந்து மிதுவிதிவினை
மேயவுங்கடவுள் பழமைபேசிமதி

யுருகவக்கரம ரோகரித்
துய்யவுங்கருணை சித்விலாசமிக
பரமிருந்து துணைபெருவர்கேள்
தூதுபெற்றுவரு மனதடங்குமொரு
சுத்தவத்துவித மாகுமோ
ஐயமென்றிருளை காயவேழையடி
யேனுமறிவிலி யென்றழுவனோ
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (எ)

மதிபுனைந்துயிரு நிதியடங்கிகலை
யமிர்ததாரணை வணைந்துவீழ்
வாயுதாரண மன்றறிவிலொப்பறிய
மவுனநிட்களவருபநீழ்
பொதியவுங்கமல புட்பவணையிலிரு
கண்கலந்து பரிபூரணம்
போதமிக்கசுக சாதனுதிபுல
பேதமாகி பொருள்பேசிநீ
துதிவழங்குமுடற் சுரூபவத்துவித
சுடர்மணைந்துரிய வதீதவீடுவு
தொண்டனென்றுவிடும் நீதிமிக்க
வழகாகுமோ குழவித்தொழில்படை
அதிவிதக்கருணை வெளிவளர்ந்தொழுகு
மன்னையென்னையு நீயாள்கவே
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (அ)

ஆகமங்கலைபுராண காவியவே
தாந்தநூலறிய போதமாய்

ஆசைபாசமவமோக பேதமுறை
யநேகமாதி யொருகருணைகூர்
தேகநிச்சயமிதல்ல வென்றடிமை
தெய்வநூல் பெருமைபேசினோர்
சித்தநிகமுறைசமாதி யோகசிவ
ஞானநிஷ்டை பெறத்யானமோ
தூகமானகுறை சொல்வில்நோய்புலை
கூரிருமைதோய் வுறைச்சூடிபேய்
உரக்கமூமைகண்ட கினவுகாண்கில
வுணர்வுபெற் றடியனுய்யவும்
ஆகையாலெனதுவம்மை யென்னையிது
வேளைபூரண நீயாக்கிவாழ்
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (௬)

உள்ளவாரறிய மறைகள்சொல்லுமொரு
வுண்மைநீதுணை முக்கண்ணினே
டுதிமூலகுண்டலிப் பிராணமனு
டுருகிவாசி கலைப்படந்துநால்
கள்ளவெங்கரண பொறிபுலன்கறவு
பூதபேய்க் கடவுகட்டினன்
காதலிக்கயிருகண்கள் மூடிமன
காலநீமூற நேமாதிநே
தெள்ளிலாதெனையு மன்பர்பெற்றவரு
ளாதியந்த நடுவிருக்கவு
மேகமேயமலவாதி சோதிசுக
வரூபநாயகி யிவ்வண்டகோ

டல்லலற்றிருமி தென்னவற்புத
மனுதிமுன்னருள் கூரருமையே
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (ய)

இளமைமிக்கமதி பிலிற்றுநாமகள்பூந்
திருவிவாமனே புராணிகை
இயமநேமவடயோக சாதனே
பிறேரபூரக விரேசனே
வளமைமண்டிருக ஞூடுபாயுமன
வாய்வெனும்பெரிய பிராணனும்
வனையகாலுரு வமைக்கமாய்ந்தச
நாடிகீத யரிமால்மனே
களங்கமற்றபரி வாசியேறிமுழி
முழித்துக்காலறக்கண் சொருகுமென்றுவு
கருவியற்றபரி சுத்தனுகவெசு
பேர்கள்பத்தி நெறியற்றுசொல்
அளவிலாவுளவு தர்க்கசாஸ்த்திர
மமைப்பரென்னை யினியருள்கவே
ஆதியேகருணைஞான நடுமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (கக)

எண்ணியெண்ணிமல கருமசாகரபொய்
கிடங்கிலூத்தை மலநாற்றமோ
எரிவயிற்பரிச ரூபகந்தபொறி
யேகபோகமென யிடைந்துழூழ்ப்
பெண்ணினுசைமத பவுரிசாந்தமண
புட்பலக்ஷ்மி புரங்கரிப்

பெட்புபேசுமயலா வரித்தழிவு
மேடணைப்பிறவி நாள்கள்சென்
றுண்ணிநானெனப் பேய்வம்புப்பேசுற
வுக்கொளுமிவ் வுடலைநம்பியோ
உருக்கலந்தொழுகு முதையபானுமதி
வளருமிக பரவிலாசமே
அண்ணல்பாகமொரு பாதிபெற்றவருட்
டுரவுநீழ்கலை வந்தருள்கவே
ஆதியேகருணைஞான நடமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (கஉ)

ஞானமிக்கமதி பெருகுமாதிவெகு
காலகால மளவற்றபேர்
ஞாயமிக்கமறை விவேகநன்னெறிக
ளுறைப்பருன் பெருமைமீநற
மோனசத்தியென இச்சைகிரியைசிவ
யோகஞான பரைசத்தியாய்
முடிவிலாதயெழு பருவநீயெனது
முறைகள்கேட் டறிவினல்பெரும்
பானகற்பக சுகாதிசோடசவு
பாசனுதி பலபக்ஷணம்
படைத்துமுத்திவெளி ககனசூரியப்
பிரகாசமூது மதித்தீபமோ
ஆனமேருமலை யாதிசித்தருட
னறிவுபேசி வருமன்னையே
ஆதியேகருணைஞான நடமொழியு
மழகுகாதலிப்பெ ணம்மையே. (கந)

# பூரணோதயம்.

பூரணவுதையம் வளர்ந்தனவாசி
மலர்ந்தனபுத் தமிர்தங்கள்
காரணமாக ஆறுவீடொன்றாய்க்
கலந்தன கற்பகவடவால்
தாரணமாகி சமைந்தனதனிப்பெரும்
வெளியினிலன்பரோ டடியார்
ஆரணங்காதற்கொண் டுறைச்சூட
ஆதியேசோதிநீ யிருந்தவாறென்னே. (க)

என்னறிவியாவையும் விழுங்கினைப்பின்னு
னென்னைவிடுத்திருந் திருந்தினைப்பெருமான்
தன்னருஞ்சுடர்வெளித் தடுத்தனைத்தண்டா
மறைகயலொழுகிய தாண்டவப்பொதுவில்
துன்னியத்துணையே சுகவெளிநிமே
சூக்ஷசடாதர சுந்தரஞாயறுக்
கன்னியக்கனியே கடவுளேயோற்றி
கருதியநிலமெதுக் கருணைவாருதியே. (உ)

கருதியக்கருணைநிலமதுமலரக் [டு
கடபடாதிகள்மலக்கருவிக்கருமமானதைக்கனலிட்
பருதிகாய்ந்திடமனப் பாவைசென்றைம்புல
வேடருஞ்சென் றுதிப்பகரும்
உருதியுண்டாயுறை மீட்டுப்பேசாத
உத்தமமடங்கநுபூதி யாயுணர்ந்திரு
ளிருதிதோய்ந்தருவுருப் பேதமேகோலங்களு
முகமையுமற்றுநான் முகம்பிலிற்றிருமே. (ங)

இருமிருமந்தோ என்னைகைகாட்டி [லே
யேகமேசிவபெருமானே இறைவனேஎன்னுயிருட
பருமிருள்பூண்டப்பாவை நோக்கந்தான்
பகரறிதாகினான் பலநாளுமழுதேன்
திருவுளப்பாங்காய்ச் சின்மயத்தாரகமுருவி
பேரின்பதேட்டங்க ளுடைந்தாய்
ஒருவனேவாவென அழைத்தநாளுண்டோ
ஓகொடும்பாவியா னென்கொலோயியம்பே. (ச)

கொடும்பவங்காயச்சூழ் வெளிப்புரமீன்
கோகடைத்தூரியச் சோதிவீழிரங்கி
நடுமைநீயாவையும் வைத்தவார்நீதி
நாயினேனெறும்புறைக் கருவிப்பூதங்கள்
கடுவெளிஞான சூரியமென்னைக்
கடைப்புகவாவென கைப்பிடியாக
இடும்பெருந்தருமமுண்டென வேதவாகமமியம்பு
மிப்புராதனமென்கொலோ வியப்பே. (ரு)

வேதாகமங்களெடுத் துறைக்குமதிநிதியே
வீணிச்சைக்கொண்டுமனம் விளையாடித்திரிய
வாதாகவைப்பமர்த்தி வசனிக்குமநீதி
வளமையென்றால்தகுங்கேட்க உனக்குமநுபூதித்
தூதாகவைத்தேவவிடு கின்றாயினிமேல்
துசங்கட்டிக்கொள்ளாதே சுத்தசிவஞானம்
தீதாககவைதருபோலான்ம சித்தாந்த
சிருட்டியணுத்திரளுயிர்போல் சேடிக்காதென்றே. ()

சேடிக்காதென்றுதிச் சிவமேநான்சொல்லச்
சிதாபாசமாய்த்திகழ் சித்தசாபல்யம்

மூடிக்கைவல்யமுடனிருந் தீய்ந்துக்கொண்டு
மூட்டுகிறீராட்டிதனைக் கூவியருள்படைக்க
வாடிக்கையுனக்கதிகம் வாவெனஞன்சொன்னல்
வம்பென்னச்சித்திரம்போல் மறுமாளிக்கட்டி
வேடிக்கைப்பார்க்கின்றீர் வீண்வாதம்பேசி
விரட்டுகிறீர்வெருட்டுகிறீர் வேதாந்தக்கோவே. (எ)

கோவேயிக்குவலயத்தைப் படைத்தளிக்குமுதலே
குருவேசதாசிவமே குணக்கடலேநிறைவே
தேவேமெய்த்திகழ்கின்றத் தேசொளியேஞானச்
சிவமயமேசின்னமயமே சிதாகாயப்பூர்த்தி
பூவேகண்கண்டவருள் புராதனமேப்புகழே
புண்ணியமேபூரணச் சந்திரர்கோடிவுதைய
மூவேமுத்தமிழ்மாலை யணிவேதப்பொருளே
மூதறிவேயேதறிவே னென்கொலோவியம்பே. (அ)

மூதறிவேமுக்கணுட னசைந்தாடுகின்ற
முழுவெளியேமூடமன முரண்டாதிபிரானே
சூதறியேனிவ்வுடலில் மறவாதஞான
சுகாரம்பசோதிதுணை தொழுதிருக்கவறியேன்
ஏதறிவேனெவரிடம்போ யிப்புலாலுடல [ய்ந்தோ
யிடும்பையெலாஞ்சொல்லித் துயராறிடுவேனேரிடுவா
வாதறிவேன்வயிர்வளர்க்கு முபாயமெலாமறிவேன்
வம்பதிகமானதுறை வசனிப்பேனறியே. (கூ)

அறியாதேனிருக்கின்றீ ரியாருயிருமூடி
அருமறையாயத்துவிதக் குணசாந்தநிறைவாய்
பிறியாதேனிருக்கின்றீர் பேசர்னேபெரியோரய்ப்
பெற்றவனேபிறப்பிறப்பு மற்றதயாபரனே

குறியாதேன்குறிக்கின்ற மனக்களவனுக்கே
குண்டுணியேனிர்விஷப நிர்த்தொந்தநினைவேன்
மறியாதைத்தானிவனுக் கொருநாள்தானாகு
மற்றென்னவிவகார மருவுகிறானறியே. (௰)

ஒருநாள்போல்பலநாளு மிவ்வம்பன்றிவுண்டோ
வுள்ளபடிமனஞ்சென்றப்போக் கெல்லாமென்றுத்
திருநாளுண்டையாநீர் செப்புதற்குநல்லச்
செயலுண்டுசித்தசிகா மறைவிளக்கேவுறைவா
யிருநாளுண்டெங்குநிறை பூரணமுண்டுலகோ
அழித்தேவலுடனிருக்கு மிடமுண்டியிதுவோர்ப்
பெருநாள்வைத்திருக்கின்றீ ரேமாற்றுகின்றீர்
பேசாதெலாம்பேசிப் பிணங்கின்றீர்பெரிதே. (௧௧)

பேசிப்பிணங்கும்பேய் காட்டில்பிர்மானந்தப்
பெருநித்திரைப்பிணைந்தோ காணாதிருக்கின்றீர்
எசிப்படைக்குதென்னேர மிருமைவசன
மிலகுதியோஎதென் றறிவானந்தநடுத்
தேசிவிளக்கையேற்றித்திருச் சிற்றம்பலத்தில்புகுந்
துனைநான்தேடிக் கேட்டுத்தெளிவேனென்
மாசிலாதமணிமன்றேவயதுங் கிமிர்ந்துமுதிர்
மாயைவலையிற்பட்டோ மாய்வதுவோ (௧௨)

மாயைவலையிற்செடியாதே மருட்டிவூமைக்
கனவிடுக்கில்வைத்து வருமங்கூறாதே
தாயைச்சிறந்தக்கோவிலெனத் தாதாய்நம்பி
தழுவுகின்றேன்தயைதா னுனக்கேனில்லையையா
வாயைச்சப்பிமனமருங்க நணங்கவணங்க
வுசதிப்புலக்கால்காட்டால் வளைந்துநானிருக்க

தேயையணிந்தசிவப்புரத்துக் கரசேவேதந்
தேடுகின்றதெய்வதமே மெய்ச்செப்பாயோ (கரு)

தெய்வதவாரணவாசிப் படர்ந்துநிகழானந்தப்
பொதுவெளியேசித்த மசையாகருணைநல்கும்
மெய்மதவாரணவொளி முன்விடியுமருளுதைய
வித்தகமேவேதாந்தம் விளங்கவருமுதலே
பொய்மதக்கோபாதிபுலை புலக்கோபமுனையோ [வாய்
பொருளுனக்குப்பிள்ளையென்றால் போதமதிப்புகல்
செய்விதநானிதற்கென்ன சின்மயவாருதியே
சென்னிமன்னுவிளக்கேயீ தெந்துகொலோவியம்பே.

சின்மயத்தைப்பேசாதச் சித்துருவைத்தானே
தேடுமறிவானந்த மருள்பெரியதேஜை
தன்மயமாயுயிரனைத்துங் காட்டுமொருவொளியை
சதாகாலபோதையாய் சாசுவதமாகுஞ்
சின்மயத்தைசொரூப சித்தாந்தவருட்கோலச்
சுதந்தரத்தைசமரச சுவாநுபவப்பூர்த்தி
கின்மயத்தைநெஞ்சொடுமெய்ங் கிளர்கின்றநினைவை
நிஷ்களத்தைநிறைஞ்சனத்தை அஞ்சலிசெய்திடுவாம்.

அஞ்சலிசெய்திடுமனமே ஆகடியம்வேண்டா
மலட்டாதேபொறிப்புலப் பூதங்களொடுசேர்ந்து
வஞ்சகமாய்வரும்வசனம் புகுந்துவாய்படுத்து
வழங்காதேநானெனும்பொய் மலவாசையடைந்து
துஞ்சாதேசுகநிஷ்டைப் பாராயணந்தான்
தோடயஞ்செய்கேவல பூமிகளறவேதாந்தங்
கொஞ்சும்வெளியுயர்வாசிப் படரழகினுடனே
கூடாயோவுனைக்கொல்வேன் வெல்வேனீயறியே. ()

உயர்ராசிமண்டலமா ரூபித்துப்பேசா
உண்மையொடுஞானமதிப் பேசுமொருநியாயம்
அயர்ந்துமலச்சேறுடு மசடன்மனக்கரும
மல்லாதுகாமியநீ ரோடுபவவேதைத்
துயர்காட்டில்துன்படைந்து சோரபயங்குரோதந்
துயில்சோம்பும்பசிதாகச் சித்தவிடாய்ச்சேரும்
இயர்க்கையிலிச்செயலெலா மெதற்குமுண்டுயெந்தா
யேழையடியார்க்கிறங்கிவருங் கடவுட்குருவே. (கஎ)

எந்தாயான்சொன்மொழி கேளிப்பொழுதே
ஏகசச்சிதானந்தவெளி யிருக்கயிடந்தந்தால்
சந்தேகமில்லைமனக் காலனவனிறப்பான்
சாதுரியமாயுனக்கு சற்குருவேசொன்னேன்
சொந்தமொன்றுநிந்தையொருவர்க்குணர் வாய்சொல்லித்
தொண்டுசெய்துத்திருப் பாட்டெலாம்பாடுகின்றீர்
விந்தையீதெல்லாம்வேண்டாம் விபரீதமாகும்
விண்ணகமுமண்ணகமுங் கொள்ளாதகளிப்பே.(கஅ)

# கற்பகநன்னீழ்கடவுள்.

கண்ணிநடுமேருகலை யுயர்பானுமதிசேடை
யாக்கிகரு ணாலயத்தில்
நடுவெளியிலகண்டிதா காரமெனயுகங்கோடி
அளவிலா தறிந்துதேடி
எண்ணிறனுசையற சதானந்தபூரணமெ
டுத்துண்டு ஞானபாதை
எனக்குண்டுவேறொருவர் நடக்கவழியாகுமோ
யென்றோதி மவுனகுருவும்
விண்ணாழிபடர்கருணை வேதமுன்சொல்லவும்
விருதாவி லலையுமனமோ
வேதாந்தவீட்டில்குடி யிருக்கவும்விமலனே
அமலனே யென்றுகூவி
கண்ணாழிமதிமூலவாசி விளையாடிநான்
கவலையற் றிருப்பதென்றோ
கண்ணிநடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (க)

ஒருவனேயுயிர்க்கெலா மொளியிட்டமணிமாட
வொளிவிந்து வெளிபெருக்கி
உறைநான்குமறைவேத மொழியதனிநடமாடு
மோராறு மனையிலைந்துக்
குருவானசமாதிசாதனைப் பயிலுங்குண்டலியில்
குறிவாசி மவுனவட்டம்
கூடவுங்கலைஞானம் பகருமதிவளர்சோலை
குந்திநா னள்ளிவாரி

நிருபித்துநிருமலரிடஞ் சென்றுநிதானமுடன்
நித்யஜெபதவ சாந்தனாய்
நிஷ்களானந்தசபை கூடியருள்பெய்யவும்
நினைவொடு நானுண்டுவுண்டு
கருதறியசச்சிதா னந்தவெளிபாதைநடு
காட்டவரு மவுனகுருவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (௨)

பிர்மநித்திரைமூடி பிராணயதீபமொடு
பின்னுமுன் னேடும்வாய்வை
பிசகாதுநிற்சூன்ய வெளியாக்கிபேசாத
மௌனியா யரூபவழகில்
தற்பிர்மநிலையாகி சகலகேவலகருவி
சகலசண் மார்க்கமாகும்
சமயமிதுயென்னுரு மாதர்சிற்றின்பமோ
தழுவிதனுர் வளைத்துலாவி
வர்மம்வைத்தெனை யவலமாக்கமன்மதபாண
மேவியவளிதழூரலை
வாயாரவுண்டுவரி வண்டொழுகும்பிறைபுருவ
கிளிமொழியை அமிர்தகும்பக்
கர்மமானதுமூட மருட்டிமயல்மூறுதே
கருதுமிக யெளியனலவோ
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (௩)

சிந்தையானதுபிட்ட தொழிலாகிஜெகஜால
மோகன கிரீடிபெண்கள்

சிலுகசெந்தபூல்கலாழிகள் சொலியநடையொடிய
தேகமானது குங்குமக்
கொந்தலர்பூந்திளநட்பு மதிமஞ்சளிருள்மேகக்
கூந்தலிரு கும்பகலைகள்
குமுகுமெனமலர்தாது புட்பசாந்துகள்களப
புணைகட்டு பட்டில்பொட்டுச்
சுந்தரமிகுந்தயிரு நயனவிழிமொழிபவுசு
சுரிகுழலி னிதழ்பற்களில்
சோபமிகவாகிமன வாதமானதுபொலிய
துணைப்பற்றி சுகமார்க்கமாய்
கந்துகசுபோதமத விருளிலெனைவைக்கவோ
கருதினே னெந்தநாளும்
கண்ணிnடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (௪)

மனமத்த தமாயகணவாதிநினைவுமல
கருமசாகரத் தொட்டியில்
மதிசித்தசாபல்யவிதி மொத்ததிரிபூத
விஷயகம ஞதிமமதை
தினமாறிநடைகலைக ளிடமோனவைப்பாகி
திருவுளம் பாங்காகிநான்
செய்கரும மியாவையு மறநின்றுசிவஞான
யோகநித் திரையில்பழகி
எனதாவியுள்ளபொழு தேகமலதுரியாதி
யெதிர்பேசி யழைத்திரவிகால்
ஏயாதுகட்டிகே சாதிமூலாதார
கனல்மூட்டி யெங்குநிறைவாய்

கனவாசையகலவும் நினைவாசைவிலகவுங்
　கண்மூட நிஷ்டைதருவாய்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
　கற்பகநன் னீழ்கடவுளே. (ரு)

எல்லாமும்வல்லவொரு குருவென்றுமனுவாகி
　யெதிர்பேசி வந்தபொருளே
எந்தைசிவபரம்பரையில் திருமூலராகயென்
　முன்கூடு விட்டகுருவே
சொல்லால்முழங்கியடி மூலவட்டத்தில்சிவ
　குருகாட்டி மொழிந்தகுருவே
சுகமின்னமேன்பிள்ளை வாராய்நீசிரஞ்சீவி
　மார்க்கண்ட னென்றகுருவே
பல்லோருமறியமன மாயைபகடிகள்காட்டி
　பாரழகீ தென்றகுருவே
பல்லாண்டுகாலமுங் கருதரியமனுவாகி
　காட்டவரு மென்றகுருவே
கல்லாலின்கீழ்வாரணங் காட்டியெவர்சொல்வ
　ரீதென்றுரைத்த குருவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
　கற்பகநன் னீழ்கடவுளே. (சா)

ஜகநாதவெந்தைபர சிவமாதியென்னையொரு
　பொருட்டாக ஜகஜாலமாய்
தனியாகமனவாசி கயற்பூட்டிதற்பொருள்
　விளங்கவெகு அறிவுபேசிச்
சுகமாககாமாதி வுலகமதுவிவகார
　துயில்வளப் பங்கள்சூடித்

துக்கமானதுகொடிய நினைவிட்டுவாரிதலை
சுமையாள னுக்கிவைத்துப்
பகல்போலுமிடுவாது அறியுமூதுலகமும்
பனிகதிர்கள் மதியமெரிய
பால்போலுமிருக்குதுனக் கநியாயமிரட்டெலாம்
பார்த்தெனது சிந்தையையா
ககனவெளியுயர்வாசி மண்டலமலர்ந்தசுக
கல்லாலடிக் குள்வளரும்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகனன் னீழ்கடவுளே. (எ)

நிமைபோதுதட்டாம லறிவோடிமனமீள
நெடுமூச்செறிந்த நினைவு
நிதானமுடன்மோனவெளி நின்றுருவுமூலமுக
டண்டகோளகங்கள் நிறையும்
அமைதிவெகுசித்தசவு பானகற்பகநிலையில்
அரூபசிவ சொரூபநிகளம்
அத்துவிதவெத்திநில சுத்தவருள்சின்முத்ரை
அசலசல நிருவிமூலம்
தமையறியுசண்மார்க்க முத்திதொழிலாளர்க்கு
சகஸாநுபூதி நித்யம்
சம்புசிவசம்புமக தேவனேதேவனே
சகலகேவல நிஷ்டையே
கமையாகஎனையன்ப ருடனடுமையாக்கிசிவ
கைவல்ய நீதியருள்வீர்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகனன் னீழ்கடவுளே. (அ)

மதிபொய்த்தகனவு நனவாதிஜாலங்கப்பல்
வார்கடலி னெடியதிரையில்
வாய்வுமண்டலமூட வதிர்பட்டுபனிமூடி
வயிற்பசித் தனல்துளாவ
முதியகனல்காருப்பு நீருண்டுமுருண்டாடி
விழிவாய்ப் பிதுங்கநின்று
வேறொருவரெதிர்பட்டு வரவிலககண்டுகுளி
பாட்டியிளைப் பாறவைத்துக்
கதிர்கண்டபனி போலு மிலகநிகர்கண்டுவாய்க்
களித்துகை கால்கள்கட்டக்
கண்டகற்பனைபோலுங் கரைத்தட்டிகாமவனல்
சேருடசெக மோகனக்
கதிக்கிச்சைக்கண்டதே யன்றி திருமூலகுரு
நாதரேகண்டதுண்டோ
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கூ)

அநியாயமாகவரு மாசைமோகங்களுல
கடுமைசெய் தியாவுமிருமை
அந்தகாரத்திலிற முழுகவைத்திருக்காதி
நூல்பேசி விளையாடிநீர்
சனியானமனக்கால னடர்ந்துவாய்வெட்டிவச
ஞதிபொய் யுடமைபேசிச்
சங்கர்ப்பமன்றிவரு கொலைபாசவிகாரவழல்
சார்ந்துநான் துறவுபேசி
இனியாவதுங்கடவுள் சமுகம்வரவறியலா
மென்றெண்ணி யத்துவிதமா
யிருள்வீட்டிலொளிர்முத் திரைச்சாதனம்பழகி
அறுவீடுண்டு செய்துமதியாங்

கநிகண்டுதேன்பாலு மமிர்துண்டுநடுவீட்டை
கட்டிகுடி யாக்கிவையும்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (க0)

ஆராரமைத்தவிதியோ வெனதுவுடல்பெற்ற
அகமாயை தந்த்ரஜாலம்
அறிவெனதெனும்பெரிய வருளெனதெனுமறிய
அன்பென தெனுமான்மியம்
பாராதியுலகெலாம் நானெனதெனுங்கொடிய
பாவமும்மெனதெனும்பொய்
பவுசுபாக்கியமியாவு மெனதெனும்பாரகா
வியநீத நூல்தருக்கம்
பூராயமாகவருமெய்யென தெனும்பாச
புலைகொண்ட ளிதமகிதமும்
புவியேழுமாழினு மடங்காதவாசையுக்கும்
போம்போ தேதாவதுளதோ
காராறுமலபாண்ட முள்ளபொழுதேகல்
லால்கீழாதி முத்திதருவீர்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கக)

எண்ணிபுண்ணுசாம விரங்கிவந்தருள்புரியு
மெண்ணிமுன் னருள்புரியுமெய்
என்றுமழியாதவருள் நிஷ்டைசுகமருள்புரியு
மெந்தைகுணங் குடிகுருவுமாய்
மண்ணுகிப்போகுமெனே மனுவாகவந்துவந்
தென்னுளே மருள்புரியுநீர்
மதிமண்டலங்கட்டி குடியாகிவாழ்ந்துயிரு
கைபிடித் தருள்புரியவும்

பண்ணவர்கள் தேடுசிவ குருவே நீரருள்புரியும்
பராபரமே நீரருள்புரியவும்
பாராமல்பார்த்துமன மாயைப்பொசுக்குமருள்
பரவெளியொன் றருள்புரியவும்
கண்ணுறுபெய்யவருங் கருதரியசிவமேநீர்
கருதுமுன் வந்தருள்கவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கஉ)

மனமாயையடங்கவெளி வாசிமலர்வளருமதி
மண்டலங் கட்டிமாலும்
வாயுவைகடக்கவரு ளாயுளைவளர்க்கவரு
மவுனகுரு ஞானமூர்த்தி
தினமாயையாவுநெழி வரவுநாளைநினையிலோ
தீயிட்டுருக் குதையா
சின்மயம்விளங்கவரு தேவகுருவேசித்த
மசையாத பரிபக்குவம்
கனமுனதுபாதமடிமுடி யிட்டநடுவீட்டில்
கண்மூடி மவுனனுகக்
காட்டவருவீராதி காவியமணிந்தசிர
கிரிவாழு கைலைவாழ்வே
கனவாசைநினைவாசை காட்டிதுரியாதிநகர்
கடுகவந் தருள்புரிகவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பநன் னீழ்கடவுளே. (கங)

வாசிவிளையாடிவரு மண்டலவிளங்கவெளி
வஸ்துவென முளைத்திருப்பீர்
மடமாதராசைமல மற்றசிவஞானமதி
யோகவருள் வரவழைப்பீர்

தேசிகசின்மயமூர்த்தியாக யிருதயமகிழ
சிவமேயென் னுடலாகுவீர்
திரிமண்டலங்கமிழ பரமண்டலம்விடிய
திடுக்கென்று வந்துவிடுவீர்
மாசிலாவுபதேச ஸவக்கமதிதருகுவீர்
மனமற்ற செல்வனுக்கி
வரவழைத்தாலின்கீழ் மகனென்றுவாழ்த்துவீர்
மரப்பாவை பேசவைப்பீர்
காசிராமேசுரமாயிரத் தெட்டுமருச்சிக்க
காட்டுவீர் முன்வருகவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கச)

பழஞ்சோதிமனுவாகி நிறைந்தவருட்சிவமாகி
பாவியேன் முன்னிருந்து
பகரறியசித்திமுத்திக ளீயுமறைவேத
பங்கிட்டிருந்த குருவே
மழலையெனவற்புதம் விளங்கசிவநித்ரையுடன்
வழக்காடி நின்றகுருவே
வரதவைத்தியமூர்த்தி வள்ளலெனமதியூர
லுண்டினித் துறைத்தகுருவே
அழல்சாக்கிராதிகன விட்டநினைவாதிநில
மற்றுந்தி துரியபூமி
அறிவிட்டுவாவென்று அழைக்கமனமில்லையோ
அப்பனே ஞானவூர்தி
கழலிட்டபூரணவிலாசமணிவீட்டில்தினங்
கருதுமுன் வந்தருள்கவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கரு)

வாமபாகத்திலெடு நின்றகுருவேவால்
நீழ்நின்று வந்தகுருவே
மரவுரிவுடுத்திவழிசென்ற குருவேபார்த்து
வள்ளலென நிறைந்தகுருவே
தூமமொடுதூங்கியிவன் பாராமல்போவதென
சொல்லசிவ ரிடபமுகமாய்
தோன்றவருமாதியே சுகபிர்ம்மரிஷிகளுடன்
துலங்கசிவ சொரூபகுருவே
நேடமொடுசரிதாதி கிரிகையொடுவேதமுறை
நெறிபேசி நிறைந்தகுருவே
நீதிநெறியில்லாத நாய்க்கென்னதுயின்றுமன
மாயையொடு நீந்திநீந்தி
காமசாகரகுப்பை கிடங்கிலிறவைத்ததுவுங்
கருதுமுன் வந்தருள்கவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கசு)

சனகாதிபதிலெண்ம ருடனுதியாய்வந்த
சாம்பசிவசாம்பசிவமே
சகமோகனக்கிரீடம் பதுமையெனஆடவும்
சருவபரம் பரைகணங்கள்
சுனகாபிஷேகமுட னோராவதங்களிர
கந்துகவி மானபரிகள்
கார்க்கவுங்கின்னர கிம்புருடவித்யதவர்
கைலயங் கிரிமுழங்க
தினகரனுமதியாட குமரகோட்டத்தில்முர
சரதராசிவசிவா வென்றூஊ
சித்தியெட்டெட்டொடுமுன் வந்தகுருவேசென்னி
மின்னுமருள் ஞானகுருவே

கனவாதிகருவிபூமிக ளற்றஞானபூ
மிக்குள்கணம் வந்தருளுவீர்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கஎ)

கோடிகோடிகள்தெண்டங் குருவானபரமேநான்
கும்பிட்டேன் குறையைகேளும்
கூப்பிமுன்தென்பாலில் நிருவியாய்தேகமொடு
குண்டுனி திரிந்துவந்தீர்
சாடியையுடைக்குமுன் சாடிநின்றயத்தின்று
தணலிட் டாகாரமாகிச்
சண்டையிடுவூமைபரி கருவிதசபுருடரைத்தன்
வசமாக்கி சாசுவதமாய்
மாடியைக்கட்டிமன மாடியிலுரங்கிவாய்
வுண்டுண்டு வுனைதேடுமேல்
மாடியில்கண்டிரவு பகலறமவுனநிலை
வைத்துசிவ ஞானநித்ரைக்
கூடிவிளையாடுமிந்திர கிரியின்மேனடன
குருவேநீர் கூட்டிசொல்வீர்
காடியைகுடிக்குமுன்ஞானக் காடியைகுடிக்கவுங்
கருதுமுன் வந்தருள்கவே
கண்ணினடுமேருவளர் கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (கஅ)

மூலமணிவிளக்கைநான் கண்டுடலில்தெரிசிக்க
மூர்த்தியாய் வந்தகுருவே
மூடமதிபேசிவெளிதேட மதிகூட்டவரு
முறையொருவ ருறைக்கவெளிதோ
கோலமணிவாலைகுரு சுவாமியொடுநிறைவீட்டை
குந்தியுட்கார்ந்து ரையால்

குணசமுகம்தெரியாம லறிவற்றநாயன்முன்
கொடிமுடி கைலாசமேரு
சீலமணிதாய்நின்ற ஆலவாய்தெருவிலருள்
செப்பகேட் டிருந்தகுருவே
தாயைச்சிறந்ததுணை தானென்றுவந்தகழல்
சந்ததமும் நெஞ்சில்மறவேன்
காலமணிநாதர்திரு கொலுவீட்டிலருள்மொழியே
குருவேநீர் கணமருள்கவே
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (௧௯)

மருவாதபுலியூரி லறிவானதீபமிட்
டுருவாள னுக்கிமேலாம்
மதிகூடதிரந்தொருமை படபேசிவாசிவளர்
பேரின்ப கதிர்பரப்பி
திருவாதவூர்கடவுடே வாகிசிவங்காட்டும்
சின்மயா னந்தவாரி
தேஜசிவிளங்கவரு தேவனேநின்னடிமை
திருவுள மிரங்கிவந்து
குருவாகவுங்கால வட்டத்திலீராறு
கட்டிகுண்டலி வாசிமேல்
கூடிகதிர்மதிசோலைநடுவீட்டில் கருவிகளை
கொன்றுயிரைப் பரிறிநானே
கருவாகவுஞ்செனன மாகாதுகருதறிய
துரியபூமிக்குள் வைப்பீர்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (௨௦)

ஆத்துமத்துக்கான அறிவுதருஅத்துவித
ஆனந்தவீட்டில் சும்மா
அங்கமிளைப்பாரமதி பாலுண்டுஅன்பருட
னரூபம்வளர்வெளிபேசிடப்
பூத்தமலரிட்டுபணி யேற்றிமனமசையாத
புத்திதந் திந்தவேளை
பூரணமடுக்கஅச வாய்வற்றுபொறிபூத
புலனற்று போகவைப்பீர்
நாத்தமலமூறுசுனே காமவழலாடுதே
நன்றுதீதுடன் சேருதே
நானென்னசெய்வனிதற் கேதாவதீயுமொரு
மணிமந்த்ர வைத்யமில்லயோ
காத்தோடிபோகுமுன் பார்த்தாதியுடன்பேசி
விளையாட கருணைதருவீர்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கற்பகநன் னீழ்கடவுளே. (உக)

ஆராததுக்கமும் போராடுமனமாயை
ஐயயெவர்பால் சொல்லியென்
அறிவினைமடக்கிவசமாக ஆதாரவீட்
டுக்காக கட்டிவைத்து
தீராதகருவிமும்மலநீரை த்யானமொடு
தீயிட்டெரித்து சும்மா
சிவமெனயிருந்துதவ யோகபூமிக்குளிரு
கலைவாய்வை கூட்டிநிற்ப
தேராதென்பேச்செலா மெந்தைசிவஞானசம்
பந்தமென வந்தகுருவே
யீசனேபேசாத அருள்வாரியாழியே
இந்த்ராஜாலங் கனவெலாம்

காராதுவிட்டதென நியர்யமுன்சொல்வரோ
கருதிலதுவல்ல வருள்வீர்
கண்ணினடுவளர்மேரு கருணையானந்தமே
கறபகநன் னீழ்கடவுளே. (௨௦)

---

## சோதித்துணை.

சோதித்துணை நீயாகிநடுச்
சுகமாய்விளையுஞ் சின்மயத்தில்
நீதித்துணையாய்ப் பேசுதற்கு
நினைவாயகப்பட் டிருந்துகொண்டாய்
ஆதித்துணைநீ யருமறைச்சொல்
லருபவெளிநீ யனைத்துயிர்க்கும்
பாதித்துணைநீபரம குருவானச்சிவமேயேதொன்றும்
பாவியறியேன் பணிவதற்கே. (௧)

பணிவதற்கிருந்தால் பலன்தருவாய்
பரகதியுண்டாம் பெருஞ்செல்வம்
அணிவதற்குண்டாமத்துவித அரனுண்டாகிஅன்பரெலா
அறிவோடிரங்கி வாழ்ந்திருக்க
மணியதற்குண்டா மனமற்ற
வாழ்வைச்சொல் வாரியாருண்டு
துணிவதற்கானத் துரவுண்டோ [விளக்கே
சொல்லால்பொருளாலுறையாதந் துரியாதீதச்சுடர்
விளக்கைப்பேசா வெளிநிகழும் [திடை
வேதத்தருவைவிரித்துரையா வித்தகச்செல்வவாரு

உளக்கையால் யானெனப்பிடித்து [யை
உணரும்வாழ்வை ஒருபெரிய
அளவைத்தேடா அரும்பொருளே
அனலில்மிக்க அழுதுருகி
விளக்கமறியா திருந்ததுவு [தேவே.
மெந்தாயென்னவிழலறியேன்விமலவூர்திமெய்த்தேவ

மெய்த்தார்கொத்தே கதிருயர்ந்த [தக்
மதிவார்பிடுங்கிவைக்குமின்பவாழ்வேயென்றுமழியா
கைத்தார்நிறைவேகனகமன்றி லாடுநெடுவேகண்கலந்த
கருணாகரமே காமியப்பேய்ப்
பொய்த்தார்நிறைவேன் புலையனுக்குப் [லியதினம்
பொறிபுலன்பூதப் படையோடுபுண்புலாலாக்கைபொ
வைத்தார் வம்புதினம்பேசுகின்றார்
வந்தியேனண்ணுமலரடிக்கு வாழ்த்துகேனப்பாமான்
மியமே. (ச)

வாழ்த்திப்போற்றி வரலாற்றை
வாய்மெய்க்கூறுக நெக்குநெக்கென்
றாழ்த்தவிடத்தை யுண்ட கலன்
சேற்றைநாறுந் தீக்குழியை
பாழ்த்தவினைநோய்ப் பிணிநெருப்பைப்
பார்த்துமனந்தான் பதறுதையோ
வீழ்த்தித்தினநாள் மனக்காலன்
வெருட்டிப்போனன் வெளிமயமே. (ரு)

போனன்மருட்டி வருகின்றான்
பொழுதுவிடிந்ததென வயறும்பொதியவுண்டுமலவீழி
வாணாள்மடங்க வரும்போது
மருக்தந்துணையா ரவதிகொலோ

ஏனுள்போக இருக்கின்றீ
ரிம்மாத்திரந்தான் போதாதோ
ஊனுனுயிர்மெய்த் தாவிவள
ருறையாலுனக்குப் பிழைப்புளதோ. (சு)

உன்பிழைப்புறைத்தா லெனக்குமிடமுண்டோ
குடிப்பெற் றிருப்பதற்கு
என்பிழைப்பெல்லாம் பழிக்கின்றீர்
இருக்குமிடமும் விட்டோடப்
பின்பிழைத்திருக்க யிடம்மறியே
னிறவாகச்சிப் பெரியகோவே
நின்பிழைப்பதனி லிருக்கவைத்தால்
நிதம்போருரோ நிட்களமே. (எ)

நிட்களமேநிறைஞ்சனமே நீங்காத்தியான
நினைவுபரிபூரணமே நிறைவேசாந்த
புட்களமேபுனிதநிரா லம்பகுணதீத
புராதனமேபுண்ணியமே போதமேதன்
சட்களமேசமரசமே சதாநந்தநிஷ்டை
தற்பரமேதாரகமா யோருருவீடும்
மட்களமேஎன்தேகமையோ ஏனறிவா
யிருந்தோதுகின்றீ றெம்மாத்திரமீதுனக்கே. (அ)

இதுதானேவுன்சிறப்பு உயிரெலாந்தானே
வுறையிட்டுஅதுவதுவே இன்பமுடனுன்னைப்
பொதுவாகப்பயிலுமறை போதமெக்காலம்
புத்தமிர்தஞானவெள்ள மோடுகின்றவூற்றே
எதுவென்ருல்யாவுமுனைச் சங்கைசெய்யுமிதினு
லென்னேரமுன்னேக்க மாயிருந்துப்பேசா

மதுவருந்தும்வண்டுபோல் வாக்காதிரூப
மனமற்றவாருதியாய் மவுனமதியுண்டே (௯)

உண்டிருந்தவற்புதத்தை ஒரைந்துப்பூத
முடலொடுங்கிநின்ற வருளாவயத்தைசிந்தைக்
கண்டிருந்தக்களிப்பை கருணாலயபேரின்பக்
காட்டையநுபூதியுட னறிந்தொழுகுமன்பைத்
தொண்டுசெயுமைவர்களின் கூத்தைசிவஞானங்
கூறுகின்றசொற்பூரித் தர்க்கத்தைசொல்லாய்
பண்டுறையைப்பராபரத்தின் பரவெளியையெவைதான்
பகுத்துரைக்குமெனேயேழைக் குடியாக்கிவையே. ()

எவைதானென்றேழைகுடி யாளனுநானடுக்க
ஏகபராபரவீட்டினெல்லை நிலமெல்லாங்
கவையாடும்மரம்போல்நான் கற்றதெல்லாம்பாழ்த்திக்
கருமமையாசிலைபோலேன் மனமோடியலையா
சுவைதானேபருகிசுத்த சன்மார்க்கனாகி
சுகாரம்பவருள்விளக்கை தூரிடவும்முன்னே
இவைதானேசுகராதிச் சித்தரெடுத்துண்ட
யின்பநிலமென்றுதி யுரைத்திடநன்றலமே. (௧௧)

நன்னலமேநாதாந்தச் சுவர்க்கமுத்திவுண்டானயிடமே
நடுநிலந்தானாகுமென நம்புகிறேனானால்
உன்னவந்தானெனக்கொவ்வி வருகுமொருவிதந்தா
னுணர்த்துவதுமென்னேநா னெப்புகமையில்லா
நன்னிலமாய்க்கண்டுகண்டு ஞானமதிநிகழுஞ்
சதானந்தநித்திரையில் மூடங்குவதுமென்னாள்
என்னலமென்றெருமேலா முபகாரமீவா
யுள்ளபடிக்கள்ளமனப் புலன்கருவியறவே. (௧௨)

நலமென்னத்தீதென்ன மெல்லாமோர்வழியாய்
நாயகமேநட்டணேயென் றொருவேதமுறையால்
புலமென்னஐயாநீ ரெனக்குமிதுவிதிதான்
போதுமெனமடமாத ராசையினில்விழுந்து
குலமென்னசமயாதி குதற்கமென்னசுத்த
மசுத்தமென்னகுணங்குறியு மென்னபுலேயுடலால்
பலனென்னப்பராபரமே பார்க்கிலுலகெல்லாம்
படர்சூன்யநிலமலவோ பணிந்ததிதற்கரசே. (கரு)

---

## வ ண் ண ம்.

அதீதம்படர்முளேந்து இலேயென்பனஉணர்ந்து
அருவென்பன வளர்ந்துஅறிவாகி
அகிலம்படவகண்டமுழுதும் நிறைந்தெழுந்து
பிறவுஞ்செயலநேகமணுவு மிறந்திருந்தஉயிர்மூலம்
கதிரென்றெளிர்விளேந்த கலேயுண்டெனக்குலால
முளேப்பிண்ட வயமாகக்கருவாகி
கனதிங்களுமீறைந்து வுடலம்பெறமண்வந்துப்
பருவங்குணமொழிந்துச் சிலநாளில்
முதிர்மண்டலமுழங்க உறைவிண்டலர்கழிந்து
முலேயுண்டமிர்தமுண்டக் குழவிக்கண்டு
மதியம்பெறமலர்ந்து வயதுண்டெனவுறைத்து
மறைவேதவனெழுத்தை மலிவாகிச்
சதிர்கண்டுறைத்தொழாவிப் புவிமண்படநடந்து
வெளிவந்ததிர்ந்து மேவிவிளேயாடிப்

பதிவந்திருக்கவன்னேமுக வாய்த்தழுவியுச்சி [ளில்
முகந்தைந்தெனவுமாயுள்வயதோதும் வருஷம்வருநா

சுபவாரமுநாள்களதி வேதைகளுமற்றச்
சுகவேளைகளு மோறையிதுநாளென்
றுபசாந்தமுமாதாபிதா வந்தனைகள்சொல்லி
உபநயனங்களிட்டு வுணர்ந்துவோத
அபமன்றுடைகள்சாத்தி அணியாபரணமிட்டு
அழகும்பருவமர்ந்து கலையுமிகரிணர்ந்துபதினுறில்
தவமும்பெறவளர்ந்த மகனென்றுருகிமாதர்
மயல்கொண்டிடுமிதென்றுச் சந்தோஷம்
சபையிங்கிதம்விளங்க சகுணம்படவிவாக
மிணைந்தின்புறப்புணைந்துச் சகலலீலை
யிபவஞ்சனைகளற்று வுலகந்தனிலிருந்து
உபவாசகம்பயின்று யிதுசீயென்
றுபசாதனைவிசாரமுடல் நிட்சயமீதல்ல
ஒருவாபரனென்றுதி முதல்நாமம்
செபமந்திரத்தியானமுடலைந் தெழுத்தீதென்றுத்
தேடிக்கர்மம் மிகக்கூறி. (உ)

நயனங்களுமுகாரி வளர்பிஞ்சகமிடாவு
நதிசந்திரக்கலாபமுலை மங்கயர்விநோதஞ்
செயங்கொண்டிடவிமோபச் சினங்கண்டிடக்குலாவித்
திமிருந்துயில்விடாவல் மூற்சேறு
புயல்வீசிடப்புணைந்து புளகங்களபணிந்து
சுவையுந்தகனதாப மிகப்பேசி
கயலுற்றிடக்கவிந்துக் கனசோபிதமடைந்து
கவலைப்படமுதிர்ந்து கைகால்சோர்ந்து
வெயில்மங்கயர்பிலுக்கில் வெகுநாள்பலனிழந்து
வெயருமுதிர்ந்து மச்சைநரம்பாடிச்

சயமுங்கலையவிழ்ந்துச் சயனங்களுமிழந்து
சடலந்தளரயர்ந்து மயிர்நரைச்சாரி
குயவன்தலைவிதிந்தக் கொடுமைத்துயரீதென்று
குழறிக்குழறிவாய்நீ ருழுவோடப்
பயமித்திரமடர்ந்துப் படைதூதுவர்கள்பாசமி வேளைப்
பயணமலவோ தேகம்பலனேதுமனமே. (ரு)

---

# பூரணானந்தகுரு.

அறிவிலுயர்பரிபூரணானந்த பேரின்பஅளவிலா
வகண்டகோடி
அத்தனையுமறிவாகி எங்குமருள்பிரகாசயேகமாய்
அணுவணுவிறந்
தெறிவதெதுசுகபூதியாய்த் தோன்றவளருறை
கண்தேட வேதாந்தமுத்தி
திருவுளச்செயல்பேசி தெளிந்தன்பரென்றைக்கு
மழியாதிருந்த தெதுமுன்
பேரிதுசிறிதறவாதி அந்தநடுமுடிவற்ற
பேசாதபெருமை யெதுதன்
பிறப்பிறப்பற்றபெரு வெளியிராப்பகலற்ற
பிர்ம்மமெது மவுனமாகி
திரிகாலமூன்றுமா யுள்ளபடிவாய்மையெனத்
தேக்குமிவை யாவுமாகிக்
சித்தமுடனசையாத சின்முத்திராங்கமாய்
தெரிவததை சிந்தைசெய்வாம் (க)

பேரனந்தங்கோடி மறைபேசிவாதுனது
பெருமை பூரணவாழியாய்
பிராணயவாய்வைநடு பேசாதவஸ்துவாய்
பின்முனடு விருதியோடச்
சீரனந்தங்கோடிபெற்ற பேரென்றுவேதாந்த
நூல்விரித் துரைக்குஞ்
சிந்தையுடன்போராடு மென்மெனத்தொழில்போலுஞ்
செய்தியார் பிறர்சீயெனத்
தூரனந்தங்கோடி கனவுசாக்கிரபூமித்
தோடயமீ தையவையோ
சும்மாயிருந்துயிரு கண்மூடிபாராமல்
சூரையிட் டுரைத்ததெல்லாம்
போரனந்தங்கோடி கருவியாதிகளுளவுப்
போக்கிலெனை விட்டிருந்தாய்
போதிக்கவருமாதி மூலகுருவேமவுன
பூரணனந்த குருவே. (௨)

சொல்லாமல்சொல்லுமொரு அறிவெதுதன்மனமற்ற
சுகவாரி நினைவுமெதுநான்
தூலவுடற்சுமைபெற்று தூசும்பொருதவெறுவாய்
பேசுவம்பு மெதுகாண்
வெல்லாமல்வேதாந்த மெய்பேசிவிவரிக்கும்
வித்தையெதும் விவரியாது
வெளியிட்டவறிவொழுகும் வித்தகம்வழுத்துமிரு
கலையற்ற மவுனநாட்டம்
இல்லாமலென்னேரம் எணைவாதுபேசநீ
ஏழையென வடுத்துகேட்டாய்
இதுதனதுஅன்பர்சொலு மெய்க்குவழியாகுமோ
எதுளவுகண்டு கொள்வேன்

புல்லேனுமிதுவெலாஞ் சொல்லிசரியெனவம்பு
மனமோடு புலம்புகின்றேன்
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்த குருவே. (௩)

மதியற்றநாய்க்குனருள் மதிவருகுமென்றுநான்
வாய்மைபெரு மனதினோடு
வாய்பேசிக்கண்டுயின் றெழுந்துண்டுமலநாறி
வலியபேய்ப் பிணம்போலுடல்
சதியாகப்படுத்து சாக்கிரமாதிஅவத்தை
பூமிக்குள் தானலுத்தென்றுமே
சாணாளக்கிட்டவும் வீணாள்தொலைக்கவுந்
தமதென்று மனைவிமக்கள்
கதியென்றும்அலையுமென்னை கவலையறயென்றுமொருக்
கருணைநாள் தரவாகுமோ
காணுமோநின்னன்புக் கருவியொடுஅலேமோதக்
கடவுளே விடத்தருமமோ
புதிதாகவடுக்கடுக் காயமிர்தமொழுகுமதி
மண்டலங் கட்டிலேனோ
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்த குருவே. (௪)

நில்லாதஉடலைநான் நிசமென்றுநிலைநிற்க
நியமநே மாதியுடனே
நித்தியஜெபதபசாந்த நிற்குணவிவேகநிலை
நீதிநெறி நூல்பயிலுவேன்
சொல்லாதஅருண்மவுன துரவுநிலையுண்டென்றுச்
சூதுகபடுறை செய்குவேன்
தோதாகதொன்மைநெறி யாளரிடமிடமேவல்
பொருள்தேடி துசங்கட்டியான்

மல்லாட்டமாகவரு மனமாயைபின்னோடி
மாதர்கா முற்றெழுந்து
மதியற்றிருக்குமின் நாய்க்கும்நின்னன்பாளர்
வாய்மைநிலை வசமாகுமோ
பொல்லாதசெகசால சிந்தைவசமாகுமொ
புண்ணியம்நீ ரருள்புரிகவே
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்த குருவே. (௫)

எண்ணாதுஎண்ணிநான் புண்ணானநெஞ்சினு
லிரங்காது மெலிந்தலுத்தேன்
ஏராளமாகவரும் பாசமோசங்களை
எனக்கென் றடுத்துக்கொண்டேன்
விண்ணாளுமெந்தையே வேதாந்தம்விளங்கவரும்
வெளியேஎன் னிதையமையோ
வீணாள்தொலைக்கமதி துசங்கட்டிக்கொண்டதே
விபரீத மிதுவல்லவோ
மண்ணாளும்வேந்தரிரு கண்மூடிலேதுளவு
மற்றெலா வாசைநிலையோ
புண்ணாகநொந்தலையும் பாவிக்குன்புத்திமதிப்
போதமெனும் பொருளுறைப்பாய்
போதிக்கவருமாதி மூலகுருவேமவுன
பூரணானந்த குருவே. (௬)

கண்ணுறவுங்கனவி லாயினுமுன்கருணை
கண்டதிலை யொருநாளினுங்
கருமவனல்சாடுமன வாய்வூதமலநாறுங்
கலைமாறி யெழுந்தாவலோ
டெண்ணாவலைந்துபலப் பேச்சுரவுவாகிப்பின்
னாவதுனைச் சொல்விடில்

ஏக்கம்பிடித்தலையும் நாயாசைபோலெனது
அறிவுசிவ வசனநல்கும்
பண்ணுளுமிப்பான்மை எனிந்தபாவிக்குப்
படிமீதெலாம் வேண்டுமோ
பகல்போலுமிவ்வம்மைப் பார்த்துபார்த்ததியே
அப்பனே படமுடியுமோ
புண்ணீதியல்லவோ என்னீதியாவையும்
புகலவோ புத்திசொல்லாய்
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணனந்த குருவே. (எ)

அன்பாளர்போலுநா னன்பாளனுக்குமொரு
அன்பென்மீ தென்றுமிலையோ
அவதிசாக்காடென்னுங் கருமேந்திரபூமிதனி
லவதியென் றருளில்லையோ
துன்பாளனுக்கிமனத் தூதோடுதுலையாதத்
துன்பகலும் பொருளில்லையோ
சுத்தவாசனையற்ற தொழிலாளியிவனென்றுச்
சொல்லசுக நிஷ்டையிலையோ
தென்பாளனுக்கிநீ திருச்சிற்றம்பலவீட்டில்
சிந்தை பூரணனுகியென்
தேவர்தன்தேவனே தரவருள்வையோகிருபை
சற்றேனு மில்லைஇல்லைப்
பொன்னேயென்னிருகண்ணுள் மணியானபோதமே
நற்புத்திதர யிதுசமயமே
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணனந்த குருவே. (அ)

பொய்வாழ்வைகண்டுமனம் பூரிக்கமகிழுதே
புரம்புத்தியோ டலையுதே

பூதவுடல்வளர்க்கசுகம் தினங்கற்றுக்கொண்டதே
புலைபாவி மனமையகோ
மெய்பேச்சைகேளாது மெல்லியென்றும்மோக
மதமூறபெண் ணென்றும்பேய்
மேதகுவிச்சாலநெறி அல்லதொருக்கண்மேனும்
விஜயஜய ஜயவென்னவே
துய்யனே தூயனே துரியனேசோதிநடு
தோன்றவரு மேகமென்றுஞ்
சுத்தனே அத்துவிதச் சுருபனேசும்மாயி
ருக்குமொரு இடமருளுமுள்
பொய்கைவசமாகிமதிப் பாலமிர்தமூறயிது
தருணமெனக் கண்கண்டதோ
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்த குருவே. (கூ)

மனமற்றச்செல்வனாய் வசனாதிகருவியற
மவுனமுடன் மதிமண்டல
வாய்மைவீடொன்றுநான் கட்டிதினமுடங்கும்வெளி
கறவுமா னந்தசுகமே
கனவாதிநினைவுசாக் கிறப்பூமியறிந்துச்சிவ
நிஷ்டையுடன் கண்கள்மூடிக்
கருதறியத் துரியாதி பூமிவெளிக் காலூன்றிக்
கலையமிர்த முண்டுதேறும்
எனதாசைப் பொறிபூத புலனற்றநற்றவமு
மெனக்குநீ பரிசுதருவாய்
இடும்பைசோ றுண்டுமத வாய்பேசும்சமயாதி
இருமைதுய ரெனக்குவேண்டாம்
புனல்சாற் றெனச்செறுமிக் கவலைக் குடிக்கொள்ளுமண

வாய்வற்ற மதியை தருவாய்
போதிக்க வருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்த குருவே. (௰)

கவலைகுடி கொண்டமன வாய்வோடி மீளாது
கண்ணொன்றை நாடிடாதுக்
கருத்துசென் றலையாது காதெவையுங் கேளாது
கருமபுலை முரளிலாதுத்
திவலைபெற யெனைப்பெற்ற யெந்தைநாமிடியவச
ஞதிவாக் கடித்து ஒன்றைத்
தித்திக்கமொழியாதுச் சிவஞானச் சுகமூறித்
தெளிவாக ஆறுவீடுஞ்
சவலியாதுனைவேத முடிவிலாத் தெய்வமே
சச்சிதா நந்தவெளியே
தாராளமாகத் தனைகண்ட பேருனை யறிவரென்று
நான்மறை பயிலுமேல்
புவனபேதங்களுள வுயிரெலா மறிவான
பொருளல்லவோ புதுமையே
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்தகுருவே. (௰௧)

பத்திசெய்தானந்தப் பணிவரையிலுனைப்போற்றும்
பாவிஞ ஞகவசமோ
பட்டதிதுநாள்வரையில் போதுநானினிபாடுப்
படமுடிய தரனல்லகேள்
முத்திநா ளிதுவென்று மூலகுரு சொல்லசிவ
முச்சந்தி வெளிபுகுந்து
மோனமுடனிர்த்தொந்த நிர்மலசுகாரம்ப
நிஷ்களாநந்த சபையில்

வெத்திசெய்திதையபேய் வழக்காடுமிகச்சூது
இருமைபுல காசைநாசம்
விபரீதமனமாயை யேவுமிருள்புலைக்காடு
வெந்திரவு பகலற்றமெய்ப்
புத்திதரும்பூரண விலாசமதி வளர்புதியப்
புத்தமுது வீடுதருவாய்ப்
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்த குருவே (௰௨)

கண்மூடிநிலைமையெனு ஞானநித்திரைமூடிக்
கலைமதிமுன்னூடுதாக்கிக்
கவலையறச் சதாநிஷ்டைப் பூரணநாணகிமனங்
கலையாது நின்றநிலையே
விண்ணிலிருநிதியோடி மீளாதுமூலமுத
லாதார விளக்குமாகி
விதிமகிதமடராது விண்ணப்பஞ் செய்புமொரு
வெளியுண்டுச் செய்துமேலாம்
எண்ணிநினை வயராது ஏராளமாகவநு
பூதியெனு மத்துவிதமே
எனக்குநீத்தருமாதி முதலென்று அற்றைநாள்
கொண்டின்று முனைநாடினேன்
புண்ணியமுனக்கதிக மேழையெனவிடுகாது
புலையனுள் மிருந்துகொள்வாய்ப்
போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்தகுருவே. (௧௩)

ஞானநாளின்றென்று நடுவீடுகட்டிமனக்
கருவியாதிகள் நண்ணயான்
ஞாபகத்துடனாதி பாதமறவாதிரவு

பகலும்மறக் கலைஞாயிறும்
மோனமுடனறிவாக வூதிகனலுண்டாகி
மூச்சற்ற சிவஞானமே
முத்தியிது உறையாதப் போதமிதுயார்கண்ட
முழுநீதி யிதுவென்று என்
தானகற்பகமாகு மனந்தாதிமறைதேடுஞ்
சமரஸசன் மார்க்கநீதி
சத்துவாபத்திவெகு சுகமென்று சாக்கிரு
திக்கனவுவெகுச் சபலமறவே
போனநாள்போக இன்றுவதெனை யிழுத்துவா
புத்திரா வெனஉறைக்கும்
போதிக்கவறுமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்தகுருவே. (கச)

காணுமோகருணைவெளி உதையநேருகவருங்
கண்ணினைப் படைத்து சும்மா
கலங்காதப் பேரின்பச் சுவையையானுண்டுண்டுக்
கவலைமிகவாகி யுன்மேல்
தோணுமாறறிவுசொலுஞ் சோதிநடுவீடுபுகத்
தொலையாதக் கருவிகன்மஞ்
சுத்தமே அன்பருளந் தித்திக்கவருமாதிச்
சுரூபமே யென்றுமுன்னை
வேணுமோஎன்று நானவதிபடுமனமாயை
வீண்வாது வீண்வாதுகாண்
விடமென்ன வசனுதி நினைவுபேய் வரிமாறு
மதிகமலச் சுனையி லென்போல்
பூணும் அத்துவிதச் சபையிலநுபூதியுடன்
புத்தமிர்தக் கருணை பெறவே

போதிக்கவருமாதி மூலகுருவேமவுனப்
பூரணானந்த குருவே. (கரு)

## மவுன பொருள்.

ஞானபரிபூரணம் விளங்கவருமேருவே
ஞாதுருநன் நியமமற்ற
ஞாபகநின்னருள்வளமை நன்றாகபோற்றிநடு
ஞாயறுவிளங்க சும்பா
மோனநித்திரைவந்து அழைத்துகை காட்டவெளி
முடங்கிசிவ மவுனனாகி
முத்திநிலை பெற்றுபரி பாகனீயாக்கிகீழ்
கனல்பெருக மூலவாசித்
தேனமுதமூறப் பொறிப்புலன் பூதக்கருவிபிர
பஞ்சமொடு பழகினதுபோல்
சிந்தையசையாதபே ரின்பவீடுண்டுசெய்
திருந்துதிரு வருளைப் பார்க்கும்
சோனகம்பாயவும் துரியாதி விடியவுஞ்
சுகநிஷ்டை தந்தருள்கவே
சோதியென அடியிட்டுத் தொழும்பெரிய தெய்வமே
சுகவாரி மவுனப் பொருளே. (க)

நினைந்திணைந்தெழுமாவிக் கோசரமெய் நிலையேம
மனங்கொண்டு நெழியதினநாள்
நெறியற்றப்பாவியா யலைமோதி நெருப்பிலிட்
டுருகமெழுகாயுரங்கிச்

சினைந்துவெகுநாளாகக் கருமவிந்திரியமொடுச்
சிவஞான பூதியற்றுத்
திரியுமனப்புலைவாதுக் கொண்டநாயெனக்குமொரு
மித்தவருட் சிந்தையுளதோ
முனைந்துவருமிதுவெலா மற்றசாபல்லியமுனை
முற்றிலும் வேண்டிகொண்டேன்
முக்கணுடன்தேசொழுகு மமிர்தப்பிரவாகமே
முழுமுட னனியாயமாய்ச்
சுனைந்துவெகுபாடாள னுக்கினுயினியாவ
தென்னைசுக வறிவாக்குவாய்ச்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியதெய்வமே
சுகவாரி மவுனப்பொருளே. (௨)

௩. கஞ்சுகமென்றுசிவ வேதாந்தசித்தாந்தச்
சுருதியுனைத் தூற்றிச்சொல்லுந்
தொண்டர்கண்டுரைநீதி மறைசொல்லுமல்லாது
தொழும்பனொரு நாளாகினும்
அகஞ்சியெனத்தூறு மும்மலவிகாரமன்
றணுவாவ தறிந்துறைக்கும்
அத்துவிதவிவேகவர னுண்டாகிஅதிலறிய
ஆகமநன் னூல்கள்தேடும்
பகல்வீடுகட்டிஇரு கண்குளிரயென்றுமொரு
போதாகிப் பார்த்ததில்லைப்
பத்தியாவதுசெய்துப் பணிகளரிதென்றசிவப்
பாங்கில்லை பரிபூரணத்
தொகமையிலைத்துணையெனக் கென்றுநான்சொந்தமென
சொல்லிதினம் தொழுதுகொண்டேன்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியதெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (௩)

கற்பித்ததெல்லாம்நீ ரல்லவோகருதிலுனைக்
காட்டும்வெகு சுருதியெல்லாங்
கடவுளெனஅடிமையிரு மிதுவெலாங்காணறியப்
பொருளாகிப் பின்னிடைந்துத்
துற்புத்திக்கொண்டஅவத் தாதிபூமிகளேழில்
சூழ்கருவித் துணையாயிரத்
தொண்டனுனைத்தொழுமன்ப னென்றுவதிடராமல்
தொடருமன யேமபாசம்
சற்புத்தியாகமலுடலினால் தினநாளுஞ்
சமரென்ன அநியாயமாய்த்
தானுகவருமரசு வுரிமையெனச்சரியென்றுச்
சண்டமாருத முழங்கச்
சொற்பனித்திருக்கும்நினை வகலாதசாயூக்ஷிய
சுதந்திரம் நீரருள்புரிகவே
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியதெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (ச)

நினைவற்றத்தொட்டியில் பரிபூரணாநந்த
நிஷ்டாநு பூதிசொல்லும்
நிஷ்களாநந்தசிவச் சபைமுத்திராங்கநிலை
நீதினமும் வந்துஞான
மனைக்கட்டிமாயாத விசாரமனக்காலனெனை
மறியாது தொடர்ந்துகூடா
மணித்தட்டிலறிவாள னுகிசமரஸபோத
வாய்மைபெருஞ் சுகவாசனத்
தெனைவைத்துசிவராஜயோக பூமிக்குள்வளர்
ஸ்ரீராம ரென்றகுருவே
எண்ணிபலகாலழுது யேக்கமேலிட்டஅடி
யேனுமுனை நம்பிகெட்டால்

துணையுமிருவிழிபார்க்கு முலகமுறையென்சொல்லுஞ்
சும்மாயிருக்க வருள்வாய்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியதெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (ரு)

ஐயனேஅப்பனே அண்ணலேஅறிவுசொலு
மாதியே கருணைமூர்த்தி
அனாதியேஅரூபவெளி பகல்வீட்டிலொளிரொழுகு
மத்துவித விவேகமுதலே
மெய்யனேவிருதாவில் போகுமெனைஅன்பாள
னாக்கவரும் வேதாந்தமே
மேலானசித்தியெட்டெட்டும் விலைபேசிவரும்
வித்தகசித் தாந்தவிபரம்
பொய்யினேனகனெக்கு னெக்கெனச்சிலிர்க்கமயிர்ப்
போதித் திருக்குமமுதே
புத்தியுடனறிவான யென்னிருகண்மணிநடுவில்
பூரணங் கலந்துவாழும்
துய்யனேநற்புத்தி யில்லாதயென்னையுநீ
தொழும்பாள னாக்கிக்கொள்வீர்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (சு)

சுக்கானைத்திருப்பியே மனமற்றச்சமாதி
பேதங்கள்கெடச் சுகவாசனச்
சுரூபமொடுதத்துவத் தொடக்காதிப்பிரவாகச்
சோடஸமா றாசகலைகள்
திக்கற்றப்பாவியடி யேனுமுனைநம்பினேன்
திருவுளப் பாங்காகவே
சித்தமசையாக்கருணை தேக்கவுஞ்தேசுஜத்
தெளிவுதனின் தெளிவுதெளியும்

மிக்கசிவஞானவை ராக்கியஞானஅறம்
பொருளேவல் வீடுமேலாம்
விந்வதாரணையிலக வேதாந்தச்சித்தாந்தச்
சமரஸ விதேகமுத்தி
தொக்குமுயிர்க்கிலையாதி சுபசாந்தமிக்கவருஞ்
சுத்தசிவ அருட்கோலமே
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (எ)

தினமிட்டக்கோலமாய் மனமிட்டச்செய்தியே
தீநெஞ்ச மலையகண்டேன்
திருமுறுக்காகவருங் கனவாதிக்கன்மபோக்
காடுதீக் காடுத்திரளாய்ச்
சனஞ்சாதிதமர்தார மகவுகவறுடல்பரிசு
ஜயபேரிக் கொட்டிச்சமர்பொய்
சடதுக்கமெவராலும் நீக்கலரிதரிதிந்தத்
தயவொன்றுத் தருமமாகச்
சினந்திணைந்தறிவாக வோதுகவடிகஜாலத்
தோதுவரிக் கயர்மாட்டிநான்
தொழிலாகயிருந்தரசு நீதிமிலைப் பரிகிறீர்ச்
சுகமென்ன யிதிலுனக்குச்
சொனங்குமெனைப்பார்த்துவெகு தோதுகண்டீரெலாஞ்
சொல்லியுஞ் சமரோசொலாய்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (அ)

என்னேரமுங்கொடிய ஆணுவவறைக்குள்நா
னெனுங்கொடிய அந்தகாரம்
ஏய்க்கவுமெழியனா னெண்ணாதுயெண்ணிமன
மயர்ந்துநித் திரைப்புலைகளோ

டுன்னன்புபற்றுது ஊமைபோல்கவருடு
முலுத்தமன மிட்டதொழிலாய்
உண்மைகுடியில்லாத எனக்குமருள்வாய்மைவர
வொருவனே ஒப்பிலாத
நன்மையேநாயினுங் கடைகெட்டபுன்மையே
னவிலுமிச் செய்தியெல்லாம்
நாதமேவேதமே நடுநின்றுணர்த்துமுயிர்
குயிரான நாதாந்தமே
தொன்மையேஅடியவருள் ளறிவொழுகுமானந்தச்
சுத்தமே சுருதிவாழ்வே
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (கூ)

ஆதாரமாகயிவ் வண்டகோடிகளெலா
மாக்கியொரு முதலாகமே
லத்துவிதமார்க்கமென வளராதியந்தநடு
அளவிலா வருபருபம்
மாதாபிதாவென்ற தொழிலாகிமறைபேச
மவுனமுட னழியாதமெய்
வஸ்துவெனதியானநிஷ்ட் டகராகிசமாதிநிலே
வைத்தநிலேயோ கொடியபேய்
பாதாகவுங்கரிகள் புலிவாயடங்கபா
தாளமேலுலவ பகலே
பணியுமொருமுதலாக்கி என்றுராப்பகலற்றப்
பான்மையினில் வைக்கவிலேயோ
தோதாகதுசங்கட்டி யிருக்குமன நினைவைநீ
சம்மாயிருத்த லரிதோ
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியதெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (ய)

இப்பெரியஉலகத்தை யில்லாமல்காட்டுவீ
ரிரவிமதி தனைமறைப்பீர்
இருக்காதிவேதநூல் பரிபாசையாவுமுழு
மூடனித மெழுதவைப்பீர்
செப்புதற்கரியமணி மந்திரமும்வைத்தியஞ்
செய்தெலாம் நோய்கள்தீர்ப்பீர்
திரிலோகமுங்காட்டி அணிமாதிசித்துகள்
செப்பியுல கேவல்வைப்பீர்
அப்பனேபெண்ணையா ணுக்குவீ ராணைபெண்
ணுக்கியிளம் வயதாக்குவீர்
அரிபிர்ம்மனுதிதேடிய வீடுகாட்டுவீர்
அந்தகன்முன் வருநாளையும்
துப்பற்றப்பிள்ளையெனக் காட்டிசிரஞ்சீவியாய்
சுகவீட்டி லிருக்கவைப்பீர்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (கக)

ஏகமொருகாலமுன் றறியபெருவெளியாகி
இதையபூ ரணனுக்குவீர்
என்னேரமுன்மேல் நானேங்கிராப்பகலற
நன்றாக அழுதிருக்கவைப்பீர்
மோகமொடுஉலகாசை யற்றதவசாக்குவீர்
மூன்றுமண்டல மழைப்பீர்
முழுபிச்சையாளனுங் கிரீடியெனஉலகாளு
முதலாக்கி இருந்துகொள்வீர்
தேகநானீயென்ற நிலைகாட்டிசித்தெலாஞ்
சொல்விஜயப் பரிசுதருவீர்
செனனமானதுயென்ன பேயங்கமுறவாட
சிந்தைதான் மீறிமீறி

சோகமானதுகாம சேருடதசநாடி
சொருவமதச்சுவடு பட்டேன்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (கஉ)

கண்முடிக்காலதிசை யில்லாமல்கடவுளென
கலந்து சும்மாயிருந்து
கருணைவெளிவந்துநீர் பேசிதவமன்பரிற
கருதறிய மவுனமாவீர்
எண்ணிநினைவடரா.து சும்மாயிருக்கவைத்
திகபரமு முயிராகுவீர்
ஏகமேஅத்துவித விவேகமருளுண்மையே
இராறு காலடைப்பீர்
பண்ணுகப்பாடியுனே யென்னுளுந்தொழுகவைத்
துடலோடு பார்த்திருப்பீர்
பலகோடிமதிப்பானு யிடிமுழக்கங்களொடு
பார்த்துயிர வரவழைப்பீர்
துண்ணுமதிகற்பகாலம் பண்ணுந்தொழிலாக்கி
தூரவுசெய் திருக்கவைப்பீர்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (கந)

இருவினைக்கடவுதட மிதுவென்றுக்காட்டிநடு
இருக்குமிட முறைத்துதருவீர்
இகபரமுமுயிராதி படைப்பிதெனக்காட்டுவீ
ரின்பதுன்பங்க ளற்ற
பெருவாழ்வுயிதுவென்று பேசாதவஸ்துவென
பிழைக்குமிடங் காட்டிவைப்பீர்

பிறப்போடுயிறப்பற்ற நிலையினிலிருத்தியே
பிர்மாந்தரங்கள் சொல்வீர்
கருவிதொன்னூற்ருது மில்லாதுஅருகிலென்
றென்றுமிற அணைத்துகொள்வீர்
கற்பித்தயாவுநா னெனச்சொல்லிசருதரிய
சபையினில் வைத்துக்கொள்வீர்
சுரூபநித்தியசாந்தகுண ரகிதநிருமலவி
தேகசுக கைவல்லியமே
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (கச)

அண்டகோடிகளெலா மாட்டிவைப்பீரணு
வணுவிறந் தொளிந்துகொள்வீர்
ஆசைநிகரற்றவெகு பரிசெலாந்தருகுவீர்
அம்மம்ம மனமாயையோ
கண்டபடிசென்றிஷ்ட போகதாகங்களுடன்
கவிழுமர்க்கட நீதியோ
கற்பித்ததென்றுயான் தூங்கிமிகமலவாது
சோறுசோ றெனவடைத்து
பண்டாயநீதிநிக ரற்றிருமைப்பாழிலே
பலகாலு முருண்டுகெட்டேன்
பாராதுதிருக்குமொரு நியாயமேன்பகரறிய
படைப்பெலாம் படைக்கவல்லீர்
தொண்டனுனுகிபரி பூரணத்திசைவந்துச்
சுகநிஷ்டைச் சொல்லவைப்பீர்
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியதெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (கரு)

ஆலையொடுமாலை முச்சந்தியறபூரண
னந்தசிவ ஞானபூசை
கருவிகாலறதேக முத்திபெறச்செய்குவீர்
கண்ணூறு விண்ணூறுமாய்
வாலைவயதாகவும் வாய்வற்றதீபமு
மாக்கிவசஞ் செய்தருளுவீர்
மதியற்றபாவிக்கு மனமற்றவாழ்வாக்கி
மவுனோப தேசமருள்வீர்
ஆலையிற்கரும்புபோ லாடுமென்புலையாட்டை
யாருடன் சொல்லியழுவேன்
அன்னைநீ அப்பநீ யாதுபாவிக்கினு
மையேனே அண்ணலேநீ
தொலையாதபாவிக்குன் னருள்வருவதென்றுசொல்
சுத்த சிவப்பிரகாசமே
சோதியெனஅடியிட்டுத் தொழும்பெரியத்தெய்வமே
சுகவாரி மவுனபொருளே. (கரு)

# பேரின்ப வெளியான பொருள்.

அறிவறியப்பொதுநிலையி லதுவிவதுவெனத்தெறியு
அறிவான ஞானமூர்த்தி
அன்புமேலிட்டஅறிவாகி நானெனுமமதை
யறநிஷ்டையாகி சும்மா
தெறிவறியஆதாரமுண்டுசெய் திருமைபோம்
தீபமொன் றுண்டுசெய்துச்
சித்தமசையாதவொரு அத்துவிதவெளியாக்கிச்
சின்முத்தி ராங்கமிட்டுச்

சறியெனுடல்மனமற்ற வாசிவாவெனவூதித்
தத்துவ உபாதியறவுஞ்
சன்மார்க்க நெறிபெற்றுச்சகமார்க்கமற்றகுரு
சமரஸ சிவாநுபூதி
அறிதரிதுக்காணவெகு நாள்செல்லுமையனே
அடியன்முன் வந்தருள்கவே
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்பவெளி யானபொருளே. (க)

தற்பொருளிலங்கதன் மயம்பெற்றயிவ்வுலகஞ்
சரிசெய்யு மறிவிற்றூய்மை
சதகோடிமறைபயின் றென்னஅறிவானவழி
சச்சிதா னந்தவெளியில்
சொற்பொருளிருக்க நானற்றதரிசனவீட்டில்
சோதிவெளி யொன்றுதோயும்
சும்மாயிருக்கதான் தோன்றுதுரியாதிசுகஞ்
சுழிபேத மன்றிகருவி
துற்பொருளிலங்குநிலை யற்றுரவிகலைகட்டி
சோமகலை யூரலெழிதோ
சுழிவாய்வைப்பூரித்து தெருவாறிலூதாமல்
சுமவுன மூதிமதியால்
அற்பமென்றுன்னன்பர் பெற்றசிவஞானமே
ஆதிநீ தந்தருள்கவே
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்பவெளி யானபொருளே. (உ)

உலகொடுசிறந்தநெறி வழியொடுசென்றுண்டுண்டு
ரங்கியுடல் வளர்த்துபாச
உணர்வுபரிசெனராஜ நிதியாளருடன்சேர்ந்து
வுகமைநினை வாகிஅலையும்

புலமைமிகநெறிசொல்லி புரங்கூறியானெனும்
புலைதிமிர வாய்மடிக்கும்
புத்தியூகங்களறி வாளர்வசமிகமோன்பு
போதமுடன் பொருள்பறிப்பேன்
நிலமைதவிர்மனுசாதி நெறிமுறைகளிடுமுக
நிலைகேட் டுமருவிநிற்பேன்
நினைவற்றஞானபூரண அறிவற்றறிவுயர்தன்
நிஷ்டாநு பூதியற்று
அலகையெனச்சரிபேசு மறிவொடுசென்றலையாது
அப்பனே அமலவூர்தி
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்பவெளி யானபொருளே. (௩)

பேசாதஅறிவுக்கு மானந்தமெதுதனைபின்
பிதற்றி யதுபோலமர்ந்துப்
பிறப்பிறப்பில்லாத நெறிதேடியாகமம்
பிறித்துணர்ந் தோதுமுறைபோல்
தேசாளும்ராசராஜாங்க நிலைநீதியொடுத்
தூதுறைக ளிடக்களிக்கும்
சிவஞானநிஷ்டைபூ ரணமாகச்சொல்லித்
தினமறவாத நியமநேமம்
மோசாடலொருபோது மிலையென்றுமனமமர
மொணமொணென் றுச்சரிக்கும்
முடங்கிசிவமுத்திநெறி சரியெனவுஞ் சடமாதிச்
சித்தியெட் டாகிபழகும்
ஆசாப்சாசநிகரத்தனையு மழலொக்க
ஷாகுமறிவறி வாகுமோ
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்ப வெளியானபொருளே. (௪)

மதியூறுமவுனவரை யுண்டுசெய்தத்துவித
மறைபேசு ஞானவெளியில்
மனமாயையற்றுசிவ ஆதாரமேலுமொரு
வஸ்துவாய் விளங்குமுதலே
துதிசெய்துமதியிரவிச் சோடஸக்கலையமருஞ்
சுயஞ்சோதி பூத்தஅருளில்
சும்மாயிருக்கவுந் தஸவாய்வைப்பூரியா
தூழ்கருவி தூணகளற்று
முதிர்கொம்பில்பாயாது யாதுபாவிக்கிலு
முன்னுன்கு வீடுகட்டி
முக்கணுடனென்றுமொருப் போதாகிப்பேசாத
முத்திநெறி தந்தருள்கவே
அநீதமிகுசரிதாதிக் கிரிகையணுவிறந்தசெயல்
யாவுமொரு பொருளல்லவோ
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்பவெளி யானபொருளே. (ரு)

பொய்பிரளிகதைபேசி பூதவுடற்வளர்க்கவெகு
புத்தியூகங்கள் சொல்வேன்
பொன்னுசைமண்ணுசை பெண்ணுசையுணர்ந்துபேய்
நாய்போலுந் தொடர்ந்துபூவி
லொய்யாரமாகமத டம்பராகங்களிசை
ஏடனை களிக்கவுரக
மொப்புகமைபேசி மனமிட்டவழிசென்றுநா
னுரங்சி பாராதநீதமோ
மெய்தூரிவேதாந்த நெறிபேசிபின்னவல
மேலாக வெருவிவருக
வித்தைமதிக்குலசமய வீண்வாதுபேசுவேன்
விண்ணே என்கண்ணிறைந்த

ஐயனேயென்றுநா னழுதழுதொருநாளு
அன்பாள னுனதுளதோ
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்ப வெளியானபொருளே. (சு)

சொல்லறியச்சுகவாரித் துரியாதிதோரணத்
துவச கம்பத்திலேறி
தூதுசொலுமொருநான்கு காணபுரக்கருவியறத்
தொழுதுமதி வளர்தீபமே
கல்லாதஉன்மத்த னினியாவதென்னறிவை
கலைந்துகலை ஞானமார்க்கங்
கருதியித்தனைநாளுங் கொண்டபொறைவஞ்சநோய்க்
களவுகா மியங்கள்மாயை
நில்லாததேகமிது வாழ்வென்னஅநியாயம்
நிமிடமன் றொருநாளென
நிசமில்லையென்று கனல்தாகமுடனிருந்தவனி
னினைவுபோ லடிமையாகி
அல்லலறஇன்றுநா ளாதியேதொண்டருள
மறிவாய் விளங்குமுதலே
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்ப வெளியானபொருளே. (எ)

மட்டியிலுமிகக்கெட்டி துட்டசமரிடுமாயை
மனவாசி யோடபின்செல்
மதகோபப்புலையாள னுணர்வுசிறிதேனுமிலி
மடையன்வெகு சோம்புதுயிலன்
வட்டியிட்டிருவினை யெலாம்வாங்கிபுசித்துண்டு
வாடுமிகை மிலேசவம்பன்
வற்றுதவாரியேகட்டாகக் கரும்பில்வரும்
ரசகண்டு மவுனபிழம்பே

சொட்டிட்டுதெருதோறுந் திரிந்துண்டுசுகநிஷ்டை
சொன்னாலுந் தோய்வதுண்டோ
துரைராஜசருபோஜ மகராஜராஜனே
சுத்தமே தூரமேயென்
அட்டமதக்காளையினு மடங்காதமனபாச
அந்தகன்முன் னடங்கவருள்வீர்
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்ப வெளியானபொருளே. (அ)

காணக்கிடைக்குமோ யென்றழுதுக்கட்டியான்
பிரண்டெழுந் திருளைநீக்கிக்
கருதறியமணிமாடச் சிகரில்வளர்க்கருணைச்
சுகவாரி பேரின்பஆரே
பூணறியப்பரிபூர ணத்தையான்பூண்டுசிவ
ஞானபூமிக் குளிருந்துப்
புத்தமுதப்போதமே பொய்யுலகஆசையறப்
புனிதனாய்ப் போற்றிபோற்றிப்
பாணகற்பகமாகி பணிகிலேனொருநாளும்
பன்னக விசயனசுகமே
பாவிவெகுபுலைபாவி பாவிநானிரதமல
நாறுபவ வஞ்சமனதோ
ஆணவக்கிடங்கிலிற வைத்தென்னை அநியாய
மாகவரும் நாளாக்கவோ
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்ப வெளியானபொருளே. (கூ)

தோணுமோகாணறிய மதிதீபமேற்றுமோ
தொடருமோ ஆசைவஞ்சம்
தொலையுமோசுகஞ்சுக மென்றுசனகாதிசொலுஞ்
சுத்தஅருட் சிவஞானமே

பூணுமோபொய்யனு னுகாதபரிபூர
ணனந்தத் தொட்டிநடுவிவில்
போதமேநாதமேவேதமே வேதாந்த
வெளிவளரு மவுனமலரே
காணுமோகருதுமோ கடவுளேகடவுளே
கருதறிய கைலைவீடு
கண்ணிலாபாவியான் கவலைகுடியாகுதிது
வேளைக்கா ணறியப்பொதுவில்
ஆணுமோபெண்ணலியு மிலைபேருமிலியூரு
மிலியாதி யந்தமேகேள்
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்பவெளி யானபொருளே. (ய)

சொல்லிவைத்திருக்காதி மறைசாஸ்திரங்கமிழ
சோதிசின்மய மார்க்கமே
தோன்றுமோதுணையற்றப் பாவிக்குத்துணையாகிச்
சொல்லுமோ முன்னின்றுபொய்க்
கல்லாமல்கண்ணேஎன் செவிநாக்குபரிசமே
கருதென்றுச் சொல்லுமுன்னே
கவலையறசதாநிஷ்டை சமாதிவீடதிற்கூடி
கலந்துநித் திரைச்செய்யுமோ
பொல்லாதப்புலைக்கருவி யென்னென்னக்கருமத்தில்
பொருந்திபுலைக் கன்மதீயில்
பொசுங்கிதான்போனயிடம் போக்காகிப்போகுமோ
புத்திசற் றேனுமில்லை
அல்லிராப்பகலற்ற அற்புதவதீதமே
அனுதியே தொண்டனலவோ
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்ப வெளியானபொருளே. (கக)

தேடாளன்தேடுதன மியாவையுங்காட்டானைத்
தின்றகனி போல்தன்னைநான்
தெரிசனஞ்செய்தாதி அந்தமேஅப்பனே
ஆதியே தேவதேவே
நீடாழியுலகெலாம் படைத்தபரப்பிர்ம்மமே
நினைவேயென் றிறைஞ்சிலேனும்
நித்தியசிவகைவல்லிய ஞானவேதாந்தமே
நிஷ்டை அநுபூதியாகி
வாடாமலொன்றையொன் றெண்ணிமனமோடாது
மணிமன்றில் தினநடந்து
வாலாயமாகநான் போகவரமார்க்கமுண்
டாகிமவுன திக்யமோ
ஆடாதுஎதற்குமஞ்சாது சாதனைநல்கி
அஞ்ஞலென் றிருக்கஅருளே
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்ப வெளியானபொருளே. (கஉ)

கெஞ்சிநான்ஐந்துமுன் கேசாதிபதம்விடிய
கிருபைபெறும் ஞானவீட்டில்
கேட்டுகேட்டனந்தாதி வேதமானதுருவிய
கிரகவிபு கைலைமேரு
துஞ்சிஅருணோதுதையக் கிழக்குமுன்னெழுஞ்சோதி
தோன்றிசுக மாகித்துயின்று
தொண்டனுன்மத்த வஞ்சபொறைக்காமநோய்
சுட்டுத் தொலைத்துகூடிக்
கொஞ்சிதாரணமாறு சமாதிநிலைக்கட்டிகுறை
வேதுமிலை யெனதுதித்து
குருநாதரெந்தைசிவக் கருணையானந்தமே
கோள்புறைசூழ் வசனமுகம்

அஞ்சவும் அத்துவித விவேகவீ டடுக்கவும்
ஐயனே வந்தருள்கவே
அறிவறியப் பொதுநிலையிலதுவாய்விளங்குபே
ரின்பவெளியான பொருளே (கங)

பாழிலேமனஞ்சென்று போகுதேவீண்கவலைப்
பற்றுதே பாசாடவம்
பழிக்குதேஒன்றுமில்லை யென்றுதான்பலநாளு
பத்தியாய்ப் பணிந்தஅறிவை
ஊழிலேஉப்பிட்டப் பாண்டமதுஐயனே
உதவாமல் காலதச்சன்
உருகாட்டுமையிலே வரிமாறும்வெளியிலே
உணர்விலே உரியதெல்லாம்
தாழிலேனுகிமுன் வந்துவந்தெதிர்தட்டுந்
தொடையாள ஞகிமுன்னே
சமர்த்தென்னஇந்திராதி தேவர்களுமறிவரோ
சாதனையோர் நான்குமேலாம்
ஆழிசூழுலகெலாம் நிற்கவில்லையோமனது
அங்குமொருநிலை அருள்கவே
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்பவெளியானபொருளே. (கச)

வேதமானதுகோடி விரித்தெடுத் துறைக்குமுனே
வீம்பாள ஞகிநினைய
வித்தையிதுகண்கண்ட வினவாகிவிரும்புமிது
வெளிமாயைக் கனவுகண்டப்
போதமானதுவன்றி புத்திசிறிதில்லாதபுலைப்பாவி
புலை பாவியான்
பூரணம்விளங்குமதி மண்டலம்கட்டியிடம்
பொருளேவலற்ற நிதியால்
வாதமானதுஅற்று வற்ருதச்செல்வமே

மறைமேருமலை வாழ்விலே
வைத்தபொதுநிலைவாழ வரவேண்டுமெனவாசி
மேலுமேல் வந்துமுன்னே
ஆதமானதுகட்டி அம்புலியடங்குமறி
வானந்த ஞானமூர்த்தி
அறிவறியப்பொதுநிலையி லதுவாய்விளங்குபே
ரின்பவெளி யானபொருளே. (கரு)

நாடுமோநடுநின்று பார்க்குமோநானியற்
றிருக்குமோ நம்பிகெடுமோ
நல்லனிவனென்றுமுன் சொல்லுமோவெல்லுமோ
நாயினுங் கடையனுகி
தேடுமோசிவஞானம் தெரியாதுஅலையுமோ
திருசிற்றம்பலஞ் செல்லுமோ
சிவமேயென்றழுதுவாய் போற்றிநின்றறியுமோ
சித்தமானது சலியுமோ
போடுமோகட்டையை போடாமலிருக்குமோ
பூரணங் கைவல்லியமாகி
போற்றியெனமுடங்கி சிவத்தியானசமாதிகனுக்கி
போதமானது வளருமோ
ஆடுமோ அலைமோதி அறிகிலேனறிகிலேன்
ஆநிடினுங் குருவருகவே
அறிவறியப்பொது நிலையிலதுவாய்விளங்குபே
ரின்பவெளியான பொருளே (கசு)

## சின்மயானந்தகுரு.

ஒருவனெஉயிர்க்கெலா மறிவானஆதிபே
வொப்பிலா கருணைமூர்த்தி
ஒட்டுமோமனவாசி ஆதாமலுள்மணியில்
ஒளிபெருகி மூலகனலை

மருவிமதக்கருவிகால் லொருங்கவெந்தழியவும்
மாத்தாறு னெனமருட்டும்
மகாமாயைசாகவும் வச்சிரமணிவீட்டினடு
மதிபால்குடித்து தன்போல்
கருவமும்மதயானை மதகுசாலரநவமுங்
கட்டிதட மூடிஞானக்
கற்பகநல்நிழலடியிலறி வூன்றிக்கருதவுங்
கருணைமழை பெய்துகண்கள்
திருவருளைப்பெற்று பெற்றானந்தகடல்மூழ்க
சிறுகாலே வந்தருள்கவே
தேசோன்மயானந்த சித்தாந்தவேதாந்தச்
சின்மயானந்த குருவே. (க)

தேகமானதுபெற்று நாகறுமூளைபீ
சேறுடுமலகாமியம்
தின்றிரதமச்சை சேருண்டுபசிதீரவயிற்
வளர்க்கசிவ முத்திசொல்வேன்
மோகமானதுமுடி மும்மலவிராகமுடன்
முற்றிலு மறிந்துகெட்ட
மூழமூட னெனக்குமொரு நியாயமுளதோநாளை
மூர்க்கமுட னந்தகாரன்
வேகமாய்வரும்போது விபரமென்னென்னவிதி
மதியென்று சொல்வீனே
விருதாவிற்போகவோ விடமாட்டேனினிகணமும்
வேதமேஅறிவை யெல்லாம்
சேகரஞ்செய்தாதி தேவனேதேவனே
சித்தமசையாதருளுவீர்
தேசோன் மயானந்தச் சித்தாந்தவேதாந்த
சின்மயானந்த குருவே. (உ)

பாராமல்பராபரம் பார்த்துபரவெளியில்நான்
பணிந்து பரகதியிதென்று
பரிபக்குவக்காலமிது நாளெனச்சொல்லிப்
பாங்காக வந்துயென்னைத்
தூராமல்சுகஞ்சுகமென்று தாராளமாய்த்
தொழுதுவர வழிபேசிபாய்
தோதுகவடிகஜாலத் தொழில்வம்பெலாமொழியுஞ்
சுத்தசாம்பவிமுத்திரை
தேராதபாவியடியேனு முனைநம்பினேன்
சித்தமசையா கருணைநீர்
செப்பயிதுவேளைதிரி காலமன்றென்றுமொரு
தினமாகி யிருக்கஎன்முன்
சேராமல்விடுவையோ சிவமேயித்துயரெலாஞ்
சிதைந்து சிவஞானமருள்வீர்
தேசோன்மயாநந்த சித்தாந்தவேதாந்த
சின்மயானந்த குருவே. (௫)

வெளியாடுமனமாயை யொளியாகிப்பரவான்ம
விதமாகி நடனமாடும்
வித்தைபுகலரிதுபலகிரிகை யெனயதில்சிலர்கண்
டுத்திவெகு சித்திமார்க்கம்
அளிப்பார்களத்தனையும் வொளியிட்டவெளியாகி
அற்புதவரூப அருளாய்
அறிவாகவுங்கருணை யூறுமதிபாலாகி
அனைத்துயிர்க் குயிராகிநான்
நளிராதுநீயுற்ற நாதாந்தநடுநீதி
ஞானவைதிக பொருளாய்
நம்புமடியார்க்குதவும் நாதமேவேதமே
நாயினேனெனக்குமருளி
தெளிவுதனில்தெளிவாக சிவசித்தர்சொன்னமொழி

போலுமிரத் தெளிவுதருவாய்
தேசோன்மயானந்த சித்தாந்தவேதாந்தச்
சின்மயானந்த குருவே. (சு)

கோவிலுங்குணமாகி குணமுமருட்கல்லாகி
கும்பிட்டு கோதைமாயைக்
குழையாதுகுணங்கெட்ட பாவிநானுகாது
குண்டலியில் மனோவாயுவைத்
தூவிவண்பொடியாக்கி சோதிவெளிதுவாதசாந்
தத்திடுத்துணைப் பெற்றுநீ
துவிதசிவமுறையோடு சொல்லாமற்சொல்லுமறி
வானந்தச் சுகானுபூதி
நவிலுமொருகருணைவைத்தா லெனக்குறையுமோமா
நம்புமெனைக் கெடவுமெண்ணி
நானுவிதச்சூன்ய வைப்புநிகருணர்த்திநடு
நின்றுவெகுக்காதை சொன்னீர்
செவியென்னதிட்டாந்தமத மருப்புயர்நீதி
செப்பிசிவ ஞானமருள்வீர்
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (ரு)

பாடையிலுறங்குமெனைப் பாடயிலுறங்கவும்
பக்தியுடன் சௌபாக்கியமாய்ப்
பண்ணும்வெகுநியமாதிச் சோடசவுபானநெறி
பணியவில்லைபல காலும்நான்
நாடையைபிடித்துநீ யென்றறிவுநூலோடு
நாட்டமுடனேறிகையிலே
நாதாந்தநடுவற்ற மேலானவீட்டிலே
நந்திகொலுமணி மேடையில்
கூடையைப்போட்டுநான் கூடியென்கூடயைிற்
கூடிநா னறியவில்லை

குருநாதனொர்தைசருவேசுயர் கண்ணிறைநித்திய
குணரகித கருணாலயத்
தெடைநினந்தேடி திருவம்பலவர்சபைச்சேர்ந்து
சிவஞானம் பயில்வதென்றோ
தேசோன்மயானந்த வேதாந்தச் சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (சு)
கண்டபடிமனம்போன போக்கெலாம்போகுதே
கவலைகுடிக் கொண்டலையுதே
கண்ணுண்டாய்ப்பாராமல் கருநிப்புண்ணுதே
கருமசாகரக் கட்டையோ
சுண்டநண்டிதமாகிச் சோருதேசுகம்பெறநற்
சுவையுணவு உண்டுலையுதே
தொலையாதவிசாரமே தினநாளுமாகுதே
சுத்தவருட் சோதிப்பதி
விண்டகங்காரமதம் விளையுதேவீண்வார்த்தை
விடாமலுறைத் துபசரியுதே
வெற்றினெறிகற்குதே விபரமொன்றறியாமல்
விருதாவில் நூல்பயிலுதே
தெண்டம்நான்கோடி யுனக்கப்பனே அண்ணலே
செவிகேட்டு பொருத்தருளுவீர்
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (எ)
நம்பியுனைத்தொழுதபேர் நல்லவர்கள்நல்லவர்கள்
நானும் நல்லவனாகவும்
நானென்னவம்பனடியேனுமுனைநம்பினேன்
நாயினுங்கடை நாயினேன்
உம்பர்தன்தேவனே அமலனேவிமலனே
ஒருவனே உயிரனைத்தும்
ஒளியிட்டத்தாரக விமானமேலுப்பற்றச்

சோதியே ஆதிமுதலே
வெம்பியழுதெம்பிரானேனெங் கிடைந்திடைந்தரிய
வெளியினை அடுத்துகொண்டு
விபரமறியாதபுலே யெம்பனுனெளிநிலருள்
விபரம்வர அருள்புரியவும்
தெம்பிலேனெனக்குமிது வேளைபூரணமாக
சீக்கிரஞ் சிவம்வருகவே
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (அ)
மனமானமத்த மதகரியானை அடங்கிலோ
மற்றென்ன உபகாரமேல்
மதியாதுதன்னிலையைக் காணஅறிவொட்டாது
மகாமாயை மகாமாயைகாண்
செனனமானதுபெற்றச் சுகம்போதுமின்றுநாள்
நாளையென வருமந்தகன்
தினமொன்றுமறிகிலேன் சிறியனுனிருக்கும்போ
தென்னைகண்டாசை யெல்லாம்
கனவிட்டெரித்து பவசாக்காடெனுங்கனவு
நினைவாதி நனவுமற்று
கண்கண்டகாட்சியாய் காணறியசிற்றம்ப
லத்திடை யிருமதுமவுனு
சினவரவுசாகவும் இலைசருகுபுசித்துநீ
ரள்ளியுண்டிருக்க வைப்பீர்
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (கூ)
நில்லாதவாழ்வை சடமழிசந்தைபேட்டையை
நீடாழி கடலுலகெலாம்
நிசமில்லையென்று மறைக்கைவல்லியநீதநூல்
நிஷயமுணர்த்து பொருளை

பொல்லாதபுலைபாவிக்காணு மிகபரமழியும்
புலைகுறையைப் பார்த்துமனமும்
புந்தியுடனெஞ்சமுலைப் பொய்மைதினம்யென்
பொறிபூதக் கருவிசெய்யும்
வல்லாமையென்றுபின் னல்லாமல்நீயென்றும்
வாதெனதுகுறை ஐயனே
வரமிக்கவருகுவீர் செயலெலாந்தருகுவீர்
மனமொக்க வைக்கலரிதோ
செல்லுமோவுன்பேச்சு ஏதுக்குதொடைதட்டி
செயபேரி அடித்தறிகிறீர்
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (௰)
இந்தபொய்ச்சாலவுடல் நிசமல்லஇவ்வுலகம்
நிசமல்ல உயிர்களெல்லாம்
இரவிமதிவானிலமும் நிசமல்லஇன்பதுன்
பங்களுடனிவ் வுலகினில்
சொந்தமெனவாழ்வுபெற் றிருக்குமனையில்லரமு
நிசமல்ல தந்தைதாயும்
சுற்றமுடனுரவுதமர் தாரமகவெல்லாமு
நிசமல்ல சுருதிமுரையோ
டந்தணர்மெய்நிலையோதிஅனைத்துலகுமாளும்வெகு
அரசுடமை நிசமுமல்ல
அம்மம்மகாகமானது கோடிமுன்னொருகல்
லெதிர்சந்தை கூட்டமிதிலோ
சிந்தைதான்சிவஞான பூர்த்தியாய்தெளிந்தநிலை
சிவமே நீநிசமுமாகும்
தேசோன்மயானந்த வேதாந்தசித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (௰௧)

பேசினும்ஒன்றையொன்றுசரித்திருக்கினும்
போராசைக் கொண்டலையினும்
பெண்ணாசைகொண்டவள் கண்கயல்மேகமயிர்
கூந்தல்பெட்புநிறை அமுர்தகலைகள்
கூசிஇளம்பிறைமுகில்கள் கூடிஅழகொளிர்கனக
முகத்தானை கண்டபோதும்
குருமிக்கமறைபேசுங் குணாகிதநிர்சூன்ய
குறிசமயக் குதர்க்கமிலதாய்
மாசிமருவற்றமன மதியாளனுக்கவளர்
கலைபரவ அண்டபிண்ட
மார்க்கத்தில்செம்பிர குறிசொல்லவருமெனது
வள்ளலேதுரைராஜனே
தேசிகோத்தமனாகி தினம்புத்திசொல்லிதிருச்
சிற்றம்பலம் வருகுவீர்
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்த
சின்மயானந்த குருவே. (கஉ)

மணிசித்திரநாத வெளிகீதநடுதீபவொளி
நாட்டமுடனிருக்கவைத்து
மனமாடுசெல்லாமல் கனவுநினைவாதிசாக்
கிரவீடுஅடராமல் வீண்
அணிஅட்ட சித்திநிலை பயிலாமல்ஆசைமல
அகங்கார கிழங்கைவெட்டி
அறிவானஞானபூமிக்குள் நானயர்ந்துசிவ
ஞானநித் திரையிலென்றும்
பணிசெய்துஉனக்கான பூசையொருநாளுநான்
பண்ணாயினும் ஆனாலும்நீர்
பத்திநெறியானவையுந் தந்தடிமைச்செய்சருளும்
பலநாளுமலட்ட வேண்டாம்

தெணிவுதாயீதுசமயம் தெக்ஷணாமூர்த்தியே
சித்தம்வைத் தாளுதற்கே
தேசோன்மயானந்த சித்தாந்தவேதாந்தச்
சின்மயானந்த குருவே. (௪௩)

வாய்க்குமோயென்றடிமை மனதுதடுமாறுமல்
வசனாதிக் கமனமற்று
வழங்கு ஆதிப்பால்வாரி யுண்டுபசிதீர்ந்துதை
யதிசைநின்று வாய்மையுடனே
ஏய்க்குமதக்கருவியற யிருந்ததில்லையொருநாளு
மென்றுமுனைக் கேட்டிப்படி
ஏழைகுடியானயெனை இந்திரஜாலங்கனவு
ஆகுமுல காசைவஞ்சப்
பேய்மனதுமுன்செல்லப் பிரபஞ்சமார்க்கத்தில்
பேசயேன்வைத்து விட்டீர்
பிறப்பாளனுகிறாகிறப்பாளனுக்கவோ
பேராசை வுனக்குகிதமும்
செய்க்குமிவ் வணியாயமார்சொல்வரினியாவ
திருமையறக் கலந்திருப்பாய்
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (௪௪)

பல்லாயிரங்கோடி அண்டபகிரண்டமும்
படைத்தளித்திருக்க யில்லையோ
பதுமமொடுசோமதா ரகமாகிபார்த்துபல
குதர்க்கநில்லை பேசவில்லையோ
எல்லாமுமறைபேசு முன்மையறிவாகிஉயிர்க்
குயிராகி யொளிரவில்லையோ
ஏகமொருகாலமுன் றுறைக்கயில்லையோயெங்கும்
நிறைவாகி யிருக்கவில்லையோ

சொல்லாமல் சொல்லுமருட்டாரகநீழில்லையோ
சுருதிவுனை உறைக்கயிலையோ
சுகதுக்கமில்லையோ தொலையாதவிசாரமாய்த்
தொழிலிட்டிருப்ப தழகோ
சொல்லுமோவென்கொடுமை சிவஞானயோகத்தில்
செல்லாமல் செய்தருள்வையோ
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (கரு)

நினைந்திதுவெலாம்பார்த்து நடுக்கமிகவாகிமனம்
நெடுமூச் செறிந்துலையுதே
நிமைபோதுமெண்ணுமல் சிவநிஷ்டை யற்றுநான்
நீசமனமேய்க்க அதின்பின்
வினையாளனுகிப்போய் வீம்பாளனுகவும்
விதித்தான்முன் மறைநான்முகன்
வித்தைமதியூகனுய் விலையாளனுகவோ
விபரமொன் றறியவில்லை
என்னையுநீஏனவாது சொல்லிகலை மதிவீட்டி
விருந்தரசு செயல்கடாவி
இன்பமேவிட்டுபல ருசியாகியினிக்கிறீர்
ஏராளமாக வசனம்
சினைகிறீர் திண்டாட்டங் கொண்டாட்டமிதிலென்று
சிற்றம்பலத்தெய்வமே
தேசோன் மயானந்த வேதாந்தச் சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (கசு)

தேகமநித்தியமென்று அறிந்துபோய்ச் செகமாயை
ஆசையில் நுழைந்துசிவமே
சித்தமானதுச்சபலமாகி சிதத்வாதிகரன்

கருவியொடு திகைதப்பிமெய்.
ஆகமமுறைக்குமருள் நித்திய சிவமயசோதி
நிலையிலத்து விகனுகி
அறம்பொருளு மின்பவீடாதியிலு மேலான
அறிவுடன் பழகிதினமும்
ஏகமே எங்குநிறைப் பரிபூரணானந்த
தீபமே யீசனேஎன்
இருவினைக்காதை இனி என்னென்றுச் சொல்லிமுறை
எழுதிஉனக் கறியகிற்பேன்
சேகரஞ்செய்துன்னை செட்டாகிவிலைகூறி
சிவசிவா என்றுறைவனே
தேசோன்மயானந்த வேதாந்தச் சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (கஎ)

சூதாடிதோற்ற வாதாடிபோல் மனமான
துஷ்டனெனைத் தொடர்ந்துகூடி
சோரஞ்செய்தின்றுநாள் வரையில்நான் துதிசெய்த
தத்தனையுஞ் சூரையாடி
சேதாரமாகிவுயிர்க் காதாரமில்லாமல்
சிந்தைவிட்டுடல் விழுகபொய்
சேற்றிலேவீழ்த்தி கடலாற்றிலேநட்டநடுக்
கம்பமது போலாகினேன்
கோதாடிவந்தகதை போல்சொப்பனுதிநிலக்
கூத்திடங் குறித்துவைத்தாய்
தீதாசைவிளையுமிது வெல்லாம்நீரேவாது
திருவடிக் காசைதருவாய்
கோரியிலிறந்துவிடு மென்னைநீ பின்பற்றி
மனக்கோரியி லிருக்கவைப்பாய்
தேசோன்மயானந்த வேதாந்தச் சித்தாந்தச்

சின்மயானந்த குருவே. (கஅ)

கண்ணைநான்மூடாமல் கண்ணுட னிருந்துதவங்
கருதவெகு நாளாகுதே
காணுதற்கரியசிவ மறைசாஸ்திர பெரியதது
கடுமை நெருப்பென்குதே
பெண்ணாசை பொருளாசை மண்ணாசைகனவிலும்
பேராசை கொண்டலேயுதே
பேதித்து போடுதே சாதித்து தள்ளிபேய்
சமரர்செய்து போராடுதே
எண்ணாது எண்ணுதே ஏதளவு இதற்கென்னைப்
பெற்றவாபெரியகோவே
இரவுபகலற்ற நடுகுந்தியருட் காயவு
மேரிட்டுப் பார்து பார்த்து
திண்ணம் பிறக்கவும் சேய்போலிருந்துதவஞ்
செய்யவுங் கருணைபுரிவீர்
தேசோன்மயானந்த வேதாந்தச்சித்தாந்தச்
சின்மயானந்த குருவே. (கசு)

## சின்முத்தி ராங்கமுதல்.

என்னாளுமின்னார்க ளின்பிலேஇருமைதுய
ரிடையூரிலே கருவிகள்
எதிர்வம்புபொறியிலே பூதபேய்கினைவிலே
ஏவலிடம்பொரு ளிருளிலே
தன்னாவியுடல்வெம்பத விக்கும்வயிற்பசியிலே
தந்தைதாய் பாசாடவி
சந்தைகூட்டத்திலே தன்னை யானறியாதச்
சலிப்பிலே தலைவிதியிலே
தின்னாவிடத்தால மும்மலபிடக்கிலே

சிந்தைதான் சுழலலையிலே
செனனமானது வந்தச்செயலிலே உனதுதிரு
வுளமிரங்கா அன்பிலே
தென்னுதிதிசையில்வருங் காலதச்சன் கடமை
தீர்த்துசிவ ஞானமருள்வீர்
சித்தாந்தவேதாந்த சமரசம் விளங்கவரும்
சின்முத்திராங்க முதலே. (க)

சிரகிரியிலொருநான்குக் கலைவாயினடுவிலே
சிற்பரம தேவதருவாய்
தேடுதற்கரியமணித்தீபமாய் செயலெல்லாம்
தேக்கிடற் கருணைநல்கும்
பிறப்பொடு இறப்பற்றப் பேரின்பவீடுமாய்
பேசாத மவுனமதியாய்
பெண்ணுமாணலியற்ற அத்துவிதவெளிநல்கும்
பெரியதேசோமயத்தை
கரதலாமலகமென கருதுதற்கரியவருள்
கற்பகநன்வட நிழலில்நான்
கண்டுகளிகூர்ந்து மனக்கவடமறநிற்பனோ
காணுமலலைந்தழுவனோ
திரமற்றபாவிக்கு வரமிக்கத்தரத்தேடி
சிவமேநீ தினம்வருகவே
சித்தாந்தவேதாந்தச் சமரசம் விளங்கவரும்
சின்முத்திராங்க முதலே, (உ)

முத்திதருஞ்சச்சிதா னந்தவெளிமுடங்கி அறு
வீட்டையுங் கட்டிமவுன
மோனசத்திகள்மாயை விசுரிம்பிமுய்க்குபல
விசாரவே துளவுயிலதாய்
வெத்தியொடுமெனமற்ற ஞானவானந்தநடு

பானதவழி நடந்துகண்கள்
விபரமுடன் விதேக கைவல்லியசிவ முத்திபெற
விருதாவி லேழைகுடியை
புத்திமதிசொல்லாது போக்கிலே போகப்
புறங்கூறி கடவடைக்க வேண்டாம்
பத்திசெயு மடியவரை பாவியென்றுறையாமல்
பரமகுருவாகி என்னைப்
பரிசுத்தனாக்கி பாமரனாகிவையாது
பலநாளும் பகர்ந்துசொன்னேன்
சித்தியெட்டெட்டுக்கும் மேலான பரமகதி
சித்தமசையாக் கருணைகூர்
சித்தாந்த வேதாந்த சமரசம் விளங்கவரும்
சின்முத்திராங்க முதலே (௬)

ஆசையோ பொல்லாத அநியாயமநியாய
மாகடிய பூதமனதால்
அவலமதிக்கனலூத அறிவெலாஞ் சுருங்கிமத
மடுமையெனத் தொழில்படைத்து
மூசையிற் சுருண்டுமலப் பாசவுடல் வளர்க்குதே
மூசையிற் சோதிகனலை
மூட்டியெழுய்வாசிமதி யூதிபூரணமாகி
முக்கணுட னுதியந்த
செவளாநடுவீட்டி லொளியிட்டக்கலைபரவ
உயர்வாய்வை எரித்துமேலாம்
உணர்வறிய கனகாவ நீதமணி சபைவீட்டில்
ஒருவனென்னை உள்ளபடியே
தீக்ஷையுடன் ஞானோபதேச முறைத்திடமூல
சித்தர்நீர் வந்தருள்கவே
சித்தாந்த வேதாந்தச் சமரசம் விளங்கவருஞ்

சின்முத்திராங்க முதலே. (௪)

ஆராவதென்னபோலு முரியமனப் பாங்கெல்லா
மவலமென ஆசைமோக
மடுத்தடுத்தரிவைமுர லடியிலே நொடிகையிடை
னடையிலே முகவழகிலே
நேராக வரும்மிருகண் பிறைபுருவவேளிலே
நிலையிலே மயிர்வகுவுனின்
நெட்டையிடும் விரலிமேல் குளிர்கூந்தலுருவிலே
நிகரற்றநிமை பொட்டிலே
வாராய்நீ யெனச்சொல்லும் வலியவாய்பேச்சிலே
மாகதபட்டுடை முலையிலே
மதிநிலவை பழித்தஉடல் நிறத்திலே முத்துமுத்
தாகமலர்பல் வரிசையிலே
சீராக களபகுங்கும மஞ்சள்பொடியிலே
சிதையாது மவுனமருள்வீர்
சித்தாந்த வேதாந்த சமரசம் விளங்கவருஞ்
சின்முத்திராங்க முதலே. (௫)

காண்டீபமென்னயிரு நிதிக்கட்டிக் கருவிகளைக்
காய்ந்துகாய்ந்தனல் மூறிப்பேய்க்
காட்டைநான் சுட்டுதணலிட்டகடு வெளியாக்கிக்
கருதறிய மோனவெள்ளங்
தூண்டிச்சுகநித்திரையில் சோம்பிடும் பாதித்துயில்
சோகமோ கங்களற்றுத்
துரியாதிபூமிமுன் விடியவுஞ் சுத்தவருட்
கைவல்லிய மாகித்தன்னைத்
தாண்டுமொரு வுபாயமுண்டாக்கி பூரணவாழ்வில்
தட்டாம லிருக்கமனமோ
சீண்டாமல் விட்டுவிடத் தெளிவென்றுத்தேடாள

னெனக்கென்று தெய்வமேஎன்
சித்தாந்த வேதாந்தச்சமரசம் விளங்கவருஞ்
சின்முத்திராங்க முதலே. (௬)

வெத்திபெற யுத்திமறைச்சத்தியமு மத்திமுத
லொத்துயிர்க டோருமாதி
வெளிபெற்றசுத்தவரு ளொளிநித்ய முத்திமுறை
வழிகற்ற சித்தர்கணமோ
டெத்திமத முத்தகயலொத்தமயல் நித்திரையில்
கத்தபனைப் போலுமறிய
எரிகருவிக்கொத்துகழ கரிநரிகளுடல் பூத்தப்
புழுவழுவ கத்துமித்தைப்
பத்தியொடுநிமைபோது வத்தவுடனத்தனுனை
பார்த்துநான் கர்த்தனென்றுப்
பணிந்தநிலை யொருநாளுந் தத்தமெனவந்தடிமை
பாடெலாந் தீர்க்கவருவீர்
பணிதிபல வாய்க்கதிர்கள் மதிசூழ நடுவிட்டில்
பகரறிய ஞானசயனஞ்
சித்திபெறவுங்கருணை யானந்த தில்லைநகர்
சேர்த்துதந்தர மாக்குவீர்
சித்தாந்த வேதாந்தச்சமரசம் விளங்கவருஞ்
சின்முத்திராங்க முதலே. (௭)

இல்லையென அல்லலறச்சொல்லாமல் வெட்டவெளி
இட்டமொடு சொல்லிநடுவி
லேகமிருகாலற்றுத் தேகமொடு எந்நாளு
மிருமையறச்சாதபோதமாய்
தொல்லையறவுங்கனக மணிமாடக் கூடல்நிரு
நயனமதி வளர்மண்டலந்

தோராயமாக மனப்பிராணுய வாய்வற்று
சோமனித்திரைப் பழகவும்
எல்லைநிகரற்ற அறிவானந்தத் தொட்டியி
லேகபூரணனுகியான்
என்பிறவி யிறப்பெலாமொழிந்து ஜெயவிருது கொடி
கட்டி யிச்செனனமோடே
தில்லைவெளிநடக்கவுஞ் சிறுகாலைச் சிவஞானந்
திருவுள மிரங்கியருள்வீர்
சித்தாந்த வேதாந்தச்சமரசம் விளங்கவருஞ்
சின்முத்திராங்க முதலே. (அ)

மோசவருமென்று நானின்றுவ தணுசாந்த
அதீதசுக முத்திவெள்ளம்
அதிகமென வரவாதி பானுசைமிகப்பெற்று
அற்புதவிளக்கம் நல்கும்
நேசமானதுபெற்று நிறைசூன்ய நிலம்பரவி
நீழ்சோதிக் கதிரெரிக்க
நீசமனக்கருவி தொண்ணூற்றாறுடன்சாகவும்
நிமிடசாரலைமுகில்கள்கூர்
போசசருவேசுரா புண்ணிய முனக்காதியே
பூரணமுழங்கு நடுவில்
புத்திமதிப்பெற்று திருமூலர் குருசபையில் சிரஞ்
சீவியெனக் குடியாக்குநீர்
சிஷனிவனென்றுலுஞ் சேரவா மகனென்றுச்
செல்வமே தரவருகுவீர்
திருமருவு கைலாசகுருமவுனியா மிருகண்
சின்மயானந்த சிவமே

# பொய்யுடல்.

பொய்யுடலுறங்கிதல்போல் பூதபேய்மலவிகார [மூது
தொய்யுமு ழாசையென்போல் தொடக்குண்டோ சொல்லாய்
மெய்யறிவிளக்கே ஞானவேதமே வீம்புகொள்வே
லுய்யுமா றுண்மையில்லேனுணர்விலே னென்செய்வேனே.

என்செய்வேனப்பா ஆதியனாதியே அரூபாரூபத்
தன்மயச்சுடரே சுத்தத்தனிவெளி நிறைவே சித்தம்
சின்மயப் பொருளாயென்றும் நினைவதுன் கடனாருண்டு
துன்னிய துணையேசோதி சூழருள் விளங்குமாறே. (உ)

விளங்குநாளென்று வேயுாலமொடு கருவியற்று
உளங்கனிய மிர்தோஞான மூறியவூடேறே வேதங்
களங்கறக்காட்டு மேலாங் கற்பனைக் கருணைவீடோ
இளமகள் மகிழுமூவா இதையபூரண விளங்கே. (௩)

பூரண வின்பமூறும் போதமே வஞ்சபூதங்
கோரணிக்குழுவ பொல்லாக்கொலைபுலை நோயுண்டாய் பொய்
யாரணித் திருப்பேனந்தோ ஆதலாலரசே ஐயா
காரணங் கடந்தமூன்றுக் கண்ணுடன் கலந்துகொள்ளே. (௪)

கலந்தறி விளங்குஞானக் கற்பகவிளக்கோ டென்னை
புலம்பொறி கருவிப்பூதப் பொய்மனம் பொறுவாதுன்னை
நலம்பெறத் துணைக்கைநீட்டி நான்முகம் பிலிற்றவென்றே
பலகலைமகிழ மெந்தாய்ப் பராபரக்குருவே போற்றி. (௫

எந்தைமுக் கண்ணோடாதி யந்தமுநடுவு மற்ற
சுந்தர வொளியேதூண்டா தூயமேதுணையே பெற்ற
தந்தையே கடவுளூர்தி தயாபர வெளியேசோதி
சிந்தனைக் கெட்டாதேசோ மயம்பழுத் தொழுகும்வாழ்வே.

வாழ்வெனக் கேறானென்ற வம்பனோ மலநீழ்பாச
தாழ்வெனக் கேனீசெய்யும் சமரனோ தாதாயீமம்
மாறாலகாசைமோக மதிபலவாழ்கை வேண்டாம்
பாழ்மலக் கருமத்தீபோல் பார்த்ததார் பரமகோவே (எ)

ஆருண்டென் புலைநோயந்தக் கரணமூழாறுவச் சிந்தை
போருண்டாய்ப் பொறிபூதங்கள் போக்கிலே புகுந்துகெட்டு
மாருண்ட மனத்தாலேச வாய்மைநோ ன்பன்றிநின்றேன்
சீருண்டக் கழலேபேசா செல்வமே சிறியனேற்கே. (அ)

செல்வமே பேசாசோதி சின்மயக்குருவே சான்றோர் [கீதக்
சொல்லரும் பொருளேதொண்டாய்த் தொழப்படுந் துரியா
கல்வியேதனை கண்டாருள் காட்சியே கருணைநட்பே
அல்லிரா வற்றவன்பர்க் கறிவினுக் கறிவேயச்சோ. (கூ)

அச்சச்சோவிருமைபாழா லடிமை யானெவ்வலானேன்
மெய்ச்சுடர் விளக்கே தேடாவித்தகர் தேடுந்தேவே
முச்சுடர் வெளியேதூண்டா ஞானசூரியனே என்னை
சச்சிதானந்த வீட்டில் தனித்திரத் தன்மைதானே. (ய)

தன்மய வீட்டிலென்றுந் தழுவினா னறநீயற்று
என்மயந் தானேதானா யெழுமாதி யந்தமந்தோ
நின்மய நடுநின்றென்றும் நினைவற சாந்தனாகும்
உன்மயந் தானேவேண்டு முயர்வெளி விளங்கும்வாழ்வே.

விளங்கிய வருபாதார நெய்யருள் விளக்கையேற்றி
களங்கமற்றறி வானந்த கற்பகநடுநீ றுண்டாய்
உளம்பல கனிபால்கண்டோ உண்டுல கிருமைநீக்கி
வளம்பெற இருப்பதெந்நாள் மாசிலாமவுன வெற்பே. (கஉ)

எந்நாளெந்நா ளென்றிருமாந் நிலையங்கல்லா லிறைஞ்சாது
தன்னுள்பெருக்கே சமரசமேதன்னைமறந் திங்கேமாந்தேன்
முன்னேமுக் கட்சிவபெருமான் முழுநாளுமுன்னைப் பணிகூவி
உன்னன்பணிவார்க் கொருமேபோ தாயுணருமூலவிளக்கொளியே

மூலாதார விளங்கவரும் முதலே மூவாமருந்தமுதே
காலாகாலங் கடந்தவருட் கண்ணேபொல்லா மனமாயை
ஆலாலமுதே எனுளமொழுகு மடியார்க்கெளியேயாயப்பாயென்
கோலாகாலங் கடக்கசிவக்குருவே குற்றங்குறை யொழிந்தே.

ஒழிந்தானந்த வருள்வடிவ முயருமாதி யந்தநடு
விழித்தானந்த வெளியுருவவிமலா வேதக்கொடைமயிலும்
தொழில்தானென்று முனக்கடிமை சொல்லாதருளால்தொழுந்
அழியாவெந்தாயென்னையுமுக்க ணருளால்பெருக்கி [தெய்வம்
ஆண்டுகொள்ளே. (௧௫)

பெருக்கும்பிரைதார் பிஞ்சகத்தை பேசாய்பெரிய கோவே
நான், தருக்கமிதினுவிடும்பையுடல்தழும்பு மொருநாளென்று
துபர், நெருக்கங்கரண விந்திரிய மலநானுரக்கமென்றொருநாய்
குருக்கேவந்து பறிக்கமனக் குறையோ அதிகம்குருபரனே.

குருவேமூல மென்றொருமெய்குவிய ஞானச்சுயஞ்சோதி
பெருவாழ்வடுக்க பேசாதபெரிய பேரின்ப நித்திரைசேர்
திருவோலக்கத் துன்னன்பர் திரந்தான் பேசதெரிந்தாதி
மருவார்திரு சிற்றம்பலத்துள் வாழ்வாயென்று மறைமுதலே.

வாழ்வாயென்னுள் மணிவிளக்கே மாட்டேனென்றால் நானுக்
குத், தாழ்மேன அன்பர்பணிக்கெல்லாம் தாதாயிதற்கோரறிவு
செய்யும், வீழ்நாளிரவு பகலாகவிதியென்றிரவி மதிகொடு
போய், பாழ்த்தபிறவி மலக்குடலேபழியால் பாவம்பராபரமே.

பாவரிதுதான் பராபரமேபலநாள்சொல்ல கேட்டதிலே
தேவர்தன்தேவே இச்சிறுகாலே சித்தமசையாதிருந்து சிவ
கேவலப்பூமியென்றுறு அவஸ்தைதொடரா கீழிருக்கும்
கோவலிலன் ஞெருநால்வர் பெற்றகொடி முடியாண்டி பர
வெளியே.

பரவெளிநிரா மயத்துள் பற்றறப்பற்றிப்பேசா
சிரகைலாச வீட்டின் சிற்பரம் விழங்கிமேலாம்
புரவெளிநிறை சூன்யத்தின் புதுமையான் கண்டுகண்டு
திரமெனக்கருளி யென்போல் தெளியுநாளெந்நா ளெந்தாய்.

## நினையாமல்.

நினையாமலருள்வழங்கும் நிலையிற் சும்மாநிஷ்களங்க
மதியாகிநிஷ்டைக்கூடும்
தனைமறந்தூவரிவாகுஞ் சகசானந்த தன்வெளியி
லகண்டிதாகாரயாகி
வினைசூழும் பொறிபூத மலங்களற்ற வெளிதானே
வெளியாகி நிறைந்தயின்பம்
எனைதானே வாவாவென்றறியக்கூப்பும் யெந்தாயெம்
பெருமானே அழகீதந்தோ. (க)

அறியவருள் தானறமெய்ச் சிறக்கநிற்கு மதுதானே ஆசைமலங்கவரூவாதி, தெறியசிவ சின்முத்திராங்கமல்கசித்த மசையாக்கருணைத் தேக்குமந்தஞ், சிறியனு மன்னிலேப்பெற பொய்க்கவறு சூறுந்தேகமணித் தியக்கருமம் சிவமமேபேசா, நெறிநின்றார்போலு மிராப்பகலுமற்ற நிலைக்கென்றே துணையாவாய் நீசனேற்கே. (உ)

நீசனுன் மனமாயையேவும்பூதப் பொறி புலையால் ஞெருப்பிலிட்டக் கனலின்மேலாம், பாசமெனக் கேணுசைப்பசடி

யென்னே பலதராான் சேட்டுநெஞ்சங் கல்லோ ஐயா,மாசற்ற ஞான வெளிமருப்பேபேசா மதிநிலமே மந்திரம்பொய் செபதியானம், ஏசபரிபூரண விலாசவிட்டி லிருந்துநா னீயறக் கண்டிருப்பதென்றே. (ரு)

என்றே என்குறையெலா மொழியுமாயை யிடமருந் தும் பெருவெளியில் முடங்கிக்காண, மன்று,நியுயருமதிவளர் கருணைநிலமே வசனிக்குமெதுவரினு மதுநினையும் நினைவாய், நன்றாக மறைமுல்லவனேதிய யிவ்வுலக நகைப்பென்றே காடிய வெலாங்கருணையாகுங், குன்றேறிமறப்பு நினைப்பற்ற வெளிநின்றுக் குணக்கடலே மறைநிறைவே கும்பிடுதல் நன்றே. (சு)

நிறைமதியே அருள்வடிவே நிறைஞ்சனமெய்ச் சுடரே நினைபு நினைவுக்கரிவாய் நீடியநல்லறிவே மறைமுதலே மன மாயை யற்றச்சிவஞான மதிப்பொருளே வாய்மைநோன்பற்ற புலநினைவின், குறையொருவர்க்கிலராக வடனைவாதுனையுங் குலையமல விழிவுவயற் வளர்க்குமுபாயங்கள், திறைக்கவிழ மருங்குமிதற்கென் கடவேன் சிவமே சிறியேனிங் குய்யும் வகைத் தெளிந்தருளச்செய்யே. (எ)

தெளிந்தாதி விளங்குமதியுயர் ஞானசோதி சிற்றம்பலத்திலென்றுஞ் சிதையாதுச்சிந்தை, களித்தோது மலமற்ற கருணை சதானந்த கற்பனை கண்டனந்தாதி மறைவளரும் பொதுவில், ஒளிர்விடுங்கற் பகமணியே வுள்ளபடித்தன்னை வுணர்த்தி அன்பர்க்கறிவாகி வுறையற்றமோனந், தளிர்ந்தென் போல் மவுனமுடன் சதாநிஷ்டைக்கூடி தானறக் கைகாட்டி யெனைத்தழுவி யிருந்தருளே. (அ)

இருந்தவிட மிராப்பகலற் றுன்னன் பார்க்கலந்த யின்பந்
தான் மதுவருந்த பிதையவிளக்காகும், அருந்தவமே யார
முதே ஆர்படுவார் மனமோ அநியாயமவரவர் செய்புலைகண்
மஞ்சூழ, பெரும்பழி கண்டாயன்று அப்பா பேராசையுன்
மேல் பிதற்றினான் தொழுதிருகைப் பொதியமதித்தானோ,
வரும்போ வென்பதுவில்லா வாசரங்கண்டேனில் மனமாயை
யொழிந்தமகப் பேறென்றுத்தானே. (எ)

தானேதானாதியந்த நடுவாகித்திகழுந் தற்பரசிதாகாச
நிலையமறக்காட்டும், நானேநானாகியப்பொய் வசனாதிக்கமன
நாட்டமிரண்டறப் பழமைக்கூறினது மென்னோ, வானேமேல்
விழுங்கயென்றும் ஆண்டிதவானந்த அற்புதவாதரா வடிமுடி
நடுவுமில்லா, ஊனேயிவ்வுடற்றானே உள்ளபடிக்காணாமுகமை
யென்ன டான் பிர்மைகொண்ட பொதுதானே. (அ)

போதுதானே பூரிக்கப் பூரணங்கண்டிருக்கும் மறை
சாஸ்த்திரங்கமிழ வுரைக்குமருள்காட்சி, எதுதானென்றற
வளருஞ் சச்சிதானந்த யிடந்தானே அற்புததாரண மமைய
யிருக்கும், அது வாகிலதுவாதியந்தநடுநிகழு மத்துவிதகுண
சாந்த ஸ்ரூபவெளியாகி, இதுதானே யில்லையென விருக்கு
மொரு போதாயென்னன்பே என்னுயிரே எதுமொழிவேனே.
(௯)

ஒரும்பாதா யுரங்கியுரங்கா தருளைப்பார்த்து ஓடுமனப்
பிராணவாய்வற்ற மதித்தீபங், தருநாளென் றனைத்துயிரும்
படைத்த சிவபெருமான் தத்துவம்பேய் மதக்கிழங்கு சாறு
முடற்க்கோஷ, இருள்தா னென்றைக்கு மெய்விடுபாச மிது
வோஎனக்கதி கத்துயரிதினாலே மாந்துபோனேன், குருவருள்
மெய்பிரங்வைத்தால் குறைந்திடுமோ கூறாய் கொடிய நினை
வரசிட்டுகொலை பயின்றீர குணமே. (௰)

அருட்பிரகாசக்கனியே அனந்தலெனுங்கால னனியாய மாகதின மறிவெலாங் கொடுபோய், மருட்டுகிறானெழுந்திது வெலா மறியக்களவாய்மாறாடி மல்லாடிவளைத்து பசிதனக்கே வெருட்டுகிறானிதுவன்றி தசக்கிரீடியென்ற வித்தக வாய் திறந்து பெயரிடுக்க முறவெதுப்பி முருட்டுடனக் குரங்குடனே போரென்றுமெனக்கு மூதறிவே வேதாந்தச்சித்தாந்த அறிவே. (௧௧)

அறிவென்றே ஒப்புமுனை அருமறையாகமங்களழகொளியே அத்துவிதஞ் சிறக்கவருமொளியே, பறிவாசிநடக்கு மதிநடன கதிரொளியே பாழானப் புலைக்குடிலால் படமுடியாதினிநான், தெரியாத சிறுவ னுனக்கருமைசுதனாகி திருச்சிற்றம்பலவெளியி லுரங்கிமலமற்ற, நெறிதருநா ளிதுவேளை நிருமலநிட்களமே நித்தியமே பத்திதரும் நிறைஞ்சனசோபனமே. (௧௨)

பத்திநெறி அறிவில்லா பாவிக்குழன்தாள் பரியுமொரு தருமமுண்டோ பகலிரவுமற்ற,சித்திநிலைக்கடந்தறிய நியமாதி நேமச் சிந்தனைகெட்டாஆதி திரமைநல்க காட்டும், முத்தியுண்டோ முறநீதிப் படைத்தவருஞ் .சொல்லாமுக்கணுடன் வருள்திரந்த மோனநிலையாகி, நித்திரையற்றாரணம்பூத் தகமாதிக் கருவிநிலையவிழ நிஷ்களங்க மதியாதிநின்றே. (௧௩)

நின்றநிலை யெதுமவனக் குருவாகித்தானே நினைபுனை வாய்நிறைந்த வருட்குன்றமாகித் துன்றுமிடஞ் சொல்லாது சொல்லபெரு வெளியாய்த்தோன்றலெது வதுவாகித்தோன்றாமல் தோன்றும், நன்றுதீதறச்சுருதிப்பயிலுமொரு விவேகம்நாடியம்பராரென நின்றாரணிக்குமதுபோல், வெவ்விடுமிவ் விவகாரங்கொண்டதாரந்தோ வீண்புலைவாய்க்கேட்டி[illegible]க்கும் வித்தைபுலைக்குறையே. (௧௪)

துறையந்தோ சாதனையோர் நான்குமறிவுடனே கொடிய மனமாயைமல விவகாரமன்று, நிறைந்தபரிபூரணமாய் நிஷ்டாநுபூதி நின்மயந்தன்மய மகண்டசச்சிதானந்த, முறைப்படி தற்புருடநிலையாகி பிராணய முடங்கியருள் முளைபுகுந்து முத்திநிலைப் பயிலும், துறைதானே துணையாகிச் சுகாசனநிபேதத்தொழிலன்றோ எனக்கிருமைத் தொடக்கின்றுதானே

இருமைதொடக் கற்றவனுபிறையே யானிருக்க யிடங்கோலி ஏகவெளிப்பூரணமாயுயரு, மொருமை யெனக்குளதா யவ்விடமத்துவிதமா யுதையமுண்டாயறுமறைக ளானந்தம் பொழியும், பெருமையறிதரி பிரமனுநிகண்டு பேசும் பேசா தச்சுகவாரி ஞானவமிர்துண்டு, வரும்பெரிய காலமூன்றிடக் கறநான்சும்மா வாய்மைபெறக்கண்டு கண்டுமனந் தெளியுமாறே. (கசு)

தெளிந்த பொருளன்று மின்றுஞ் செப்புவதற்கரியச்சித்தாந்த வேதாந்தச் சமரஸமெய்ஞானங், களித்துராங்கியருணிஷ்டைக் கருணைபறையுயர்க் காட்டிய வீடனந்தாதிக்காலமின்று மென்றும், வெளியாகி நடுவிளங்க வித்தகர் தேடியநீழ் விருப்பதிகமெந்தாய் முக்கண்ணுடை தேசிகனே, ஒளியேயானுள்ளபடி யுராங்காமலுராங்குமருள் வெளியெனுள முளைத்தூவறிவாவதற்கே. (கஎ)

வேறு.

தேசிகமூர்த்தியாகி சிவபெருமானே சிந்தைதிரம்பெறத் திகழுஞ்சோதி, மாசிலாமணியே ஞானவாகுதிவிளக்கே என்னுள் மருங்கிநானறநீயற்ற, பேசிலா மவுனவெற்பே பெற்றவா பெரியோ யேகப்பெருவெளி நிராதரத்துள், ஆசிலா வறிவே யெங்கோனுநியே அரசே என்னை ஆளுடைக்கடவுள்கோவே.

கோவே என்குற்றமெலாம் பொருத்தாளுங் குருவே கோதுடையாளாசைபின்றுக்கொடையருளுங் தருவே, தேவே இச்சகமாயை தீவினையால் நானே செவிகேட்கும் சிந்தை யசைந்திருகண்ணும் நோக்கும், நாவேசு மிந்திரியக் கமனபர தாரநகைபுரியும் நானுவிதக் கவறுஞ்சூழும், பூவேநன்மணமே யிப்பொறி புலன்தூதுரவால் போக்கிலே யாகெட்டேன் போற்றி யறிந்தருளே. (௪௯)

அறிந்தருள யேதொரு சொற்குற்றமிலையெந்தா யாது முனையன்றியிலை யானெனும் பொய்க்காமஞ், செறிந்துனையான் தேடுமறிவானந்த வின்பஞ்சேகரித்து மூடுமிருள் சேதனந் தானேது, பிறிந்திலை யீதழகோ யிப்பேதை மனப்பேயால் பெற்றபலன்போது மிதுவேளைச் சிறுவனுக்கே, தெறிந்தாதி நடுநிகழுந்தெய்வதசமாநிதாரணம் பெற்றறிவொடுநான் திகழ்ந் திருக்கத்தானே. (௨௰)

தான்தானே விளங்குமதி யாரணநன்னீழே தாரகமாய்த் தற்பரமா யொளிர்விடுதேசொளியே, என்தானே யிறக்கமிலை என்றுமுனக்குறைத்து மென்செய்வே னென்னப்பா யென் குறைதீர்ப்பாருந் தேன் பிலிற்றுஞ் சிற்றம்பலத்தி லருட்கண் ணேசிந்தைதவசமாகாது சிதைவுதினம்பட்டேன், நான்பொறுக் கேனுதலா வருளொடுநானுரங்கும் நன்னெறி கண்டாயீதலுன் கடமைத்தானே. (௨௧)

சேறிகண்டா யென்பிறற் குடிலைக் குடியிருந்தோய் நினை வற்றத்தொட்டியில் நான்முடங்கி யறிந்திருக்க, பறிகொண் டோ யொருநால்வர்க்கந்தண செந்தழலே பராபரமே அறி யாதுபோலிருந்தால் யானு, மறிமாயைப் பொறிகரணப் பூத மொடுபலவாய் மல்லாடித்தள்ளாடிமனமறந்துவிழுகுந், தெறி யாதுபோலிருந்தால் யான்விடுகேன் சிவமே சித்தாந்த வருண் முகிலே சிற்பரமக்குருவே. (௨௨)

சிற்பரம் விளங்குஞ்சோதி சின்மயப்பொருளே எல்லாஞ் சிவஞ்செய லென்றுந்தேரா, சற்பனையன்றிமூயுங் கருவிநோய் கன்மத்தீயிற் கலங்கினேன் கருதிப்பாரா, சற்பனையென்னே வந்தோ தந்தையே ஞானமூர்த்தி தழுவித்தா னாக்கிக்காட்டும், தற்பரநிலையேசாந்தத் தயாபரக்குருவே அண்ணுதனிமையா னென்செய்வேனே. (உ௩)

செய்வதொன் றறியேன்குற்றங் கோடிபல் கோடிசென் மப்பிறப்பிலு மநேகமென்றே, பொய்யினல் புலன்பேய்ப்பூர போற்றிநான் மணிமாலிட்டு பொதிந்துவாய்க் கரங்கள்மூடி, மெய்யினல் விளங்குஞானவேதமே வேண்டி வேண்டி விண் ணப்பஞ்செய்ததில்லை, உய்யுமாறென்றுங்காணே னொருவனே ஒப்பிலாத ஒளிர்விடும் விளக்கேபோற்றி. (உ௪)

ஒன்றுநா னறியேனென்றும் உண்மையைப் பெருக்கி ஓடும் வாயுவைக்கனியவூநி நன்றுதீதற்றசோதி நடுநிழற்றிவா காரஞான பூமிக்குள்விட்டு நானறத்திகழ்ந்த துண்டோ, மன் றலாதித்த னேடுமதிபலக்கோடிசூழ மனமதுஅடக்குமுத்தி வாய்மையொன் றருள்வீர்வாழ்த்தி, என்றுநானுன்னேடை யா ஏற்றவும் போற்றவைப்பீர் ஏகமே எம்பிரானே. (உ௫)

பிராணவிந்திரியகோச பீடுடல் மலநாற்வாய்வு பிறங் கிடப் பேசிச்செல்லுந்,திராசெனநிற்கும்வாசி சின்மயத்தட்டுச் குள்ளே திரந்தொளி தீபாதார, நிராமயநிரூப நித்தியநிட்கள வேதஸ்ரூப நின்மயவதோமுகந்தூ, பராபரமானச்சோதி பார் த்திருநிதிபாயாத பக்குவம்பரிந்தீவாயே. (உ௬)

பாயாதோ அறிவானந்தப் பக்குவஞ்சிரந்நீவீடுப் பணி வரைகட்டிமூலந், தோயாதோசுகராதிக்குச் சொன்னச் சொ ல்த்துணைக்கைப்பற்றதுயின் றிருளடராச்சோதி, வாயாதோ

மதிபாலூற்ற வாங்கிநான்குடித்துத்தேறி மனமற்றச் செல்வ னாக, ஐயாதோ உனக்கென்முன்னே ஒழிந்துவந்திருக்க யெங்குமுயிரென வழங்கும்வாழ்வே. (உஎ)

வழங்கிறவழக்கமெல்லா மறைமுத லுறைக்கக் கேட் டேன் மற்றொருவசனங்காணேன் மதியிலாவறிவிலேனுங் குழங்கிருகண்ணீ ராருய்க்கொட்டி சேருடிப்போற்றி குலங்கு றிப்பூதங் கெட்டுக்கொடி முடிக்கைலேகோவே, முழங்கவாய் வற்றச்சோதி முக்கண்ணோடிருந்தா காரமுழுதுமுண்டினைப் பொன்றின்றே. (உஅ)

முழுதுமருள் மதியுண்டுமுத்தியை பேசாதமுச்சுடரை முந்த சிவப்பழம்பொருளை முற்றுந், தொழுதுசுகாரம்பவெளிசுத்த வருட்கருணை சுபஞ்சுடரை சொல்லாலும் பொருளாலுங் காணு விழுப்பொருளை வேதாந்தவித்த கத்தைவீணை வெறு நாளிகாது மனமேவு மதத்துடுக்கை, வழுவாதுபிடுங்கி எனை வாழ் விப்பாயப்பா மற்றுமொருத்துணைக் காணேன் மன்று வினடியே. (உக)

மன்றுவினடி ஐந்து பூதமொருமித்து வாவெனநின்றழை க்க மதிரவிமலரஆதி, கன்றுலிவாரணங் காட்டறியசிவமாகி கற்பகவாரணமாகி காதலிக்ககண்ணோடென்றுலின்கீழிருந்தகு ருவைபிது வென்றஅப்பனே திருநந்திமரபாகிவந்த, துன்றுவி லொளிர்விடுந்தேசிக மூர்த்திஎன்னை சுகநிஷ்டையோடென் றோர் போதாக்கி அருளே. (௩௰)

போதமே புத்திசற்று மில்லாதப்பாவி பொறிபுலன் தூதுரவாக்கை பொருதியமலக்கருமம், வாதமேஎனக்கென்றும் வம்பதிகமென்தாய் வலியவந்தெனுளங் களிக்கஆதாரமாறும் நாதமேதபரமாய் நடுநின்றவெளியீ தெனவருத்தி நாயினே

னெனக்கறிய வின்பம், வேதமேசமரசவானந்த மணிவிளக்கே வித்தகமேவீண்புலையாட்டேனருள் வீர்த்தாமனே. (௩க)

தானகசதகோடி மதிவிளையு மொளியாய்ச்சச்சிதா நந்த சபைபிதுவென்பிரதீத, மோனாகரத்துடனே முச்சுடர்வாரு நிலைமொழிந்திருப் பிரானலு மோசம்வெதுமோக, நானவா தக்கவடுமல விளக்கமிதினால்நண்ணுகிறேன ரொப்பராதியந்த நடுவாய்த், தேனதும்பாலாகுஞ் சீனிபலருசியாய்த்தெவிட்டாத வபுரூப சித்தாந்தபேறே. (௩உ)

சித்தாந்தவருட்பேறைச் செப்பினதுமன்றி சிவங்காட்டி அரகராவென்று ஜயங்கூறும், சத்தாந்தமுழ நிதியாய்ச் சுரு பானுபூதி சகசத்தாயணு வெளியாய்ச் சண்மார்க்கம்பயிலும், சுத்தவத்துவித மாகிச்சொன்னதன்றி தோன்றூஅருளுருவ மைத்து சும்மாயிருந்திட வானந்த, வித்தகம்வந்துரைப்ப துவுவீண்தானோ எவர்க்கும் விதிபறியேன் மதியறியேனென் செய்வேனிறையே, (௩௩)

என்செய்வே னெண்ணி யெண்ணிஇறைஞ்சி நெஞ்சமுருகவக்கமிலாநாயினேனுகிலுநீரசேதன் செயாலலன்றியொ றுமிலை யெனதான்தானே சகலநிஷ்டை தனிலென்றும் சார்ந் ன்திருவளப்பேர்த்து; முன்முதலேமூவாதக்கனியமுதே முத்திப் பெரும்பெரிய வுபாயநிலைப் பேசியருள் விளையும், மன்னிய வானந்தவெளி மணிகரணவெளியே மனமற்றக் குணசாந்த வருட்கருணைமயமே. (௩௪)

கருணைசிவ மயக்கொழுந்தே காணறியப்பொதுவில் கற்பகமெய் யறிவிளக்கே கலங்குமிருவினையால், வருங்கன்ம மிகவாது புலைக்குறை மும்மலச்சேர் மலரதினமுடற்பசிக்கு வருந்தி யிறைத்தேடும், இருளை வசமாக்கமன மிடறுமடமத

ரின்ப துன்பமகவு மனையாசையுரன்சுற்ற, மருளைசதமென்றி ருக்குமெனக்குமொரு நீதிமதியுண்டோதருமாதி அத்துவிதப் பொருளே. (௫௫)

மதியுண்டோவிப்பெரிய வுலகெலாம்படைக்கும்மருப்புய ர்ந்தமனக்குன்றே மாயைதினமுனியக், கதியுண்டோ என்னை யுநீயன்பர் பணியாக்கிக் கருணைதரவாவென்று கூப்பியிருகழ லைத், துதியுண்டோ தொண்டனுநன்றாகத் தொழநிருக்கத் துப்புண்டோ துணையாகுந்துரியாதிச்சோதி, பதியுண்டோபல நாளுங்கேட்டுகேட்டைப்பா பராபரமே பரிபூரணானந்தப்பொரு ளே. (௫௬)

பாராம லென்னையுநீ பகடிசெய்யும் பூதப்படைமாயைப் பூபரிக்கட்டிபவமடையுந், தீராதச்சுழல்காற்றுச் செறுமியிரு தலையாய்ச் சென்றுதசவாய் வருந்தச்சிந்தை வெதுசபலம், காராமலகடிதஞ்செய் கருமமதுத்தகுமோ கண்ணையானுறங்கி சிவஞானநிஷ்டைக்கூட, நேராமலனுதினமிப்பரிசு மிகநிதியோ நித்தியமே நிஷ்களானந்த சுகவருளே. (௫௭)

சுகவருளை நுவக்காதி கருமவிந்திரியந் தொடருமிக பரவாழ்க்கைச் சுமந்துநரகருந்தும், அகவிருளே டார்படுவார் யான் மாட்டேனுதி அந்தமிலாவொருவனென வருண்டமறைகள் சொல்லு, மிகமருளா லென்னையுநீ விடத்தகுமோர்நீதி விடக் குண்டோ வீண்புலையாட்டேனென்மே லின்னம, சகமருட்டி லினிவேண்டாந் தாராளமாகித் தனிநடனஞ்செய் திருச்சிற் றம்பலம் வருவீர்தானே. (௫௮)

வருகமலமற்றவனாய் வாழ்விக்குந்தானே மதியுருவுங் கனல்வாசி மருவிபுலையழியுந், திருவுளநற் செயலிறங்கிச்சின் மய வேதாந்தத் திரம்பழகுஞ் சுகநிஷ்டைசாதனை மேலாகுங் குருவாக வந்தடிமைக்கொண்ட சிவப்பொருளேகுணக்குன்றே

அருள் விளைவேகொடிய மலவம்பு, வெருவி யெனைவாழ் விப்பா யிதுதருணமடியேன் விண்ணவர் மண்ணவர்போற்றும் விழுப்பொருளிங்கெனக்கே. (௩௯)

இங்கெனக்காருண்டு மலவாயிற் பற்றுங்கருமம் விந்திரியச் சேற்சிந்த மனமேவுமாயை, எங்கொளித்தாய் பரமே யிவ்வுலகோ பொய்ச்சால மிருமைதுயரன்றி யொன்று மில்லை யிதுவுண்மை, பங்கிட்டோவைத்தாயா னெங்கனப்போய்புகல் வேன் பராபரசற்குருவே யிப்பவமெல்லாந்தீயு, மங்கையிற் மெய்க்கனிபோலு மருகிருந்தி அந்தோயாது கருவிகளுமற யான்சும்மா யிருந்தே. (௪௰)

இருந்தபடி வெண்ணிய வெலாங் கடந்தயின்பம்பிருந்தி யற்றிருக்க வருளானந்தவுதையந், தருந்தெய்வக்குன்றே யிச் சடம் விழுமுன்னேமாந்தானே தானாகிய மெய்ப்பொது விருந் துக்கொண்டு, அருந்துமத்துவிதசுரூப அரூபவெளியாகி அந்த கரணங்களிருவினைக்கழுவியப்பா, பொருந்துமதிபழுத்தமிர்த கலையொழுக நானேபூரித்து பூரணவாகம் மறியத்தருமே(௪௧)

தரும்படிதற்பரமெது தானறவெல்லாம் விழுங்குந்தனிப்பெரியபூதமொரு வுருவாகிப்பேச, நகுமாதியந்த நடுமுகிலினங்கன்றழகு நாதாந்தச்சுவர்க்கமென்றே நான்முகன்முன் னெய்தப், பகுபததாரகமமையப் பதுமமொடுச்சுமுகப் பங்கய வாஸனபேதமுடனருள் கைக்காட்டும், தொகுதியிது எவர்வசஞ்செய்தறிவுடன் கண்டுரங்காதுரியாதி விடிந்தொருபோதாகி யிருந்தவரே. (௪௧)

ஒருபோதாயான் கனவுநிலைவாதிக் காமக்கட்பொறிகளேயாது களவுநிலைக்கருதும், திருவுளப்பாங்கில்லை யிமை யேனுமறவாதச் சித்தமுண்டாய்ச் சின்முத்திராங்கமுடனிருந்து, வரும்பலவாதனை மலமற்றிருப்பது நாளென்றுவாழ்வா

யென்னிருகண்ணேசெவியே மெய்க்கருத்தே, பெரும்பான்மை யாகவுனைநம்பி யிழிவடைந்தேன் பெற்றவனெனன் சிவபெருமான்பெருமை யறிந்திருந்தே. (சஉ)

அறிந்திருந்தாலாகாதோ அப்பாயிப்பூதவடிவாய மெவையுண்டியாதுமறச்சும்மா, தெறிந்தாதியந்தநடு திகழுமருள்வாரித்தேடியதா மரிதேவர் சித்தமுதலானோர், குறித்தாரேன் றென்றும்வளர்க்கொடிமுடி அம்பலமென்றோதியநூல் காரணமாயுண்டுண்டுயென்கச், சிறித்தபுரங்கண்டுரங்காச் செயலருள் வீரனெக்குஞ்சிவமே யிம்மலக்கூடோடிருந் தறியத்தானே.

சிவமேநான்தினம் படும்பாடாக்கஞ் சிற்றறிவாலிருளமருங்கொலைபுலைநோய் வஞ்சமிருவினைசூழ், பவமேமெய்பழுக்கயிறைபுண்புலாலாக்கைப் பாவித்திவ்வுடலாவிப் பொருள்சேருமந்தோ, அவமேயீதுள்ள தெனக்குண்டோஜம் பொறிதீய்ந் தருள்சேருமானந்த வெளியாகிவளரும், தவமேயித்தாரணியிலுள்ளபொழுதேநீ சச்சிதானந்தவருட் டூரிடவுந்தருமே. சச

வெளியாகிச் சித்தாந்த வருள்நிலையுண்டாகி வேதாந்தச்சமரஸ வானந்த சுகப்போதந், தெளிவாகிச் சிரம்விளங்குந், சித்தமசையாதத் திருச்சிற்றம்பல வாழ்வோ டறிவருந்தித்தானே, ஒளிக்குவொளியாயந்தக் கரணமுடன் கருவியறப் பார்த்து ஞூரங்காத அத்துவிதமார்க்கங், களிப்பாகிக் கண்மூன்றுமுடைய சிவபெருமான் கருத்தேயென்னுள மிருக்குங் கருணை தயாபரனே. (சரு)

பராபரமேபார்க்கும் வேளியெங்கு நிறைசூன்ய பணிவிளக்கேபகரறியச் சித்திமுத்தியெல்லாம், நிராமயமே நினை

வைப்பெருமடுமைத் தொழிலாக்கி நித்தியவருணிட்டைசுக நியமமதுதருவீர், பிராணமயக்கோஸமிடு மிந்திரியமுதலாம் பேய்க்கருவியால் பாழ்த்தப்பிணமே லென்செய்வேன், தராதலமெலாம் படைத்தத்தனிப் பெரியமுதலே சற்றுண்டோ தயை யென்மேலிருக்க யெலாம்போமே. (சகூ)

எல்லாம்போமொருவா நின்னருட் கழலொன்றெனக்கு இருநிதியற்றிருக்குமிட மிருந்துவிடிலின்னம கல்லாமலறிவாகுங்காணுவதற் கறியகரும்பைதின மறவாதக் கருணையின்பயாகிப், பொல்லாதக் கைமாறுகண்டாயிவ்வுலகு பொருந்துமிருள்போது மிதுதருண மிதுதருணம், நில்லாதயித்தேக நினைவைபற்றியயரா நித்தியமுமுயர்போதப் பூரங்கண்டுணர்ந்தே. (சஎ)

அறியாதச் சிறுபொழுதே யானெனநின்றேங்கா அந்தகரணத்தை வசமாக்கியருளுறையும், நெறியாதலீயப்பா நினைவற்றுநானே நேசமுடனுன்னன்பர் துதித்தறிந்த தெல்லாம், குறியாதுயான்கொண்டக் கருத்தென்னப் பொல்லாக் குறையுளவுகண்டாயிக்குற்றமெலாம் பொறுத்து,தெரியாதஎனக்குமொருதிறமையுண்டாய்த்தேடுந் திருச்சிற்றம் பலத்துன்னைச் சிரங்குவிடத்தானே. (சஅ)

உன்னைவிடவுண்டோ யிவ்வுலகிலொருத் தெய்வமுற்றோரார் பெற்றுருநன்னடியருடனிருக்க, என்னையுநீ ரடிமைகொள்ளயென்றுநாள்வீணே யிராப்பகலொன்றடுத்தேகயிருமைதுயர்ப்பெற்றேன், தன்னையுநானறிவேனோ சமரசவேதாந்த சகஸநிஷ்டைகூடி யிரபரமுல்வுமாதி, முன்னே முன்னற்ற முடிவில்லாதச்சிவமே மூடனுநா னுய்யுமொரு வகையருளுமுறைப. (சகூ)

மூறைச்சொல்லேனென் முற்றிலும்பொய் மூடனெனத் தள்ளி முரட்டாட்ட வார்த்தையெல்லாம் பங்கிடநீவேண்டாம், குறையெனக்கு வைக்காதே கோடிபலக்கோடித்தருமமுண்டுஉனக்கையாகுப்புரவீழ்ந் திறைவேன், நிறைவெளியே நீசனிதினல் கருமக்கருவினின்று தடுமாறிபெருமூச்சு விட்டுவெரிந்து, புறையபரபுண்புலா லாக்கைவினைக் கொண்டேன் புத்தமுதே போதகமே பூரணமெய்வாழ்வே. (ருய)

உறை

உரையற்றகண்டா காரமயத்தொளியே ஞானப்பரம் பொருளே, இரைவாயென்று யேங்கியேங்கி யிருமைதுயரா விருள்மூடி, முறையோமுக்கட் சிவபெருமான் முரண்டமன மென்றொருயமன், குறையோஐயா யெங்குகொலோ கொடியேனெனைவிட்டிருந்ததுவே. (க)

இருந்தாயரசே மறைபொதுவே எனைநீயாசை மலக்கருவி, வருந்தியழற்சேருகரமட மாதர்க்கன்போடகமுருகிப், பொருந்துமுடருலெனை வருத்தப்பொய்யிற் புலம்பிபொதும் பிநின்றேன்; திருந்துமொருநாளென்னு லென்தேவே சிற்றம்பலத்தரசே. (உ)

என்னுளென்று யான்தடுமாறெவர்க் குண்டின்பதுன்பமெனுங், தன்னுலுண்டாய் வைத்ததுவுமுண்டோ யெந்தாய் தயாபரனே, முன்னுலியம னென்றொருவனுலக மெல்லாமூடினர, கிங்நாளன்று மெந்நாளுமிருந்ததையா யினியென்கட வேனே. (ங)

ஐயாயீறற்றுயிர்க்குயிரா யறிவாய்ப்பூதப் படையோடு, பொய்யிற்கிடந்து உரங்குமெனைப் பொறிவாய்ப்புலனு லலையா

துன், மெய்யிற்குழியு மன்பரறிந்தழியாவமுதா யருளுதை யக், கையிற்பிடித்து யிழுக்குமிடங் காட்டாய்க்கடவுள் பெரு மானே. (௪)

ஆய்வாரறிவே அருமறைச்சொல்லழகே ஆதியெனுமிரு கண், தோயுந்துரியாதீதவெளிச் சுகமேசொல்லிச் சொல்லிம னம், பேய்வாரின்பப் பெரும்பூதப் பின்னுப்பின்ன மிடியுமு டல், நாய்போல்கெஞ்சி நமனெனும்பொய் மலத்தோடிருந்து நண்ணியதே, (௫)

நண்ணிமனமிடு மேவலுடனிருந்து ஐந்தும்நழுவிபுலன் பொறியோடு நகைபுரியநானே, எண்ணியெண்ணி யிடையரு திருவினைசூழின்பத்தேக்கமேலாகியிருதயங்கமிழ விருந்தோம் புண்ணியமிந்நாள்வரையி லிருந்ததிதுபோதும் புத்தமுதேவிட த்தகுந்தபூரண மொன்றருளி, விண்ணுலவுககன மண்டலத் தென்றுமிருந்து விருதுகட்டி கொண்டிருக்குமிட மிருக்க வையே. (௬)

வேறு

நமனென்றொருபேய் மனவம்போநானே பொறுப்பேனடு வொளிரும், சமபாதீதப் பரம்பொருளே தன்னந்தனியேதயா பரனே, தமதென்றெல்லா வருள்நலமுந்தானே தானுய்ச்சூட் டிக்கொண்ட, எமதாண்டவனே அன்பருள்ளத்தேக்கமென்றே அருளுகவே. (௭)

என்றேவருமென் றெண்ணிஐயா யிறையேயேக்க மிலி நெஞ்சங், கன்றாய்க்கதறிக் காணறியகருத்தே முக்கணுடன் கவிய, மன்றோர்பற்றுமானேர்சொல் மதிவாரின்பமலரடிக்குக், குன்றேஞானக் குணக்கொடியே குருவேகொடியேனகத்தா ழ்வே. (௮)

தாழ்வற்றம்மா னென்னிருகைத் தழுவித்தழுவிப் பிடித் திருகண், வாழ்கமலர்தாள் கழுவி யன்பால் மலநீர்ப்பாஸக் கரு விபிலா, தாழ்கவருவாயப்பாபீ ரங்கஞ்சேறு லழல்மூடப் பாழ்த்தவுடலோ டினியென்னப்பாராக் கெனக்குப் பற்றிக் கொள்ளே. (கூ)

எனக்குனக்கென் றுபிறர்வேண்டா மினியென்கருமம் வருமென்று, மனக்குரங்குடனே சென்றலைந்து மாயாவிசார மதிக்கருவி, தனக்கென்றென்று வைத்தனுண்டோசமர் செய்ப் பூதப்புலைதிரையால், சினக்கும்பலவாவரண சத்திச்சிறைப்பட் டேமாந் திருந்தேனே. (ய)

இருந்தபடியே யானீயற்றென்று மறிவாசனமிட்டுன் னின்பாரணந் தேடுரியாதி, தருந்தேவமிர்தங் குடித்துசும்மா தந்தாயேழைக்குடியாக்கி தானேதானா யருளடையும், பெருந் தாரண்சின் முத்திரையாய்ப்பேசா ஞானப்பேரின்பச் சமாதி போதம் பெற்றிருப்பே, னருந்தாரகமே யேனென்பாராரிங்கர சேளனக்காதி அப்பாயேது மறியேனே. (கக)

ஏனென்பா ரிங்காரெனக்கு யீசாமுக்கண்ணோடிருந்து, தானென்றொரு பேருயிர்க்குயிராய் தாதாயிருந்த அற்புதத் தாண், நானென்பாசயிருள் மனத்தால் நாகென்றுரைக்கு மார ணங் கேட்டேளா, கோனென்பே னென்னாவியுடற் குழையதவித் துக்கோவென்றே. (கஉ)

கோவென்றுவா வெனக்குழறிக்குறுக யென்போடக முருக, ஆவென்றுவாயெந்தையரு மறைதேடப்பா ஆரமிர்த தேவன்பேனென் சென்னிமிசைத் திகழுமின்ப விளக்கென் பேன், வாவென்பே னென்முன்னாதி நகுகீழ் விடியமூடனாமே.

விடயமுதைய வெளிதானே விசும்பாய்மறைநான் குறை
யாத, நெடியவிபுவாயுயிரெல்லாம் நெருங்கநிறைசின் மயத்த
ருவே, குடியென்றெல்லாம் மனமகிழ்ந்துக் குறையைச்சொல்
லியிருந்தயிடம், படிமீதென்பொய்ப் பாசவுடற்பற்றப் பார்க்
கும் பழஞ்சுடரே. (கச)

பாராய்ஞானப் பழம்பொருளே பாவியென்போல் பவ
வஞ்சம், தூராய்ப்புடையச் சோம்பித்திரிச் சூதும்வாதுந்தொல்
லைபலத், தீராயிடுக்கந் துயில்பிணையச்சுகவாருதியாய்சுடரொளி
யாய், ஆராயென்கண்ணாழ தட் டுருத் அப்பாபெருகி அறியேனே.

அறியாதிருக்கு மொருதன்மை யார்வைத்திருந்தாரரசா
கித், தெரியாதிருக்கு மிப்பொழுதே செப்பாய்ச்சிற்றம்பலத்
தென்றும், பொறியாய்ப்புலனாய்ப் பூதமற்றும்போதாய் வேத
முறுவுமொரு, நெறியாய்ந்தண்ணு அப்பாயென்ஐயா நிறைசின்
மயப் பொருளே. (௧௬)

நிறைவாய்நீகற் றெவ்வுயிர்க்கும் நினைவேநீங்கா நிஷ்கள
ங்க, மறைவாய்த்திறந்துப் பொறிகரண மருட்டால்மாயை
விளையும்வஞ்சக், குறையால்மயங்கிக் கும்பிட்டேன்கோவென்
றிறைஞ்சிக் குருவேநான் முறையுன் சமுகஞ் சொல்லிக்கொண்
டேன் முக்கட்சுடரோ முழுமுதலே. (கஎ)

ஆராவமுதே அன்பருள்ளத் தறிவே ஆசையெனுமிரு
ளாற் றாராயென்றுந்துடைக்கமனத் துன்பா லழுந்தித்துயிலெ
னுமோர், காரார்விசும்புநிலங் கழறக்கருணையின்பத் தழுந்தாது
போராய் முடியு தென்னப்பா பொருத்தாளையா புலையனுக்கே.

ஐயாவென்றோர் தரஞ் சொன்னலருளால் வாயல்திரந்து
வந்து, மெய்தாள்கண்டு விம்மிவிம்மி வெதுப்புற்றேமாந்திரு
ளற்றுப் பொய்யாமறையே புண்ணியமென் செய்தேனம்மா
னென்றழுதுக், கையாற்பிடித்துக் கலந்துகொள்ளக்காட்டாய்
கூடவுள்பெருமானே. (௧௯)

கடவுளென்றுன்பதம்போற்றிக் கண்ணீராறுய்ப் பெருகி யுன்திருத்தாள், திடம்பெற்றையா மனங்குளிரத் தேவேமுக் கட்டெளிவென்று, படம்போல்கருவிமலமுடங்கிப் பற்றற்றிருந்தப் பட்டணத்தார்,இடம்பெற்றிருக்க யென்றுகோலோ எனை யாண்டவனே அறியேனே. (உ0)

அறியாதிருந்தேனையாவுன் னடிமையெல்லா வுயிர்படைப் பும், தெறியாதெளியேன் செய்தகுற்றமெல்லாம் பொருப்பாய் சிவமேயென், பொறியால்பூதப் படையால்மெய்ப் பூறவுறங்கி மறந்தெண்ணும்,நெறியேனின்ன மறவாதநினைவென்றென்றும் நிருமலனே. (உக)

வாதோயின்ன மென்மேலென்வாதவூர்துணையே வாழவு மனச், சூதோபொறுக்கயினித்தகுமோ சுழன்றுச்சுழன்றுதிரிந் தலையும், கோதோடிருக்க வைத்தாயென்குறையார்க் குறைத் துக்கொள்வேன்சொல், ஏதோவறியேனிப்பாசமெவரால்விளைந்தயெதிரொன்பேன். (உஉ)

எதிரோமுக்கட் சோதிபிரானேழையல்வோ எனைப்போலுஞ்,சதிரோடிருந்து மனத்தா துச்சாடிச்சாடித்தனைமறக்கும் மதியார்க்குண்டு உனைமறவாவாசிக்கலையைப்பிடித்துவைத்துக் கதியிதென்றுக்காட்டி கையைக்கட்டி தழுவிக் கலப்பேனே.

கலப்பேனென்றுக் கண்ணீர்வடியக்காதலாகிக் கருமபொரி மலப்பற்றுவாவெனக்குறுகி வணங்கிப்பேசாமவுனமுடன்,புலப்பட்டறிவானந்தவெளிப்புகுந்து திரிந்துபோதுமதி நிலமற்றென்றுநிற்பதுநான் நிஷ்களானந்த நிறைஞ்சனமே. (உச)

### வேறு

ஏகப்பெருவெளி யுண்டாயதிலிருநிதிப்பரவாயூகற்றரும்
பொன் மணியேயென்றைம் பொறியவியத்தேசுற்றருள்மழை
பொழியவானந்தக் கண்ணுருகி மோகமெனும் புலைமாயையற்
றிருப்பதெந்நாள்முதலே. (உரு)

எந்நாள்முக்கண்ணுட னிருநீதிப் பூதக்கருவியறப்பொ
ன்னே பூரணநவமணிக்குவியே போதாரணமே, என்னேயிப்
பெருஞ் சூதுளக்கவடுபொய்க் கருமயின்பத், தன்னுதிப்பூத்த
ருள்விளங்கியத்தாரணைத் தனிவெளியே. (உசா)

தனித்திருந் தென்மலச் சாகரக்குப்பைத் தமோ குண
மெய், இனித்திருநதிருமைச்சூடியப்புலைவாய் மதகவற்கோள்
முனித்திருந்தறுமறை மூய்பழம்பொருளே முக்கண்ணபமே'
கனித்திருவாய் வெல்கக்கவலை பெற்றேயிலைக்கற் குரங்கே·

இல்லையென்றொருபொருள்விளங்கியவெளியேஎள்மனத்
துயர்ப்போல்,தொல்லைபெற்றிருந்தார் சொல்லாயிப்பேதைத்
தொழில்நினைவோ, டல்லல்பெற்றேனன்றி அறிந்திலனிதினால்
அருவிகண்ணீர், சொல்லபுத்தேனமிர் தொழுகியசிற்றபலந்
தொழுதிருந்தே. (உஅ)

இருந்திலனென் குணங்குடியாகிவிடியுமின்பநிலம்,பொரு
ந்திலிப் பூதப்பொறிபுலக் கருவிப்புலானுடலால். வருந்திலி
யென்னேவாதுலகவல ஆசைபொல்லா,மருந்திலிமாயைப்புலைக்
குறையவிய மாசிலாமணியே. (உகூ)

மாசிலா யென்னிரு கண்ணேநீகுவிமன்று லாடுமருள் தேசியோடுரங்குரங் கென்செவியேமறைக் கேட்டுணர்வோ டாசிலாவின்ப அத்துவிதானந்தவம்பலத்தாண்,பூசிலாமனமே நீபோற்றி வாழ்பொல்லாப் புலையொழிந்தே. (கூ௰)

ஒழியாதவின்ப வறிவு சொல்லாக்கென உட்புரம்போ டழியாதவானந்த அற்புதவரூப வேதாந்தபொருள், விழியாத அருண் மழைத்தாரகம் விழுங்கி விளங்குநிஷ்டை, வழியாது புகலாயப்பா அருமறைசொல்லாகமமே. (௬௧)

சொல்லாய் மெய்க்கலந்தறி வானந்தச்சோதிச் சுகவருள் வீ, டெல்லாமும்படைத்த பேரானந்த நிலமாகி ஏழைகுடி அல்லாயும் பகலாயு மிருமிருளாதி அகம்விலகிக் கல்லாதநாய்க்குமோர் கருணைப்பெற்றிருக்கநீர் கலந்திடுமே. (௬௨)

இடுமெதியுனக்குண் டோராளமாகி ஏகவெளித்- தொடு மதிஞானச்சோதி சுகாரம்பத்துணை கைகொண்டு, நடுவீட் டைக் கட்டியான் நீயற்ற பூரணநாட்டமுடன்- கொடுமதியுண் டாயிலென்குறை எனக்கென்றுங் குருபரனே. (௬௩)

குறைவிலாநிறைவே கும்பிட்டேனுன்னைக் கொடிமுடிப் பாண்டிக்கடவுள்நாயகனே,நிறைகலாபமமே நிஷ்ப்பிரகாசநிரூ பமேவநித்தியநித்திய, உறைகொளாதிபனே ஒன்றுநானறியே னொருவனே உயிரெலாம்படைத்த, மறைகுலாதிபனே,மற்று நானென்கடவே னெனைப்பெற்ற வாருகமே. (௬௪)

பெற்றவாருகமே பேதையே னெஞ்சம் பேராசை கொண்டுபேயாடா, கற்றவார் புரமேகாதலா யாணுவக்காமிய மாயையோடலையப், பற்றுதே யாதுசொல்லிடினுமிப்பழிதான்

பாடெனக் கனந்தலோடாக்கை, முற்றுநான்வளர்க்க மோதி னேன் வேறொருமுத்தியு மறிகிலேன்முதலே. (௬௫)

அறிவிலாத வலமாகினேனுளே அந்தகனெனும் பெருங் கள்ளன், நெறியிலிநியம நிட்டையுமில்லா நீசனேன்றனக் கவன் வரும்போ, தெறிவிலாதிருக்கும் நானுமென் புகல்வேன் தேடுதற்கறியதேசொளியேபிறிவெதுமில்லாச்சிவபெருமானே பெரும்பயனெனக்கென்னப்பேசா. (௬௬)

## ஆசை

ஆசைமல விழக்குடமையார் பெற்றனந்த வெள்ளமறி ந்துநின்றார், பாசமெனும் பெரும்பூதப்பழிதானே பிறப்பிறப் புமாகியழிந்தொழியும், மோசமிதினுலின்ன மொழியாமலேன் விட்டாயினமோக,நேசத்தா விளையாமலென்னையுநீயாட்கொள் வாய் நிமலர்கோவே. (௧)

வேறு

சொல்லாமை யொன்றையொன்றை நினையாமைக்குரு மூர்த்தியாகிவந்து, கல்லாமைகற்கு மருளானந்தக் கருணைவெ ளிக் கலந்துயெல்லாம், வெல்லாமை எனையென்றும் வெருட் டாமைவேதாந்தம் விளக்கிக்காட்டுஞ், சொல்லாமைச் சொ ல்லுமொரு சுகந்தானே சொல்லியருள் சுருதிவாழ்வே. (௨)

தானேதானகிய மெய்ச்சுகம் விடியும் நாளெந்நாள் தனைப் போலாக்கும்-கோனே யெவ்வுயிர்க்கு மருளானந்த வொளிவிளக்கே கொடியேன்வம்பு-தேனே யிவ்வுலகி லாறு ஏடு தினஞ்சேடிய மனத்தீயால் வெம்பிநானே யென்றொ ருங்க வைத்தநலம்நன்றோ நாதாந்த நடுவேபோற்றி. (௩)

நடுநின்ற தாரணமே நாயினேன்செய்த காணுவாதக்கரு
மம் நண்ணி உடலால்-கொடுமை மெத்த யிருமைதுயரெண்ணி
மனம்பழக்கக்குற்றேவலோயிதற்குளந்தாயெந்தாயடிமைதினம்
படும்பாடார் பொறுப்பாரியாய மப்பனேயாருமற்றப் புலையனி
ழிவம்பன், படும்பாடெலாம் பகல்போல்பார்த்து சியிவனோ
பலனில்லையென விடுத்தாய் பராபரசற்குருவே. (௪)

இல்லையென்றால் விடுவேனோயினியொருக்கால் விடுகே
ளிதுவேளைத்தருமமையா வென்னைவிடவேண்டாம், தொல்லை
மலமொழிந்தவனாய்த்தன்னை பரிசுத்தத்தொண்டனெனவணை
ந்த யிருகரம்போற்றி அப்பா, கல்லாதளென்னெஞ்சில் வைத்த
கழல்வாழி கருவிப்பேய் பொல்லாதக் கருமப்பேய்க்கவற,
நல்லாவென்னறிவுபல பேதமிடும் வம்புநான்தானேபெற்றயர்
ந்து நன்னிலையுற்றேனே. (௫)

ஏன்தானோவென்னுடலால் வைத்தபொதுகவலை எவர்க்
குண்டு யெவர்க்கில்லை யெண்ணியெண்ணிப்புலையேன், வான்
தானோபுனல்மேக வத்துவெனவொளிரு மதிதானோகதிர்தா
னோ மற்றெல்லாம்தானோதேன்பிலிற்றுமாலவாய்த்தில்லைமணி
க்கோவில் சிறப்பென்றோ ஒன்றினுக்கொன்றாய்விளங்குமொ
ளிமேயா,நான்தானோவொளிருயர ஆனந்தமடைவேனு யினுநான்
கடைகெட்டுநண்ணுபுலையேனே. (௬)

நண்ணுகிறேன் மணிமுத்திராங்கமொடு அணிமாநான்
மறைவாய்க்கிளற அருட்டாரகசெம்மேனி, கண்ணுதலேஞான
நித்திரையோடுபேசி கதியுனக்குத் தருவேனென்றருளி சிவத்
தியாக, பண்ணுறைமுன்பேசி பலகலைமகிழ யிருந்தப்பராபர
மேபார்க்குமிடமெல்லாமருட்டுணையே, புண்ணியர் மன்செய்தே
னென்றுவலாயறது பொன்தாளை பிடித்தென்றும் போற்றிட
நாளென்றே. (௭)

என்றுவருமேக்கமெலாந் தீர்ந்துறையச்சோதி யின்பநிலவீட்டிலிருந்தெனைப் பெற்றஐயா, துன்றுமலவிகாரத்துயில் தாகமோகத் துளிர்வெட்டிச்சொல்லாய வருள்வெளியிற்பேசி கன்றுலி நிழலுயரக்கடவுளுனை வாழ்த்தி கண்குளிரக்கண்டு பரிபூரணநித்திரையில், முன்றாதாய்ச் செல்லவத்துவிதமார்க்கமாவேன் மோசமெனைச்செய்யாதே முழுமூடநாய்க்கே. (அ)

முழுமூடனுகபரி பாஷையுடனென்முன் மொழிந்தசிவகுருவே மூதாதையெனப்படைத்துத், தொழுமுலகவுயிரனைத்தும் சொல்லாகிப்புரம்பாய்ந்துணைநலமுமாகி சுகசோதிமெலாங்காட்டி, வாழவாம வருள்நிலையைஉயர்த்தி ஐய ஐய வென்றடியிணையைசிரம்வைத்த வாதவூர்தேவே, விழுப்பொருளே வேதாமமோசாவிற் பகமாய் வித்வதாபணையிலக வருமாதிப் பொருளே. (கூ)

தோழும்பெரியமவுனியென தண்டுளபவிருதுதத்வவருட் கோலமுடன்சுகமாகப்பேசி, அழும்படிதாரணமமைய அத்துவிதக்குருவா யாரணநூல்போதித்தானந்த வெளிச்சபையில், புழுபூடாய்முளைக்குமிந்த நாய்க்குமனமிரங்கி போற்றியமெய்ப்பிரபுதேவனுமாகினெடிய, தழும்பாதுதாதாய் நீபேசியவாசாகச்சைதன்யம் விளங்கவருவீரென்றுந்தானே. (ய)

வருவீரென்னகங்குழையவாழ்த்தியுனைப்போற்றிவசனித்தாருயிர்துணையே மணிமன்றிலென்றுந், தருவீரெந்தணனுகி சமாதி சடசுந்தம் தத்துவசிகாமணியே தம்பிரானினிமேல், பெருமாயவழக்கிலெனைவிடுகாதே பேசாபேரின்பவீட்டிவனுதினமௌனவாழ்க்கை, குருபரனைஆருண்டிவ்வுலகிலொருபேருமில்லைதுணைக்குடிகொண்டஎந்தைசிவப்பொருளே (யக)

ஆருண்டு அரசே யிப்பூவுலகிலென் போலவதி படுங்கரு
மபுலன் கருவியுடற் சேட்டை, பேருண்டாயுனை மறைகள்
பித்தாகிப்பிதற்றும் பெருங்கருணைக்கடலே மெய்பழுத்தொழு
குஞ் சோதி, போருண்டோஉன்னுடனான் பேசியருட் கண்ணா
ல்பேசாதமவுனமதிப்பிழம்பு கனிகண்டாய்ச், சீருண்டோயித்
தனை நாள் பேசியிருகண்ணீர் சிந்த சிதைந்தழுது மனச்சிதை
வடையுமாறே. (௧௨)

மாறுண்டமர்க்கடப்பேய் மதமறுப்புப்புலைநோய் மருவமனம்
பற்றிதினமறந் தினிக்குமென்னை ஏறுண்ட யிளமதியே
கண்ணேயென் றேமாந்திருந்து வெளிநிலமிருந் தால்போது
மிதுவேளை, நாறுண்டக்குடிலையிதற் கென்செய்வேன் தாதாய
நானென்னக்கைமாறு தந்துனதுத்தாளை, காறுண்டக்கன்னெஞ்
சன்கனவாதிநினைவுக்கடியுநிலமிருந்தென்றுங்கருதிடவுந்தானே

என்றுமுனைத் தொழுதிருகைக் கூப்பாதப்பாவி யானாலு
மிதுதருணா மேழையெனக்கிறங்கி, நன்றுதீதறநின்ற நடுவீ
ட்டிலென்னை நாட்டமுடனென்றுமொரு போதாகிப்போற்ற
வென்றுவிடு மடந்தானேததுதானே பொருளாய் வீம்பிடும்புங்,
கொண்டவஞ் சகமாதிக்கருமம், துன்றும்வெகுவிவகாரனு
கிலுநீபெற்றத் துணையலவோசொல்லுமாறெங்கனங் கண்டுறை
யே. (௧௪)

துணையலவோ துகளறமெய்ச் சோதிசுகானந்தச்சுத்தஅத்
துவிதத்துரியநிலம் விடிந்துபேசா, புணையலவோ நீயெனக்குப்
பூரணமாயிருக்கும் புகலறியப் புண்ணியனா னென்செய்தே
னென்று, வனையவைத்தா லென்னகுறைவருமுனக்கு நல்லவா
ழ்வென்று உன்பிழைப்பை அன்பரெலாஞ்சொல்வார், தினைய
ளவுமிறக்கமிலைச் சின்முத்திராங்கச் சித்தாந்தவருண்முகிலே
தெய்வதவாரணமே. (௧௫)

தெய்வதவாரண விளக்காய்த்திகழுமநிரசமே தேசோன் மயானந்த சிற்சுகமேதெவிட்டடர், பொய்மதக் கோபாதிபுலக் கருவியறத்தன்னைப் புத்தமுதே போதகத்தைப் பூரணவாரு தியைக், கைவிதங்கொண் டெப்படியாகிலு முனதுப்புகழைக் கனவுநினைவாதிலுங் கண்டுயிலாதுமோன, மெய்விதம்பெற்றற் புதமாய்விளங்குமருள்வெளியில் வேதாந்தச்சமரசத்தை விரும்பியிரவுளே. (கசு)

அற்புதமாய் விளங்குமுப்பிராதி யுலகனைத்துமங்தோ சின்மயவாரித்திகழு நடுவணையில், கற்பனையாவையுங்கலந்தகருணை நிராமயந்தன்கலைமகள் சித்தகரணந்த அரிபிரமனுதி, சிற்பரமாய்த் திருநடஞ்செய் சிற்றம்பலத்துள் தேவரயன்முதலானோர் சென்றிறைஞ்சயிருக்கும், பொற்பொதுதாண் பிடித்து நெஞ்சமுருகாதோ ஐயா பூரணமேஆகமநன் னூல்பேசுமறிவே. (கஎ)

நல்லறிவேநாயினுங் கீழாகுமெனைப்பார்த்து நவிலுமொரு விண்ணப்பங்கேட்டு கொள்வீரிப்போ, புல்லறிவாலெப்போதும்புலனுதிக் கரணம் பொறுவிமலக். காமாதிவசன மெலாம் பொதிய, வெல்லறியவிடமெவ்வாறுண்டு தனித்தவஞ்செய்வித் தகர்பெற்றிருந்தநடுவீற்றிருப்பேனென்றால், சொல்லறியச்சுகாரம்பத்துணையருளவேண்டுஞ் சோதியாதப்பாயென்னுளு மருந்துனையே (கஅ)

வேண்டும்போலிருந்தாலிவ் விவகாரமென்மேல் விதிக்குமொருநியாயமுண்டோ வெறுப்பதிகமென்மேல், மூண்டுவிடுமல்லோ உன்மேலதிகவிஷய முழுமறையே முன்னேனுனதிகமுறைச்சொன்னேன், நீண்டதலவிரதரிறப்பற்றவ ரொத்தனைபேர் நிலைப்பிறிந்தயெனக்கு மொருதருமமுறைத்தவரோ, ஆண்டவனென்சிவபெருமா னறியாமலிருந்தாலாகெடுவேனெனக்கு மொருத்துணை யெவர்தான்சொல்லே. (கக)

சொல்லாயோசுத்தவருட்டுரவு நிலைப்பெருகச் சூத்திரந் தானுன் சும்மாதுயில் சோம்பும்நினைவும்,செல்லாயோ சுகாரம் பக் கேடில்லாமூர்த் திக்கிருபைதயாநிதியே என்கேள்வியொன் றுமிலையோவல்லாயோர் நீதிநெறி வாழ்வாகிலிலையோமனமா யையற்றவனுயிருக்கவசனித்தேன்எல்லாமாயுயிர்க்குயிராயிரு ந்துநடம்புரியும் இருமாப்போ பொதுமீட்போஎதுவறியேனே

## அன்பர்.

அன்பர்க்கினிய அறிவருளி அருந்தாரகமோடக முருக, என்பொலயாக்கை மயிர்ச்சிலுக இறையேயெண்ணி யிடை யறநான், தென்புமேலிட்டுச் சிவமென்றுத் தேக்கித்தெளிந்து திரிவதெந்நாள், துன்பமேலிட்டமனக் கருவிசோம்புந்துயி லுந் தொலைந்திருந்தே. (க)

இருந்தால் நலமிந்நாள் தருங்காலெனந்தா யிருமைத்துய ரறித்து, வருந்தாதென்னை வாழ்வித்து மலர்பூந்தாளை வணங் கிக்கண்ணால், அருந்தாவிடிலென் யினித்தேகமையா அரசே இறந்துமென்ன, பொருந்தாதிருக்க உன்பொதுநலமோ போற் றிப் பரிப்பூரணப்பொருளே. (உ)

வேறு.

பூரணப் படுவிலேறிமுப் பாழ்பொருட்டுங் கடந்துபுல னறுத்த, வாரணம்விடுத்த மதகளிற்று வாசிக்கயிற்றால் வரி யிருக்கி, தோரணக் கம்பச்சுடர்பிடித்துத் தொந்தோமென்று நடமிடுநின், காரணநயன்மால் தேடுநடு வீட்டில்நானும் நமச் சிவமே. (௩)

நானுமாசித்தம்பலத் தொளிராசே நல்லவநாயினுங்கடை ப்படும்புலையேன், ஊனுமோ என்னுள்ளங் கோவிலாய்க்கட்டி

வுயர்மதிப்பானுவை வளைத்து, வானுளாய்ச் சென்றிருமாந்துட விழுக்கும்வாயு வீறைந்தறச்சும்மா, தேனும்பால் சுவைப்போல் திருவுளமிறங்கிச் சிறியனுனுண்டுகொள் சிவமே. (௪)

சிவமென யிடைந்திடைந்துள்ளம்நெக்குருகுஞ்சிந்தனைச் செய்திலிச் செய்வதொன்றறியேன், பவமெனும் பெரியப் பாசறைப் பறியப்பற்றிநான் பராபரக்குருவெனப் பணியேன், அவமெனுமாசைக்கயற்றில்நான் சிக்கி அந்தகன் வரவிடுமனமொடு யிருந்தேன், எவர்படுவாரித்துயரொடு நீயுமுள்ளதோ எங்கணுஎன்னையாண்டருளே. (௫)

என்னையாண்டவனே என்னெனுக்கருமப் புண் புலையாக்கையால் படும்பா, டுன்னையானம்பி புணர்வெலாங்கெட்டு உலகொடு யீஷணைராகம், தன்னையானறியா திருக்கவுந்தக்க தணுரெவ்வா றில்லையென்றுறைக்க, பின்னை யானெவரைத் துணைநலம்பற்றப் பேசிலாபெருவெளிச் சிவமே. (௬)

வெளிமாயையா யிருக்குதென்ன முடிவினிமேல் வித்தகமே விபரீத மனப்பாவையுடலோ, தெளியாமலருள் விளங்கும் வீட்டிலநுந்தவஞ்செய் சிற்பகதாரமாகிச் சிந்தையசையாதக், களிப்புண்டோயில்லை அறிவுக்கறிவே அப்பாயாதுமுறைச் சொன்னாலுங் கருணையணுவேனு, மளித்ததில்லை யினிசும்மா யிருங்கின்றே னெனபோ லாகடியக் கருவியறு மறிவருளுவாயே. (௭)

வாயாரப் போற்றிமனக் கருவியறத்துபின்று மவுன முடன் வாய்வற்ற மணித்தீபமேற்றித், தூயாயென் னுயிர்த் துணையே துப்பற்றநாய்க்குத் துணையாவா யென்றுச்சுகநிஷ்டையுடனண்ணு, ஓயாதக்கவலைதின முறுகுறுகி யுவட்டா ஆனந்தப்பொதுகிலையே அத்துவிதமாற்கம், தோயாதோ சுத்தவருட் சுகசோதிவெளியே சுயம்பாகே கற்கண்டே யெனருசிக்குமாறே, (௮)

ஆண்டுகனி ஆரணமென்றுனைத் தொழுதால்நல்லகதியா குமென்று புலைக்கரும விந்திரியத், துண்டமனப் பேயோடுச் செல்லாமலெல்லாந் துப்புரவு அற்றபரி பூரணனற்றுரவு தொண்டுசொல்லு மெனக்குமொரு வழிசொல்வாய்ச் சும்மா தூதுரவுக்கேட்டு பகடேனென்மே லின்னம், பண்டுமறைத் தேடுகின்ற வேதாந்தப்பொருளே பராபரமே பலநாளும் விண்ணப்பமிதுவே. (௬)

இதுவேநா னின்னமென்னமனங் கவலும்பாச யிழக் கெல்லாமுறைப்பே னித்தாரணியி லெல்லாம், பொதுவாக யீசுரக்கற்பனையென்று அழியும் பொன்பொருளு மகவுமனை தாய்தந்தைபெண்டீர், சதுவும் வெகுநூல்பாஷை கற்றுமிறப் படையுந் தானதுவா யிருக்குமொரு தத்துவந்தா னிலையோ, எதுவென்பே னென்கண்ணுடாவிண்ணுடா வேதக்கலையோடா எதொன்றுமறியேனீ யறியே. (௭)

விண்ணுடா வெளிநாடா வேதாந்தநாடாவித்தகர்தேடிய ஞான மதிநாடாயென்னுள், கண்ணுடா கற்பகப் பூரணநாடா கல்லேனுறைநாடாக் காணறியக் கருணையொளிநாடா, என்ணுடா யிறக்கமுள்ள யெந்தைகுருநாடா ஏகபராபரச்சச்சிதா னந்தநாடா, அண்ணுடா அப்பாடா ஆனந்தநாடா அய்யாடா நாமேனைழ யேழை யறிந்தருளே. (௰௩)

அருளொளியே அத்துவித ஆனந்தவொளியேஅன்பரிரு கண்சொறிய அழகின்றவொளியே, இருளறுக்கயென்னிதைய மிருக்கின்ற அய்யா எவ்வுயிர்க்குமறிவான தேசொளியே பேசா, பொருளளிக்கும் பரிபூரணானந்தவொளியே பூவிலபன்

மால்தேடும் புத்தமுதவொளியே, மருளொளியே எனக்குமிப் போவாழ்விக்கு மொளியே வந்தசிவகுருவான மவுனமதி யொளியே. (கஉ)

சிவகுருவே சித்தாந்த மொழிந்த பரங்குருவே, சின்மு த்திராங்கவருள் பொதுமொழிந்தகுருவே பவக்கருவியெல்லா நதீய்ந்திட மூலக்கனலே பாங்குடன்முன்னீங் குரைத்துப்பா ர்க்க வைத்தக்குருவே அவந்தானே தீயுமிதுயார்காண்பாரென் றுஅதீதவெள்ள மிதுவென்றுமறிவுறைத்தகுருவே, தவந்தானீ தென்று மறைதேடுவதற்கரிய தத்துவாசிரியருமாய் வணங்க வைத்தகுருவே. (யந)

வணக்கமருளாசிரிய ராகவந்த மதியே வாதவூர் சிவ ராஜ யோகதவமதியே, இணக்கமிலே னெனக்குமிரு ளருக் கின்றமதியே இருமைதுய சொழியவருமென் னிதையமதியே குணக்கவடெலா மொழிக்குங்குருவான மதியே குன்றுநப் பெருங்கருணே வளர்க்கின்றமதியே, கணக்கிலா யென்சோதி கண்மதியே எல்லாங் காட்டிவைக்கும் நடராசகுருமதி நல் மதியே. (யச)

காட்டிவைக்குந் தற்பரமாய் நிறைசச்சிதானந்த வீடென் ருேதி கருணைலம்ப காரணமாயுறைத்தீர் பூட்டிவைக்குந்திரவு கோலாகவு நீரிருந்தீர் பூரணசுதானந்த புத்தமுதாகமுமாய் போதக வேதாந்த வருள்நிறைவாய், ஆட்டிவைக்குந்திறமை யெலா முண்டுனக்குயானே அன்பாளனுகுமொருஅறிவாளனு வேன், போட்டிவைக்குந் தினமின்று பொருளாகக்கொண்டீர் பொல்லாத மனமாயைவேண்டா மெய்ப்பொருளே. (கரு)

பொல்லாத மனமாயை பூதப்பேய்மாயை புவிமாயைப் பெண்ணாசைப் பொன்னாசைமாயை, கல்லாமல் கன்னெஞ்சங் கலங்குகின்றமாயைக் காணுதிக்கருவிமலப் புலன்கவடுமாயை நில்லாத நினைவெனும் பொய்மெய்மாயைநிமலா நீக்கற்றவெளி மாயைக்கனவாதிமாயை, எல்லாமுமாயை யிதற்கென்செய்வே னத்தா அய்யா யென்னப்பா தானாகிய மெய்ப்பொருளே.(கசு)

மெய்ப்பொருளே தூங்காத வேதாந்தப்பொருளே விண்ணவர் மண்ணவர்தேடும் விழுப்பொருளேபேசா, கைப்பொருளே மவுனமதிக் கற்பிக்கும்பொருளே கண்பொருளே கைலை மன்னுங் கருணைசிவப்பொருளே, பொய்ப்பொருளெலாமொழிக்கும் பூரணபூம்பொருளே புத்தமிர்த பொருளே தன் போதமெனும் பொருளே. (கஎ)

தேசிகராயென்று மனுவாகி வருமாதி சித்தரெலாந்தேடுகின்ற ஒன்றான ஆதி, மாசிமருவற்று மனமுடங்கும்வெளியாதி மாறாதத் தியானமுத்தி சமாதிதருமாதி, வாசியழகொளி பரப்பி என்கண்பார்க்குமாதி மனவாய்வற்றத்துவித நிலமாகுமாதி, பேசிலாதருளுயரும் பேரின்பஆதி பெற்றவ னெல்லாவுயிர்க்கு மறிவானந்தப்பேரே. (கஅ)

பேரேது யென்னப்பன் பெருமை மறைச்சொல்லும் பின்னுமருள் வெளியோதும் பேசாமல்பேசி, பாரேது அண்டவுயிரனைத்துலகும் படைத்தசோதி பராபரப் பொருளின் தூய்மை யெலாம்பார்க்கச், சீரேதுமெனக் கெவர்க்குந் திருவுளப்பாங்கேது சிவசித்தாய்ச் சின்மயமாய்ந் திகழ்கின்ற

ஆகிப், போரேதுநான்முகன்மால் தேவரெலாந்தேடும்பொதுப் போரோ பூரணானந்த வருட்போரே. (கசு)

அருட்பேறே அத்துவிதம் விளங்கவரும் பேரே அருமறை சொல்லாகமநூல் தொழுமாதிப்பேறே, குருப்பேரே எவ்வுயிர்க்கு முயிரானப்பேரே குணப்பேரே கோதிலறிவமிர்தொழுகும்பேறே, திருச்சிற்றம்பலம்பேறே சிவமயமெய்ப் பேறே சின்மயமாய்நடு விளங்குஞ் சித்தாந்தப்பேறேபெருவெளியாய் சச்சிதானந்தமெனும் பேறே பேசாதபேரின்பமவுனமெனும் பேறே. (உ0)

பேசாத பேரின்பப்பெருவருளைப் பெற்று பிணங்காமலென் மனந்தா னினியாவதிருக்க-நேசாநுபூதி பெறத்துணையெனக்கு நீதாநித்தியமு முனைமறவா திருமைதுயர்த்தீட-தாசாநுக்கிரகமந்தோ தயாபரசற்குருவேதாராளமாகயெனைநினைவெனும் பொய்ப்பூதம்-பாசாடவிக்குளநு தினமறந்துபோக பராபரமே யிதுவேளைப் பறிவதூவுந்தகுமோ. (உக)

இதுவேளை யென்றடிமைத்துயருனக் கெந்நாளுமியன்றமட்டுஞ்சொல்லி மனயிறக்க மிலையெந்தாய் எதுவேளைப் பூரணமாய் நடுநின்றுயிருக்கு மெப்போதப் போதுனக்கு யின்பமதுவேண்டாம்- பொதுவேளை யிராப்பகலோர் போதாகிப் பெற்றப் புனிதாரும்பொருள்முத்தி புகன்றிடுவா யெனக்கு அதுவேனைநன்றெனக்கு ஆரணமோதியசீரப்பா யெனண்ணு ஆரமிர்தொழுகு மறிவே. (உஉ)

அறிவென்பே னன்பர்பணி ஆதியென்பேன் சோதி அத்துவித வீடென்பேனாணங் கண்டறியா-பெரிதென்பே னுயிர்க்கெல்லாம் பேசரிய உயிராய்ப் பிறப்பிறப்பு மற்றவுடற் பேரின்ப மென்பேன்-தெறிவறியப் பெருவெளியாய் வளர் மதிநீயென்பேன் சித்தாந்த வேதாந்தச் சமரசநீ யென்பேன் துரியாதி அருள்விடிந்தத்தூவெளி நீயென்பேன் தொழும் பெரியப் பொருளேயான் சொல்லுமொழி யென்னே. (உ௩)

என்னவென்பே னென்னுசை வீப்புருவுங் கல்வியிசு ஜாலப்பிரட்டதிகமெண்ணமெலாங் கொடிது-கன்னலென்பேன் யென்னுயிர்க்குள் கலந்தகுருவென்பேன் காதலாயழுதுருகி கடவுளெனப் பணியும்-இன்னமுத விளக்கென்பே னிதைய மலர்ந்தொழுகு மிருநிதியற் றல்லுபகலற்றபகலற்றநடுதிகழும் துன்னிய பேரானந்தச் சுகவெளியே தூண்டா சுடர்வாரிப் பழுத்தொழுகுஞ் சுகநிஷ்டையென்றே. (உ௪)

வாரிபழுத்தொழுகுமதி விதபலவாஞ் சோதிவைப்பணி மாடச்சிகரப்பரி வாசிநடையே-ஆரிதையமருள் கட்டாலனி யாயவாசை அந்தகரணப் பொறிகளருந்து முறைப்பெற்று-சீரிறைய முத்துமுத்தாய் நினதாசைப்பொருக்கி சிந்தையசை யாத அருள்பெட்டகத்திற் றுயிலப்-போரிதினல் மெத்ததுய ரறிவித்தேனப்பா புலைநாயினே னெனையும் பொருத்தருள் வீரின்றே. (உரு)

இன்றுநாளென வருவீடெது உலகப்பேராயிருக்குமிட மல்லவெனனன்னிதைய விளக்காய் துன்றுமிடப் துயின்றுசுக நிஷ்டை பெற்றுத்தனியே தூறுடலக்கருவி யற்றத்தூர்வாகி

திருவி- அன்றுனது அருமறைதாள் பெற்றவரெலாங்கே ளாதியெனும்பொருள் வடிவைத்தேடி மன்றுள்வளராதியந்த மளவிளாச்சோதி மதிவிழிப்பேர் மாறுதத்தியான அருள் விழிப்போ. (உசு)

அருள்விழிப்பே அத்துவித மறைவீட்டின் விழிப்பே ஆனந்தச்சுகவாரி கருணைவெளி விழிப்பே, இருளருக்கு மால யனுந்தேடு நடுவிழிப்பே எந்தைசச்சிதானந்தக் குருமவுனி விழிப்பே, மருளனுக்குமுன்னடியைத் தொழுவாய்மை நெறி தா மனுவாகிவந்த வரலாறெல்லாமறிந்து, பொருளெனக்கு ஆவாய்மெய்ப் பொதிகை சரும்வசா பூரணமே போற்றி பழஞ்சோதிபராபரமே. (கஎ)

போற்றிபழஞ்சோதி மனப்புலையறுக்குஞ்சுயம்பு புத்த மிர்தப்பூரணமாய்ப் போதிக்குஞ்சோதி, சேற்றில்நட்டுக்கம் பம்போ லலையுமெனைக்கூவி சித்தமசையாதுணர்த்துஞ் சித்தா ந்தச்சோதி, மாற்றிபிறக்காதெனையும் வாழ்விக்குஞ்சோதி மற ப்புநினைப்பற்றென்று மதியாகுஞ்சோதி, தேற்றிசிவஞானநிஷ் டைதெளிய தினம்வளரும் தேஸோன்மயானந்த சிவசோதி வீட்ட. (உஅ)

சோதிநெடுமாலயனுந் தேடுநடுவீடு சுத்தசிவசன்மார்க் கர்தொழும்பெரியவீடு, நீதிநெறிசிட்டானுபூதி நிகழ்வீடுநித்தி ஷயற்றுரணநூல்போதிக்கும்வீடு, சாதிசமயங்கள்மல ஆசை யற்றவீடு சமரச வேதாந்த சிவத்தியானமதிவீடு, போதிக் கும்பரிபூரணனந்த வீடு புலைநாயிற்கடைபடு நான்போற்றி பொருந்திடுமே. (உகூ)

புலைநாயிற்கடைபடுமென் குறைபோலுமெவர்க்கு கண்டதார்கேட்டதார் புண்போலும்நெஞ்சம் நிலையில்லாகாயமதைப்பெற்றூசைமலத்தால் நன்ணுகிறேனெண்ணுகிறேன் நினைவெனும்பேய்பிடித்து, அலைகடலிலிற்றுரும்புபோலலைகின்றேனிதினலறிவுண்ட கண்ணுயானெவ்வித பெற்றுய்வேன், விலைமாதர்க்கிட்டின்ப மணைந்ததுபோல் சொல்லும் விண்ணப்பத்தால் வளைந்துவருந்தி விளக்கிடுமே. (௩௰)

## நான்முகம்.

நான்முகம்பிலிற்ற நடுநின்றுயாவையும் விளக்குமின்ப வான்முகமலறஅவஸ்தாதி பூமிபோய்மனயிறக்கம், என்முகம்பார்த்திலி யின்னமென்தாமத மேழையென்மே, லூண்முகக்கருவி தன்மாத்திரமக்தோ மெய்யுணர்த்துகவே. (௧)

உணர்த்துகநீயென்னை யானெனதற்று உனைப்பணியும், மணத்திடைவையுமாறுசெய்தோடுமெனவிருளோ, கணத்திடை சகியேன் கண்ணுள்மாமணியே கவலைதினம், குணத்திடைக் குறையா அருளிடைக்கூடிக் கண்டுயில்வதற்கே. (௨)

துயிலறஞானத்துயில் வரத்தூதாய்ச் சொல்லும்வெளி வெயில்வரவேவி வேதாந்தவதோபதம்விருத்திசெயும், கயிலுறவானந்தக் கருணாகரக்கடல் முழுகினைல், பயிலுடலுருவிய வாசிகாணேக்கம் பரிகுவைபே, (௩)

நோக்கமென்றூரண நூல்சொலும் நுண்ணிய அறிவருளிற்-றூக்கமற்றூனந்தபொதுவெளிப் பூரணத்திருக்க வைப்பாய்வக்கமுன்மேலநுதினமறவா திருந்தமெய்மெய்யிது கேள்தாக்கற்றிகபரமாதியிலும் நிறைச்சமரஸமே. (௪)

நிறைமதிப்பூரணச் சமஸநிஷ்களநிரமயமே, முறையு னக்கந்தங்கோடி யிதையாமுழுமுதலே, உறையற்றஅண்ட கோடிகளெலாமுருவ உயர்கனமீ, நிறையற்றதற்பரத்தாரண ச்சமாதி சிற்றம்பலமே. (ரு)

சிற்றம்பலத்தருள் தோணுக்கஞ்செல்வ சிகாமணியே, மற்றம்பலத்திடுளே நோக்கம்வைத்தாயுனே வருந்தும்,குற்றம் பலக்கோடி குவிந்திருந்தாலுமிக் கொடியனிப்போ; பெற்றம் பலவீட்டில்குடி காட்டுமெங்கள் கோகொடியே. (சு)

குடிகாட்டுமெங்கோன் குருவேயுன்னுமங் குணக்கவடா ல், மிடிகாட்டுதையோ விபரிதமாயை விளைந்துபுலைப், படி காட்டுதென்றோ பாராமுகமாதிப் பழஞ்சுடரே, அடிமுடிகடு வற்றானந்தமாகிய அற்புதமே. (எ)

அற்புதமேமன மற்றவாரிதிகருணாகரச்சேல், நிற்பத மேநிலையாநிலைவாகிய நெறியுடலந், துற்பதமேஎனையெப்படி யாகினுந் துயர்தொலைக்கும், நற்பதம்தந்தருள்வா யெனைப் பெற்றவா நல்லநாளிதுவே. (அ)

இதுவோ அதுவென் றெண்ணிப்பேய் மனத்தால்வம்புவம் பு, பொதுவோவுனக்கிதுப் பூரணமகிழ்வோபுனிதகுண, மெது வோஏகப்பராபர வெளியாதியந்தநடு அதுவோவென்றெனே அழைத்துகைகாட்டி சொல்லந்தணனே. (கூ)

அந்தணனாகி வந்தாண்டுயென் சென்னிமன்னி யடிவை ச்சுந்தரச்சோதி வெளிவளர்ப் பொருளைத்துராதிநூலை, சந்திர விபுலைத்தன்மய வாரிச்சதுர்மறையைச், சிந்தைக்கரசைசிவ பெருமானைச் சென்றேதுழுனே (ய)

சிவபெருமானே திருவுளக்கருத்தே திரிகாணமலப்பவம் பெருமாயைப் படைப்பிலேன் பாவிப்பதைக்கமனம் அவமிருளதின, லாதியேயுன்னை அறிவொடுஅறிந்திலை யிதினுல்துவந் தருநிதியோடென்றுநீ துணையான்சொல்றுமாறிலைச்சிவமயமே.

மாறிலைமனமோ மர்க்கடப் பிணங்குமாறிநின்ருடிய மணிபோம், ஊறிலைந்தாதி அவத்தைபூமிக்கு ளூறங்கியானெனுமமகராம், தூறிலையென்று அதீதவான்முன்வெளி சூக்குமமாகநான்திறந்து, வேறிலையெல்லாம் பெற்றநின்சார்புவித்தகமொன்றுமேமேவேண்டும். (௰உ)

வேண்டும் போலிருந்தால் வீண்மனக்கவலை விடக்கிலேன்விட்டுநீயிருந்தாய், மாண்டுபோமெல்லாமற்றுமாரந்தோமக்கள்தாய்மனைவீபூவாழ்க்கை,நீஎ்டதோர்காலம்நிலைப்பெறயிருந்தோர்நினைவற நிஷ்களாரகித, ஆண்டவனெந்தை பராபரச்சோதி அப்பனேயான்படுந்துயரே. (௰௩)

துயரதுகேளுந் துப்புரவற்றுச் சோம்பலுந்துயிலு மாறிடுபொய், வயறதுவிம்மவாங்கியான்பொசித்து மலவுடல்நாறியசேறே, உயரதுஉன்னைவாழ்த்துநோண் பென்றுலூக்கமோயிலையிதினுல்தான், பயமிதுஉண்மை பார்த்திடவேண்டும் பழியுனக்கப்பயமித்தருணம். (௰௪)

இத்தருணந்தா னெனக்குயிடம் பொருளுமேவல்லதாமலென்னுளம்ராப்பகலற்றவீடு, நித்திரையற்றுனந்த பெருவெளியைக்கட்டி நினைவறநான்பேரின்ப அருட்கடலில்முழுகச், சித்தமதுக்கருவியறச் சின்மாத்திரமாகித் தேசொளியைச் சித்தாந்த வேதாந்தப்பொருளை புத்தியுடன்கண்டுரங்க பூரணப்போதருளும்போதமே மனப்போறே டுறங்குமடியனுக்கே.

மனப்போமுே அந்தகனென்மேல் விடுபொய்ப்போமுே மதியறியாப்புலைப்பாவியான் பெற்றப்போமுே தினப்போமுே டுரைச்சொல்லுந் தேவடியாராரிங்கெனையாளுஞ் சிவசோதிப் பராபரத்தின்போமுே, கனவாதிநனவுபலக்காமாதிப்போமுே கட்புலனுல் பொறிபூத மேவுசிவப்போமுே, சினப்போமுே சித்தரெலாந் திகைக்க விட்டப்போமுே தெரியாமலலைகின் றேன் சிவானந்தப் பொருளே. (யசு)

அலைகின்றேனலைவாயிற் றுரும்பெனவும்வீணே அவ திபடுமோயைதின மழைத்தழைத்துக்காம, நிலையிலேநெட்டிட் டுத்தள்ளமனமயர்ந்தேன் நித்தியமேசத்தியமாயுனை நினையா தோர்காளும், புலையிலே கிடக்கின்றப் பொய்யனிதற் கையம்போற்றி முக்கணுடைய தனிப்பூரணமே வுண்டோ உலைகின்றே னிதற்கெவ்வாறென்று மறியேனுமொருவாயுன் கருணைப்பே றெனக்கருளுமாறே. (கஎ)

## அஞ்சிப்பயந்து

அஞ்சிப்பயந்துமெய்நடுங்கிஅப்பாபாண்டிப்பெருமானே அபயமபயமறியேனைத், துஞ்சிசுகவானந்தமற்றுத் தொலைந் தானித்தோடிவன்வம்புவெஞ்சுங்கொடியமலபாண்டமிடும்பும் வம்புஞ்சோறுடையுங், கொஞ்சுமொழியாள் குறும்பனெனக் குறித்தாயெனக்குமனத்தூதே. (க)

மனத்தூதோ டென்புலையாட்டை மருவியிருப்பாரிலை யுங்கில், சினத்தூதொருவன் சிலுகுமயலேமன் கலையூர்மதிவி ழிக்கும், இனத்தூதனைகரிருமைக் கடையெட்டியெட்டி இனி ந்தாசை, கனத்தூடெடுத்துக் கொண்டார்கள் கருதிலேனிதற் க்கென்கற்டனையே. (உ)

கரிபனைக்கென் செய்வேனென் கருணைதயாநிதியே காணறியத்திருச்சிற்றம் பலத்திலென்றுங்கூவி, பொற்பொதுவாய்நிற்குநிறைப்பூரண வானந்தப்புனிதநிஷ்டைக்கூடியருள் விளங்கதிரிமலஞ்சே, ரற்பமெனவிட்டாதி நீழ்மண்டலத்தில் வாவாவென்றழைப்பாயென் மாணிக்கக் குன்றே, தற்பரமே தனித்தலைமை நடத்துகின்றசிவமே தாராளமாகவிருந்தாளடுமைத்தினமே. (௩)

தினந்தூதாய்சிந்தையெனு மிந்திராதிதேவர் சிறையிருக்குங்கள்ளனெடுச் சேர்ந்திருக்கமாயை, மனந்தானேயெனை நானென்றிருந்துபழித்தந்தோ வாடவுங்கண்ணீர்சொரியஆராததுக்கம், தொனந்தொனந்தாவாயற்றைந்துபுலக்காடருடனே தோதுகட்டி கொண்டாட்ட மாடுகின்றப் புதுமை, இனத்தார்களேவலிலென்னயென்னவென்று வுணர்ப்பேனெஞ் சோதிப்பராபரமே என்னையுமாண்டருளே. (௪)

## கடவுள்

கடவுளெனவுயிர்க் குயிராயொருசோதித்திகழக்காரணமுன்னருள் ஞானநேத்திரந்தானாகி, உடலில்நானறத்திரக்கும் நன்னீதியுன்னை வுருக்கமுடனாகமநூல் பயின்றறியாதிருக்கும், இடமுயர்தன் கலைதானே தேடியமெய் வெளிப்பாழிராப்பகலோர்போதெனநான் மறைநூல்களுணர்ந்தும், விடமுண்டோர்சோதிதினம் விரித்துயரும்வாழ்வை வித்தகமோதுறைச் சிவமேநின்சேவடி நானினைந்தே. (௧)

நினைந்தபொருளத்தனையும் நீசமதுதானேநிகழாமலென்னுவிக்காவியென அறியும், எனைநானீயென்று மொழியாபலதுவதுவே யென்னவாரூபிக்கு மின்பநலமாகித், தனைமறந்தா

ரணையிடம்பாழெழுங் கருணைத்துயில்மேல் தாராளமாகச்சம ரஸமாகிப்பிறவா, தினியாகிவிதையபரிபூரணத்தோ டிருமை வசனமறயான்சும்மா யிருப்பதற்கு அருளே. (உ)

இருப்பதற்காரூபிக்கு மெவ்வுயிருந்தன்போ லிருமையின்பத்தழுந்திமுரசொலிய வைந்துமதுவே, விரும்பிவிரும்பாதலையுமண்விண்ணுமயருமிக்கசிவ அருள்மூழ்குமேலானமாயை மருப்புமிகமருட்டுமை நிலையாகமாறுமதிகடவுநெறிவாசனுருவாகவோதி, வெருப்புண்டாய்நன்னீதிநெறிநடக்குமிருள்தான் வேதாகயங்கொலிய வைத்தபொதுநிலையே, (ங)

வைத்தபொது நிலைதானே வாழ்விக்கவேண்டு மனஞ்சும்மாயிருக்குமருள் மவுனநிஷ்டையுடனே, வஸ்த்துமிக்கச்சோதிவெளிகடந்தாதிபார்க்கும் வாய்மைவழக்குறைக்கு மறிவானந்தத்துரவு, மெய்த்தவமேவேண்டுமூலை மகளாசையற்று வேதிக்கும்புலன்கருவிப் பொறிபூதமென்னும், பொய்த்தவுலகாசைபுலைக்குறை தீரவேண்டும் போற்றிசிவானந்த வெள்ள நிறைஞ்சனசற்குருவே. (ச)

சற்குருவாயத்துவித வெளிபொருளாய்நிறைந்து தாராளமாகசிவசின்முத்திராங்கந், தற்பரமாய்ப்பொது வில்மனம்நீங்காதுத்தானே தனைத்தெழுமானந்தவெள்ள தனிச்சோதிபூத்து கற்பனை காட்டியமவுனக் கடவுள்குருவாகிக் கருதநியசிற்பரத்தினிலையுறைக்கு மெந்தாய், நற்குணமேஉலகநடையுட னிருந்துநாயேனிகபரச்சாதனைகள் மற்றுமியம்பிநடுவிருந்தே. (ரு)

—(*)—

சிவமயமாகதானற மதியமுதச் சித்துருவாயொழ பிறப் பிலுமறிவாய்த்திகழற விழுங்குதற்பரநினைவாகிப், பவமதை விலக்கிநன்னெறி நிலையருளும் பராபரமேயுனைப் பணிகிலனெ சைப் பற்றுருவாய்மனப் பகடிசென்றலைப அவஸ்தாதிசாக்கிர பூமிமட்டேணியானெனு மிருளடர்ந்தானென மருவுமாக்கை யோடென்னறிவெல்லாஞ், சுவர்க்கமந்தரங்களளவிலாப்படை ப்புமாக்கியழித்தனை யெல்லாஞ்சுருட்டியச் சித்திரப்படமெ னச்சிரித்தே. (க)

சுருட்டியகற்பனை மூன்றுபாழ்பெறவறு தாரகப்பூமியி லொளிப்பெறயானெனஒளிந்து,மருட்டியதத்துவமசிதரும்பகு திமனுவுயிருடல் சிறப்பனைத்திலுமேலென, அருட்டிரமோதி தன்னங்கயிற்கனிபோ லாத்துமதெரிசனமாகி பேரின்பப், பொருட்டிரம்பேசிப் பூரணித்தவரறிவாய் மலவேற்கைபொய் யிலா வாழ்வெனத்தொழுதே. (உ)

தொழுதிருந்தவர்க் கருளானந்தநிஷ்டைதோய்ந்தருளா ரணம்பழுத்துதையன்தான், முழுநிதிதேடியவழகறுவீடு முக் கண்ணேடென்றுமாய்த் தேடுதற்கரிய, செழுமதிமவுனக்கட் டன்றேசிந்தைத்தெளிவதை யருந்துமெய்த் தெளிவன்றே என்றும், வழுவறத்தன்னை வாழ்த்தியானந்த மடுவினிலமர்ந் திடுமாசிலாசிவமே. (ஙு)

மாசிலாசிவமேஞான மருவுவார்த்திரமைதன்போல் மல மிலார்குணங்களாசை மூன்றொடுப்பழகார்வாய்மை நோண்பன் றிமகிழார்பொய்யை, நேசிக்காரொன்றை யொன்றைநினைவு டன் செல்லார்நித்தியநிர்மல நிருவியுண்டாம் நியமனேமாதி நிஷ்டை நெறிநிலை நிதானங்கொள்வார்,வாசிவாவெனப்பொய்

மாயைமனமது மடங்கப்பேசாமவுன பேரின்பவஸ்தோடிருந்
துடர்வாய்வைப் பூரித்தூங்கிட வதங்கிநையார், தேசிகவடி
வேசோதிசிவ பெருமானே யானேதீயனேன் சீத்தாகேளும்
சிந்தைதான்செருங்க மாறித்திரிந்தலைந் தறிந்திலேனே. (௪)

செருங்கிடநெஞ்சந் திடுக்கிடமெலிந்து திரிமலம்பொசிய
சீரணமறிவனைத்தும், மருங்கிடுந்தன்போல் மனமது அந்தோ
மலியவானிரவி மதிநிலம்பரவ, வருங்கலைவாயுமதமருப்படற
மாயைபால்கட்டுண்டு வீசியகனல்நீர் நெருங்கிடவூத்தைச்சே
ற்றோடு வாங்கியுளுள்ளுளர யிருந்தறியாதிருந்தேனே. (௫)

அறியாதறியுமானந்தச் சோதியகண்டவெளி அதுவா
வதாகப் பற்றிலாதைம்புலனு கரவியத், தெறியாதிருக்குங்
கருவிகள் சோரநிஷ்டைபெற்றுச் சிற்றம்பலத்தென்சிவமே
நீநின்றவதிசயந்தான், சிறிதிலைப்பெரிது நடுவிலைப்பெற்றார்
பேசாதயின்பஞ் சீநாறுங்காமபீறுடல் துருத்திசோறடைந்து
பிதற், பிறிதறப்பித்தனெம் பெருந்துறையோ யெனைப்பெற்ற
வனே பேசிலனேதொன்று மறிந்திலனென்னை பின்பற்றுகவே.

என்னைபின்பற்றா திருந்திடலரசே யெவரெனக்குண்டா
மிருவினைப்பெயரறயேங்கி நானெனும்புலைக் கருவிநோய்த்தீர,
பின்னையான்மற்றொரு தெய்வத்தைதொழுகேன் பித்தனெம்
பாண்டிப் பெருந்துறைச்சிவமே பிறப்பொடுயிறப்புமற்றவா
போற்றி, தன்னைபார்த்தளவிலாவ கண்டசின்மயத்தில் தற்பர
மாய ஞானேங்கியக்கைலே தாதையேதனிவிளக்கொளியருந்திய
நீழ், மன்னியமாணிக்கமலரடிச் சென்னிவைத்தெனை வாழ்
வித்தசிவபெருமானே மாற்றினான்பிறக்கும்வழி நிலையறி
யேன்மற்றுநான் பற்றிலைப்பரமே. (௭)

பற்றிலேபரமே பலகாலுமிதையப் புகட்டிலே யாயை வெருட்டியமும்மல பறப்பிலேவிழந்தினித் திருமாந்தெகட்டிலேயிருந்திடுமென்னே, முற்றிலுஞ்சோதி வெளியினிலறியா ஆனந்ததேனமுதூட்டுமறு மறைமொய்க்கவேள் வேயுழப் போதொரு பொழுதென விளங்கிடநானே, கற்றிலேப்பித்த னெம்பெருந்துறைச்சிவமே கருதிலேபிதற்றிலேன் பிறப்பிறப் பறவே கனிந்திலனெவ்வா றறிவிலாயெனேயும், வெற்றியே திருசிற்றம்பலத்தரசேவேண்டுவேன் திரிபுரமெரித்தநாயகனே வேதனு மாலரன்தேடியுங்காணு வித்தகத்தாரண வேதாந்த ஞன்தெளிந்தே. (அ)

தெளிந்தறிவுக்கறிவாகித் தெள்ளியதேனமுதே தேவர் குழாங்கிடமன்றுளாடிய சீர்முதலே, குளிர்ந்தமதிளரிகனக கைலேமணிக்குன்றே கோறுடையாளாசையிலுங் குலஞ்சமயத்தாலும்ஒளிந்தமனச் சேட்டையெனக்கென்றுதின மடிப்பேனேகோகோ யென்விதியார்க் குண்டில்லேஅப்பா, துளிந்த நவமணிக்குவிவே சுகவைப்பே சுத்தசுயஞ்சுடரோ தூவெளியேதூண்டாதவிளக்கே. (கூ)

## வாரணம்.

வாரணங்குழவ ஆக்கையோடன்பு மறித்திடமனமது ஒடுங்க, பூரணவறிவுண்ட னந்த ஆகமங்கள்போற்றிய பொழுதுமுன்விடிய, காரணமாறவீட்டையுங் கட்டிகருவிகள்தீயதா னமதிவெளியொன், ஞரணம்பழுக்க ஆனந்தமேலாகு மாதியேசருணே வாரிதிசுடர்குன்றே. (க)

பழுத்தமெய்க் கருணேப்பற்றியான் ஞானப்பரவசமாகிப் பேரின்பம், வழுத்தியவேதமுருப்பட வொன்றுட்வணங்கிடு

மனமற்றவெளியில், தொழுதருள்விழுங்க ஞானமூர்த்தியுமாய்த்தொண்டர்கள் தனக்குபதேசம், முழுமுதலாகுமுக்கணுடைச்சிவனே முச்சுடர்விளக்கே முறையிதுதானே. (உ)

இதுதானேயிதையமருட் பாழாகிவிடிந்தாலேது மிலைக்குறைவறஆனந்த வெள்ளம்பருகப், பொதுவாகுமாசை மனப்பொய்கொலைகள் சூதுப்போதமுடன் அஷ்ட்டசித்தும் பொதியமலஞ்சூறும், எதுவெனமுன்னடுக்கமுறை யிடுவருலகந்தானிருமை சுகமெய்க்கவமர்நீதி உறைப்பார்கள், மதுவுண்டுக்களித்துரங்குமல்லாடித் திரிவார்வசனிப்பா ரவர்கள்குறையார் பெருவாரறிவே. (ந)

வசனுதிகன்மத்தால் வருங்குறைராகாதி மலமாயைஎடணைபொய்யிருள் மீறுங்கருவி, தசநாடிவாய்வருந்துஞ் சுவைதாகமோகம் சகத்துக்கேமெய்ஞானி தனக்குசிவயோகம், வசமாகும்படிக்களவு பொறைமகிதமகிழார் வாய்மைநெறிமீளார் மெய்த்தவசாதனைக்கே, துசங்கட்டித் தனையறிவருலக நடையுடனேசொல்லாது சொல்லுமின்பத்துணையுண்டுச்செய்தே.

துணையுண்டாய்ஞாயறு வான்பூக்கஉலகந்தோ துயின்றெழுந்து அவரவர்தன்கருமமெலாமொழிய, புனைந்துண்டுச்சென்றறியாரறம்பொருள் வீடின்பம்புத்தமுதமாகி நினம்போற்றவறியார்க்கும், பிணையிடமென்புலை யுடல்போல் வினைகலனர்பேசா பேரின்பச்சோதி யெனக்கென்று கோலோயிதற்கு, அணையுண்டுச் செய்தறிவே னந்தகன்முன் வருமுன்னுதியே அந்தநடுமுடிவற்றமுதலே. (ரு)

ஒருமுதலேஉயிரனைத்து முருவியமெய்யுணர்வே உற்றுற்றுப்பார்த்தாலு மொன்றுமிலைத்தன்னுள் குருவானசதாசிவ மன்றுணர் வறியப்பொருளாய்க்குணம் போலுங்கூறின தா

ரதுவாய்மைக் குறித்துத், திருவுளங்கண்டாரமிர்தாய்த் திக்திக்கத்தெளியும் சிந்தனையோடுண்டுரங்கிச் செயல்பேசித்திரிவார், வருந்திரிஷகால முணர்ந்திருப்பவருமந்தோ வாதாடுமுமைகண்டகனவு நினைவாச்சே. (சு)

நினைவாச்சுபெருமூச்சோ டெண்ணிகதைப்பேசி நிலையில்லையென்றுடற் பற்பனைச்சொல்லியதின்பின், தனைப்பார்த்துத்தரிசனஞ் செய்தாதாரமாறுஞ் சாதனைசெய்திருந்து சோடசவேதமோதி, மனங்களிக்க ஆகமநூலறிவருளியன்பர் வயிற்பசிக்காயமுதீந்து வணங்கிமுறையோடு, முனைதீர்ந்து முத்திநெறிக் கழு தூரங்கிப்போனும் முழுமுதவொன்றிருந்ததெதுப்பற்ற மனப்பேயே. (எ)

மனப்பேயே யென்பாடெல்லாமுறைத்து மதிக்கெட்டு மன்றாடி நடுவிளங்குமைப் பெரியப்பூத, இனப்பேய்களூறவாடயென்னிருக ணொன்றுஞ் செவிநாக்கேமூரலே இன்பரிஷபொறிபுலனே, சினப்பேயேயென்று பலபேரெல்லாம்பேசிசிசீநானீயெனும்பொய் சித்தென்னச்சித்தே, சனப்பேயேதமர்தாரத்தாய்தந்தைமுதலாஞ் சண்மார்க்கபேயே யிச்சமர்த்தென்னச்சமர்த்தே, (அ)

திருச்சிற்றம்பலம்.

## பேசிலும்.

பேசிலும் பேசாதிருக்கிலும் பேரின்பபெருவெளிசென், றுசிலாஆதி அந்தமும்நடு வீடறிந்துநிதம், தேசிகன்பொற்பதம்தியானஞ்செய் தத்துவிதச்சிறப்புபெற, மாசிலாசோதி வாழ்வேனக்கு நீவழுத்துகவே. (க)

வாழத்துவாயறிவெனுந் தளைபூண்டெனப்பா மனமரு
வும், இழத்துவாவென்றிரு வினைபூண்டயென்மலயிருளறுத்து
பழுத்தமெய் வாரணப்பழமே பரஞ்சுடர்பராபரத்தோ, டழு
தழுதுருகியுளாரண வாசிகொண்டுநேட்டறிந்தே. (௨)

உருகிமெய் யென்புநினைக் காட்டியனுள்ள மோங்குசுட,
ரருகில்யானிருந்து பொய்க்கருவிகளாடியும் ஓடிசென்று, மொ
ருவாயுள்ளப்படிதானே ஒடுங்கியுன் கோயில்முன்னே, இரு
வாற்றப்பூரண மிஷ்டஞ்சிறந்தரு ளிறையவனே. (௩)

இஷ்டஞ்சிறந்தப்பூரண விளக்கேயிருவினைசேர், கஷ்
டந்தெரிந்து விட்டாயிதுனக்குக் கபடமன்றி, நிஷ்டாநு
பூதிநினைவையுங் கெடுக்க நிலைபிரித்தாய், துஷ்டயிந்திரியத்
தொழிலுநீயானாய் சுதந்தரமே. (௪)

ஆனாலுமுன்போலாகடியத்தொழிலாற் பெற்றிருந்தார்
போனாலும்போகட்டுமென்றறிவோடுடன் போதமதி, தேனா
லும்பாலாலும் பலருசிதிரள்கண்டு படைத்தழுது, வானாலுக்
கரணமணி பெட்டகங்கட்டி வாழ்ந்ததுண்டோ, (௫)

பெட்டகங்கட்டி வாழ்ந்திருந்துப் பிள்ளையென்றறியாத்
தெட்டகங்காரத் திருப்புக்குழிவஞ்சிச் சிமிட்டுருவங், கொட்
டகங்கொடிய மலமாயைவிகாரங் கூடினைய, விட்டெங்கொளி
த்தானந்தமோடிருந்து விநித்தலைவே. (௬)

விட்டாயிதென்ன வீண்வம்புவேதாந்த வித்தகமே, எட்
டாதச்சோதிப் பணிபூண்டிருந்தவீட்டில் வந்துக், கட்டாத
மனமெனும்பெரிய வாய்வற்றுக் கபடறுக்கும், முட்டாசஞான
வசிகொண்டடிமுடி முழுங்குதற்கே. (௭)

ஞானமேயேயொரு மனவஞ்சக்கருவி யீனமில்லா, யோ
ணமேதந்து முச்சித்திவைராக்ய முழுமுதலைப், பானமேநிய
மநேம மெட்டெட்டு முருவும்வெளித், தானமேதவமே சமரச
யிடந்தருஞ் சச்சிதானந்தமே. (௮)

அந்தமேஆதி நடுவிலா அற்புதச்சோதி வெளிச், சொக்த
மேதந்தாள். தொழும்பாகதிதயா நிதிச்சுகமே, பந்தமோபொ
ல்லாமாயை யானப்பாபலகாலழுதுச், சிந்தைதான்செல்லாத்தி
யானந்தந்தா ளென்றுச் செப்பினதே. (௯)

செப்பினதுண்டோ தீயழல்மாயைச் செறுங்கல்கண்டா,
யொப்பினதுண்டோ வோரமோஉன்மே லுறைத்ததெலாம்,
சொப்பனங்கண்டா யிவ்வுலகோடுஅங்கோர சூதுடலைபெற்று,
எப்படியப்பா அன்பரெலாம்பெற்ற யிடம்பெற்றுகவே. (௰)

பெற்றவனென்றுனை நம்பிகெட்டா லிந்தப்பேயுலகு, நற்
றவவாரிக்கருணை யென்பாருண்டோ நாதனின்றருள், பற்றறப்
போற்றிப் பணிந்திடுமன்பருண்டோ பலகாலழுது, முற்றிலும்
தீகெடுத்தாலென்னப் பலனுனக்கருண்முதலே. (௰௧)

அருணெறிமுறையே அந்தகன்போலிருக் கண்சொருவி
யிருண்மறைப்பற்று யானேதா ஆனந்தக்கடல் முழுகிப், பொ
ருணலம்பெறுவதுன் னன்பர்பெற்றிருந்தப் பூரணந்தான், மரு
ணெறியற்றுதிப் பிரானெனையாண்டு கொள்மற்றிலையே. (௰௨)

ஆதிபிரானெனையாண்டு கொளப்பா அந்தமிலாச், சோ
திப்பிரானெனைப் பெற்றவாபாண்டிச் சுடர்க்கொடியே, நீதி
பிரான்பரிச் செலுத்தியவாதவூர் நிஷ்களமே எதிலார்த்துணை
யே எவரிடஞ்சொல்வே னினிச்சிவமே. (௰௩)

துணைநலமென்றுனைத் தொழும்புசெய்தால் நல்லச்சுகம் விளையும், பிணைநிலமென்றுடல் வாரிதோணேக்கம்பெரும்படி யான், கணைதொறுங்கட்செவிமருங்கிலும் பலபலக்காதைகவற் யிணையிலும்மாயைத்தோண்மிலும்நினைந்திளைந்திருந்ததுவே.

மாவைபசாவற்ற மனமற்றப்பூரணமவுனநிலை, வாயைநான் மூடிமூலகுண்டலிவாசி முடங்கியிருள். நோயைவென்றுரூப மடங்கிநாண்மறைநண்டுபிலுகுமருள், நேயத்தையென்சொல் வேறினன்றுபான் நடுவிழித்திருப்பதுவே. (௰௫)

அறவாகிலத்து விதானந்தச்சோதி அருள்விடியும், பொதுவானநன்னிலம்போதுமென்றானந்தப் பூரணமாய்,யெதுவெனிலதுவெனக் காட்டுமென்னப்பா ஏழையென்மேல், சதுர்வேதன்வஞ்சிய வழக்குறைத்தோ என்னச்சர்ப்பனையே.(௧௬)

## அறிவு.

அறவறியப் பொதுநிலையா யத்துவிதவெளி முதலாய் அனைத்துயிர்க்கும், தெறிவறியச் சிற்பரமாய்ச்சின்மயமாய்ச் சிவமயமாய்த்திகழா நிற்கும், குறியிலதாய்க்குணாகிதப் பூரணமாய்க்குறையாத ஞானத்தீபத், துரியாதிப் பூமியுமாய்ச் சொல்லாமல் சொல்லுமொருத்துணையைச் சொல்வாம். (௧)

துணையைசுக வாரியைமெய்ச் சுடர்த்தொழிலை யுண்டு பண்ணுஞ் சுகத்தைப்பேசா, அணையைஅருட்டூ வெளியை ஆதியை தேசோமயத்தை அன்பருள்ளம், வணையுமருள் சுதந்தரத்தை மனமற்றவாருதியை வானைவாழி, பிணைநிலத்தைப்பேரின்பச் சுகத்தை சுகாரம்பவெள்ளப் பெரிதை பேசே. (௨)

சுகாரம்பச்சுருதி மறைதேடு மதிநிறைவைச் சொற்பொருளைநிறைஞ்சன நிராமயத்தை நினைவை, பகாப்பொருளைப் பராபரத்தை பாராமல்பார்க்கும் பாஞ்சுடரை யெங்கெனுமாயிருக்குமொருஅருளை, மகாவாக்கியத்தை யிருகண்மணியை மவுனவஸ்தை சிவசித்தாந்த வேதாந்தவாழ்வின், முகாந்திரத்தைஆதியந்த நடுவற்ற மூவாஅற்புதத்தை சுபுரூபமுன்பை அன்புசெய்வாம். (௩)

அன்பைசிவ சமரஸஆனந்தவருங் கருணைஅதிவிதத்தை நானீயென்றடுக்குமரும் பொருளைத், துன்பையெலாந்துடைக்கின்றத்துரியாதிச் சுடரைசூழ்பிர்ம்ம கோலத்தை தூயசதாநிஷ்டை, தென்பைதிருவுளங் கோவிலாயிருக்குந்தேவைசிதாகாலைமூர்த்தியை தன்னிலைகாட்டுஞ் சிவத்தை, என்னன்புக்குறியயிகபரமாகி யெல்லாமாகிய ஆரூபத்தை ஆரணத்தைப் பணிவாம். (௪)

எல்லாமாயெங்கணுமா யேகமுமாயெவர்க்குமின்பமுமாய்த்துன்பமுமா யினிகாலமூன்றாய்ச், சொல்லாய்மெய்ச் சுடருருவாய்த் தொன்மையுமாய்த் தூரஞ்சமீபமுமாய் சதசத்தாய்சகலக் கேவலமாய், அல்லாயும்பகலாயும் யாவுமற்றநிலையாய்அகண்ட சச்சிதானந்த ஆகமநூலளவப், பல்லாயிரங்கோடிப் படைப்பைபசுபதியை பகரறியப்பத்திமுத்தி வைராக்கியத்தை. (௫)

பதிபசுபாசத்தை பரிபூரணத்தைப் பராபரவெளியைப் பண்ணோரும் விண்ணோருமண்ணோர், துதிகடவுட்டிருவை சுத்தச்சுயம்புவைத் நூண்டாதத்தூவடியை அருட்பிரகாசத்தனியைஅழியா, கதியையெதுவெனிலதுவாய்க் கடந்திடுமெய்க்கருத்தை காணறியநிராலம்பநிர்க்குண காரணத்தை, முதி

ர்விபுவை முக்கணுடனென்றமொரு போதாய்முழுமுதலாய்
விரித்துரையா மூர்த்தியையுட்பணிவாம். (௬)

உள்ளத்தருளா யுருவடிவாயுண்டென் றுலகோர்க்காண
றியஉறையாயுண்மைப் பொருளாகி, வள்ளலாயென்மனமுரு
கவந்தமனுவை வாய்மைமறை வழுத்தும் வெளியைவாழ்விக்
குந், தெள்ளாரமிர்தை தேசுபழுத்தொழுகுஞ் சிற்றம்பல
வீட்டை திருவைச்சிரசு கோதுதைய, விள்ளாவாரணத்தை
யிடைவிடாதுள்ளறிவை வேதாந்தச்சுரூபச்சுடரை விளங்கச்
சொல்வாம். (௭)

## மனம்.

மனமற்றச்சிவஞானக் கதிதானேவேண்டும் வாயுவைப்
பூரித்தூங்காமவுன நிஷ்டையாகிக், கனவுநினைவாதிசாக்கிரப்
பூமியற்றுக் கவலையறத் துயின்றுசோடச வமிர்தம்பருகத்,
தினமென்றும் வருஷாதிலக்கமன்றிப் பல்லாண் டிருவோலக்
கத்துடனே திருச்சிற்றம்பலத்தில், சனகாதிபதினெண்பேர்
மகிழ்ந்தப்பொது நயனச்சாதனை தந்தருள்வேண்டுந் தனித்து
யெழுந்தருளே. (௧)

தனித்தெழுமெய்ப் பிரகாசத்தற்பர விடுறித்தாய்சமா
ஸமென்னுடர்தழைய வெதும்பிமலமெல்லாம்,முனித்துயிலு
மூதேவிமனமாதிக்கரண மூடத்தாலுனை நினையாமுழுமூடனு
க்கி, அநியாயமாக மதிரவினாளைக்கொடுபோமநித்தியவாதென
க்குநிதங் குறையாகுதப்பா, இனித்தருநாளிதுவேளையென்னை
விடவேண்டா மேதுக்குப்புலைக் காமக்கலைபிருமைத்தானே.

கலைமகிழுமானந்தங் கருணைவெளிநடக்குங் கருத்தவ்வி
யமே எனக்குக்கற்பித்தப்பிறகு, விலைமகளாராசையிருவினை

வணைநினைவுவேவாமல் விழித்து நினைந்தாழதுமணித்தீப, நில பெருநன்னிஷ்டாநுப வனுகித்திரிந்து நீக்கற்றப் பரிபூரணானந்தக்கட்டலில், அலையாதுக்கருவிபுலைக் கூத்தெல்லாமொழித்து ஆர்தானென்றிருக்குமொரு அத்துவிதமருளே. (௫)

ஒருநாள்போல் பலநாளுமுள்ளபடி விளையுமனத்துயரெலாமுறைத்தேனொரு துணையிங்கில்லை, பெருநாளானதுநருவிக்காலமனத்தச்சன் பிழைமருளால்பிறப்பிறப்பும் பெற்றனன்பேய்வம்பாய்த், திருநாளானதுகண்டாய்ச் சிவஞ்செயலன்றென்றுசேடிக்குமோயென்றுத் தேறிதெளிந்ததுமில், அருள்நாளாய் விடிந்திரவும் பகலற்றவாய்மை அன்படுமையென்றுகொலோ அறிந்திலனென் செய்கேன. (௪)

என்செயலாலொன்றுமிலை யுன்செயல்தான்முடிவில் யாதுமறக்கலந்தினிக்குமற்புத வீடானால், முன்னாதியந்தமிலாமுறைநடுவே விளங்குமுத்திமுதலை முறையோமுறைஅபப முக்கண், துன்னுமறிவாசனத்திலுண்ணிய மெய்புணர்வே தாரமேசமீபமே துரியாதிப்பாழே, அன்னையுநீ தந்தையுநீ அண்டவெளியெல்லாமற்புதமாய் விளங்குமருளாருபம்நீயே,

அருவுருவாயணிமாதிச் சித்தியெலாம் பயிலுமத்துவிதத்தாரனை சரோருகமாய்ஐந்து, பொருளுருவாய்ப் பிஞ்சகன்முன் வஞ்சியபேய்நடிக்கும் பொருந்தும் வெளிநிறைசூன்யப் பேதனமோகனங்கள், வருஷிக்குஞ்சப்தமேகங் களருள்வளமைவடபு கொளுக்கோடிபலமறபுருகோகணங்கள், நருமலர் செந்தழல்வாசி நயனத்திருக்கூடல் காணுவிதங்களெலாம் நண்ணியமாதறிவே. (௬)

அறிவுக்கினிய அன்புணர்த்தி அருளாடியசிரம்பலத்திலாவாவென்றுசெக்குருகிந், திரியுமனத்தைப்பிடித் தைந்துந

தியத்தெள்ளா ரதமிர்க்கலைத் தேடித்தேடித் தெளியும் வெ
ளி, பிறிவற்றந்தோ அப்பாஎன்பேய் வாழ்வெல்லாம் பீரு
துப்பேசாக்கருணை மடைதிறந்து, தெறியுஞ்சமய மிப்போ
தேதிருவோலக்க முடனின்றுச் சிலமேசிக் கென்றடுத்துக்
கொள்ளே. (௭)

அடுத்தடுத்திருந்தா லாகாதோ ஆர்தான் சொல்வாருனக்
கெனறுமநேகமநேக மென்காதைத், தொடுத்துச்சொன்னேன்
கேளாது துடிக்கும்புலையும் விளக்கருவித்துதால் வென்றுச்
சுகமாக, எடுத்துக்கொண்டா யுன்னன்பரொடுயேகபோக மா
யிருச்கு யிருக்குநான்குபறைநூலோ, கொடுத்துக்கொண்டா
ய்ப் பூரணமாய்க் கொடியவம்ப னிவனென்றுக் கூறியிருந்
தாய்நான் கண்டேனே. (௮)

கண்டேகனியே சர்க்கரையேகனிபாலமுதே காரணமே
கடவுளூர்தியென் கண்ணிறைந்தப், பண்டேசோதிப்பழம்பொ
ருளேபகராவறிவே பராக்கென்றுன் னன்பர்கெல்லா மெனைச்
சொல்லி, தொண்டேபண்ணோர்த்தேடு மதிக்கலையேதூண்டா
பெருவிளக்கே தூரா தூரப் பெருவெளியே, தெண்டங்கோடி
யான்செய்யவுன் சிற்றம்பலத்தில் அன்பருடனதேவே கூடாய்
கூடாயோ. (௯)

கூடாவொழுக்கம் பான்செய்தப்பொல்லாக் குற்றங்கு
றையெல்லாங் குருவேதானுய்க் கொண்டவொரு, தேடா
வொழுங்கு உனைக்கிலைபோ சித்தத்தசைவால் சிதையுமென்
னைத்தெள்ளார மிர்தந்தேக்குமொரு ஓடாபுசிக்குமறைநாடா
வொருவாஉணர்ந்து வுணர்ந்துகநீ உள்ளபடியே வொப்பற்ற,
யீடாரென்னுமெநதை பராபரத்நின் மிக்கப்பொருள்சொருந
மெனக்கெப்போது மருளுகவே. (௰)

சோர்ந்தமெனக்குன்னடி யென்றுந்தொழும் பேரின்பத் தெய்வமென்றுந்தூரா தூரங்கடந்தசிவ, எந்தைநீயென்று மடுத்தடுத்து மிப்பாடெல்லாம் விளைந்ததென்ன யேவாநிதியே யென்போல்பாவிச், சிந்தைகலைந்ததுயரார்க் குண்டிருப்போ கல்லோயென்னெஞ்சந் தினநாளுயாக்கவலையன்றி, அந்தோ அத்தாலாதி முக்கணறிவேபேசா அருளின்பயறிந்து கொள்வேனறியேனே. (௰க)

ஆதிமுதலேயான்தானே அறியாயேழைக்குடி யுனது அரூபாரூப அதிசயத்தைச், சோதிமுதலா யெ த்துண்டுச்சுகபேரின்பத் துறவறந்தான்சொல்லாற் பொருளாலுறையாதப்,பாதிமுதலாலாதாரம்பங்கிட்டன்பர்பதுந்தெடுத்துப்பாராயின்பம்பருகினதைப்பலகாலமூது முறைச்சொல்ல, நீதிமுதல்நீசனென்னை நிலையாய்வைத்து நிஷ்டாரூ பூதிப்பொருளை நிராதாரப் பூரணமென்றுப் போற்றுவமோதா. (௰உ)

என்றும்போற்றும்பெருமை கழலெனக்குவாய்த்ததென் றிறையேயிருந்தேனிதினுலாகமாயை,வென்றுபோராடிருமையுடல்வெதும்ப யின்றோநாளே யெனவெறுமையாக்க யித்தனைநாள், நன்றுதீதற்றுயிருக்குநடு நமக்குண்டென்று இருந்துகெட்டால் நன்றாயிருக்குதுனக்கையா, முன்றூவிளக்கே முழுமுதலே முக்கண்டிறந்தமூவாத மொய்வார் முத்தித்துணைப்பொருளே. (௰ங)

முத்தித்துணையே முழுமூடமதிதானென்ன அநியாய முரண்டமனமென்றொருபகடிச்சித்தசன்கணையைப்பிடித்துருவாய்ச்சேட்டைச் செய்யநினைந்தழுதேன், பத்திபுன்னிணையைவளந் துண்மைப்பணிவால் வெட்டிப்பார்த்துபிம்ப, அத்தியாரூபமற்றசதா னந்தத்துயில் வந்தறிவுடனே யானீயற்றுவிருந்திடுமே. (௰ச)

வந்தஅருளைவாழ்த்திமாயா பிரதிப்பிம்பம் வளையாது
வசனமாதிவாக்குடனே வருமூழ்வாசனாதிபுலன், சிந்தித்திரு
ளைச்சேராது சென்ற நாள் போகயின்றேடே தேவேதெளி
ந்துப் பார்க்குமொரு, சொந்தவீடெனக்குக்கட்டி மலப்புலை
சாற்றெழுமுகச்சின்மயப்பேர் தொழில்தானிலியிப்புலைநாயேன்
எந்தவிதத்தாலீடேறி யிருப்பேனெங்கேபோ யொளிவேனெ
ந்தாய்முக் கண்பெருமானே. (௧௫)

ஒளிர்விடும்சோதிமல வெளியேஉளமைக்கண்ட கனவு
போலுமுண்டென்றிளைத்துக் களிப்புணர்ந்த, நெளிப்பைநீச
மனம்பசரும்பழிப்பைப்பாச நிஷ்டூரநினைவை நீந்தாநீர்நெரு
ப்பை, கெளிப்பைக்கிருபாநோக்க மிலாக்கிளரைங்கிழவனிடு
மேவல் கேட்டைக் கருவிக்காலயரும், வெளியாமாயைவிசன
த்தைவிடவாலமுத முண்டசிவ விருந்தோய்பழமைப் பொரு
ளிதுகேண். (௧௬)

தேளாய்ச்சிவமே யென்புலையாட்டைக் கிருபாகடலே
யிலையென்றால்கேடிலா ஆதிப்பராபரமே, நாளாய்விடுதென்
நாதாந்தநடுவேநல்ல மதிகற்றாய்நானுவிசமுநீயாகி, ஆளாயிரு
ந்தாயரசுபெற்று சூதுதானருமறியாரோ அம்மம்மாஉன்ன
ருள்பகடிக், கோளாருனக்கார் கொட்டிதந்தார்க்கோடிக் கோ
டிசொன்னாலுங் குணந்தானிருப்புக்கன் னெஞ்சோ. (௧௭)

நெஞ்சால்வரும்பொய் வாதுபழிநீந்தாநினைவைநிகரற்ற
நிருபாதாரவுடலழிவை, வஞ்சக்கருவிமதகூத்தை மாயவாழ்
வை நிஜமென்று மனைவிமைநகர்ப்பொருள்பூமி, துஞ்சுங்களிப்
பைச்சுகமென்று துரியாதீதப்பழம் பொருளேதுணை யென்றெ
ண்ணியிருக்கயிலை, வெஞ்சும்வெடுப்போ வேதனுக்குவிள்ளா
தாமேவா அறியேனுன் விமலாயிலாத நான்சொன்னேனே (௧௮)

சொன்னசொல்லொன்றுங் கேளாய்நீதொண்டர்தம் பெருமையுனக்கதிகம், இன்னந்தான்சொல்லி முறைபேசியீசா போஜமகராஜபிறையே விதையங்கல்லன்றி, துன்னத்தான் சோதிவெளிதானே தொடங்கிடக்கு முன்னதிகநிலம், என்னத்தானுறைப்பே னேதுசொல்வே னேகமேவிட்ட யேழை யடியேனு மிவ்வாறுரைத்தேனே. (௰௯)

இவ்வாறெல்லாப் பற்றொழிந்துபிருந்த அடிபாரறிந்த சுகாரம்பமதி பாலுண்டிளைப்பு, எவ்வாறுள்ளங் கோவில்கடியிடமுண்டாகியேகவெளி எழிதில்நடக்க கிடைக்குமென்னை ஒவ்வாரெள்ளளவாகிலு முன்னுண்மைக் கலந்துப்பெருங்கருணையுலவாக்கிழியை யளித்தசிவ, மவ்வாறுள்ளப்படியநேகமப் பாவாதவூரப்பர் மகிழுமாதிப்பராபரமே. (௨௰)

• அப்பாஞான அருட்பகலே அலர்முந்துயருமுதையமுளை அறிவேவேதாகமமகிழுஞ், செப்பாமொழியே சிவானந்தத் தேனேபாலே தித்திக்குந்திகழாரணமே சிந்தையசைவுப்பாருறைத்தாநந்தவெள்ளவுயரைந் தெழுத்தையுணர்ந்து கொண்டார், முப்பாழும்பாரகில மிதுமுறைகேட்டிருந்தாய் முழுமுடனெப்போஜபா முன்முதலே. (௨௧)

ஐபா அத்துவித வாழ்வே அனந்தங்கோடிபெனின்றுழைச்சுழல்காடுள்ளமலக்காடு, பொய்யாயெண்ணும்புலை வாதுப் போக்கோடேநத் தாகமுடன் பொருந்திப்புலிவாய்ப்பட்டபென்றுன், மெய்வாழ்வுணாத்து விவரிக்குமிடும்பைமனத்தேநனி துயரமெல்லாம், ஐயாவென்று அழைக்குதி வந்நநப்பரனே பாராமுகதாழ்வே வா பலநாள்நன்மை பாழிடைக்கே. (௨௨)

கன்மப்பெருக்கா லென்றுமலக்கவலை யன்றித்தனைப்பார்த்துக்கலந்தானந்த அத்துவித, நன்மைக்கினியமனனாகி நானுவாதமற்று நடுநாயேன் புன்மையெலா மொழிந்துத், தொமைச்சுடரே யென்போலார்ச் சொல்லாசுகத்தைச்சுருதிமறை, அன்பைத்தேடிப் பிடித்தானென் றழைத்துப்பேசா அருளிடைவைத்தே. (உங)

வைத்தச்சுகத்தை பெரும்பாக்கியவாழ்வைமனமற்றிருமறிவைப், பொய்த்தத்தொழித்துப் பூரணமாய்ப் பொதிந்தப்பொருளைப்போற்றிகணம், மெய்த்தப்புகழன்பேதமிடு மிருமைக்கயற்றைப் பிணையாதுப், பித்தன்பாண்டிப் பெருந்துறையான்பேசி யிருந்தப்பேரென்றே. (உச)

பேறைப்பிறவா மருந்தூற்றும் பெய்வார்க்கழலை யிறப்பறுக்கும் பெற்றோயிருக்கும் பெருவீடு, ஆரைத்திரவாவென்றழைப்பேனு வாமெழுகாயுருகியன்பாலந்தோ பலவாயுனைப் போற்றிச், சீரைப்பெறுவேன் சிந்தையசைச் சிதைவைத்தேட்டித்தேடி சிற்றம்பலத்தி லிருப்பேன் சிவமேநான், ஊனரையுன்பேருரவை யுற்றுப்பெற்றுருண்டோ உனைப் பாவிவொடுங்கிநடுங்கிவருவதற்கே. (உரு)

வருவாய்ஞானமதிப்புகழே மறந்துநினைந்து மருவிசிவவாழ்வுண்டென்று அடுக்குமவத், தருவாய்முளைத்தச் சடத்துயரால் தழுவித்தழுவித் தந்தைமுக்கண், குருவாய்வந்த என்னிருகண்மணியே மூலப்பொருளே பொய்க்குணமே யெனக்குக்குறித்திருக்குந், திருவாய்மலர்ந்தின் றெனைக்கூப்பத்திருநாள்கண்டாய்ச்செப்புவையே. (உசு)

திருநாளென்றுந்தியாகேசா சிவமேதேடித்தேடியெங்கே சென்றலைந் தேமாந்திருப்பதுகேள், ஒருநாளாவதென்மேலன்பில்லைபில்லை உன்தொண்டர்தனக்கே உண்மையெலாமுறை

த்து, வெருநாளாக்கி விடவாலமுண்டகண்டோய வினைமூடும் விபரத்தென்னை விடுத்துகெடுத், திருநாளுனக்குண்டானது பின்னேதுசெய்வே னெவரிடஞ்சென் றெந்தாயென்றழுதியம் புவதே. (உஎ)

இயம்புமாற்கமெது வதுவுமெனக்குத் தெறிந்துவுரைறப் பதுண்டோ ஏதுந்தெறியேனிது வரையில், சுயம்பேசோதிச் சுகாரம்பச்சுடரோ சுத்தத்துவெளியே தோதோவுனக்குமென க்குமென்றுஞ், ஜெயம்பேரெங்கும் நிறைமதியாய் தேவாய்ம றையாய்த்திகழ் வெளியாய்ச் சிந்தைப்பொருளாய்த் தியான முமாய், நயம்பாருயிராய் நாதாந்தநடுவாய் ஞானச்சூரியமாய் நலிவுமுன்னை வேதாகமமே. (உஅ)

உன்னையென்னையெனும்பேறுமுளதோ உண்மைக்குண்மை யெனவுருவா யறிவாயபுருபங், தன்னைத்தானே தழைக்கவைத் துச் சமரஸவேதச்சுருதிச் சொலுந்தற் பரவெளியாய்ச் சதா னந்த, மின்னைமேலாம் பொருள்மதிபாழ் விடுத்தவிபுவை மல ர்கிரண விதத்தைவளர் தேசோமயத்தை, பின்னையெவரும் பேசாதப் பெரிதைப் பிறவாதிறவாதப் பெருமைப்புகழைப் பேசிலேனே. (உகூ)

ஏனைனக்கு மாத்திரநீரிழிவு மழுக்காருடல் கருமமெ முழும்பாண்டமும் மலஞ்சே, ரூனேடொருக்கத்தகுமாரொன் றில்லாப் புதுமையிய்ந் தொழிந்து யிருந்தாய் மூன்றுக் கண் ணுடனே, நானேநாயிற் கடைப்படுவே னுவாதவிவகார நமனெனும் மனப்போருட னினைத்துத், தேனேகண்டோ என மடவார்ச்சிலை யைக்கண்டுச் சிதைந்திருந்தேன் சிற்றம்பலத் தென் தேவதேவே. (ஙம)

இருந்தேனிதினுலென்னேரமி மன்ன வருமோ ஏதேது வினையாலழுந்தி யிருக்கபின்னுன், மருந்தே ஆதிப்பிரானென்

றுவருந்தி வாவாவென்றழைக்க வயந்துந்திமிர்ந்து முதிர்பட டால், பொருந்தும் படியான் பெருஞானம் போதித்தினியே தில்லையென்றுத், திருந்தப்பேசி மூலமகளைச் சேர்ந்து பிதற் றிச் சீசியென்றிடுகொடுமையுஞ் செயலறிந்தே. (௩௧)

உரைக்குஞ்செயலையறிந்துரைத்தே னுண்டோ யித்தூ ரெனக்கரசே, பிறைக்குஞ் சரமே பேசாதப் பிறவாதிறவா தென்றுமொருப் போதாயறியும் சிவஞானம், நிறைநெஞ்சர மேநிதமிதனை நேராயுரைத்தோ னினைவாய்நீ, முறையோ கோடித்தரஞ் சொல்வேன் முனியாதிதுவேதருணம் விடிந்து தையமாகி யிருந்திடுமே. (௩௨)

இருந்தால் நல்லக்கதிபெறுவே னெண்ணியகரும முடி வாகு மேழையடியேன் பிழைத்திருப்பேன், தருந்துணையென் றுத்தருவியென்றுந் தனிச்சுடர்விளக்கே சரோருகமாய்ப், பெருந்துணைக் கிடைத்ததென்றெண்ணிப் பேயே னினைந்து பேசுகின்றேன், பொருந்துவீரையாப் பூரணமாய்ப் புந்திமகிழ் ந்துநான் போற்றுதற்கே. (௩௩)

போற்றிமுக்கண்பொருளே யென்பூதபேய்க் கருமபுலை வஞ்ச, மாற்றிதன்னிலை யறக்கலையோடி மதியாதலைந்து வாடி ப்புண்ணாய்த், தேற்றிச்செல்வபெருக்கேநான்தெளிந்துத்தெளி ந்துச் சிற்றம்பலம்வந், தாற்றிக் கொள்வேன் துயரமெலாமறி ந்தாரெனக்கன் புறைப்பவரே. (௩௪)

அன்புபெருக்கை அள்ளி தெளித்தார் தான்பயிரிட் டெடுத்ததுண்டுத், தன்பசிதீர்த்துக் கொண்டுதனித் தவஞ் செய் தல்லும்பகலுமற்றுத், தென்போடிருப்பாரித் தூலத்தை ச்சேட்டை யொன்றின்றி அழியாமத், தன்மத்தைவாரிட்புண ர்ந்துமணஞ்செய்து தானாகித் தழைத்தவரே. (௩௫)

தழைத்தவரோடுத் தனிப்பெருமைத் தந்தையே தன்னைத்தரிசித்து, பிழைத்திரும் நின்வகைப் பேசாயோ பித்தாப்பாண்டிப் பெருந்துறையோய்க், குழைக்குஞ் சரனேகொடிய மன யீமக்காடோகொடிது கண்டாய், அழைத்துநீகொள்வாய அரூபவெளியரசே நன்றுதீ தறநடுவே. (௩௬)

தீதறநடுவே சிவமேபிடித்து எனைவைத்துச் செனனமரணப்பிணி யெல்லாம், வாதறச்செய்வீ ரென்கொடுமை வம்பெலாஞ்சொல்லால் வாதாகும், ஆதரவெனக்கிங் கிலையுலகோடணைத்து மழியும்யாகண்டேன், போதறஞானப் பூரணமாய்ப் புனிதராகிப் போற்றியிருந்துனையார் கண்டாரறியேனே.

கண்டதார்தஙனைத் தரிசித்துக்கவலை யறவேகலைமாறி கழியும் வாய்வையுள் ளறிவாய்த், தெண்டந்தான் தினமுஞ் செய்துமதிவிளக்கை யேற்றிச் சிரகிரிவாழ்ந், தண்டகோடிகளெலாமற் புதமாய் விளங்கத்துவிதா தாரநிலே, விண்டதார் சச்சிதானந்த வெளியேமூழ்கி வினைதீர்ந்து விளங்கியுணர்ந்து அறிந்ததுவே. (௩௮)

## சிவம்.

சிவமேஞானச் செய்திமுறைத் திறமைதானெனன்னத்தீ நெஞ்சம், பவமேஊனெனத்திருமை தளைப்பலவாங்கன்மப்பாசவஞ்சம், அவமேயிதுநாள் வரையிதெல்லாமசைவாற் குண்டுயான் துஞ்சுந், துவமாய்த்தூண்டாவிளக்கேற்றித்தூராதூரமென்றிருந்த. (௧)

இருந்தப்பொதுவாமரூபயின்பையெழுஞ்சூரியமதியால் அருந்த அறிவாலறிவறியு மதுவாயெது வென்றிடுஞ் சங்கைத், திருந்தப்பொறிவாய்க் கருவிமூன்று மலத்தீதடறாந் திறுக்கெல்லாம், வருந்து மடியார்க் கன்புசெயுமதியே வாழிமாணிக்கமே. (௨)

மாணிக்கம்பச்சை முத்துபல வகைசேரிரவி மணிபரப் பிக், காணிக்கைவைத்துக் கடுவெளிநான் கண்டானந்தக் கரு ணைவெள்ளம், தோணிக்கைக் கொடுத்துத்தொழும்பனெனைத் தொண்டாய்க் கொள்வாய்ச் சுயஞ்சோதிப், பூணிக்கை யுண் டாய்ப் புலைநாயேன் பொதிந்துளம் பூரணம் புணர்வதற்கே.

அதற்கே கண்டாயென் தொழில் நாளநேகமநேக மரு ணிதியோ, டெதற்கேனென்றக் கொடியவம்பு எனக்கேவைத் தால்யாகெடுவே, னிதற்கோஐயா உனைநினைந்தே னெண்ணு தெண்ணிமனம் புண்ணாய், புதற்கோமாஸ்யப் புலைகுழிவாய்ப் புகுந்துமதவேள் பூப்பதற்கே. (ச)

மதவேள்காம மருங்குயர்வேய் மலியபெற்றென் மனங் கவர, விதழூழ்விபரம் விடமுண்டக் கண்டோய் வேதவுருவா ளா, எதனுலிப்போ ரிடும்பைதிர ளினியாவதுதீஎனைக்கூவிச், சுதனே ஞானஅருள்குவிவைச் சூடிக்கொள்ளென் மக னென்றே. (ரு)

மகனென்றுரைத்து மனமிறந்து மகிழ்ந்தேமாந்து யிரு க்கவிட்டு, ஜகநாதாயென் சிரகிரிவாழ்தாதாய் மரணச்சனனத் துயர், புகனன்றேயென் புந்திப்பொருள் போக்கியம் நல்ல பாக்கியமென், றிகபரத்தாதி யிருதியுயிர்க்குயிரே யெந்தை பகவானே. (சு)

எந்தைப் பகவானென்னுதி அய்யாபோற்றி யேழையெ ன்மேல், சிந்தைதானென்னச் செப்பாய்நீ நினைவேஞான மீநத் திரமே, விந்தைமிகநாள் மலக்கவட யிந்திரச்சால மிடுமாயை ச், சிந்தைத்துயரோ டிருப்பேனோ சிவமே சின்முத்திராங்ப முதே. (எ)

Q2:411
N13



சின்முத்திராங்கஞ் செப்பவருந் தெள்ளியஅறிவே திருத்தொண்டர், நன்முத்திராங்க நாதாந்த நடுவேஞான விளக்கொளியே, தன்முத்திராங்கச் சபைவாழ்வே சமர்த்தேதாயென் மேல் சாதனையற், றென்முத்திராங்கமா திருடு அந்த மற்றேழை யிருப்பதற்கே. (௮)

இருப்பதற்கிருந்தி வினைமுடியு மிடந்தானுனக்கு யிருக்குதென்று, பொருப்பதற்கிலையோ உறைத்தேதகம் பொல்லாப் புண்டோ நான்சொன்னால், மறுப்பதற்கின்னமென்ன குறை வைத்தாய் மறைநாஞ்குனக் கிலையோ, பொருப்பதற்கென் னால் முடியாது போதுங் கருவிப்புலை மருட்டே. (௯)

புலைமருட்டைப் பேசியெனைப் புரணின்றுப் பொல்லா, விலைமாத ராசையிலு முலைகடை விபரக், கலைவிரட்டுங்கண் மூடிக் காண்பானோ என்றுன், நிலைமருட்டு மாயை நினைந்தனை யிது நித்தியமே. (௰)

நித்தியமீதுண்மை யென்மேல் நீகோரிச்சமர்த்தாய், புத்திசற்று மில்லாதப் போக்கிலே விடுத்துவினை, வெத்தியிலே கிடந்துறங்கி யெழுந்து கதைப்பயிலச், சத்தியமீதுண்மையிது த்தாராள மறியே. (௰௧)

தாராளமாக அறி[illegible] நிறையுஞ்சமரஸ நிஷ்டானுபவதத்துவனை[illegible] பேராளுந்திரி[illegible]திருந்து மனவாய்வை பூரணசூரி[illegible]னைக்கிப் புறக்கருவியில்லாய், பேராளனுக்கிபரிப் பக்குவனை[illegible]க பேசினேன் பித்தாகப்பிர் மாந்திரத்தைத், தேராளனுக்[illegible]சிவஞானபோகத்தில் சிறியேனைச் சேர்த்திருப்பாய் சின்மயத்தாரகமே. (௰௨)

77009

சேர்த்திருப்பா [illegible]யொருநான்கு கரணமணி[illegible]டமய் சிற்பரதாரகமாகிச் சிற்றம்பல[illegible]தே [illegible]தி நிமன்று லதற்குவேயாதக்கவலை கண்ணுக்குச [illegible]குப்பரிசபுதரையோ பார்த்திருந்து பிடித்தாவியனல் மூட்டியெரிந்துப் பராபரசற்

குருவே பொய்க்கரும மெலாம்தீறத், தீர்த்திருப்பேனுகி சிவ த்தியான சமாதிகளுய் சிறுகாலேத்தருவாய் மெய்த்திகழு மதி ரசமே. (௰௩)

மதிரசமே மனமாயைத்துடுக்கு வரிக்கயறுமாட்டியக் கற்பூற மணிமதகாறு விடுவாய்ப், பதிவசமாயோட அண்ட கோளவடிவாகிப் பரம்பிஉயிர்த்தோறு மணுத்திரன்ருபமாகி, விதிவசமோ மறைக்காடோ விபரீதமிதினுல் விடும்பெரிய தூதுமதிமோசமிது வாகுங், கதிவசமோ சிறிதுமிலேக் கண் ணிறைந்தக் கருணைக் கடவுள்தயாநிதியேயென் கருமமறி வேனே. (௰௪)

என்கருமத்தொழில் புலேயாட்டாருண் டிவ்வுலகிலியாது காரணந்தானே ஏதிலேன் மனத்தோ, டுன்தருமக்கழல்வாழி ஒன்றுமறியாத உன்மத்தனெனக்குச் சிறுகாலே வந்துப்பேசா, உன்கிருபாநிலேப்புகன்றுமதிபரப்பியிருந்தாய் உயர்கலேமுண்ட மொட உடலுயிரோடனந்தச், சொன்மருவுந் தூங்காமலாவ ணேசோபமுமாய்த் துபிலுமருட் டாரகநீழ் துன்னியசோப னமே. (௧௫)

## தேளணம்.

தேளணங்கையுடைச் சிவபெருமானே சிந்தை நெக்கு ருகாத்தீயனேனெஞ்சம், கோளணங்காருகிற் பீறுகோபாதிக் கொடுமையான் கோடிபல்கோடியாண் செய்த, ஏளணங்காலத் திசைமலமிரவி யிந்திரனேகாளெனக் கெனப்போகத்தாளன ங்காதலெனக்கினியென்னே அண்ணலேதனிப்பெருஞ்சிவமே.

தனிப்பெருஞ்சச் சிதானந்த தேசிகமெய்ச் சமரச அநு பவச்சுகச நித்திரையில், இனித்தருங் காலமெம்பிரானிது சொல்லியம் பினநில்லே நீயென்று, மனிதனுய்வந்து ஆண்டு கொள் நீதிவாய்மை நோக்கெனக் கில்லேயென்றால், அவிந்நிய

மென்றுனைப் பலருமே சொல்வர்யான் விடமாட்டிலனறிவான ந்த விளக்கே. (உ)

ஆனந்தவிளக்கே அருட்பெருஞ் சுடரேஆதியே அரு மறைநீதி சொல்லறிவே, நானந்தகாரநிலைப் படுமோககாரியா ளாசை பொய்நகைப்பால், யீனந்துன்மார்க்க யிடும்பைவாய் மடுப்பேனிருள்மல மறுத்தவன்போலு, மோனந்தந்தாளும்நா ளெந்தநாளோ முன்னவாமுக்கண் மாமணியே. (ங)

மாமணிமரகத நவமணிவிளக்கை வைத்து பல்லாண்டு றைமலர்ப்பதங் கழுவித், தேமணியிரத்தினச் சுடரைத்தூ வின்பத் தேவனைத்தேசிகச் சின்மயவாரித், தூமணிச்சோதிச் சுருதிகள் சொல்லுந் தூண்டாதச் சுயம்புவைச் சொல்லா, பாமணியணியும்பரமதயாபரப் பராபரமூர்த்தியைப்பணியுமா றென்னோ. (ச)

என்னவென்றுரைப்பேனேதென்றுச் சொல்வேனெம்பி ரான் தன்னிருகழற்கே, முன்னப்பெருஞ்சுடர் முழுவெளிவிள க்கே மூலமேமூவருந் தேவருங்காணுந், தன்னறிவாகியச்சா தனைப் பயிற்பே தம்பிரானெனைப் பெற்றதாதை யென்றாழ தோ, உன்னருள் துணைவந்தெய்திடுமந்தோ ஒன்றுநானறிகில னுணர்த்து மாறிதற்கே. (ரு)

இதற்கோனெண்ணி யெண்ணிவினை நினைந்துயிருக்க ஏராளமாகயிருவினைமூடயென்னைக், குதற்கமொடு அலைய விட்டுயெங்ஙன நீயிருந்துக் கோதையர்மேலாசை பலத்தீது விகாரங்கள், எதற்கோநீரேவிநடு அரசுநடம்புரிந்துயேமாற்றி விடுவேனென் றிருமாப்புக்கொண்டீர், அதற்கோவுன்னன்பர் பணிசெய்கின்றார் யானோயேழை பிதெல்லாமவலமேகபரம் பொருளே. (சு)

பொருளெனவோ ராதியிருக் கிருக்குதென்று வேதம் பூரணமாய் போதிக்குதின் றோமேடதானோ, இருளளவியெங

துயர்கேளாது மொழியெல்லா மறிந்திருப்பா யானாலுமென்
செய்வேனின்னம், அருள்மொழியவாவாவென் றழைக்குமிரு
கண்ணேயான் சொல்வேனனியாய மாயெனது மனந்தான்.
மருளாளவவாய்ப்பறை நோண்பன்றி யென்னவம்போமாதே
வேமார்க்க மொன்று மறியேனீயறியே. (௭)

ஒன்றுமறியாத சிறுகாலைவந்து யென்னை ஒப்பற்றுனரு
ள்வாயைத் திறந்து அருட்கண்ணால், நன்றுதீதற்றநடுச்சோதி
நீழ்விடிய நாட்டமுடனிருந்ததுவு மில்லையெனவுண்டோ,வெ
ன்றுவரு மனமாயை அறுக்குமொரு விபரம்வித்தகமே தந்தி
டிலோர்க்குறைவுமிலை யெந்தா, யென்றுயர் தானேதுக்குபினி
யுனதுபாத மிருந்திடில்போ தெனவப்பா யெங்குநிறைப் பொ
ருளே. (௮)

ஏதுக்குமியன்மேல் நீரிருமைதுயர்விடுத்தாய் என்னயிதி
னால் பயனுண்டுனக் கண்ணேஅரசே, வாதுக்குவருகின்றயேது
மொழிப்புகல்வேன் மலசாகரக்கிடங்கில் வாழ்கின்ற யென்று
பாதுக்குவருகாயோ பலபலயோசனைப்போய் பல்லாண்டு பெ
ருகுமனமற்ற சிவயோகம், சாதுக்குளிருக்க வைப்பாய் தனந்
தனியாயிருக்குஞ் சச்சிதானந்த அருட்சண்மார்க்கம்பெற்றே.

பெறறவர் தன்னடிப்போற்றிப் பேசினதுமில்லைபேரின்
ப அருள் பழமைக் கேட்டிடவுமில்லை, கற்றவர்தன்னிலைப் பயி
ன்றுக் கருதினதுமில்லை கவலைமிகவாகித் தன்னைகண்டு கண்டு
காம, முற்றவர்போல் கடவுளுனைக் கருதுவதற்கறிய கருணை
யுண்டாயுணர் வினுக்குவுணர் வாகியுறங்கி, பற்றற்றமெய்பேசு
மன்பருடன் பேசிப்பணிய விலைப்பராபரமே யென்பகடி யெ
னைப்பாண்பே. (௯)

என்பகடிமனப் போர்நீர் கேட்டிடவுமில்லை ஏழைப்படும்
பாடெல்லா மேதுநினைந்தழுதோ, முன்னவனென்றுனைத்
தொழுதால் முக்திநெறியுண்டா மோசமிலை யென்றுமறை

மொழிக்கு மொழிருசிய, இன்பமுண்டாயே சுதுலகுபிரனைத் துமதூநானெவர்க்குண்டு யெவரென்பே னென்னினையந் தனிலோ, அன்பருளந்தனிலோ மெய்யுயிர்க்குயிரோ அப்பா அப்பாழுக் கப்பாழாயொளிர் விடுதாண்வெளியோ. (௰௧)

அப்பாபாண்டிக் கொடிமுடியோயரசே அபயமபயமையா, எபபோசும்மா அருள்வெளியி விருந்தானந்த அற்புதம் பார்த், துப்பேனுறங்கி உரங்காதத்துரவுண்டாகித்துரியநிலம், கப்பாதாதி அந்தநடுக்கலந்து கலந்துக் களிப்பதுவே. (௰௨)

## ஆகமம்.

ஆகமநூலள விறந்துச் தேடியசிற்பரமே அறிஞர்கண்டந் நிலைபாதி அந்தநடுச்செய்து, ஏகபெருவெளியாக்கி யிருகலையறமுன்சென்று யிருந்தபரவெளி வீட்டிலிருமையற விழித்துத், தேக்கவுயிர்ப் பொருளீந்துச் சிந்தனைபோய்ச் சும்மா தெரிசித்தானந்த வெள்ளச்சிவ நிஷ்டைக்கூடி, மோகமுடனீஷணைத்துரியக் கருவித்தீய்ந்துமுழுது மருட்சிவஞானமுத்தி மொழிந்திருந்தே. (௧)

மொழிந்தபொழிப் பேசாத மவுனஅருட்சோதிமதிப் பாழுந்தேனூறு மூறியசிற்றூற்றாய், வழிந்தொழுக மனவாசித் தோய்ந்தறிவுபேயு முகப்பன்றே வாயுவைநான் பூரித்துப் பாரா, தொழில்தானே தொண்டர்கண்டிலாத் துரியாதீதச் சுடருயரும் வெளிபாழுந் தொடர்நதடர்ந்துத் தேடும், பொழியுமருட் பூரணமாய்ப் புகுந்தலைந்துப் பார்த்துப்போற்றி திருமூலரொடுப் போதித்துயிருந்தே. (௨)

போதித்திருந்த நடுப்பூரணத்தி லாதிப்பொருள் நிகழப் புத்திரனே வாவாவென் றேதும்சோதிசுக நீழிருந்துப்போற்றியிருகண்ணீர்ச் சொறியதிரு வுளமகிழந் தொண்டரன்புக்கறிவே, சோதித்தோவாது பரிச்செலுத்துகிறீர் மனமோ ஆசைமலத்துயரென்னை விட்டுபரி சுறைத்தீர், தீதிதிறைல்விடு

காதே சிவஞானயோகச் செயல்சவளியிலெப்போதும் தியான
முடனிருந்தே. (௩)

வெளியா யவ்வெளியுருவி வேதாந்த மென்றே மிக்க
சிவச்சித்தரெலாங் கூடிமறைவுரைக்கும்,தெளிவுதருங் கற்பக
வாரண வமுதமளிக்குஞ் சித்தாந்தச்சபரஸ ஆனந்தச்சிவகரு
ணைக், களிப்பன்றே கேசாதிப்பாத வடிமுடியுங் கிடந்தந்தப்
பொருளாகிக் கற்பனைக்காட்டறியா, ஒளிப்பொருளே நினை
விறந்து நினையுமொருக்கருணை ஆரியபேரின்பாறே உண்மை
பெருக்காறே. (௪)

நினையுமருளின்ப மிடம்பொருளே வல்பற்றும்நீசமனத்
தாலேசி நினைவையும் பொய்படைக்கத், தனைமறந்தோறிய
நீதிச்சாந்த மெடுத்துரைக்கச் சாஸ்திரக் கோள்விகள்பெற
ஆனந்த முடனிருக்கும்.மனைவிமக்கள்பெண்டீரோடுறங்கியரு
ளுண்டாய் மதியமருமொருமை மனச்சுத்தமுடன் மயங்கி
வினைப்பயனென்றடுத்து சிவமுத்திநெறியுணருமவித்தைதீதெ
லாங்கருணை விண்ணப்பமொன்றே. (௫)

முத்திநெறி வுணர்ந்தாவலுடனிருகண்மூடி முழுநீதிபடி
ப்பர்பின்னுலகமொடுச்சென்று, சித்தியெட்டு முணர்ந்து வயிற்
வளர்க்கதிரங் கொள்வார் சேமமுடனிருந்து ஜெபயோக முண்
டுச்செய்து, சத்தியமொடுத்தவறாத மனுராஜயோகத் தனிநீ
திப்பேசிமனமருண்டிடவுஞ் செய்வார்,வெத்திபெருங்கொடை
யாளர் விவேகமனியாயம் வெருங்கானல் சலம்போலு மிரு
மைநிறைவாமே. (௬)

இருமைநிறைவாகச்சிவகருமம் வசனிப்பாரேராளமாக
வரும்நினைவு பற்றிகொள்வார், குருமவுனிஉரைத்த அட்டச்
சித்துக்கற்றுக் கொள்வார் கொலைபுலையா ளகராக்குந்திரமை
யெலாஞ் செய்வார்த், தருமநெறியுடன் சேர்ந்து கதைபயில்
வர்தன்னைத் தரிசனஞ் செய்திருக்குமருள் தகமையுறையார்

கள், பெருமையுட னிருந்தரசுப் பேசிமருளீவார் பேசாத அரு ஞ்சோதிப் பெருமையுறையாரே. (எ)

மருளீவாரைந்துமுளம் நகைக்கவழி யுறைப்பார்மாயை முனிந்தீகைகுண மறுமை மொழிந்திருப்பார், பொருளிடமே வலுங் குறித்துப்போத முறைச்செல்வார் பூவுலகமாளும் வெகுபுராணகதைப் படிப்பார், இருள்மல ஆசைகள் தாருமின் பநிலைக்கொள்வாரிறை மகிதமேலாகி யெதிர்பேசி யிருப்பார் அருள்நலங் கண்டானந்த அறிவையுறை யார்களார்பெறு வாரவர் நலம்பொய் யாசை நுழைந்திருநதே. (அ)

ஆசைமலமூறுசூனை மடுவெனவுங் குளிப்பார் அவஞ் சொல்வார் பவம்பேசி ஆணவம்பொய்க் கொள்வார், ஆசரிப் பாரன்பு பயின்றறிவுடைமைச் சொல்வார் நித்தியவாழ் வரிந்து மனமகிழவகங் கொள்வார், பூசுரர்தன் னீதிநெறி நிலையபுரம் பேசி புத்தியெடுத்துரைப்ப ரதிகாரமெலாம்புரிவர், நீசமன மூயவைத்துப்பூத மொடுசிரிப்பார் நிலைமாறிப் பொருள்பேசி போரிடுவர் நினைந்தே. (கூ)

நிலைமாறிப் போரிடுவருண் கவலையாகி நீசமனமெய்க்கப் புலைகொலை தனக்கேகினவார், விலைபேசி மாதிரிருக்கைப் பிடித்துக்கொள்வார் வெகுநேமம்வரிசை நோண்புண்மை விரதங் கள், கலைபயில்வர் கற்பூரதீபமிட்டுக் கடவுள் கருணையுப தேச மணிக்கைச் சுவடிமுறைபோல், பலனிடுவருலக நடைத் தனில் சேர்ந்துக்கொள்வார் பகைபேசிப் புரளிகவிபணம் பரிப்பர்தாமே. (ய)

பரிதூரகமேறிஉலகரசாள் வருகமைப்படிறுகர்வாரனெறிப்பற்றிருப்பரந்த ககர்போல், அறிந்துமனங் கவடுறைவராரெனபின்றெறிவ ரவநிகடன் பட்டிரவலாக வரம்புரிவர், பெரிது சிறிதறநீநிப் பேசிமறையவராய்ப் பேதம்வரநடப்பர் பெருஞ் சாபமுறைபோடுந், தெரிவறியப் பழம்பொருளே சிறிதுரை யுரிவார் செப்புமொழிகேட்டருள்வீர் சிற்பரமக்குருவே.

கேட்டருள் வீரசேனாவென்றமன மாயைக் கிளர்கின்றப் பிரபஞ்சப்பிருள் மலத்தியாலும், நாட்டமுடனிருந்து சிவஞான மருள்மூழ்கி நாயினுங்கீழான வெனைநடு நிறுத்திக் கொள்வீர், வீட்டறமுந் தறவாமுங்கொண்ட பொதுமிலதன் வினைப்பகுதி யாலிருமைப்பூண்டு கொள்ளத்தானே, மூட்டக மாய்கின்றதெலாம் புவிமகிதம்கண்டாய்ப் பூரணமுண்டாரண வேதாகமறிந்திருந்தே. (௰௨)

அறிந்திருந்ததெது ஆதியந்தநடுத்தானே அமர்ந்தமதியாதித்தனுட னிருந்தவீடாய்த், தெறிந்தறிவுக்கறிவாகிச்சித் தரெலாந்தேடிச் சிந்தைமகிழ்ந்தானந்த பரவசமாயுறைக்கும், பிறிதொன்றுமுறைக்காதப் பேரின்பவீடாய்ப் பேசாதமவுனத்தீமூட்டி நின்றப்பெரியோர்த், துரியாதிபதங்கடந்துத் தூங்கிநிஷ்டைசெய்தார் தொண்டனுமவ்விதமிருக்கத் தொழும்பி நினைந்தேனே. (௰௩)

தொழும்பிநினைந்தேனெனையு மடிமைகொண்டபரனே சுத்தஅத்துவிதவேதச் சுருதிநிதம்பணியும், விழுப்பொருளே நானெனும்பொய்யுரவு மிகவெருட்டிஉலையும்வினை பொருளீமஞ்சிறியமனம்பொறிபூதக்கருவி, வழுவுமலயிந்திரியக் கடவுநுளைமறிக்கும் வஞ்சகவேய்கீழ்பூத்த வம்பென்னவம்பே, அழகிருகணுறுக வடியமலர்ப்பாதமப்பனைவாழ்வித்தக் கருணை மதிநிழலே. (௰௪)

## மனத்தை.

மனத்தைப்பிடித்து வாவென்றுவாழ்த்தும் மதிபுரத்தில், சினத்தைக்கெடுத்துத் தீயிட்டெரித்துச் சிரவணஞ்செய், கனத்தைக்கொடுத்துக் காவலோரைவரைக் கண்டுசொல்லித், தினத்தைவீணாக்கிச் செல்லாதுநில்லேவந் துறைத்திடுமே. (௧)

உறையற்றஞான மணிவிளக்கேயொன்றுறையப்பேண் முன், துறையற்றநதாமநிழல் வெட்டத்தளிர்காமக்கருவிமலப்

புறையற்றுப்பூரணப் பொருட்டுண்டா யதிலேபுகுந்துநிதம், குறையற்றக்கோகழல்பல்லாண்டுயென்றுகொள்குறிப்பதுவே.

என்றுநானொருபோதாகி பேரின்பமிடையறவே, நன்று பாலிக்கு மடையெலாம்விட்டு நாளீயுமற்று, வென்றுகேசாதி வெளிநிலங்கட்டி விண்ணப்பஞ்செய், மன்றுலாதித்தன்மதிக லைப்பரவியான் மகிழ்வதுவே. (௩)

பரவியக்கமலத்திருந்து வாய்ப்போற்றிப் பராபரமேயு னையாதியோடந்தத், துரவிடம்சொல்லி மெய்ஞானோபதேசத் தொழிலேயுஞ் சொல்லிவைத்தென்னை, பிரவிநோய்ப்பவக் கடல்மூழ்கிடா சோதிப்பேரின்ப அமுதமேபெய்தறிவுடனே, வரவேண்டுமென்னிருக் கண்ணுள்பாமணியே மனமதை மரு விடாவாய்மை நான்பெற்றே. (௪)

மருமலர்வீசியமணமே வாவென்றழைக்கமனம், நிரு மலநித்திய நிஷ்களப்பூரண நிறைவடிவாய், உருமலர்த்தென் னைந்துப்பூதமு முநகித்துநித்தமுது, அருள்மலர் வளர்ந்தெ ழிந் தறிந்தறிந்தந்தோ அறிவதுவே. (௫)

அறியுந்தாமே ஐயாபற்றற்றனந்தலொழித், துரியந்திற ந்தருளானந்தநிஷ்டைச் சூடிமனம், திறியுந்தொழில் விட்டெ ன்னிருகண்ணுந் தேடுமருளமுதப், பிரியந்தானென்று வரு மென்னைப் பெற்றப் பெருந்திருவே. (௬)

பெருந்திருவேமறைப் பேசியயெல்லாம் பிணங்கமனந், தருந்திருவாலுயர்ச்சந்நிதி யென்னேசாற்றுமுன்நீ, திருந்தியீ தெல்லாங்காட்டுவைக் காட்டுவைக்கண்புதந்து, வருந்துவே னுள்ளமாரு அமுதெனவழங்குதற்கே. (௭)

வழங்கிய மாசிலாமணிவெளி அற்புதவாய்மை நிலம், முழங்கியநாதாந்தம் வளர்பரிபூரண முச்சுடரைப், பழஞ்சுடர் வாரிப்பராபரவடிவைப் பார்த்துதன்னைத், தொழப்படுஞ்செல் வமிகநல்லநல்ல முன்சொல்மறையே. (௮)

மறைநான்குடித்தி மனமற்றவடிவானந்தசுகம், இறைநீ யென்றுணர்த்தி விடுவாயென்னப்பா யேதறிவேன், குறைமெத்தத்தினநாளெண்ணி நான்படுங்குணக்கவடுடலோ, உறைபேசிவம்புபொய்வாய் வழக்குண்மையென்னூழ்பலனே. (௯)

பலபலவிகாரச்சன்மவாதே னென்மேல்பராபரமே, மலமற்றச்செல்வ மொன்றேவேண்டு மற்றெலாமெனக்கினிமேல், சொலப்படுமோ வொருதூசும் பொருந்துடல் கவிழுமுன்னே, குலங்குறிப்பாசக் கருவிநோய்ச் சமையாதிக் குதற்கமின்றே.

## பூ ர ண ம்.

பூரணஅறிவா லொளியுண்டு பண்ணிப்போற்றி புரண்டொழுந்தழுது வாய்புதையக், காரணங்கண்டுகண்டு யிலாது கருவிகளறச் சிவக்கருணை யானந்தச், சீரணங்காதல் ஞானவாணுகித் தெளிந்திருள்விளங்கிடுஞ் சின்மயம்பழுத்து, நாரணனுந்பிரமனுங்தேடும் நன்னிலைத்தந்தருள் நாளெந்நாளோ.

நன்னிலைத்தந்த நாளின்றெனப்பாசநமன்விடுத்தூதுக்கு நடுங்கிடாதென்னே, முன்னிலையிருந்துச் சொல்விநீயாளும் முறைபதுபோது மிவ்வுடல்நழுமுன்னே, தன்னிலைத்தானே தழுவிதற்பரமாய்ச் சகலகேவலநிலமற்ற வாருதியாய், என்னிலை எனக்கேகாட்டுவீரப்பா எந்தையேஅறுமறைச் சோதிசூழிறையே. (௨)

சோதிசூழானந்தச் சுந்தரமணியே சுதந்திரமாயுனைத் தொழும்புசெய்திருக்கும், பூதியேதருவாய்ப் பூதபேய்த்திரியா பூரணவெளியெனை அடுத்துவாவென்ற, நீதியேகொடுப்பாய் நிஷ்களானந்த நிறைஞ்சனநித்தியநினைவாம், பாதியேயீவாய்ப் பரஞ்சுடர்மேனிப் பராபரமேயெனைப் பரிந்துநீகொள்ளே. (௩)

எனைப்பரிகாசமாய்ப் பேசிடவேண்டா மின்றுடன்பாசபேதங்களுங்கெடவே, தனையுருவாயருளா யறிவாக்குஞ்சம

ரஸவேதாந்தச் சித்தாந்தமவுன, மனையினிலுரங்குமழிவிலாச் செல்வவாழ்வினில் வணங்கினானென்ற, வினையிலாவேதப்போதமே ஞானவித்தகவிபாமே வேண்டுமீதறியே. (௪)

அறிவெனும்வேதக் கொடைபயில்சிவமே யாதுகாரணத்தினாலந்தோ, தெறிகிலேன்சிந்தை தன்வசம்திரும்பிடத் தேசிகமூர்த்தியாய்த்தன்னுள், குறித்திதுஅதுவெனக் கண்டிலாச்சோதிக் குவடுண்டுச்செய்து வாவென்றறுமூலப், பிறிவிலா ஆநந்தச் சோதிவீடுண்டாய்ப் பேசிடும்பேரின்பப் பெருவெளிப்பெரிதே. (௫)

பெருவெளிப்பெரிதை பேசாதபிரமானந்த நித்திரையினிற்றுயிலும், அருளொளிவீட்டின் சபையைமூவாத அறமறைத்தொழிலை தானாகிய அறிவை, இருளறக்கருவியாவையும் பிடுங்குமிருநிலமறபிரு மின்பவாருதியை, மருளனேன்வஞ்ச மனமுடைக்கள்வனென் வாயுறையென்னபொய் வளமையாதினுமே. (௬)

பொய்வளந்துளிற வாய்மைநோன்பெல்லாம் போக்கிலேபோககநான் பொதும்பிவாய்மடுத்து, மெய்வளர்திருசிற்றம்பலம்புகுத வீண்புலைக்காமவிடத்தை யுண்டிருமாந், தேய்ந்தனனந்தோ யேதுகொலப்பா என்புலைக்குறை கவடனைத்தும் ஓய்ந்துநான்சும்மாயிருக்கநான் காண்பேனொருவனே உயிர்க்கெலாமறிவே. (௭)

அறிவெலர்முனையே தேடிபேரின்ப ஆக்கமுண்டாக்கியானறச்சிவஞானம், பிறிதறப்பேசாப் பிர்மைவந்தென்னைப் பிறவாதமுத்தியைப் பேசிடக்காண்பேன், நெறியிதுகண்டாய் நீநிவீதுனக்கு நிர்ணயங்காட்டிட நீசனுய்ப்பிழைப்பேன், குறிகுணமாயைச் சமயபேதங்கெடக் குணக்கடலே யுளங்கோவிலாயிருமே. (௮)

உள்ளமேகோவிலருள்வளமாகி உணர்விலேனெனக்குச் சோதிதாரகமாய்க், கள்ள்மேதினமுங் காட்டியமனந்தான்கரு விகளனைத்திலுமுன் மதித்தூதுத், துள்ளலோதொலையாவிசா ரபேய்வம்புத் துள்ளிடத்தோதினல் நான்படும்பாடு, வள்ள லேதுரைராஜக்கிரீடியே வாழிவருகுவீர் வாசாமக்கோசரவெ ளியே. (கூ)

வாழிசோபனஞ் சிவசின்மயவீடு மதிரவிச்சூடியமணி மன்றுள்வாழி, பாழிலேசெல்லும் மனத்தைவாவென்று பல பலக்கோடி அதிசயம்நிறபபி, ஆழிசூழலகமேழையுங் காட் டும்அறிவென்றேசச்சிதானந்தநின்சபையும்,வாழிபல்லாண்டு நின்மலரடிச் சென்னிமன்னியசோதி வளங்கியச்சிவமே. (ய)

சிவபெருமனேதிருத்தகு சிற்றம்பலந்தனில் சின்மயச் சேவடித்தூககித், தவம்பெருமானந்தச் சபையினில்சென்றுத் தானறச்சதூமறைச் சாஸ்த்திரம்பேசிப், பவம்பெருநாயினே னெனக்கு நீநல்லப்பவிசிதுமகனெனப் பரிகுவீரையா,இவனொ ருபேயெனு மிடமதுவேண்டா எங்கெனுஞ்சோதிசூ ழெம் பெருமானே. (கக)

சோதிசூழ்விளக்கே சுத்தவைதீகச்சுயம்புவே சுடரொ ளிச்சுகமே, பாதிசூழிரவி மதிபுணை மன்றுளாடிய பாதமே பண்ணினோர்த்தேடும், நீதியேநினேவே நீக்கற்றநிலையே நித் தியநிர்விஷய கைவல்லியமேநிறைவே, ஏதிலார்பங்கா எவ்வு யிர்தனக்குமிசனே என்னையும்ஆண்டுகோளரசே. (கஉ)

ஆக-ளசஎ.

## திருத்தகு.

திருத்தகுத்தில்லை அம்பலத்தரசே சேணுயர்த்தீபமே சிந்தைதான்தெளியா, வருத்தமேலப்பாவாதவூர் குருவேமற்று நான்கற்றிலேவாழ்கவென்றந்தோ, கருத்தனேகடவுளேர்தியே

கருணைக் கற்பகத்தருநிழற் கூடியசபையில், ஒருத்தனே அடியார்பங்கில்வாழ்பாமே ஒன்றுநானறிகிலேனெனக்கடவேனே.

ஒன்றுநானறியாயூகனே னுணர்வுஉள்ளவாறுன் கழலுருகியான்பணியேன், மன்றுயர்ஞானவெளிவடிவாளா மற்றுநான்கற்றிலேவருகநீவாழ்க, என்றுகோயிறையே எம்பெருஞ்சோதி யிறைவனே ஏழைபங்காளா, நன்றுடன்தீதுமறநடுநடனமாடிய தெந்துவோநானிதற்கென் கடவேனே. (உ)

இதற்கெனக்கைமாறேகமே சோகமிருமைதூர்புதற்புலாலுடலம், எதற்கெனச்சொல்வே னியமனென்றிருமனக்கள்ளன்வாதுரவு, குதற்கமென்குதலோ கொடிதுநீர்கண்டாய் கோகனேமற்றுநான் கற்றிலே அந்தோ, அதற்கெனவென்றுவியாதுகொலரசே அப்பனேயென்கடவேனே. (ங)

என்றுயரெவர்க்குண் டெவர்க்கிலியென்பேணீதமேபோதமே என்றுகோவெனக்கும், நன்றுயர்நலமே நமச்சிவாவாழ்க நானுமோகற்றிலே நரிபரிச்சிவமே, முன்றுலைவிளக்கே முச்சுடர்மணியே மோகமும்பொய்மலத்தேகம், வென்றுஎன்முன்னே: விரட்டவோவைத்தாய் வேதமேயிதற்குநா னென்கடவேனே. (ச)

வேதமேவுருவாய் விளங்கியவிமலாவித்தகச்செல்வமேவிம்பிடும்பரிவை, ஏதமேகொள்வேன் கனவிலுநினையே எங்கணுளென்கொலோ அந்தோ, நாதமேநடுவே கற்றிலநானேநாயினுங்கடையனுன் வாழ்கவென்சோதி, பாதமேபணியேன் பற்றுமாறறியேன் பரமனேகைலைவாழ்சிவமே, வாதமேதினமுமாயைமூய்க்கருவி வழக்கெனக்கே னிதற்கென்கடவேனே.

எனக்குனக்கென்றப் பான்மையேனெந்தா யென்கொலோ பாவியேன்வஞ்ச, மனக்குறையெல்லா மாற்றநான்கற்றிலேவாழ்க முக்கண்ணுடைய மாசிலாசிவமே, தனக்கெனயாவு

மானவா யுயிர்க்கெலாந்தாதையே சகலகேவலமா, மினக்கரு விகளோடிருந்திலனரசேயேகமேஇதற்குநானென்கடவேனே.

ஏனென்பாராரிங்கீசனே யென்பொலாச் செவிகணுப் படைவிழிமுரலோ, நானெனப்போர் மனநாசமோ கொடிது நானுமா கற்றிலேநாதமேபோதத், தானெனும்பூரணத் தத்து வாதீதத் தந்தையேவாழ்கமெய்த் தற்பரநிலேநீழ், ஊனென் பேனுயிர்த்துனே உடல்பொருளென்பேன்ஒருவனே யிதற்குநா னென்கடவேனே. (எ)

ஒருவனேஉலகெலாம் படைத்ததேசிகமே உன்னையான் பற்றினே னொருவரார்துணையெனக், கிருமைநோய்மதகடை யென்புலேக்குடிலே எந்துகோகற்றிலே எங்கணுவாழ்க, பெரு மையேபேசாப் பூரணவெளியே பேதையான் பாண்டிப்பித்த னேபிறவா, தருமையேஆதி இறப்பிலாஇறையே இதற்குநா னென்கடவேனே. (அ)

இல்லையாயெங்குமென் னுளாயுயிர்க்கெலாஇன்பதுன்பங் களாயிருந்தோய்,தொல்லேயும்பலவாம்சோர்மனக்கருவித்தொ லேயுமாற் கற்றிலேச்சிவமே, எல்லையார்கண்டார் வாழ்கவென் பாண்டி அப்பனேவாழ்கநா னுறிலேமனந்தான், கல்லேயாகரு ணைகற்பகநிழலே காணுமோகண்டில னென்கடவேனே. (கூ)

காணுக்கயிலே மன்னியவிளக்கே கடவுளேகற்றிலே சருதவுமிலியான், தோணுதிருச் சிற்றம்பலம்வருக சொல் லுமாச் சொல்லாமல்சொல்லும், நாணுயின்பநல்லவாநமச் சிவ நானுமேவாழ்கவென்றருள்வாய், பூணுப்பூரணவிளங் கியநடுவில் புலேயனுனேற்றிடற் கென்கடவேனே. (ய)

## அன்னை.

அன்னைக்கே யொக்குமவளீன்ற மகப்பேறுஅறியார்க ளறிவாளோ அறிவானந்தம், தன்னையறிந் திருப்பவர்க்கே விசாரமதுவிருத்தி சாதனையாய்ந்திருக ணீராமுகிப்பருதம்,

என்னையுமாய்ந்தத்துவிதஞான நடுவிலகுயில்லாதார்க் கன்னெ ஞ்சமிருப்புமரப்பாவைப், பின்னுமிராப்பகலறச் சுவாநுபவநீ திப்பெற்றவர்தன் நிலைப்பெறநா, ஞப்படைக்கண்டடித்தே (க)

பெற்றவர்பெற்று நகமைப் போலுமருள்விளங்கும்பிணங்சாமல்ஞானநித்திரை யுரையும்பெருமைக், கற்றோர்கள்தல்லாமை மவுனமுடனிருக்குங் காதலருந்தார்க்கிது சூழ் கருமமுய்க்கருவிப், பற்றவர்போல்நானுமந்தப் பகடிபகலிதினல்பாரமல்பார்க்குமொரு அற்புதமுண்டருளி, உற்றோர்பெற்றாருரவார் மெய்க்கருணை வுணர்ந்தார்க் கென்குறைபோலுமுண்டோ யிவ்வுலகே. (உ)

குறைமுழுதுஞ்சொல்லிலெவர்க் குற்றமறப்பேசிக் குணங்கண்டாராறுமறைச் சொற்கூற்றேவர்க்கன்றோ, நிறைந்தபரிபூரணச் சிற்சோதியருள்பிறங்க நினைவன்றுவிவேக அத்துவித ஞானவிவரம், முறைமெழிநதாரொரு நால்வர்முக்கணுடனென்று மொழியாதசமரச ஆனந்தவெள்ளம்பருக, உறைமுளா பொய்க்கற்பனையிலாத அருங்கருணைவொப்பன்றோ வுண்டெனஆசமறால் கண்டிறைஞ்சும். (ங)

கண்டார்கண்டிறைஞ்சுமனக் கருபுலன்பூதக்கலப்பன்றியென்றுமருள்விளங்க மறைத்தேடும், பண்டாயுமதியுயர்வேபாரபரமேயானும் பற்றற்றமெய்யிழங்க நிறைந்திமர்க்கடப்போர், தொண்டாரென்போல் வாய்மையற்றநடுப்போதம்தொரும்புசெயுமருட்டுரியத் தூவெளியேயுனக்குத், தெண்டமென்று மாவியுடற்கண்மணியே தேடாசிற்பரமநிலைப் பொருளே தெள்ளிய மெய்த்தெளிவே. (ச)

தெளிவென்றலென்மனப்போர் ஜெயபேர்கொண்டெல்லாந் திசைபரியிந்திரபானுச் சிறைமறையிற்றாரும், களிப்பந்தோகூறுமதுதானெவையுங் கலந்துக்கருதியவெலாங் கவ்வுங் கடப்பனைப்போரெமஹா, ஒளிப்பெற்றேன்ஞே வுருவுமுபர்

ஞானப்பூமி உள்ளபடித்தெறியேனிவ் வைப்பதிகமதவேள், நெறியுமிதின்றொழில்தசவிக் துரியவுடற்கூறாய் நேரும்வெகு விதமமைய நடுவிருந்துகொண்டே. (ரு)

நடுவிருந்தகற்பககாரணமாறுலிங்கம் நாடியபேரின்பவெளிநாதவிந்துமமரச், சடுதிதமர்தாரமகப்பாசமெனுங் கயறே தாணுவெனப் பிடித்துச்சமர் சாடும்வெகுராகம், வெடுக்கெனப்பேய்மதலோப வஞ்சனைபொய்மூடம்விபரீதமிது தகுமோ வெகுவாய்நன்னேமந், துடிக்கறக்கண்மூடி சும்மாதோய்ந்து சுபாநந்தத்துளை கையிடுஞ்சுருதிமறைத் தொழுமறியப்பொருளே. (சு)

மறைதொழுமுச்சுடர்வாரி விபுவகண்டமயமே மலரிருகண்நிறைய அருள்பழுத்தூரங்கு மதியே, புறையறப்புண்புலையிலதாய் பூரித்துப்பொல்லாப் பொய்யுலகஅவத்தை யெனக்கேனின்னம்புகலாய்த், திறைவாயிற்திறந்துதிருச் சிற்றம்பலத்தில் தேவர்குழாங்கிடப்பாடிச் சித்தவிடாய்த்தீாப்பார்,மூறைசிறியேன்மொழியயெவர்க் கேட்டாதியந்தமுதல் வீட்டிலிருக்கவைப்பார் மூடனறியேனே. (எ)

வேறு.

அப்பாவுன்னிறக்கமென்ன யாருயிர்க்குமருளா யறிவறே அப்பொருளோ யாதுமறத்துவித, வைப்புண்டாயவையாத்திக்கருமமன்று மேலாம்வஸ்துவைக் காட்டியம்புமறைமறபெவை யாதிலுமோர், துப்பென்றே ஆகமநூல் துணைக்காட்டியிருக்கச்சொல்லுமதுயெது எல்லாச்சங்கையு நீயாவாய்த், தப்புண்டோ அண்ணுயென்மே லொருச்சொற்குற்றத் தவறுண்டோதளித்தலைமை தயாபரச்சற்குருவே. (அ)

பரமகுருவாயாதுமறத்தன்னைப்பயிலும்பண்மறைகண்நிறைசூன்யநிஷ்களப்பூரணமாய்த்,திறம்பெறவார்மதி நிறைறவே

சித்தாந்தவெள்ளத்தேசொளியே சிற்பரமத்தருவாகி விசையும், அாண்தானேதானுகித் தழையுமதுப்பருவமமைந் தறிவானந்தமறை அருளடுக்கக்காவுஞ், சிரகயிலைமன்னுமதிமாணிக்கக்கொழுந்தே தெய்வதவாரணமுளைசென்றடுத் தினிக்குமறிவே. (௯)

இனிக்குமறிவேதுமற யிடங்கோலித் தன்னுளியமமேநமாதி சுபசோடச நிவேத்தியத், தொணியொலியச் சிற்றம்பலத்தென்போலிருந்துத் துணைப்பற்றச் சுழன்றுசும்மா சூழொளியோடிருந்து, வினைபபற்றும் வேள்பூக்கயிடும்பைச் சோறுண்டுவீணாயிற்றடிமை விதிகண்டாயின்னும், எனைநாளென்றிருக்குமிந்தத் துயர்வேண்டாமெந்தை யேகபெருவெளிவிளக்கே யின்றுமென்றுமிறையே. (௰)

எந்தைபராபரமே யிவ்வுலகமநித்தியமென் றிருவிழியுமறியு மற்றும் விஷயமொடுக்கமன, மூந்துமனவாய்வுடன் சென்றுர்ங்கிநிலைபழியு மோகமுயலீசனைப் பொய்ராகமலவாசை, விந்தையிதெலாங்கனவுகண்ட பெருங்காட்சிவிளைவித்தா யிவியெனையு மடிமைகொண்டகுருவே, சிந்தைவசமாகாது யான்படும்பாடெவர்க்குத் தெறிவிப்பேன் தெக்ஷணாமூர்த்த முடற்தெளிந்தே. (௰௧)

உடற்குவியதெளிந்தென்று மொருபோதாயுரந்துமுள்ளபரமறைமொழியும் விரோதந்தானே, மடவாயிற்பற்றி மெள்ளமனப்பாவைக் கரவிவாழி சோபனமென்ன வசனுதிக்குருவித், தொடற்கருமப் பாசவயிறுழக்களக்கு மொழிந்துச்சும்மாய் நானிரவுபகலற நிஷ்டைப்புரியுந், திடந்தானுன்கழற்கடிமைமற்றுமொருச் செய்நிதேவைபிலைச் சின்முத்திராங்கமுழுமுதலே. (௰௨)

தேவே மெய்க்குழைய வருட்டுரவுண்டாய் என்னுந் திறவாதப் பெருங்கருணைத் தில்லைவெளிநடக்கும், பூவேறு

சோனுமரிப் பிர்மாதித்தேடும் பூரணசிதாகாசப் புத்தமிர்தப் போகம், தாவேயென்னிருகண்ணுள் மணியாகுஞ்சிவமே சமரசவேதாந்தமொடுச் சித்தாந்தம்பேசும், கோவேயிக்குவலயத்தைப் படைத்தழிக்குமுதலே குருவேயுன்னருள் தெளிவோடிருந்துனையுந் தொழுதே. (௧௩)

இருந்தபடிநானாச் சதானந்தநிஷ்டைஎனக் குண்டாய்ப்பிரபஞ்சத் திடையுமனவழக்கு என்தானிதெவர்க்கடுமையந்தோயென்செய்வேன், பெருந்துறையெம்பெருமானே நான் பேசுமொழிக்கேளும் பித்தாகப்பிதற்றி தனைமறந்திருமையோடு பேசாதெலாம்பேசிப் பிர்மைகொண்டே னின்னும், வருத்தியுயிர்க்குயிர்போலும் வனையபிடங்கட்டி மடமாதர்க்கிடுமேவலிடம்பொருளும் பறியமற்கடப்பேயுடனைந்து மின்புனையுமெழிய, னருந்துமிருளநியாயமா கெடுவாய்மனமே ஆர்க்குண்டுயான்படும்பாடறிந்திருந்து பரசேயென்னறிவே மெய்யாரணமே அத்துவிதப்பொருளே. (௧௪)

அறியுமறிவுக்குயிரா யபுருபமுயரு மத்துவிதக்குணசாந்த அருண்மறைகண்மறையா யாவையுங்கண் டறவிழுங்குமடிமுடியுநடுவற், றுரியாதிப்பழுத்தொழுகுந் தூவெளியேசுத்தவேதாந்தச் சைவபழம்பொருளேயென் துணையேதூங்காமற்றூங்கிச் சுகவாசனத்தில் சும்மாத், தெறியுநிலைப்பற்றி மனமறத்தெளியுஞ் சிந்தாதிரவியமே மனக்குவிவைதிருச்சிற்றம்பலமே சின்மயமேநிகழொளியே சிற்பரமக்குருவே, தெறியாதுப்போலிருந்தா லென்செய்வேன்சிவமே சிரகிரியிஞெளிவிளக்கேதேவமிர்தே அய்யாஅப்பாயென்னரசே முக்கண்ணுடைதேசிகனே. (௧௫)

தேசிகசின்மயவுருவாய்த் தன்னுறுவிடுந் திகழ்பெருவெளியுருவச் சிவமாய்க்காட்டிச் சித்தாந்தவருள்திரந்துச் செய்தியெலாம்பசரும், பேசிலருள்பிறங்கவைத்தப் பெரியோய்பொ

ய்யிறப்பும் பிறப்பாயிங்கிருந் தாருக்கொண்டநேக மதிபயின்
றென்முன்னிருந்து வருமாறுசொல்லிய மெய்ப்பொருளே, தூ
சியெனக்கருவியாதிகளடராசுத்தக் கேசாதிபாதமடிகிளர்ந்தி
ருந்தக்குருவே சொல்லாமலெட்டிநடந் தட்டவிபுமானம், மாசி
மருவற்றினியப் பச்குவனுகைமன்றுளருள் வெளிவளரவிஞ்
சையரந் தணர்கள்வசனிக்கக் கல்லால்கீழ்வாழ்ந்த பரம்பொ
ருளே. (௧௬)

வாழ்ந்தஅருட்குன்றமொழம் போதிருளும் நிலவும்வா
ன்வளருமுகிலினங் கண்ணாரமிர்தமொழுகும் மாணிக்கமணி
த்தீபமலைவளமேவாய்மை, சூழ்ந்தநடுத்தாரணைச் சமாதிகலை
ஞானச் சோடசசௌபாக்கிய வரவணைக்கமலப்பீசச் சுயஞ்
சோதிக்கலந்தைந்து எழுத்துருவுஞ்சூடும், பாழ்ந்தபெருமயப்
பூதப் பரப்பிர்மக்கோலம் பகுத்துறைக்குமலறநிறைவே சதா
நிஷ்டைப்போதப் பரிபூரணம்வந்து வந்தெனுளமாற, ஆழ்ந்த
வருளுகபகமாய்த்தேட அத்துவிதச்சீர்மாக்கமுடன் மவுனி
யொடுஅறிவுடமைப்பேசி அரகரவென்றற்புத சிவானந்தமொ
ய்த்தே. (௧௭)

அற்புதமேசிவானந்த அறிவுதினம்விளையும் ஆரணமே
ஆசையெனும் பெரும்பூதப்படையோ,பொற்பொதுவேஏழை
யடியேன்பிறகேதொடர்ந்து போதமெலாங் கொள்ளைகொண்
டார்போதுமெனப் புகன்றால், நற்பொதுவேநாயினே னென்
னைவிடவில்லை ஞாதுருவொன்றிலைநடுவா யிலங்க அருட்பேரி,
கற்பதுவேவாயில்லை மனக் காலதச்சனிடம்போர் கரந்திதவர்
கண்டார் கைமாறிதற்கென்னச் சிவமே. (௧௮)

கைமாறுவொன்றறியேன் களவுபுலையறியேன் கற்றவர்
பின்சென்றறியச் கருணை நிழற்கோல, மெய்மாறுமறியேனு
னுள்ளபடித்தன்னை விந்தகமேகண்டறியவே தாந்தமறியேன்,
பொய்மாறுகண்டாயென் னிரையபழக்காகும் புரஞ்சென்று

கருவிபொறிப் பூதபுலன்பொதியும், செய்மாறிதற்கென்னசின்மயக் கண்மணியே தேசிகசிற்பரநடுவாய் விளங்குமணித் திகழே. (௰௬)

விளங்குமண் மாடத்தில் வித்தகரோடறிய விபரமொடு வேதாந்தக் கொடைபயிலும் விளக்கே, களங்கமறக்கருணை நடுக் காட்டுகின்றச்சிவமே கருதறியஞானமணிக் கட்டிகனிக் கரும்பே, இளங்கன்ருய்தாவஅருள் பாலூட்டுமறிவே என்றைக்கோஏமாந் தென்னுசைபுலக்கருவி, உளங்காறுதொலைந் திருப்பே னெந்தைபராபரயே, ஒருவாயென்ருேவறியே னுவந்தெனக்கு முறையே. (௨௰)

## மதிபெருகும்.

மதிபெருகுஞான மடுக்கும்பெருஞ்சோதித்
துதியொன்றுதன்னுள் தோன்றிவிடக்-கதிபெருகுங்
கற்பகவாரணவீடுங் கதிர்மதிசென்ருேடிவரு
முற்பவத்தி லென்னமுறை. (க)

என்னமுறைப்படித்து பொழுதிபலநூல்பார்த்துஞ்
சொன்னபடிமனந்தோய்ந்துச் சோதிவெளித்-துன்னுந்
துருவணையிலறிவடங்குந்தொழிலுண்டுப்பண்ணிகொண்டால்
மருமனைவீடாகு மெனமதித்து. (௨)

மதித்திருந்ததார்மூலர் மறமாதிப்பெரியோர்கள்
கதித்தச்சிவனடியார்க் கண்மூடிதினம்-பதித்து
மனமொடுங்கிஐம்பூதக் கருவிபுலன்பொறியிருக்கத்
தனமெனமெய்த்தவம் பெற்ருர்தான். (௩)

பார்த்ததார்தன்னைமறந் துரைத்தநூல்போலும்
சேர்த்தமதிப்புணைதிருச் சிற்றம்பலத்தில்-போற்றிப்
பூரணங்கண்டாரணங்கள் போதிக்கப்புத்தியுடன்
காரணங்கண்டிருந்த தெனக்கருது. (௪)

கருதிப்பார்தன்வெளியில் கலக்குஞ்சிவகருணை
உருதிப்பாருணர்ந்துண்டு பண்ணிநிற்க-வருநதிசைகே
ளாசானுமீசனுமறிவிப்பா ரண்டபிண்டம்
பேசாதெவ்வுலக மொடும்பேசி. (௫)

பேசினல்வருமனைத்தும் பெருமாயைப்படைப்பென்றுந்
தேசிகனூர்செப்பியநூல் திரமன்று-தூசியொன்றும்
வருகாதுமாந்தர்மனநெறிப் பொய்மலஞ்சேரும்
பெருகாதுஞான மென்றுப்பேசு. (௬)

ஞானமென்றுச்சொன்னல்நன் னெறிச்சொல்வார்சமய
யீனநெறிவேத யிடும்பாளர்-மோனநெறி
முத்திபெருந்தவமுறையார் மோகம்பொய்க்கொலைபயிலுஞ்
சித்திநெறிவரம்பிலாவர்ச் சென்று. (௭)

சென்றுவருவாரரசுத் தூதுரைப்பாரவர்சேமம்
வென்றுபரகதிபேசி விரட்டிவைப்பார்-மன்றுள்
திருநடனமுங்காணுஞ் சிவயோகியென்றுமத
மருள்தனிலுமறப்பர் சிலர்மதித்து. (௮)

மறப்பார்மதிகெட்டு வாய்மைநெறியின்றுவெளித்
துறப்பார்தூவின்பம் வரஞானமதிச்-சிறப்பணிந்துச்
சிரவணிப்பாரவர்நெறிகேள் செயலிலரனன்று
வரமுமுண்டாய் மதிப்பிறிவாரென்று. (௯)

பிறிவாருஞ்சோதிப் பெருமைநினம்பேசார்கள்
அறிவாரிருமைவினை அரஞ்செய்யார்-தெறியாது
இருந்தவர்போலென்மனத்தா லேசும்பெருவம்பு
வருந்துமலத்தால் மலிந்தேன்மதித்து. (௰)

மதித்ததுண்டோவுன்னை வாழ்த்திகுணங்குடியாகி
கதியநுந்துஞ்ஞானமதிக் கண்ணுடைமைத்-துதித்திருளைத்
துடைத்தாதியப்பாச் சோதிபராபரமேயான்
இடையநினமருங்கி நின்மேனிழிந்து. (௧௧)

மருங்கிநின்றேன்மாறாத் தியானஞானகிமனச்
செருங்கவிழ்ந்துச் சிவஞானமுத்தித்-தருங்கோ
மதிவிளக்கேமவுனமேவோர் சொல்லாவிளைந்தசுகங்
கதிமுழக்கே தினநாளுங்காண். (௪௨)

காண்பாயென்னெஞ்சங் கருத்தழிந்துக்கருதினதை
வீண்பாடதென்ற விதிப்பாகும்-ஊண்கர்முற்
றுணர்ந்தபேதைபகோ ஒருவாஉன்துணைதானே
புணர்ந்தபோதனேக்குப்புகல். (௧௩)

உன்துணைதான்தானே உணர்த்திவரில்குற்றமுண்டோ
என்துணையாரேதிலர்தன் பங்காகேள்-முன்தூண்டா
முக்கட்பெருவெளியோ மூவாமருந்தமுதோ
மக்கட்கெலா மதியோவாழ்த்து. (௧௪)

வழுத்துவாய்மன்றாடியச் சிவமேமனப்பாங்கை
பாழத்தபழம்பொருளே பராபரமே-விழித்து
வெளிதானேதானாய் விளங்கும்பெருவெளிநால்
ஒளிவேதமுண்டெனக காண்முறை. (௧௫)

காணுமுறைத்தானே கண்டுகண்டுக்களித்துறங்கித்
தோணுமுறைச்சொல்லாச் சுகமாகிப்-பூணும்
பொருள்தானேபூரம் பொறிப்புலப்பேய்புலையொழியும்
அருள்தானே நல்ல அறிவு. (௧௬)

நல்லறிவுபுத்திசொல்லும் ஞாயகமேநானென்ற
புல்லறிவாமாயைமன மருப்பு-வெல்லறிய
காலன்தினமவன்தன் கட்டளையாலுருப்பெற்றான்
மூலமேயிதுவேண்டா மென்றுமுனி. (௧௭)

என்றுமுனிவேதொருநாளே போதுமேமழைதுடி
தன்றுணையன்றிருவருண்டோசலிப்பதிகம்-வென்றுவிட
தாதாநீயிதைச்செப்பு தந்திரமந்திரம்வேண்டாம்
மாதாபிதாவென யென்மதிப்பு. (௪அ

என்மதிப்புயெவர்க்கு யேற்காதுஎன்செய்வேன்
தன்மதிப்பேயெவர்க்குந் தகுந்தானே உன்மதிப்பு
அறிவாகும்பொருளாகு மாநியந்தருவீட்டின்
தெறியார்க்குந் தெளிவாகுந்தே. (௧௯)

தேவர்தொழுந்திருச்சிற்றம் பலவெளியேசிறுகாலை
கோவிற்குழாம்பிள்ளை குருபானே-மூவர்தொழும்
பெரிதென்கோபேசாப் பெருமையென்கோபேரின்ப
மரிதென்கோ அப்பாமுன்ஆ (௨௦)

முன்னாதிதேவர்க்கு மூவர்க்குமுன்னாதி
என்னாவிஉடற்பொருளும் நீயாகும்-தன்னைதான்
தேடுமறிவாளாசிவபுரத்துக் கரசேபொய்க்
கூடுபோமுன் ஞானங்கூடு. (௨௧)

ஞானவிளக்கிட்டுநல்வினைத் தீவினைப்பொசிங்கி
ஏன ருப்பாளனென்னை என்றுமனக்-கோனனெனுங்
காலன்வருகின்றான் கடவுளேமுறையுனக்கு
தூலமுடனுனைப் போற்றச்சுகம். (௨௨)

சுகவிளக்கேசொல்லாச் சோதிவெளிதுரியாதிப்
பகல்விளக்கேபல்லாண் டுன்பாதம்-சகவிளக்கம்
ஏன்பேசுகின்றீர் யீசரேயின்னமுது
தேன்பேசும் வாமெய்செப்பு. (௨௩)

செப்பரியசிரகிரியில் சித்திமுத்திச்சிவஞானம்
ஒப்பரியதெல்லா மோதிவைக்கும்-சொப்பனமுங்
கனவுநினைவாதிக்கா மருசாக்கிரப்பூமி
நனவுபலக் கருமமொழிகடு. (௨௪)

கருமமொழிகடுவே கண்ணேஉனக்கதிக்த்
தருமவழியலவே சங்கரமே-வரும்வினை
சோறடையத்தூங்கிச் சொல்லுமேதஉன்சுகத்தை
சீரடையச் செய்வாய்த்தினம். (௨௫)

தினநாளுகப்போதாய் திரளுமேதசிந்தைஎன்ற
மனந்தானுளுக்கு நாள்மல்லுதே-தனந்தானே
திருவாலவாயா செய்நன்றியொருகாலும்
மருவென்றால் மறக்குமோமதி. (உசு)

என்றுமாய்கோலொழபிறப்புமேகவெளித்
துன்றுங்கிரகத் தொழிலுண்டு-மன்றுள்
வழங்குமிருநிதிபாயா மனத்தீபமாயெனுடல்
முழங்குமணிநாதமே மொழிந்து. (உஎ)

நாதமேவேதாந்த நடுவேநானென்றமொழிப்
போதமேபூரணமே புத்தகியாள்-வாதமே
மலரடிமைவாழ்த்தும் வணக்கமேஞானமென்ற
அவர்கதிரே ஆதியேஅறி. (உஅ)

அறியாதிருந்தா லாகாதாகாதப்பா
தெறியாதநானொரு பேய்மனவம்பால்-பொறியாலும்
புலனாலும்பூதப்புலைக் கருவிப்போராலும்
கலனாலும்பசியாலுங் களைத்து. (உகூ)

பசியாலுரங்கி பாவையர்க்கும்பலவாசை
நசியாலும்நீசமன நிஷ்டூரப்-பொசிப்பாலும்
பயிலுமேதபலகாலும் பாவிபடும்விகாரமதி
ஒயிலுமேதஉணர்ந்துணர் கெட்டுள (௩௰)

உணர்வுகெட்டுஒருவா உன்னுசையுங்கேட்டு
மொணமொணென்று கண்மூடிமூதறிவென்-றிணங்கும்
மாந்தருடனெறிபேசி மல்லிட்டுமோயைநினைந்
தேந்திளைநோய்சொல்வதென்ன இடக்கு (௩௧)

இளையாதேநெஞ்சே யீமக்கருவியுடல்
தளையுமனத்தத்துவத்தால் தானென்றுக்-களையாதே
கண்மூன்றுடையவர்தன் கற்பனையென்றே அறிவாய்
பண்ணுக்கலைப் பாதப்பணிந்து. (௩௨)

கலைபயிலுங்கண்ணே கருத்தேகடவுளென்னே
முலைமாதராசை விட்டுமுனையாதே—புலைக்கூரைப்
புழுநக்கும்நாய்நக்கும் போனவழித்தெரியாமல்
வழுவுமிதுச்சொன்னேன் வழுத்து. (௩௩)

வாழத்துவாய்ப்பிராண விந்திரியமலப்பூமியுட
லெழுத்தாறுதளமு மிருசித்தியு—முழுத்துயரம்
பட்டேனென்பட்டேன் பாடுபட்டேன்பலநாளும்
விட்டேனோஎன்றதையும் விளக்கு. (௩௪)

எனைப்பெருஞ்சோதி யென்னப்பாநின்னருள்தான்
தேனோபாலோ பலருசியோ—நானோ
நாயினுங்கீழென்மனநக்கு நாணுவிகாரம்
பேயினுங்கீழாகு மெனப்பேசு. (௩௫)

பேசாயோபெருமைப் பேறேபிரமாநந்த
தேசாயோசின்னஞ் சிறுகாலை—வாசகக்
கைங்கரியமானாய் கண்ணேநிறைவுளமே
எங்கறிய யிருந்தாயியம்பு. (௩௬)

இருந்தவிடமீசன் மாலயன்தேவர்சாணர்கள்
பெருந்தவஞ்செய் பேசாபெருவெளியில்—அருந்தவஞ்செய்
அன்பரடியார்க ளாரணங்கள்பேசிநினம்
தென்பாயுனைத் தேடுந்தெளிவு. (௩௭)

தேடுந்திருவாலவவாயிற் றிருக்கோயில்சென்று
நாடும்படிக்காதி நவில்வாய்மெய்—வீடும்
பணியாசனமுமனம் முடங்கும்பதியெனக்கு
அணியட்டசித்தி யென்னென்றருள். (௩௮)

ஆருளாலவாய்கோயிலுண்டு செய்தாங்கிவிடில்
பொருளேவளிடமெதற்குப் பொருமனமே—மருளும்
புலைப்பொறியும்பூதக் கருவியிடுந்தூதுபழி
விலையாக விற்கலாம்விரும்பி. (௩௯)

விரும்பாமல்கெட்டால் விண்ணப்பமொன்றுண்டு
கரும்பாகுமென்சோதிக் கடவுளடித்-துரும்பாகும்
தூரவுந்திரிமலமுஞ் சொல்லுஞ்சகடெல்லாம்
ஊணுமோ மனமேஉனக்கு. (சய)

மனமேஉனக்கெம்மாத்திரம் பொய்மாயைமலம்
கனமேமெய்க்கடவுள் பதங்கண்டுணரத்—தினமுங்
குணமாகுஞ்சோதிக் குழாத்தில்லையுனக்காகும்
மணமாகுமங்கு மதிமவுனம். (சக)

மதிபெருகுந்துதிபெருகு மாருக்கமனநிஷ்டைக்
கதிபெருகுமாதிக் காட்டிவைக்கும்—அதிபதியென்
அப்பய பாண்டிக்கொடி முடியானென்முன்வந்தச்
சிற்பன்தாள் தியானிக்கத்தினம். (சஉ)

தியானமுண்டுசிற்றம்பலத் தெல்லைநமக்குண்டு
மயானமட்டு மக்கள்மனுசுற்றமெலாங்—கியானவட்ட
திருநந்தியாமெங்கோன் சித்தன்தாள்நினைக்கத்துணை
குருநந்தி உடல்காட்டுங்குரு. (சங)

காட்டுங்கருணையானந்த வெள்ளமுள்ளுருகக்
கூட்டும்பூரண வெளிதன்பொருளாக—ஆட்டும்
மனமாயைபோக்க வாசியழகொளிபரப்பிக்
கனவாதி நினைவுபோங்கருது. (சச)

கனவாதிநினைவுக் கள்ளப்புலனொழியும்
சனகாதிபர்சொன்னத் தற்பரவீ—டுனக்காகும்
உள்ளபடித்தன்னை உற்றுப்பாருண்மைத்
தெள்ளுமதி ஞானநீத்தேரு. (சரு)

தேரியருள்வீட்டைத் தெளிந்துணர்ந்துஞானமதி
பாரிலெவர்தன்னை பார்த்தறிந்தாதிச்—சீர்நிறையும்
சோதிவெளிக்காசைபட்டார் சொல்லாய்பராபரமே
நீதியே நினைவேமுன்நில். (சசா)

முன்னின்றுபேசுமுதலேவென் நாமமுத்திவழி
பின்னுலகமாண்பர்மொழிப் பேய்வழிகாண்—என்னுடையத்
துயர்கேளுஞ்சும்மா யிருப்பதற்கே துணைகேட்டு
மயலாகினேன் பித்தாய்மதி. (சஎ)

பித்தாய்ப்பிதற்றிப் பயங்கம்வளர்த்துனையே
கர்த்தனேகடவுளே கருணையென்றேன்—வித்தாய்
விளையும்பேரின்ப பெருவாழ்வேவீணாசைக்
களையெலாங்கொய் தருளைக்காட்டு. (சஅ)

காட்டுவீராதிசோதியென்ற கடவுள்பிரான்
வீட்டுநெறிக்கேமேலாம் வேண்டுகோள்—மூட்டுமடி
மூலக்கனலெரிந்துமோகம்பொய் கருவிகள்காய்ச்
சீலத்திருவிளக்கைச் சேர்த்து. (சகூ)

திருவிளக்கைஞானச் சொரூமதியைத்திருவுளமாய்
ஒருவிளக்காயொப்பிட்டுணர்த்தினவர்—பெருவிளக்காய்
பித்தன்பெருந்துறையான் பேசா அருள்போலும்
கர்த்தரென்பார் மவுனகாட்டு. (ருய)

கருத்தனேஎன்செய்வேன் கருமஉடல்பெற்றுமன
வருத்தமோதினநாள் மறிந்திழக்க—அருத்தமிடும்
அம்பலத்திற்கேட்டு ஆகடியஞ்செய்தினித்தால்
சம்பளமுண்டோ கேழ்க்கசாற்று. (ருக)

கேளாச்செவிகேளாய் கிளையாதீர்கிருபைகடல்
நாளாகநாளாக ராப்பகல்கண்—டாளாக
அழைக்குதேஅந்தகன்முன்னலட்ட அடாபாவியெனக்
குழைதுஞ்சா துரத்திக்கொள். (ருஉ)

துரத்திச்சுகமாகச் சோதியருள்வீட்டிலேறி
சிரத்திலவத்தாதி கேவலப்பூமி—சாகத்தில்
சாக்கிரத்தைச்சுட்டு தாயுமான்தந்தைதனைப்போல்
சீக்கிரத்தில் சிவமாக்காயதே. (ருங)

தேவர்தொழும்வாதவூர் திருநாவுக்கரசர்குணங்
கோவில்குடிஐயரப்பர் சுந்தரரும்—மூவர்
தத்துவனார்சம்பந்தர் தம்பதியும்பத்ரகிரி
சுத்தனார் தூரவுந்தாசுகம். (ருச)

தூரவுசொன்னஅல்லமனார் தோய்ந்தசிவப்பிரகாசா
மரவுரியோய் மார்க்கண்டருக்காக—வரமளித்த
வாக்குபோல்மகனே வாவென்றவள்ளலென்னை
நோக்கையா யேழையெனநோக்கு. (ருரு)

ஏழைக்குடியாக்கி ஏராளமாய்ப்பேசி
கூழையுண்டுகுண்டுனியுங் குழகனுமாய்—பாழைப்
பரவெளியைச்சிற்பரமுய் நெகநெகெனநேர்பரவும்
சிரகயிலை யானச்சிவம். (ருசு)

சிவஞ்செயலன்றென்றுமிலை சின்மயப்போத்துவித
தவமென்றுஞ்சற்குரு யீதென்றருளி—பவக்காட்டை
போட்டாயேஅப்பா பொருளேதிருமூலக்
கூட்டையா கோகழியெங்குரு. (ருஎ)

குருவானசதாசிவமே குண்டலியண்ணுவுச்சி
திருவானவிளக்கே சித்தருக்கு—மருவாக
வாதவூர்பாண்டி மகராஜாவாதுங்கா
போதவூர் பூரணமேபுகல். (ருஅ)

பூரணத்தைபொய்யென்று போற்றுவோர்க்கென்னபலன்
காரணத்தைகற்பகத்தை கலந்துள்வளர்—தோரணத்தை
தோய்ந்துவளர்மதியை துவாதசாந்தத்தின்வெளி
ஆய்ந்திருக்க வைப்பாயல்லறிவு (ருகூ)

அறிவுதருமபரூப ஆத்துமத்தை அத்துவிதப்
பிரிவுதரும்பேசாப் பெருமௌன—விரிவுதரும்
வெளியிற்வெளியய வேதாந்தச்செல்வத்தை
தெளிவிற் தெளிவுதருந்தே. (சுய)

## மதிபெருகும்.

தெளிவாகுஞ்சிற்பரமுய் வெளியாகுமொன்றுச்சொன்
றொளியாகுமுத்தமனு ருண்மைகழல்—களிப்பாகுங்
காணுவதற்கரியக் கண்ணனெச்சியுண்டினித்த
மாணுக்காள் வந்தமனுவு. (௬௧)

இனித்தசுகத்தை எவர்பெருவாரெங்கோவே
தனித்ததவந்தருவ தெக்காலம்—செனித்த
உடற்கருமஞ்சொன்ன லொழியாதிருக்கமட்டும்
விடமாமுலகம் வேம்பு. (௬௨)

உலகநெறியோடுண் டுரங்கிக்காமுறுவ
லலகைபோலென்னறிவு அலைந்திருக்க—பலகலையும்
போற்றுமருட்பொழுதேபொய் வாழ்வைமெய்யென்று
ஆத்துமத்தைப் பாராதென்னறிவு. (௬௩)

பாராதலைகடலிற் றுரும்புபோல்பலநாளும்
மாராடிமாயை மயக்காகுதையா—சீராடிச்
செல்வபெருக்கே சேர்த்தனைத்துப்பாலூட்டும்
கல்விப்பெருக்கமுதே வுன்கடன். (௬௪)

கடனாகுமப்பாகண்மூன்றுடையோர் காட்டிவைக்கும்
உடலாகுமுள்ளொளியாய் நீயிருக்குமிடம்—முடங்கிமனக்
கண்கொண்டுபார்த்திருக்க காலதச்சன்பாசன்
எண்கண்டு வைத்தினித்தாயென்று. (௬௫)

என்றுமருட் புயல்மேருவளர்சுலேயே எங்கெங்கும்
சென்றுவருமேகமே சிவபெருமான்—நன்றுடன்தீ
தாட்டிவைக்குமாரூர் அப்பனேபாண்டிபிரான்
கூட்டிவைப்பதெல்லா முன்கூத்து. (௬௬)

உன்கூத்தேகூத்தொருவ ருலகில்நடுநின்றுகொண்டு
முன்கூர்ந்துலகெலா மூர்த்தியென—தன்னைவெளி
தற்பரமெய்த்தாரகமாய் சமாதியெட்டுங்காட்டிபொரு
அற்புதமாய் மதிகொடுக்குமறிவு, (௬௭)

மயிமண்டலம்பெருந்த மவுனப்பாலுண்டுபுலைக்
கரிகொய்ந்துக்கல்லாலடி நிழலிற்—றுதித்திருக்கும்
பூரணத்தைஅத்துவித புண்ணியத்தைபொருவர்வழிக்
காரணத்தைகாட்டிவைக்குங் கடவுள். (சூஅ)

வைத்துங்கருணைக்கரும்பை மதிவளர்க்கும்
அக்கமணைஅல்லமனை ஆதிசிவப்பிரகாச—சொக்கனைநான்
தொழுவேனோஅழுவேனோ சொல்லுஞ்சால்நெஞ்சகமே
மழுவாகு மனமாயைமயக்கு. (சூகூ)

மாயைப்பிறப்பிறப்பைமறுக்கு மாமருந்தொளியே
ஞாயமுனக்கேன்மன மொப்பாக்கவிலைத்—தூயச்
சொற்பனமுஞ்சாக்கிரமுஞ் சோரஞ்செய்நினைவுமலத்
துற்பனமு துடைக்குந்துணை. (எய)

துணையெனக்குநீசொந்தச் சுற்றமுநீதாய்தந்தை
பிணையனுநீபேய் மனமுங் கருவிகளு—மிணைக்கருமத்
தொழிலெல்லாமெனக்காமோ சோதிடவேதாகமுமாய்
விழியாய்பெய்தூற்று மழைவெளி. (எக)

பெய்வார்பேரின்ப வூற்றேபெருங்காறே
பொய்வார்பொருளாசை பூதப்படையாசை—மெய்வார்
விழியணங்காள்வேள்நாற்றக் குழியிணங்குமமன
எழிலனந்த மென்னெ ஞேஎனக்கு. (எஉ)

எனக்குவந்தத்தொழிலெல்லா மேமாற்றியேகபிரான்
சினக்களவைதேவமிர்த மாக்கிமன—யினக்குறைவை
தனந்தந்துநீநிச்சமர்த் தெல்லாந்தந்துநடு
சனகாதிதூவு நலஞ்சாற்று. (எங)

எல்லாச்சமர்த்தெல்லாஞ்சமர்த்தல்ல எங்கள்பிரான்
சொல்லாச்சமர்த்தே சோதிவெளிக்—கல்லாமல்
கன்னெஞ்சங்கவிழ்ந்தே காயாமரகதப்பல்
என்னெஞ்சே யேறிப்போப்போ. (எச)

போகாதேபுரக்கருவிப் பூதப்படையோடு
சாகாதேதற்பரனார் தயவுநமக்—காகாதோ
கூத்தனையுதைத்தான் கொடுங்காமனையெரித்த
நீத்தனை நினைந்தக்கால்நினை. (எரு)

நினையமுத்திப்பெற்றிடலாம் நிஷ்டூரமனமேவுன்
வினைப்பயன்தான் வெல்லமுடியாதே—தனையறியும்
தடமிருந்தால்போதுந் தாராளமாகவெளி
இடமுண்டென்றெந்தை நூலியம்பும் (எசு)

இயற்கைபோல்விளையுமே டணையுமாவிபடுந்
தியக்கமெத்த திருசிற்றம்பல வாழ்வே—மயக்கும்
வாதனையையொழிப்பாய் மனுவாகவந்தகுருப்
போதமேபிழைப்பேன் பொருத்து. (எஎ)

ஒழியாப்பிறவிவழி உயருகிதவொழியாதோ
அழியாபொருளே யறியுநடு—வழியாகப்
பெற்றதேபோதும் பேசாமலிருவென்று
கற்றவார்க் கருளைக்காட்டு. (எஅ)

காட்டித்தெளிபவைப்பாய்க் கனலூதியீரூறும்
மூட்டிமும்மண்டலத்தில் முடங்கியிறச்—சூட்டும்
மதிப்பாதியுண்டானே மார்க்கத்தேசிகருக்குக்
கதியளித்தக் கடையூர்க்கண். (எகூ)

தேசிகனேசித்தமலைபாப் பரகதிக்குப்
பேசியிருந்தாலுனக்குப் பிழைவருமோ—தூசியொன்றும்
வாராதெவர்க்குமென்று வரவழைப்பாய்மகனென்றுக்
கூராயெஃனப்பா மெய்குரு. (அ௦)

குருவானசதாசிவமே குகைநமசிவாயமெனத்
திருவாலவாய்ப்பங்குத் தீர்த்தவனே—ஒருபேகும்
அறியாரறியா ரம்பலமுழுச்சந்தித்
தெறியார்தெறியா ரென்றுச்செப்பு. (அக)

செப்படியேமாணிக்க மரகதமேசிவந்தரத்தின
வைப்பதிகவைடூரிய மணியே—முப்போதும்
பூரணமேபூருவனுய்ப் போற்றுஞ்சிவஞானம்
காரணமே கற்குமரன்கட்டு. (அஉ)

கற்குமரண்கட்டி கமலவிதழாயிரத்தில்
நிற்குநிலையதில்சும்மாநிதானமுடன்—மற்கடப்பேய்
அல்லைறமுடங்கி அரிவாசனத்தமர்ந்து
பல்லாண்டு முளைக்கப்பகர். (அங)

பகராயோஅப்பா பராபரமேபரவியுனை
நிகராவைத்தாதியந்த நடுபார்க்கச்—சுகராதி
முன்னோர்கள்சொன்னமுறைப் படியேமுழித்தென்றும்
இன்னேக்கண்ணே யென்றிருக்க. (அச)

இருக்காதிவேத யின்பநிலமேசுவர்க்கும்
சுருக்கமாயுணர்விறந்தச் சுழிநிலமே—உருக்கமுடன்
போற்றுவதுமேற்றுவதும் புத்தியுடன்சொல்வதுவும்
மாற்றுவது மென்னமரபு. (அரு)

என்செயலாலேதாகு மீசனே!பிருமையின்ப
முன்செய்தவினைதானே முழகருவித்—தன்செயலாயச்
சாறுதேசோதிபிரான் சம்புசிவச்சங்கரரே
மூறுதே முன்னேமுடங்கி. (அசு)

முடங்கிமனத்தொழில்தானே மூவுலகுங்காட்டும்
இடங்கானற்கிடங்குநா னியெனும்பேய்—முடங்கல்
இருந்தென்னப்போயென்ன ஏடணையிலாதச்சுக
மருத்தியுமீசா மாற்று. (அஎ)

சுகந்தானேதையா சும்மாயிருந்தவிடத்
தகந்தானடங்கு மருமையென்னச்—செகந்தான்
ஏதறியுஞ்சொல்லி யிருமாப்பெலாமொழியும்
வாதழியும் ஞானவழி. (அஅ)

ஞானகற்பகமேநான் சொன்னாலேன்கேளாது
பீனச்சொற்பனமாயை மிடர்விளைப்பாய்—தானம்
தவந்தருகாமற்புதஞ்சேர் தற்பதத்தைகாட்டாய்
பவஞ்சேர்க்க உன்னைசப்பார். (அகூ)

பாருபாரென்றுனக்குப் பலநாளுஞ்சொல்லமனம்
ஏருமாறாக இருக்கின்றதென்ன—சீருசொன்னால்
சித்தசாபல்யமெலாந் தீர்ந்துவிடுந்திருமூலக்
கர்த்தரேயேன் பாராக்கண். (கூ௰)

ஏனென்பாரில்லையென்று யேமாற்றிவிடவேண்டாம்
தானென்றதத்துவத்தைத் தகித்துவிடும்—கோனென்ற
குருநாதாஞானகுலக் கொடியேதிருமூலக்
கருவூரா என்னையுநீகாட்டு. (கூக)

காட்டுங்கொடையாளா கருணைதருங்கடவுளே
நாட்டமுடன் நாலாம்பதவிவெளிக்—கூட்டமிட்டக்
கருவிமலக்காலெரிப்பாய்க் கண்ணேசிவஞான
மருவிமனவாதொழிய வாழ்த்து. (கூஉ)

ஒழியாதமாயை யுரக்கமலவிகாரமன
மழியாதஆக்கமென் னறிவுபலன்—வழியேது
இல்லமேவெயில்லையெனை நோக்கப்பாருமையா
எல்லாமாய் மன்னுமிறை. (கூங)

மன்றுளருளாகு யெய்தவுபசாரம்
என்றுங்குருகோசினந் தீண்டார்—நன்று
நிலையாலேத்தேன்பொங்கு நிலைபெருதலல்லால்
முலையாலே மூகரோமுயல். (கூச)

பரம்பருளன்புந்தேடுந் தியக்கும்
அரங்கொடைநல் நிசமுநாட்டம்—பெருங்கவலின்
றற்றொழியுமெய்பெருக்கு மல்வியனீங்கெல்லைப்
பற்றெபிட பற்றும்பனை. (கூரு)

பற்றுமுளத்திலிரு ளீற்கறவைசேல்
உற்றவையுற்று தீமுறுவ—லற்றபோ
துட்டமுஞ்சோம்பலுந் துயிலும்போமேலவே
நட்டணைநடு நாடுநமக்கு (கசா)

நமக்கென் றிருள்வம்பு நாடுதேமன நடுவன்
தமக்கென்றிருக்கிறான் சடுதியென—இனக்கருவிச்
சினக்காட்டில்தீய்ந்து சேடிக்கச்செத்துபோம்
வனங்காட்டும் வள்ளலேவாழி. (கள)

காட்டுஞ்சதானந்தங் கடையூர்பெரும்பாதை
நாட்டும்படிஞானக் கண்ணுகி—மூட்டுங்
கனலாலேகல்லாக் கருவிகளைக்காய்ந்துவிட
மனதாலேயாமோ மறப்பு. (கஅ)

கல்லாவுருவர்க்குப் பொய்தலபகோரம்
நில்லெனமேலிட்ட நிலையாகும்—பொல்லாதென்
கோரம்மறவிக்கொடிய மனவிபகாரஞ்
சீரில்லைச் சொல்லக்கேள்சிவம். (கக)

சிவமேநின்செயலன்றி சிறிதேனுமழியாத
தவமுஞ்சதாநிஷ்டை சமாதிசுகம்—நிதமுந்
தூங்காவரவனையுந் துயில்சாக்கிரநீங்கும்
ஏங்காப்பூரண மீவாரெவர். (௰)

சாக்கிரக்காட்டைத் தசவாய்விடுமேவல்
நோக்கிறவீட்டை நொறுக்கிச்சிவந்-தேக்கிய
நில்லைநசநுசித்தெருத் துருவத்தேதிவெளியை
தொல்லைப்போகச் சொல்லைச்சுகம். (௰க)

ஆக, ௰௨-ம்.

## மூலம்.

இல்லையென்றறிவா யிருமாறியே
வெல்லும்வேத நெறிச்சொலுமெந்தைநீ
புல்லும்மோக்ஷம் பொருள்பெரு மென்வினைத்
தொல்லைகட்டி யிருந்ததென் சொப்பனம். (௧)

சொப்பனித்துப் படமென வென்னுடல்
கற்பனைச்சிறுகலை வரும்வாயுவா
லுற்பவம்பெருநாள் வரையும்பயில்
தற்பரச்செயலுன் செயல்தாணுவே. (௨)

தாணுவாய்த்தனிச் சோதிவழிப்பிடித்
தூணுநாற்கலையுள்ளு ளொடுங்கினான்
பூணுமென்குருப் பூரணப்போதமுன்
வேணுமாதி நடுவந்தவேதமே. (௩)

வேதமோதும் வெளியொளிவீட்டினில்
காதலாகிக் கசிந்துகண்ணுறெனப்
பூதயோடுப் பொறிப்புலன்கருவியற்
றேதமின்றென்று முன்னருள்நிற்கவே. (௪)

அருளைஞான வருமறைச்சோதியைப்
பொருளைப்பூரணப் போதமுறைக்குமெய்த்
தெருளைச்சின்மயச் சித்தாந்தச்சித்தியை
இருளைதீய்க்குங்கண் ணாட்டமெய்நாட்டமே (௫)

கண்கள்மூன் றுடையக்கருணாலய
மெண்கணுடு நவா யொருவற்புத
விண்ணுமண்ணும் நடுவெளியற்றுமூ
துண்ணுஞ்சோதியுயிர்ப் படைப்பையனே. (௬

படைப்பெலா மறிவாய் மறைப்பெய்திடும்
விடைபெருஞ்சிவ வேதாந்தச்செல்வமே
நடைத்தழித் துருவாய்முதலாயிரும்
கடவுள்சோதிக் கண்ணாரணீழலே. (எ)

ஆரணக்கதிரூரும் வெளிப்பொருட்
காரணக்கதி கண்டருளோதுமென்
பூரணக்குருவாகியப் போதமுன்
னேரணிக்கலமாறும் நிறைஞ்சமே. (அ)

ஆறுமாறுநிறைஞ்சறி வண்டமாய்
மேருலாவிய வேதாந்தச்சிற்பர
சீருலாவுஞ் சிவஞானபோதமுள்
ளூருமென்னறி வாகியஉண்மையே. (கூ)

உண்மையாலறிவா யறியுஞ்சிவக்
கண்களற்றருள் ஞானநேத்திரம்புனை
எண்களற்றிருளேகும் பரவெளி
வண்மையாதிலும் வாய்மையின்பாகுமே (ய)

இன்மைதுன்பமிலா வருணிட்டையி
னன்மைஅத்துவிதப் பழஞ்சோதியைத்
தன்னிலொப்பொன்றிலாச் சச்சிதானந்தம்
என்னுங்கண்டறி யாதென்னையெந்தையே. (கக)

அறியுமென்னறிவுக் கறிவாகிநீ
தெறியச்சிற்றம்பலத் தாறுவீட்டிலும்
பறிசெலுத்தும் பரவெளியற்புத
நெறிகள்வேண்டுமென் னிஷ்டையுளாகவே. (கஉ)

என்னுளாத்துமமென்றுஞ்சிறந்தரு
ளுன்னைப்பெற்றுணு முத்தமமேவிருள்

துன்னுமாணுவக் காட்டைக்களைந்தொரு
முன்னில்முன்னெனு முக்கண்முதல்வனே. (கங)

ஒருவராதிப் பராபரமேயுனை
மருவிமும்மல வாதனைத்தீர்ந்தரு
ளுருவுமூல வரைவாசியூதியே
குருவுஞ்சீடனு மாகிலென்குற்றமே. (சச)

குற்றமொன்று மிலாச்சிவதாரணைப்
பற்றுமாற்றனைப் பாரத்துவரங்கிமூ
துற்றஞானவுள வுண்டுபண்ணிநான்
கற்றுநின்கதிக் காணுமாறையனே. (கரு)

ஐயனேவைந்துப் பூதப்பொறுவலா
லுய்யுமாறென்று மென்மனமாகுமோ
பையப்பையப் படிறுகர்வஞ்சகப்
பொய்யில்நின்றுப் பொலிந்தனனப்பனே. (கசா)

நின்றுளாதிப் பிறப்பிலாநிர்மல
மன்றுலாவிய மாணிக்கச்சோதியை
நன்றுத்தீதற நிற்கும்நடுவினை
என்றுமோர்பொழு தாக்கிவைசியெந்தையே. (கஎ)

எந்தையேகப் பெருவெளிப்பூரண
விந்தையேதமிலா தருள்நித்திரைச்
சுந்தரக்கலை வாசிப்படர்வெளி
முந்துமாறுமுக்கண் டுணையாக்கமே. (கஅ)

ஆக்கமேயலைவற்ற ஆதாரமே
ஏக்கமேதினமேங்கி யேங்கித்தருள்
தூக்கமேவிட்டுத் தொல்லைவிலங்கமே
லூக்கமாக்கிவுணர்த்திவை அப்பனே. (சசு)

அப்பனுநிப்பிரான் பெருப்பாண்டிசீர்
செப்பொணுத்தில்லைச் சென்னிவிளக்கினை
ஒப்பொணுதலையென் மனஊக்கமோ
தப்பனேதமென் சாற்றுவன்தந்தையே. (உ0)

தந்தையேசர்வத் தயாபரச்சற்குரு
பந்தப்பாசப் படுகிழற்பாபமோ
சிந்தைமாறிச் செறியும்புலைக்குடி
லந்தணுயெனையாளுடை மூர்த்தியே. (உக)

மூர்த்தியேமுழுப் பூரணமுத்தியே
சீர்த்தியேதினம் தேடும்பரவெளி
ஊர்த்துவமெனக் குள்ளபடித்துயில்
பூர்த்தியேமைக் குகந்தமெய்ப்போதமே. (உஉ)

உள்ளத்தத்துவ மொன்பதிளுருகர்க்
கள்ளத்தத்துவக் காட்டைமுக்கனலினுல்
தெள்ளித்தெய்வத வீடாறுபாங்கையும்
துள்ளொணுமல் துணைத்தருஞ்சோதியே. (உ௩)

துணையெனச்சுகவாரி சூழாவியே
பிணைந்துளாதியைப் பேசியிறப்பிலா
தணைந்துஅற்புதமாய் வளரத்விதப்
புணையைநம்பிப் புலையனிருந்ததே. (உச)

இருந்தயின்பை யெடுத்துச்சநாக்கிய
மருந்தையுண்டு மவுனேதயப்பெரும்
விருந்தையுண்டு வெளிப்படயீதினுல்
வருந்தமென்னநீ வாழ்விக்கவையுமே. (உரு)

வைகைப்பாண்டிநா டடைத்திடுநாளினில்
சைகைபெண்ணையுஞ் சைவனுர்க்காளென

மெய்கொளாற்றிய வேதவைதிகமே
கைகொளாற்பதக் கண்ணுதற்கருணையே. (உசு)

கருணைமன்னியக் கலையிருநிதிப்பர
அருணையாலயத் தடிமுடிநடுவிளை
வருணைமாறி யொழுகியமதிமணித்
தருணநாயகச் சண்மதச்சயிலமே. (உஎ)

மதிமணிக் கதிர்விளைபரிபூரணம்
கதிகளிற்றுறை யற்றவாரூடகக்
கெதிபரப்பிய என்குருப்பூரகச்
சதிர்விளக்கினை தன்னுள்விளங்கவே. (உஅ)

தன்னுளாதியைத் தாரகத்கற்பத
முன்னுள்முன்னென மூலமுளைத்தெழு
மென்னுளாவியை யேகப்பராபரத்
துன்னுஞ்சோதித் துரியத்தைச்சொல்லுவாம். (உகூ)

துரியதத்துவமாகியக் கேவலப்
பிரியஅற்புதப் பெருவெளியாயொரு
அரியசிற்பர வாசிமனோலயப்
பரியைப்பெற்று யிப்பாவியுமுருகவே. (ஙம)

பாவியான்பெற்றப் பாவனைப்போல்பவம்
பூவிலாதிலுமில்லை யிப்புன்மையால்
ஆவிநொந்தழுதே னெனையென்மனக்
கோவிலாயிருங் குருபரத்தேவனே. (ஙக)

தேவதேவனே திருவருளாலயத்
தாவலாயனலாய் மெழுகாயுடல்
மூவர்க்கோமனே நெட்டயர்ந்தாழுதற்
சிவகாருணியப் பெருந்தெய்வமே. (ஙஉ)

நெக்குநெக்கென மயிர்சிலிர்த்தோதமுற்
பக்குவம்பெறும் பாங்கனுய்ப்பரவெளிச்
சொக்கியான்பவயிருளெலாந்தொலைந்தமெய்ப்
புக்கிடத்துணையாகு வைப்போற்றியே. (௩௩)

தொலைந்ததூலனுய்ச் சோதிப்பராபரம்
நிலைந்ததாரணச் சமாதிஆரோக்சியஞ்
சிலைந்ததற்பர அற்புதந்தேசிகம்
அலைந்தநாயினேனுங் கருளாதியே. (௩௪)

அலைந்தநாயினே னறிவென்னஆண்டையோ
குலைந்துகோகரணங் குடிக்கருவிகள்
உலைந்துலைந்துளமுள்ளும் பரம்பசைப்
புலைந்துபோவதென் பூர்த்திமெய்ப்போதமே. (௩௫)

எனனபாவமிவ் வேழைமனத்துடிக்
கன்பையூற்றிமெய் யருளைப்பெருக்கினல்
துன்பைப்போக்கிதன் னுரணவெளிக்குள்வாழ்ந்
தென்பினேனென்று மாய்த்தெளிந்திருப்பனே. (௩௬)

இருப்பனென்றொருக் காலெனையிழுக்கெனும்
வெருப்பிலேயெனை விட்டொளித்தாணுவ
அருப்பிலேபழியாள னீயாக்கினுய்
பொருப்பிலேனுமெப் பூரணத்திருப்பதே. (௩௭)

திருப்புக்கூறெனச் சிந்தைச்சழக்கெனும்
வருப்பிலேயெனை வைப்பதுன்பாபமே
உருப்படும்பலத் தெய்வநீயாகுமோ
நேருப்பிலிட்டமெழு கென்பொய்நெஞ்சமே. (௩௮)

போய்த்தநெஞ்சம் புலைப்பலத்தர்க்கமோ
கைத்தஉப்பென யென்மனங்கார்க்கவும்

மெய்த்தவாழ்வதை விடமெனத்தள்ளியே
வைத்தவாழ்வென வருகமுன்வாழியே. (௩௯)

வாழிசோபனம் வம்பெலாந்தீர்ப்பதம்
வாழிசோபனம் மாலயன்தேடுநீழ்
வாழிஅண்டமும் பிண்டமொன்றுயுயிர்
வாழிதற்பர வாதியனுதியே. (௪௰)

மூலமாறு வீட்டில்முடங்கிமேல்
காலமூன்றுங் கடந்தகலைக்குள்யான்
தூலமூன்றுத் துடக்கறப்பூரணச்
சீலமோதுமெய்ச் சிவஞானப்போதமே (௪௧)

ஞானப்போதகம நவிலுமெய்நடுவிருந்
தானுலாவியப் பூதமோரைந்திலும்
நானறத்தனை யறிந்தறிவாகிடு
மோனபஞ்சாக்ஷர முத்திநல்முத்தியே. (௪௨)

அறிவறிந்தபின் னாறிவார்சுழிக்
கறிப்பறித்தரு ளானந்தநிஷ்டைக்கண்
டறியவேதாந்தம் யாவுமுறைக்குமுன்
தெறியச்சிற்றம்பலத் தொருத்தெய்வமே. (௪௩)

ஒருமைப்பன்மையெனப் பெருஞ்சோதியால்
குருவெனச்சசி மண்டலமாறிலும்
உருத்தரித்துட லாதியுயிர்ப்பெருக்
திருவுளச்செயலிட்ட மெய்ச்செய்தியே (௪௪)

செய்திநான்மறை யாகமந்தேடிய
மெய்திகழும்வே தாகமப்பூரணம்
பொய்திகழுமிப் பூதலவாழ்க்கையால்
கையில்கண்டப்பொருளென் பொய்க்கண்டமே. (௪௫)

கன்மவிந்திரியப் பொருள்மூன்றிரத்
தன்மவிந்திரியப் பொருள்மூன்றிரும்
நன்மைமேல்ஞான விந்திரியத்துணைத்
தன்னைத்தான்பெற்றுத் தன்னையறியுமே. (சசு)

அறியுஞ்சோதிப் பூரணத்தாரகம்
பொறிப்புலன்பெரும் பூதப்பொறுவரப்
பிறிவிலாதுலகாதி யுயிர்க்கெலாம்
தெறியுஞ்சின்முத்தி ராங்கமெய்ஞானமே. (சஎ)

தெறியுஞ்சின்முன்முத்தி ராங்கவெளிகொரு
துரியசொப்பனமாகும் நிலமெலாம்
வறியனேனுள மாறிக்கன்மேந்திரம்
செரியசிந்தையி னக்களவானதே. (சஅ)

இனஞ்சிறந்த யிழுக்கருவிச்சட
மனமிறந்த வருட்டிாள்வாருதிக்
கனகவம்பலக் காட்டையுங்கண்டுமெய்
சனகனுதிபர் வீட்டையுந்தாருமே. (சகூ)

வீட்டைஞானவேதாந்த மெய்ப்பெட்டியைப்
பூட்டைப்பூரணப் போதெழுஞ்சாதனை
பாட்டையேறி நடந்தென்புலாலுடல்
கூட்டைப்பார்க்கவைக்குலாத் தில்லைக்கூத்தனே. (ருய)

தில்லைத்தாண்டவ மாடியத்தேசிக
ரெல்லைக்கண்டவ ரில்லையிப்பூதலத்
தொல்லைகொண்ட வர் போலேன்பொய்கன்மனக்
கல்லினுல்பெருங் கன்மமேலாகுமே (ருக)

கன்மவருதியால் மனங்கட்டிமாய்த்
துன்மசோறிடு தூலச்சுமையெடும்

வன்மமென்மல வாநுலகக்கடைத்
தென்பனேகமெய் செய்வதெனுதியே. (ருஉ)

ஆதியென்ருெரு அற்புதஞானவீ
டோதிநிற்கவுணர்த்தி வைத்நால்பொது
நீதியாகுநிறைஞ்சன நித்திரைப்
பூதியாளுடைப் பூரணப்போதமே. (ருக)

போதகாசிரியத் தொழில்பொய்யிலா
வேதகாசிரியத் தொழில்ஞானநூல்
சாதனுசிரியத் தொழிலிதுவெலா
மேதனேயெனக் கானவாருபமே. (ருச)

ஆனவாருபம் யாவர்பிரித்தவர்
மோனவெள்ளம் முடங்கியமுதண்ட
ஞானவெள்ள ஙாயகச்செல்வமே
ஏனமேன்புலே யென்னெனச்சொல்வதே. (ருரு)

சொல்லுமாதித் தொளாந்திரத்தொட்டியில்
அல்லுமடம்பக லாரணம்பூத்துபேய்
மல்லுகட்டு மனமினக்கருவிகள்
தொல்லேக்கூடடில் தொழுவதென்சொல்கொலோ (ருசு)

தொழுகுமாதிப் பராபரத்தூரமே
அழுதுக்கம்மனுங் கண்ணருவிப்பெயப்
பொழுதுகண்டுவிடிந்தெனப் பூர்த்தியாய்ப்
பழுதிலாதிரும் பாங்குநற்பாகமே. (ருஎ)

பாங்குபெற்றுயி ராதிப்படைப்பெலா
மேங்குமற்புத மென்கொலோவொன்றென
நீங்கலற்ற நிராதாரச்சோதியே
தூங்குந்தத்துவத் திளமச்சேருடமே. (ருஅ)

தீமைச்சேற்றில் சிதைத்தனைத்திருவுள
வூமைகூத்திலுருவென நினைவினைப்
பூமிப்பார்த்துளம் பூத்தெழுமோனநீழ்
காமியான்கண்டக் களிப்பொன்றுமில்லையே. (௫௬)

கண்டதார்த்தனை கற்பகத்தாரணம்
உண்டதாருல கூழிகாலத்தினும்
பண்டலர்ந்தப் பராபரச்சோதியை
விண்டதாரிலே மேதகுச்செல்வமே. (௬௰)

ததும்படித்தனைப் பார்த்துமெய்த்தற்பரம்
புதும்படிக்கருள்பொய் மலப்புரியெலாம்
நதும்படிக்தமூலக் கனல்மூட்டிநான்
வதுக்கும்நான்முக வாரணமூர்த்தியே. (௬௧)

மூர்த்தியேமுனிவே னெனைமூதகச்
சீர்த்தியாக்கித் தன்சிந்தையசைவிலா
வார்த்தியாகமனம் பசர்மன்றினில்
நீத்தனுன்னுரை நிருபநல்நிருபமே. (௬௨)

நிருபலக்ஷண நிராதரப்பூமியில்
சுருபலக்ஷணத் தொன்மைமூலாதரக்
குருபரன்தனைக் காட்டுமுயிர்க்கொரு
அருபலக்ஷண மாருறைச்செய்வதே. (௬௩)

உறைசொலும்படி உண்மைவேதாகமங்
குறைசொலுங் குணவண்டமீதானமேல்
பறைமுழங்கப் பராபரம்நீயெனை
நிறைந்தப்பூரண ணுக்கிநிகழ்த்துமே. (௬௪)

நிகழ்ந்தக்காலம் நிதானநிலமிரும்
புகழ்ந்தவேதாந்தச் சித்தாந்தசமரசம்

இகழ்ந்ததத்துவ மிழுக்கமெலாமறும்
திகழ்ந்தசின்மய வாரிவிலாசமே. (௬௫)

சின்மயப்பெருஞ் சோதிவெளிக்குள்வந்
தென்மயங்கலந் தேகசதாசிவத்
தன்மயஞ்சுத்தச் சடிலங்கைவல்யமாய்
நின்மயந்தருவாய் நிறைப்பூர்த்தியே. (௬௬)

பூர்த்தியாயுனைப் போற்றிடப்பொய்மனங்
கார்த்துளாவிமெய்க் கலங்கபுடைத்துடல்
போர்த்துப்புண்புலக் கருவியிடக்கினல்
சேர்த்துலாவுதென் செய்குவனெந்தையே. (௬௭)

எந்தையாறு வீட்டிலுஞ்சற்குரு
வந்துளாதிவளங்கமெய்க் காட்டுவோன்
சுந்தரக்கலைவாசி மலர்வெளி
விந்தைக்காட்டுமறி வானந்தவேதமே. (௬௮)

அறிவினலன்றி அறியப்படாததோர்
குறியுனக்குள் குணக்சடலாயிரப்
பிறியமாய்ப் பெரும்பூதமமர்ந்திடத்
தெறியுஞ்சின்மய தேகவிலாசமே. (௬௯)

அறியுஞ்சோதிப் பூரணத்தாரகம்
பொறிப்புலன்பெரும் பூதப்பொறுவறப்
பிறிவிலாதுல காதிபுபிர்க்கெலாந்
தெறியுஞ்சின்முத்தி ராங்கமெய்ஞானமே (௭0)

தெறியுநின்னருளாவல் படைத்தவர்
துரியஞானச் சோதிப்பரவெளி
அறியுங்காட்சி யநேகயுகாந்தமாய்ப்
பொறிப்புலன்பூத மற்றொருநிஷ்டையே. (௭௧)

ஒருவராதிப் பொருளை நினைந்தவர்
பொருவரோப்புலைப் பொய்யுலகச்செயல்
மருவுமாசை மலங்கருவிச்சுக
மிருமைத்தீயி லிருந்தறியாமலே. (௭௨)

தீபிலீப்புகுந் திணிமதகினில்
மாயைமூடிமனப் புலன்வாயுவா
லாயுமாகமனா லுணர்ந்தாறுவீ
யேதாகில் துளைச்சுகமாகுமே. (௭௩)

துணைத்தருஞ்சுகச்சோதிச் சுயம்புவைப்
புணைந்துஞானநூல் போதகம்பேசிடில்
இணைந்துளாகிச் சுயம்பிருந்திருமைபோம்
அணைத்தும்போற்றிய வருமறையாதியே (௭௪)

அருமறைச்சிவ ஞானநூலோதியப்
பெருமறைக்கருணை காப்பெருமையே
திருமறைத்தெரு வாறிலும்பூரண
இருள்மறைப்பென்ன யிருமைச்சூழாசையே. (௭௫)

சூழ்ந்தஞாயறுச் சூடியவான்மதி
ஆழ்ந்ததேகவநித்திய நுளைப்புகுந்
தாழ்ந்ததத்துவச் சாஸ்த்திரமோதுமேல்
பாழ்ந்தப்பேயங்கப் பாழுடலென்னெஞே. (௭௬)

என்னையானறி யாமலிருள்மனத்
துன்னைப்போற்றி யிருந்தறியாதொரு
அன்னையப்பனு மனைத்துயிராகிய
தன்னிலொப்பருந தாண்டவச்சோதியே. (௭௭)

ஒப்பிலாதறு வீட்டினுந்தெய்வமே
அப்பனேஅறி வானந்தச்செல்வமே

சொப்பனநியவஸ்தைப் பூமிக்குள்ப
னெப்படித்துயின்றெழுந் துணர்வானதே. (எஅ)

ஆனவாருதியே யறிவாகித்தன்
மோனமுத்திரை யாகிமூலாதர
ஞானச்சோதி முளைத்தருள்மூறியத்
தானதாய்ச்சொலுந் தன்மயவாதியே. (எகூ)

தன்மயஞ்சச்சிதா னந்தத்தீபமாய்
என்மயமுல காதியிருந்தருள்
சின்மயம்பழுத் தாதியொருபொருள்
சன்மதம்பயிலும் பரப்பிர்மமே. (அம)

பிர்ம்மமேயுடல் பிறந்துமண்மேலிருந்
தர்ம்மமென்னத் தயாபரத்தாதையே
கர்ம்மச்சாகரங் கல்விவேகமும்
வர்ம்மமன்றியேதொன் றிலேவாய்மையே. (அக)

வாய்மையால் மனமற்றசதாககியத்
தூய்மைதோன்றிடத் தூரஞ்சமீபமாய்
ஊமைவெள்ளம் பெருகிமனோகதி
ஆமைவண்டு அவையெனவாக்குமே. (அஉ)

ஆக்கமேஅருளோ லிடுஞ்ஞானவீ
டேக்கமாகியென்னிருமைத் துயரெலாந்
தாக்கித்தன்னகங்கார சாபல்லியமுந்
தூக்கமுந்தொலைத் தாவியுமாகவே. (அங)

ஆவியாக்கைபொருள் மூன்றுந்தத்தமாய்
பாவியேனழுதேன் பிரண்டாவலாய்த்
தாவினேனெனைத் தந்தையுந்தாயுமாய்
கூவியாளெனைக் கோகழிநாதனே. (அச)

நாதனென்றுனை நாடித்தினப்பணிப்
போதவீட்டையும் பூரணநாட்டமாய்
காதலாய்ப்பயில் கற்பகக்கருணைமீர்
சாதனைப்பெருந்தவம் நல்லநல்லவே. (அரு)

பயிலுமாதிப் பராபரமேயுனை
மையல்நீங்கி மதிப்பிணைந்தோதினல்
துயில்யடங்கித் துவாதசச்சோதிவீ
டியல்பெருந்தவப் பூரணப்பூர்த்தியே (அசு)

பூர்த்தியாயுனைப் போற்றியிருந்தவர்
சூத்திரஞ்சொலுஞ் சோதிப்பரவெளி
நேத்திரம்நடு நின்றுயிலங்கிடும்
போற்றிநான்மணிப் பூபகப்பூரியே. (அஎ)

பூரியாகிப் புராதனக்கும்பகம்
தூரிலாமல் சுவாநுபூதித்துவ
மேரிலக்கமிலாதருள் விளைவெளி
சீரிலக்கமென்றென் மதிப்போதமே. (அஅ)

போதமேமனப் பூரணமற்றொரு
வேதமேயுனைக் கண்கொண்டுபோற்றுவார்
நாதவிந்துங்கடந்தொளி யாகுமெய்
வாதமென்றெழில் மற்றொன்றுமில்லையே (அகூ)

## ஆதியோருதாள்.

ஆதியொருத்தா ளணுவிறந்தற்புதச்
சோதிவெளியாய்த் தோன்றிடமனுவுரு
வேதியன்திருச் சிற்றம்பலம்வநதென்
பேதிப்மைநீக்கிப் பேரின்பத்தைப்புகனறுப்
போதித்துப்பொன்னடிப் பூமியில்நடந்தோன்
மூதிருளழியும்மும் மணி யென்றேன்

ஏதிலாநெஞ்சுடர் ஏகப்பராபரம்
ஓதிலேனென்றை யுணர்ந்திலேனறிவிற்
சாதிகுலமொன்றிலாப் பெருந்தலைமைக்
காதியைக்காட்டிக் கடுவெளிநவின்றப்
பூதியைஞானப் புத்தமிர்தபோதக
நீதியைநினைவை நீக்கித்தானாக
வாதிக்குங்கருவிக் கரணத்தைக்காட்டுவோன்
ஞாயிறுப்போலுடல் நல்லொளியாகுவோன்
பாயுமீருறையுப் பக்குவஞ்செய்குவோன்
ஆயுநாலணைத்தையு மரவணைவீட்டினில்
தோயும்படிஞானச் சுருபனைச்சொல்லுவோன்
தூயசதாசிவத் துணையிதுயென்போன்
காயத்திரியுங் கயிலைக்காசாயமாய்
ஞேயமுணர்த்தும் நிஷ்களானந்தம்
மாயைதாயென்று மகாமதியுணர்த்தினேன்
உள்ளத்திற்குருபர னிதுவெனஉணர்த்தி
கள்ளப்புலனைக் கடிந்துமுன்வாழ்த்தினேன்
சிற்றம்பலத்திற் திருவுருபிதுவெனக்
குற்றந்தொடைக்குங் கோகழிஆண்டவன்
நினைவுநதொழிலும் நீயுநாமொன்றெனத்
தனையறிவித்தத் தந்தையைஉணர்த்தினேன்
கனவிலும்நினைவிலுங் கடியசாக்கிரத்திலும்
நனவிலுமாறுக் கருணையைநடத்துவோன்
எனதைம்புலனு மிருந்திடங்க
மனமற்றக்காட்சி மதிமலர்மவுனி
நிருபமுஞ்சாட்சி ஆதாரமுமுணர்த்தோன்
உருபாருபமு மருட்பெரும்வெளியொளிக்
கிருபாநோக்கமுங் கிட்டெனக்கிளத்தோன்
தருஞ்சிவதற்பர தனிநிலைமாக்கி

அருஞ்சுடர்வாரண ஆதியைப்புகட்டினேன்
அறிவிற்பழமை அரனெறிப்பயிலக்
குறிப்பெறக்காட்டுங் குணக்கடல்குறையா
தேவருமூவரு மொருவருங்காணு
தூவருட்சொல்லுந் துரியாதீதம்
அற்புதம்வளரு மரூபாரூபச்
சிற்பரம்விளக்குஞ் சிந்தைவிளக்கு
பொற்பொதுவாயிரும் பூரணப்போதம்
தற்பரஞானத் தயாபரச்சற்குரு
கற்கக்கடவுள் கருணைதயாநிதி
முற்பகல்காட்டு முன்னேனைபாப்
பிற்பகல்காட்டும் பேசாஅருள்மறைப்
பித்தன்பாண்டி பெருந்துறைப்பெரியோன்
நித்தனேமருதூர்க் கிழவனார்நீழ்சடை
உத்தரகோச மங்கையூர்க்கரசே
அத்தனேபோற்றி அருத்தனேபோற்றி
முத்தமிழ்விளக்க மூர்த்தியேபோற்றி
வித்தகஞான வேதமேபோற்றி
ஒருத்தனேஉலகெலாம் படைத்தாய்போற்றி
கருத்தனேவடவால் நீழொருநால்வர்க்
குருத்ரசண்மார்க்க மாயுறைத்தசமரசம்
விருத்தனேபோற்றி விடையோய்போற்றி
நிருத்தமிட்டல்ல மப்பிரபனுய்நிறைவெளி
பெருத்தநான்மறைச் சொலப்பேசிமுன்சேர்ப்போன்
வருத்துமிந்திரிய வசனயிந்திரியந்
திருத்திமும்மலக் கனலிட்டெரித்துத்
துருத்தியிற்புடம்போல் தொண்ணூற்றாறுப்
பெருத்தக்கருவிப் பேய்மதத்துடுக்கை
வென்றிடும்வேதாந்த வித்தகப்போற்றி

நன்றுதீதற்ற நடுநிழற்போற்றி
என்றுமோர்பொழுதென விளங்குவோன்போற்றி
மன்றுள்வாழசரீரி மார்க்கமேபோற்றி
நாதனென்சென்னி மன்னியநமச்சிவப்
போதன்றாழ்வாழ்கப புரமூன்றெரித்தச்
சீதன்றாழ்வாழ்க திருக்கயிலாய
வேதன்றாள்வாழ்க விண்ணவர்மண்ணவர்க்
கதிபெருங்கருணைக் கடவுள்தாள்வாழ்க
மதிதந்து மாணிக்கச் சுவாமிக்குமரவுரிப்
பதிபசுபாச மறுத்துப்பரிதந்தத்
திருமூலராமென் சித்தன்றாள்வாழ்க
குருபரனாக இக்குவலயம்வந்த
துதிசனகாதியர்ச் சுகமேவாழ்க
விதிமதித்துடைக்கும் வேந்தேவாழ்க
அறுபத்துமூவர்க்கு மன்பர்க்குமமுதுண்டு
மறுமையுமிருமையு மழித்தராப்பகலற
வருங்காலமுணர்த்தும் வாழ்வெளிவாழ்க
ஒருவனேஅடியவர்ப் பங்காவாழ்க
நிருவிகற்பகமாய் நிஷ்டானுபூதி
பெருமையைக்கொடுக்கு மிறப்பிறப்பற்றுத்
திருவருளளிக்குஞ் சிவபெருமானே
உற்றார்மற்றிங் கிலைவார்கழலே
பெற்றார்மற்றும் பேய்நரிதுணையே
துற்றதுத்தானொரு வுகமையாலுன்னைக்
கற்றதுத்தானெனக் காட்சியாய்நல்கிப்
பற்றறப்பேசியப் பழமைதாள்வாழ்க
முத்திமுதலே முழுப்பெருஞ்சோதி
நித்தனேவாழ்க நிருமலாவாழ்க
சுத்தமேதூவடி வாழ்கவாழ்கவே.

## பைங்கிளி.

எல்லாவுயிர்மொழியு மேகமென்றேழுவாதக்
கல்லாவெளியு நவாய்க் காணக்கண்பார்க்குமொருச்
சொல்லாவவருந்தொழிலே சுகமெனமுன்பார்க்குமொருத்
தில்லொன்திருமூலன் தேற்றின்தேன்பைங்கிளியே. (க)

பேசாவருஞ்சோதிப் பிரபன்பெருந்துறையான்
நேசாநுசாரியாய் நேரிட்டநேரமொன்றுஞ்
தூசாகச்சொல்லாமல் தூங்கித்தொல்லோன்கடவ
ஏசாகப்பேசிநின்ற வெழிலென்காண்பைங்கிளியே. (உ)

சித்துருவாய்ஞானச்செய லுருவாய்ததீட்சைநல்கு
முத்துநவமணி புதைந்த முழுவெளியாய்திருநடன
சத்துவாபத்திவெதச் சமரசமெலாமுறைக்கும்
வித்துவதாரணை விளக்கே விரட்டேன்பைங்கிளியே. (ங)

மூவாநெறிப்பேசி மூவருடன்முச்சந்தித்
தேவாவமிர்தருடச் சின்மயமாய்த்தேடுவெளி
நாவாகப்பாவாக நாட்டமூன்றுடையவருள்
கோவாகச்சொன்னச்சுகக் குறிப்பென்கோபைங்கிளியே. (ச)

மருவார்பெருந்துறை வள்ளலெங்கோன்மருளசிவக்,குரு வானசங்கரராய் குலத்துங்கண் பாண்டிகொடி, உருவாளன் தோன்றியபோ தொன்றுமுரசுபடப் பெருஞ்சோதி ஞானம் பேசாதிருள்மலர்ந்த பிணக்கேண்கோ பைங்கிளியே. (ரு)

ஞானக்கொடைப்பயிலும் வெகுநல்லநமச்சிவமாய், மோனன்சிவப்பிரகாச முதல்வன்முன்னோன்கயிலைத், தானன்சமரசவேதாந்த னருட்டுவெளியாய்ப், பானம்செய்திருந்தன்புப் பகர்ந்தனரோ பைங்கிளியே. (சு)

பகர்ந்தனரோவங்நாளில் பாரெழுமூர்படைப்புநர்வாய்த்தா தகர்ந்தனவோதாணுச் சரிசெய்புமூலகத்தோ, டுகந்தனரே,

ஒருவனுல கெல்லாமென்ஞேடிக், சகந்தீச்சாட்சாடுளவுஞ்சாற் றினரோ பைங்கிளியே. (எ)

உளவும்பலவாருணர்த்துமதிச் சாகரந்தான், களவென் ரேைக்கற்றான் கண்ணுடையீர்கேண்முன்ஞேன், படைவாய்க் கரண்திசையாய்பாவாய்ப் பகருவதும், உடையோனவனல வென்னுறையோடிப் பைங்கிளியே. (அ)

உறையற்றிருந்தவன்ஞளில் ஞானமுதம், புறையற்று றைத்தாஞே பொங்கரவஞ்சூழ்காட்டில், மறைநான்முகனுகி வாழ்வதுவுமுண்டாமோடிச், சிறைப்பட்டோ யிருந்தானென் செவிப்பிறங்கப் பைங்கிளியே. (கூ)

தானென்ஞெருபங்கு சாற்றினரோத் தன்னமுதாய்க், கோனென்பிரானஞ்சுங் கொஞ்சுமொழியாரணமாய், நானெ னவன்பனவு மற்றுநடுகாட்டியிருந்தோடி, ஏனென்பாரிலையெ ன்பாரிருநிலமாய்ப் பைங்கிளியே. (ய)

இருநிலராயினம்பொறிபுலன் பூதுள்ளவனென், றுருவா ளனுயனைத்துமாயி ருடலாயுணர்ந்திருந்தான், குருநாதனெங் தைக்கோகழியான் குலதுங்கன், திருநாளாயிருந்தனரோ செ ப்பாய்நீ பைங்கிளியே. (கக)

ஆக ௱௭௧.

## அன்பர்கண்டு.

அன்பர்கண்டு போற்றுகின்றத்
துன்பிலாதச் சோதியே
என்புருகக்கூறுக என்னைத்
தென்புதநதுத் தேற்றுமே. (ச)

தேட்டமாதி யந்தநடுக்
கூட்டமனக் குண்டலி

மூட்டமான மூலக்கனல்
தீட்டபோதுஞ் செல்வமே (உ)

ஓதுஞ்ஞான வீட்டில்மோக
மேதுமற்றுக் கருவிகள்
வாதுமோதிப் பீறிடாதப்
பாதுகாரும் பரமனே. (௩)

காருமைந்து மோரநான்கு
வேருப்பட்டுக் கொள்மலத்
தூருக்கொண்டத் தூல்வேடர்ப்
பேருப்பேத மெவர்க்குமே. (௪)

பேதமாதி வாதுக்கூறும்
வேதமாதி வெறுவெளிப்
பேர்தப்பூரணத் திலென்னை
மூதளிக்கு மூர்த்தியே. (௫)

பூரணத்திலென்னை அன்பர்க்
காரணத்திற் கருதிரும்
ஆரணத்திலோட மோட்டும்
நோரணத்தின் சுத்தமே. (௬)

சுத்தம்மமெய்க்கலந்த சோதி
அத்தனெங்க ளருமையே
பித்தனேயுள் பேசுமாதிக்
கத்தனைக் கடவுளே. (௭)

ஆனவைந்துப் பூதமும்
பானமுண்டப் பனுமறைத்
தானங்கொண்டத் தற்பரமுன்
ஞானவீட்டை நல்குமே. (௮)

வீட்டைக்காலனோட்டு முன்பொய்க்
கூட்டைக்கட்டிக் கொள்ளவுங்
காட்டிவைக்குந் தன்னைமூலர்
எட்டிலோது மேகமே. (௬௯)

ஏகமேயெவ் வுயிர்க்குமூல
ஆகமாதி ஆவியே
தேகப்போக மானச்சோதி
பாகமிட்டுப் பகருமே. (௰)

சோதியான மூலவட்டம்
ஏதிலாதப் பெருவெளிப்
போதித்தாதி யாகுமோன
நீதிஞான நீதமே. (௭௧)

நீதமேயெனக் குள்மூல
வேதமான விமலனே
மாதர்மாயை யற்றபாதிக்
கோலவீட்டைக் கூருமே. (௭௨)

கோலமிட்டச் சாக்கிராதி
நீலவட்டக் குருபரன்
காலமற்றக் கடவுளாயுள்
தூலமானச் சுரூபமே. (௭௩)

சுரூபமாதி யந்தநடு
அரூபமான அத்விதம்
நிருபநாத நிஷ்களங்க
உரூபமான உண்மையே. (௭௪)

ஆக உ௫௫.

## குருபரக்கண்ணி.

அகத்தீசராகயென்மு ஞதியொருப்பொருளுரைக்க
செகத்தீசனுகவந்த மெய்த்தேவேகுருபரனே. (க)

ஆகமங்கள்வேதமநேக கலைஞானமுறை
யேகபரம்பொருளே என்னிறையேகுருபரனே. (உ)

இகபரத்துக்குயிர்க்குயிரா யிருக்குமருட்காரணமே
சுகவிளக்கேஞானசிரி யோய்க்குருபரனே. (ங)

ஈரமிலாநெஞ்சனீமத் தாருடன்சேரும்
மாரன்வழக்குரைப்பேன் முன்வந்தோய்குருபரனே. (ச)

உள்ளபடிப்போற்றிமனம் நெக்குருகிவாடாமல்
கள்ளவிடமாந்தர்வலைக் காளானேன்குருபரனே. (ரு)

ஊக்கஞ்சிறிதேனுமுழ் மலத்தைபோக்கபதம்
ஏக்கமிலேனென்செய்வே னீசாகுருபரனே. (சா)

எள்ளளவேனுங்கிருபை என்னப்பாஎன்சிவமே
தெள்ளுமறிவில்லேனென் சீர்பார்குருபரனே. (எ)

ஏதிலார்மக்களென் றறியப்பொருள்பேசி
சோதிதிருநந்திபோல் சொன்னாய்குருபரனே. (அ)

ஐயமிட்டதுண்டு அரன்சேவடிக்கலந்துப்
பொய்யொழித்துப்பூரணத்தைப் புகட்டாய்குருபரனே. (கூ)

ஒருவாபெருஞ்சோதி உண்மைதிருவிளக்கமுதே
அருளாலவாயென்பொலா நினைவார்குருபரனே. (ய)

ஓதுமருள்பெருவெளியே வொன்றிலொன்றாயுயர்வாசி
தோதுணர்வுத்தேடிசொல்லு நற்றுணையேகுருபரனே. (கக)

ஔவியம்பேசும் யானொருவனுதியென்று
செவ்வியொக்கமொழிவது முன்செயல்நான்குருபரனே. (கஉ)

அக்கஞ்சுருக்கி ஐம்பூதக்கருவியற்று
சுக்கானைத்திருப்பிவைத்து சோதிதுணைதாகுருபரனே. (கஉ)

கல்லாலடிகீழின் கடவுளேகருணைபிரான்
சொல்லாமற்சொல்லிவைக்குந் துணையேகுருபரனே. (கச)

கற்பூரவிளக்குவைத்து யிருகண்ணீரால்கழல்கழுவி
பொற்பதத்தைதியானித்து பூரித்திருப்பனோகுருபரனே.

கண்ணீராராகிக் கவலைதினமாகிஅருள்
எண்ணிதுதிக்கவைப்ப தென்னாள்குருபரனே. (கசு)

கச்சிமாமூலவிளக்கேற்றி பஞ்சசபைவீட்டில்
உச்சிமேல்பார்த்திருக்க உணர்வுதருவாய்குருபரனே. (கஎ)

காமாதிகருவிக் காடெல்லாஞ்சுட்டுவெளி
தாமாதியடையாத சுகவரந்தாகுருபரனே. (கஅ)

காணாஅருள்வளரும் கமலதிருமகள்வீட்டில்
மோனாவென்றழுது முறைச்சொல்வனோகுருபரனே. (கசு)

காற்றூடிவாசிகால் கொண்டுப்பாராது
ஊற்றைஉடற்குள் கனலூதிவைகுருபரனே. (உ0)

காலதச்சனென்றமனக் காவலற்றக்கடுவெளியில்
மூலவிளக்கேற்றிவைத்து முடங்கஅருள்வாய்குருபரனே.

கிருபைக்கடலேகாண் கேளாதெலாங்கேட்க்க
அருபமணிவளர்வெளியிலுனை அழைத்திலேன்குருபரனே. (உஉ)

கிட்டுமோ அருந்தலசுக் கேட்க்குமோவுனதுசெவி
ஒட்டுமோவாசிவெளி உயர்விலிருக்ககுருபரனே. (உங)

கிழக்குவிழுந்ததெனக் கேட்டொழந்துஅருளோடேனே
வழக்குவொழிந்ததென வாழ்த்தியழைப்பாய்குருபரனே.

கீழ்மூலவட்டங் கேசாதிபதம்வரா
ஆழ்கின்றஅப்பா யென்னய்யாகுருபரனே. (உரு)

கீதமினிபகிளி குயில்மயில்போல் வேதமுறைப்
போதமுறைக்கும் வெளிபுகட்டாய்க்குருபரனே. (உசு)

குண்ட லிக்குளுனைவைத்துக் கும்பகலைமதிபரப்பி
தெண்டமுனக்கநேகமிடச் செப்பியிருப்பாய்குருபரனே.

கும்பித்துரேசித்து பூரித்துப்பார்க்குமுன்னே
கும்பித்துயிருக்கவைப்பாய் குணங்குடியேகுருபரனே. (உஅ)

குற்றமொருகோடி புலைக்கொடியனுன்செய்தாலும்
பற்றற்றபட்டணத்தார் பவுசுதருவாய்குருபரனே. (உகூ)

குறையிறந்துஞானக் குறையுறைத்துகும்பிட்டு
குணங்குடியாயிருநதருளைக் கூட்டாய்குருபரனே (ஙய)

குசக்கலமீதென்றுகுல மதசமயமில்லையென்று
ருசவுருவாய்வந்த நிருமலனேகுருபரனே. (ஙக)

கூறுவமுதமொழி வாயதிறந்துவரவழைத்த
சீரானஞானச்சொரூபராகுருபரனே. (ஙஉ)

கூறுதுகூருங்குண வண்டத்துனைபார்த்து
தேரேனேஅப்பாமெய்ச் சிவமேகுருபரனே. (ஙங)

கூத்தாடிஇத்தேகம் விழுகுமுன்கூட்டிலருள்
கூத்தாடிஞானநடம் கொடுப்பாய்குருபரனே. (ஙச)

கெஞ்சிவழக்காடி கேழ்க்குமருள்நீழயரத்
தஞ்சமுனக்கப்பா சருபோஜாகுருபரனே. (ஙரு)

கேட்டுவிடுமென்னை சிறுகாலைவந்துயேழைகுடி
கட்டாககட்டிவைத்த பிருகண்டேணகுருபரனே. (ஙசு)

கேச்சங்கெட்டநாய்போல் கார்த்தூநடுவீட்டிலிருந்
தச்சமற்றுஉனைபோற்றி அர்ச்சித்திரவருள்வீர்குருபரனே.

கேசாதிபாதமடி கீழிருந்ததிருநந்தி
வாசல்மணிபூரகத்தில் வாழ்வுதருவாய்குருபரனே. (ஙஅ)

கேளாமோமியன்மொழியைக் கிள்ளாக்குச்செல்வமென
ஆளாக்கிவைப்பாயுன் னடியருடன்குருபரனே. (ஙகூ)

கேள்வியுனக்கில்லையோ நான்கெட்டுவிடும்பாவியென்று
நாள்மிக்கவாகுதுனை நம்பினேன் குருபரனே. (௪௰)

கேடாளனாகசிவஞான மதைக்கேலிசொல்லும்
பாடாளனுலகிற்பார்க்கவையா தென்குருபரனே. (௪௧)

கைவல்லியநவமே கலந்தவருள்சாதனையே
தெய்வதவாரணைவெளியே மெய்ச்சிவமேகுருபரனே. (௪௨)

கையிற்நெல்லிக்கனிபோல் கண்டுகண்டுஞானமிர்தம்
மெய்யிற்கலந்துபசி யாற்றாய்க்குருபரனே. (௪௩)

கைப்பொருளேபேசாக் கருணைவெளிப்பெட்டகமே
பொய்மையையொழித்திருக்குமருள் புதைப்பாய்குருபரனே.

கைலைமணிவிளக்கேமெய் கலக்கும்வெளிகாரணமே
மையல்விழிசிமிட்டுருவாள் மயக்கேன்குருபரனே. (௪௫)

கொலைபுலையொன்றில்லா விரதமொன்றேபோதுமென
நிலைமைச்சொல்லவருமாதி நிசமேகுருபரனே. (௪௬)

கோதியுதேநினைந்துவிட்டால் கொம்பனையாளாசைமலம்
விதியுதே யொழிந்துவிட விரும்புதே குருபரனே. (௪௭)

கொள்ளைகொண்டகம்பலுங் கண்ணீராறாய்ப்பெருகி
தெள்ளியத்தேனைவெளித் தேடவைக்குருபரனே. (௪௮)

கோபத்தில்விழுந்தயானைபோல் குவலயப்பொய்
வெப்பத்தில்விழுந்திருக்க விட்டதென்னேகுருபரனே. (௪௯)

கோடியவுலகாசைமலக் கோட்டிலேன்விட்டுவிட்டாய்
நெடியஅருள்சோதிவெளி நிலைவிடுநீ குருபரனே. (௫௰)

கோடிமுடியோய்பாண்டிக் குலதுங்காதெக்ஷணத்தில்
படிமுழுதும்சொல்பழமைப் பரமேகுருபரனே. (௫௧)

கோடிமுறைச்சொல்லியுமென் குணங்குடியாய்வாழுமருள்
தேடியவீட்டினிலிருக்குந் தெளிவேகுருபரனே. (௫௨)

கோசபாசங்கள்கெடக் கோனுருவாய்க்குலமிலதாய்
தேசனேசிற்பரஞ்சொல் திருநந்திதேவனே குருபரனே (௫௩)

கோமளமும்வாமளமுங் கொடிமுடியும்பாண்டிநகர்
தேமளமும்செயலுமுள காணாய் குருபரனே. (௫௪)

கோவைநூல்சொல்லிவைத்த குதலைத்திருவாதவூர்
தேவைசிவமாக்கிவைத்தத் திருவே குருபரனே. (௫௫)

கோரமரலிவந்தால் கூறும்வகையென்னசொல்வேன்
தோரத்தெளிவீட்டில் சேர்த்துதைத்தே குருபரனே. (௫௬)

கோணாதுபாசயெமன் கூப்பவந்தால்கோட்டில்வைத்து
நாணாகயற்மாட்டிநடுவிழத் துதைப்பாய்குருபரனே. (௫௭)

கேளவைசொன்னால்பலகையிதெலாம்காலதச்சன்கேட்டுவந்
தால்,செவ்வைசொல்லதுணையெனக்கார்செப்பாய்குருபரனே

சச்சிதானந்தசிவ சதுர்மறையின்வீடுசொன்ன
மெய்ச்சுடரேவேத கொடையாளாகுரு பரனே. (௫௯)

சமயமதக்குல்குதர்க்க மத்தனையும்விட்டநடு
[illegible]மைந்திதரு அருள்விளக்கே ஆதியே குருபரனே. (௬௰)

சாமியுலகுண்டுளதோ சகச அருள்காணெனது
வாமிமகிழ்மகனெனவந் தழைத்தோய்குருபரனே. (௬௧)

சாத்திரமுஞ்சூஸ்த்திரமு மதன்வெளியாய்புண்டுபண்ணி
நேத்திரமாய்நிறைந்த அருள்நினைவே குருபரனே. (௬௨)

சாக்கிராதிக்கனவு சகலகேவலப்பூமிப்
போக்கிசிவப்பூமிக்குள் பொதிப்பாய்க்குருபரனே. (௬௩)

சாதனையோர்நான்குக்கும் மேலானதத்துவனாய்
போதனையும்பூரணமும் போதித்திருப்பாய்குருபரனே. (௬௪)

சாகப்பிறந்தத்தனி யனிவனேதுமற்றத்
தேகனிவனென்றுசிவத் தீக்ஷைபகர்க்குருபரனே. (௬௫)

சாணைத்தொலைத்துதன் ஞானைத்தந்தன்பர்
வானைக்காட்டிமவுனம் வைத்தாள்குருபரனே. (௬௬)
சிவஞ்செயலன்றென்று மிலைத்தேறுமனமேஎன்
றவமொழியக்கருதினது முண்டோகுருபரனே. (௬௭)
சிந்தைச்சிவமாகிச் சிவஞானவீட்டில்என்றும்
எந்தைசருவேசா இருக்கவைப்பாய்குருபரனே. (௬௮)
சின்முத்திராங்கமுடன் சித்திரவீடுண்டுசெய்து
சண்டன்வருமுன்தவஞ்செய் திருக்கவருள்குருபரனே. (௬௯)
சிரகயிலைமன்றுள்நடுத தேவிளங்கவருமுதலை
பரம்பொருளைஞானவெளி படைப்பேகுருபரனே (௭௰)
சீமானேசிற்றம்பலத் தரசேதிருமூலக்
கோமானேஎன்குலக் குன்றேகுருபரனே. (௭௧)
சீநாறும்பிறக்குடிலை விழுமின்றுநித்
தானாகவந்தருளைத் தருவாய்க்குருபரனே. (௭௨)
செத்துவிடுமுன்னே சிரஞ்சீவிநீமகனென்
றுத்திசொல்லவந்த சிலவுருவேகுருபரனே. (௭௩)
செபித்துமுழித்து உரங்கிநிஷ்டைசெய்யாது
சபித்தருளையூட்டிவைக்குந் தாதாய்குருபரனே. (௭௪)
சேக்கரிளமேனி திருவேசிவஞானச்
சொக்கலிங்கமேஎனதுச் சுகமேகுருபரனே. (௭௫)
சேருவனேசிவஞானத் தீட்சையெலாஞ்சொல்லிசொல்லி
மாறாமல்பிறக்கஅறி வேனேக்குருபரனே. (௭௬)
சேற்றில்நட்டக்கம்பம்போல் தேடிநமன்வருமுன்னே
கூத்துவனேஉதைக்குமருள் கூட்டாய்குருபரனே. (௭௭)
சோப்பனத்தில்சொல்லி யிருக்காமல்சிவஞானச்
சொப்பனத்தில்சொல்லிவைத்து யிருப்பாய்குருபரனே(௭௮)

சொன்னபடிநிலைபற்ற சிவஞானவீட்டிவிரத்
தனைசரமேனேசித்தசிகாமணியேகுருபரனே. (எகூ)

சோதிச்சுருபா சுத்தசிவப்பிரகாச
ஆதயொருவா அரனே குருபரனே. (அ௦)

சோறுதுருத்தியடைத் தாற்றித்துயின்றலுத்தேன்
மாற்றானுக்கென்னவஞ்சக வாழிபரனேகுருபரனே. (அச)

சௌபாக்கியமே சமரசமேசத்தியஞ்சேர்
சௌக்கியமேமோன சாற்றாய்க்குருபரனே. (அஉ)

ஞானசிரியோய்நடுவீட்டி லிருந்துனதுத்
தேனாறும்பாலாறுந் தேடித்தருவாய்குருபரனே. (அந)

ஞாயமில்லையோ நல்லிபக்சமுனக்கில்லையோ
தேயம்வந்துபடும்அறிவுக் கென்னசெய்வேன்குருபரனே.

ஞாபகமேஞானருவே துளவேதுணர்வேது
ஞானபிரேஞானசபை விளக்கேகுருபரனே. (அ௫)

தத்துவனார்சுரூபசிவப் பிரகாசர்பெற்றநடுச்
சுத்தசாம்பவிவீட்டைச் சொல்லித்தருவாய்குருபரனே(அசு)

தனித்துத்தவஞ்செய்துச் சண்டனையுந்துரத்துமருள்
தணிகைஅருணலயத்தைத் தருவாய்குருபரனே. (அஎ)

தானாய்க்கனிந்தொழுகுந் தற்பரத்தில்வரவழைக்க
நானாகப்பெருஞானம் நவில்வாய்க்குருபரனே. (அஅ)

சாயூக்ஷியங்கடந்த தன்னந்தனிமனவெளியை
மாயூக்ஷியப்பெறுகும் மனம்பகர்நீகுருபரனே. (அகூ)

திக்கற்றநாய்க்குமருள் தெய்வதவீடுரங்கிநிற்க
சிக்கெனபோதித்துறையும் செயல்தாகுருபரனே. (கூ௦)

தில்லைவெளிநடந்துசிவக் கதிதேடும்பாதைவழி
எல்லைபற்றஇடமருளி என்னேடிருநீகுருபரனே. (கூச)

தீட்சைசிவஞானமுறைத் தீபவுபதேசம்பகர்
ஆட்சிசிவகாமிதந்து அறிவுறைப்பாய்க்குருபரனே. (௯௨)
தீங்குபலக்கருமமலக்கருவித் தீர்ந்துனைவாழ்த்தும்
பாங்கெனக்குதருமாதிப் பராபரமேகுருபரனே. (௯௩)
துக்கந்தொலைந்துசுக சுத்தசுயஞ்சோதிவெளி
சிக்கனஞ்செய்திருக்க செல்வாக்கருள்வாய்குருபரனே. (௯௪)
துன்பெலாந்தொலைந்துதென்று துரியாதிவீட்டிவிர
அன்புயருமட்டாங்கச் சமாதிஅருள்குருபரனே. (௯௫)
துடிக்குமனக்கருவிதுண்ட காலன்தினவருக
இடுக்கமெனக்கையாயென் கடவேன்குருபரனே. (௯௬)
தூங்காஅருள்நடத்தி தூங்குமணிமாதிபகர்
தேங்காதிருவீட்டை திரந்துவைப்பாய்குருபரனே. (௯௭)
தூமந்தொலைந்ததென்றும் சுகராதிபெற்றநடுச்
சேயமிருந்ததென்றுந் தேடித்தருவாய்குருபரனே. (௯௮)
தூசும்பெறுதவுடல் துஷ்டநமன்வருகாது
கோசந்தொலைந்தநடுக் கொடைதாகுருபரனே. (௯௯)
தெள்ளியதேனமுதே தேவர்தன்தெய்வதமே
உள்ளத்திருள்நீக்கு முண்மைவெளியேகுருபரனே. (௱)
தேட்டிநினங்காலதச்சன் தேடிவருகாதுதித்
தட்டியபற்றுசேர்வைசெய்ய ஆளாக்காய்குருபமேனே. (௱௧)
தேவடியார்வீடுபுகுந் தாவடியார்கோவில்சென்று
பூவடிதேவடியென நான்புகன்றிலைக்குருபரனே. (௱௨)
தென்னங்கையிலாசா திருநந்திமாபுடனே
என்னையுநீயாளாக்கி இன்பமளிப்பீர்குருபரனே. (௱௩)
தையலிருவிழிதுடையாள் சரசசுகலீலையற்ற
ஐயலிருள்நீக்கிசிவ மவுனம்பெய்குருபரனே. (௱௪)

தோக்கர் திவசனகலை துவாதமணிசாந்தமறை
எக்காலந்தந்தாதி யிடந்தருவீர்குருபரனே. (௱௫)

தோலையாக்கவலைமனத் தூமனெனைத்தொடாத
அலையாவிபர அரிக்கலைதாகுருபரனே. (௱௬)

தோன்றும்புலன்பொறிகள் தொலையாதப்பூதம்பேய்
என்றாலெனக்குசும்மா இசைவைத்தீர்குருபரனே. (௱௭)

தோயுதேமனமாயை சொல்லிபுரம்வெளிபாய்ந்து
ஆயுதேமலவாசை அடிமைஆளோகுருபரனே. (௱௮)

தோரணங்கள்சுற்று சும்மாச்சிரிப்பதெல்லாம்
ஆரணங்கள்பேசுவது மழகோகுருபரனே. (௱௯)

தோதுகட்டிச்சொல்வதற்குத் தொந்தோமென்றாடுகிறீர்
பாதுனக்குசெய்யமனப் பற்றிலையோகுருபரனே. (௱௰)

தோணிக்கவிழமுன்னே தோணிகட்டிசோதிவெளி
ஆணிப்பொன்வீடெனக்கு அருள்வாய்குருபரனே. (௧௧௧)

தௌஸ்த்திரகான்சொல்லிகடு தாராளமாகசென்றான்
பௌத்திரனுகவையும் பாஞ்சூடரேகுருபரனே. (௧௧௨)

நல்லவனுய்காணுங்குணங் குடியாகிக்குறைதீர
பொல்லவனுனும் பொருத்தாள்வீர்குருபரனே. (௧௧௩)

நாட்டமுடன்காலானப் படிகடந்துகற்றவஞ்செய்
தேட்டமெனக்கருளாதித் தேவேகுருபரனே. (௧௧௪)

நாசநமனென்றொருபேய் நடுவன்வருமுன்னாதி
ஈசனென்முன்னாகவந்து இன்பிடந்தாகுருபரனே. (௧௧௫)

நித்தியமேநின்மலமே நிஷ்களமேநிறைசூன்ய
சுத்தவெளிசோதித் துலங்கமெய்ய குருபரனே. (௧௧௬)

நிஷ்டாநுபூதிபெற்ற நின்னடியர்கண்டகடுக்
கஷ்டமற்றுப்பாக்க அருள் கண்ணே குருபரனே. (௧௧௭)

நீக்கற்றபரவெளியே நினைவற்றபூரணத்துள்
ஏக்கமற்றுதூங்கியிர யிடமருள்வீர்குருபரனே. (௧௧௮)

நீதிநெறியுணர்த்தும் நிக்ஷயமேபிர்யாதி
சோதிரிஷிபகர்கருணை சுகமேகுருபரனே. (௧௧௯)

நெஞ்சறியும்பெருமானே நவநீதநிட்களமே
துஞ்சிநமன்வருகாதத் துயில்தாகுருபரனே. (௧௨௰)

நேத்திரமேஞானநிலை சூத்திரமேசோதிநகர்
சேத்திரமேதில்லைசுகத் தென்பேதருபரனே. (௧௨௧)

நேராகஎன்றும்வரப் போகஅருள்துறையில்சுகம்
ஆராகபோகஉண்டு அருகிருப்பாய்குருபரனே. (௧௨௨)

நையாண்டிகாட்டாது நாதர்திருஅம்பலவர்
மெய்யாண்டிருக்கு முதுமதிதாகுருபரனே. (௧௨௩)

நோந்துமனம்புண்ணாக நோகாமல்நடுநோக்கும்
சந்திவெளிப்பூரணமெய்த் தடந்தாகுருபரனே. (௧௨௪)

நோச்சிநொச்சியென்றுமனம் நொய்யதினஞ்சொல்லாமல்
கச்சிமணிவிளக்கை கடந்திருப்பாய்குருபரனே. (௧௨௫)

நோப்பிடிக்குமனக்கருவி நோக்கிநடுவீடுபுகும்
தாயிமனேன்மணிபூசை அடியாக்சாய்குருபரனே. (௧௨௬)

பண்ணிலேன்கனவிலுநான் பரபூசைசிவஞானம்
எண்ணிலேன்கண்ணேயென் அண்ணேகுருபரனே. (௧௨௭)

பகலிரவுமற்றவெளி பார்த்தால்மிகநலநீர்
சுகராதிதிரவுகடை தொழில்தருவீர்குருபரனே. (௧௨௮)

பரிபக்குவஞ்சொன்ன பராபரத்திஃபரம்பரையில்
நரியாக்கிவந்தநந்தி நல்முறைதாகுருபரனே. (௧௨௯)

பாதமடிமுடிநடுவும் பண்ணேரும்விண்ணேரும்
வேதனுமால்அரன்தேடும் வாலைவிளக்கேகுருபரனே. (௧௩௰)

பாரில்பிறந்தடியேன் பாவியென்றுச்சொல்லாத
கோரிலிருக்கவைப்பாய்க் குணங்குடியேகுருபரனே. (ககக)
பாங்காகஅனல்மூட்டி பாராளுமகராஜ
தூங்காக்கருணைவெள்ளத் துரையேகுருபரனே. (ககஉ)
பாகமிட்டுப்பத்திநெறிப் பக்கிட்டுதருகுமெனை
ஏகமெனஅழைத்துரைத்த இறையேகுருபரனே. (ககங)
பிதாமாதாவாகிப்பேசும் பெருந்துரைவாழ்வே
சிதாகாசபூர்த்தியே சிவவுருவேகுருபரனே. (ககச)
பித்தாபாண்டிபெரியோய் மெய்பிஞ்சகனே
சுத்தனேஅங்கலிங்கக் கருத்தேகுருபரனே. (ககரு)
பிட்டுக்குமண்சுமந்த பிரம்பீசாபெரும்பாண்டி
கட்டுவிரகெடுத்துவிற்ற மெய்க்கண்ணேகுருபரனே. (ககசா)
பீதாம்பரனே பேயோடாடியசிவமே
மாதாம்புயனே மக்கவாழ்வேகுருபரனே. (ககஎ)
பீநாறும்சோறுமல நாறும்புண்ணுடலம்
வாநாறும்ஊத்தையுடற் கென்வகையோகுருபரனே. (ககஅ)
பெற்றவாஞானநடுப் பிரபைவெளிப்பேரின்பங்
கற்றவாகாணவருங் கடவுளேகுருபரனே. (ககக)
பெண்மண்ணும்பொருளாசை பேயாசைவிட்டுசிவக்
கண்மணியைபூசைசெய்ய கலப்பாய்குருபரனே. (கசய)
பேபங்கம்வளர்க்கப் பிறப்பானேனிறப்பானேன்
நாயங்கத்தாலென்ன நலஞ்சொல்குருபரனே. (கசக)
பேசாயோஅப்பா பிர்மாந்திரச்சுகத்தை
வாசாகமாயவாசிவளர்ந் திருக்கக்குருபரனே. (கசஉ)
பேதைபனந்துஞ்சிப்பேசி யுறைத்தறிந்துரைத்தா
மேலதையாரூநித்திலியம்பாய்க் குருபரனே. (கசங)

பைபபையவந்தெனது மசனேநீபார்பாரென்
றையாவுரைத்ததுண்டோ யிலையோகுருபரனே. (கசச)

பைசந்தியாய்வளைத்து பராபரவெளியாய்
முச்சந்திவீடுதென மொழிந்தமுதலேகுருபரனே. (கசரு)

போய்மலக்கூட்டென்னயிதில் பொருந்துமெனவசனித்த
கைத்தவநான்காணத் தானுமோகுருபரனே. (கசசா)

பொல்லாப்பெலாமொழியும் பூரணங்கள்வளரதித
நல்லார்பொல்லாரறியா நடுவென்றேய்குருபரனே. (கசஎ)

புத்திசற்றுமில்லாத புலையனிவனானாலும்
மத்திசங்கள்சொல்லிவந்த மவுனாதருபரனே. (கசஅ)

பூதபேய்க்கருவியுடன் புரம்பலைந்துதிரியாமல்
பூரணத்தில்நிரியவைபபாய் புனிதாகுருபரனே. (கசகூ)

போதமதிபரிக்கவரும் பூரணியைப்போற்றுதற்கு
சாதனைமேலான அரண் தருவீர்குருபானே. (கருய)

போதமேபூரணமே புனிதமார்க்கண்டருக்கு
வேதமதிப்பொருளுரைத்த வித்தகமேகுருபரனே. (கருக)

மனமறைபரிசுதத வைதீகமார்க்கடுக்
கனந்தருவாய்கைலாயத் தானேகுருபரனே. (கருஉ)

மாத்தான்வருமுன்னே மனமற்றப்பூரணத்தில்
காத்தாடிப்பாராக்கன தஉந்தருநீகுருபரனே. (கருங)

மாசற்றவாசி அழகிட்டுப்பாராமல்
மாயைமனம்போக்கெல்லா மாறியலையுதேகுருபானே. (கருச)

மாசிலாமணியையிருக் கண்ணனமனேன்மணியை
தேசிகத்தைபூசைசெய்யத் தினந்தாகுருபரனே. (கருரு)

மின்னணங்கைபரிபுரத்தி மீனணங்கைவாசிவெளி
துன்னணங்கைசோதிதுணைச் சொல்வாய்குருபரனே. (கருசா)

மீதாணுண்டலையாமல் மீதானமுண்டிருக்க
சேதுஹபுதாலு ரகுமான்குருபரனே. (கசுஎ)

முகம்மதெனவுருவாய் முக்கணுடன்வந்தசிவ
செகம்போற்றுஞ்சின்மய தேசொளியேகுருபரனே. (கசுஅ)

மூதேவிபடைத்தயென்ன மூதேவிவீட்டில்வந்து
மாதேவிபூசைசொன்ன முகம்மதேகுருபரனே. (கசுகூ)

மூலமுதலாதார முன்மணிவீடுடல்காட்டி
ஆலமுண்டப்சூலபிமா வசீகுருபரனே. (கஎய)

மெல்லியென்றும்அல்லியென்றும் மேனகைமாதரசியென்றும்
நல்லநடுபூசைசெய்ய நாட்டமருள்வாய்குருபரனே. (கஎக)

மெத்தென்றுமேலாம்படி வீட்டில்படுத்தாங்குஞ்
சித்தர்வந்துபேசிருக்கு ஞானஞ்செப்பாய்குருபரனே. (கஎஉ)

மேருவைத்துஆதியந்த நடுவீட்டில்வாலைமணி
சீருசொல்லவந்தபரஞ் சிவமேகுருபரனே. (கஎங)

மெச்சிமனம்சித்தர்சொல்ல வேதாந்தவாழ்வுறைக்கும்
முச்சுடரேமூச்சற்ற விளக்கேகுருபரனே. (கஎச)

மைவிழியாள்பாசமற்று வாழ்விக்கவரங்கொடுக்கும்
மெய்விழியேமேலாம் வீடேகுருபரனே. (கஎரு)

மையநடுவீட்டிலரிமால் வாசியொட்டிபகர்
ஐயனேஆதிசரு வேசனேகுருபரனே. (கஎசு)

மோய்வார்குழல்மடவார்மோக மணிகட்டும்வெளி
கைவார்கழலுமைகண் கருத்தேகுருபரனே. (கஎஎ)

மோனசத்தியுடனைந்து பூத அட்டசத்திசிவ
ஞானசத்திசொல்லவந்த நடுவேகுருபரனே. (கஎஅ)

மௌனியொருவர்முன்னே வாழ்த்தரவிகமனமதி
சிவவெளியாய்செப்பிநிற்குந் தேவேகுருபரனே. (கஎகூ)

வன்னிநடுவாசிமலர் எண்ணிவளர்த்திருவிழியோ
டுன்னிகடுவெளிபேசும் ஒன்றேகுருபரனே. (௧௮௰)

வாசிநவமணிசித்திர வாலைசிவவிளக்கேற்றி
தேசிகராய்சொல்லுந் திருத்தேவகுருபரனே. (௧௮௧)

வாதமணிமாதிசித்தி வைப்பெலாங்காட்டுமருள்
சோதிமணிச்சூத்திரமே சுகஞ்சொல்லாய்குருபரனே (௧௮௨)

வித்தைபுத்திமதிசொல்லும் வேதவெளிவிடைபாகா
எத்தைசொல்விநற்கதிகற் றிருப்பேன்குருபரனே. (௧௮௩)

விண்ணாலேவிமலாயென் விருப்பமேகருத்தற்ற
எண்ணமின்னமேனெனக்கு வந்தாய்குருபரனே. (௧௮௪)

விண்ணொடுமென்னப்பாழு மற்றநடுவெளிவிளக்கே
கண்ணொடுசேர்ந்திதையமணிக் கலப்பீர்குருபரனே. (௧௮௫)

விருதாவில்போவேன்முன் விருத்தனாய்வந்துரைத்த
சருதாரேசதாசிவமே சங்கரசம்போகுருபரனே. (௧௮௬)

வீணொண்ணமாய்கவலை விளையுதேசாணங்கம்
ஏணொண்ணிவளர்க்க யிழியுதேகுருபரனே. (௧௮௭)

வீராப்பும்வீம்புபல விரகராகங்களுடன்
தீராப்புன்மனமாயைச் சிரிப்பேன்குருபரனே. (௧௮௮)

உற்றாரும்பெற்றாரும் ஊராரும்உதவியுண்டோ
கற்றாருமுண்டோபொய்காலன்கடவுநாள்குருபரனே. (௧௮௯)

உண்மைசொல்லமவுன ஒருநாள்போல்ஒருநாளில்
கண்கலந்துபேசிநின்ற காரணமேகுருபரனே. (௧௯௰)

வெட்டவெளியிட்டநடு விபரமென்னநாதாக்கள்
சுட்டறியதோன்றாசுக மென்றீர்குருபரனே. (௧௯௧)

வேதமொடுசித்தாந்த ஞானமதிபேசுமனே
பாதமடிமுடிநிறைந்த பதுக்காபரமேகுருபரனே. (௧௯௨)

வையகத்தில்தேடி வதங்குவேன்முன்வந்த
வைதிகமெய்சைவ வாசகமேகுருபரனே. (௧௯௩)

ஓதாதாருக்குமொளி உச்சிதமேகுருநேமை
ஆதாரமாகுமண்ணு அசையிதென்னீர்குருபரனே. (௧௯௪)

ஒருவாவுன்னருள்வாழி உண்மைதிருக்கழல்வாழி
திருவேஉன்திருசிற்றம்பலம் வாழிகுருபரனே. (௧௯௫)

சிதம்பரமுங்கைலாசத் திருவுலாகிவந்தப்
பதமிதுவென்றுரைத்த கழல்வாழிகுருபரனே. (௧௯௬)

ஒன்றும்பெருஞ்சோதி ஒருவர்சிவகுருவென்முன்
நன்றாகவந்தவர்சீர் நானென்றேய்குருபரனே. (௧௯௭)

## நந்தீஸர்கண்ணி.

அறியுமறிவுக்காதியாய் விளங்கும்வெளித்
தெறியதினம்வருவாய் சின்மயமேநந்தீஸ்பரனே. (௧)

ஆதியேசோதி அரூபவெளிவீட்டில்வரும்
நீதியேநினைவேநன் னெறியேநந்தீஸ்பரனே. (௨)

இருமைத்துயர்நீக்கி யிதையபரிபூரணமாய்
அரும்பொருளேஎன்னை அறிவிப்பாய்நந்தீஸ்பரனே. (௩)

ஈரமிலாவன்நெஞ்ச னென்னையுநீ அன்பரொடு
சேருமொருக்கநிலைவெளித் திரப்பாய்நந்தீஸ்பரனே. (௪)

உள்ளமுருகிவுனைத்தேடுந் திருவம்பலமொன்
றெள்ளாமவென்னப்பா எனக்கருள்வாய்நந்தீஸ்பரனே. (௫)

ஊநிமனவாய்வடக்கி வுணராடலுள்ளபடிச்
சோதிவெளியாக்கிமனத் தொடக்கறுநந்தீஸ்பரனே. (௬)

எண்ணியெண்ணிநெஞ்சு மிறைஞ்சிமனமுறுகமதி
உண்ணும்பவநீக்கிஉண்மைப்புகலாய்நந்தீஸ்பரனே. (௭)

ஏக்கமேவிட்டு யிகபரஜாலங்களைந்தத்
தூக்கமேவிட்டசிவத் துயில்தாநந்தீஸ்பரனே. (அ)

ஐம்பூதக்கருவிமல அனலு நுகிப்போகாமல்
செம்மைசெய்வாய்ச்சிட்டர்துதி தேவேவநந்தீஸ்பரனே. (௯)

ஒருவாபெருங்கருணை வொப்பிலாமணிவிளக்கே
பெருவாழ்வேபேரின்பப் பேச்சேநந்தீஸ்பரனே. (௰)

ஓரஞ்செய்யைம்பெரிய பூதபடுநெருப்பவியுஞ்
சீர்படுமெய்ஞானசெய லளிப்பாய்நந்தீஸ்பரனே. (கச)

ஔவியமிலாதநெஞ்ச ஞக்கிஅறிந்துணருமொரு
ஔவ்வளருள்வாய்ஞான வெளியேநந்தீஸ்பரனே. (கக)

அத்துவிதமாயாறு வீட்டையுதிறப்பிவெளி
சித்தர்பதஞ்சலிசெல்லத் திறப்பாய்நந்தீஸ்பரனே. (கங)

ஆதிபொருமுதல்போற்ற அறிபாநக்சிறுவனென்று
சோதிமுதல்நரவருமெய்ச் சுடரேநந்தீஸ்பரனே. (கச)

இன்றிருந்தார்நாளைக் கில்லைசிவமேஎன்மனப்போர்
வென்றுகடைநம்திரவைப்பாய் வித்வமணியேநந்தீஸ்பரனே.

ஈகையிலேயினெஞ்சமையா யீமச்சுழிகாடு
ஆகையிஞலாதரிக்கு மறிவாவாய்நந்தீஸ்பரனே. (கசு)

உப்பிட்டப்பாண்ட முழுத்துவிடுமுன்னுதிச்
செப்பறியத்தில்லைவெளிச் சேர்ப்பாய்நந்தீஸ்பரனே. (கள)

ஊசிமலப்பிணநாறு மூத்தையுடலழியுமுன்னே
வாசியழகொளியுயர்த்தி வாழ்வுதருவாய்நந்தீஸ்பரனே. (கஅ)

எத்திமனக்காலதச்சன் பிணங்கிநினமேய்க்கவிட்டாய்
கர்த்தருட்கனகசபை காட்டிக்கலப்பாய்நந்தீஸ்பரனே. (ககூ)

ஏமாச்றிஎன்னையிராப் பகலாகநாள்போக்கி
சாமார்த்தியஞ்செய்மனஞ் சமைப்பாய்நந்தீஸ்பரனே. (உ௰)

ஐயாருட்கயிலைச்சிவ அத்தனைஉமாபதியை
மையலறுத்துமதிவகை தாநந்தீஸ்பரனே. (உக)

ஒளிபிட்டத்தாரகத்தி லுளியிட்டச்சாந்துபோல்
வெளியிட்டமாயை வெருட்டுதேநந்தீஸ்பரனே. (உஉ)

ஓதாதார்க்குண்டோ உயரொழுக்கமுண்மைநலம்
வாதாகவசனமிட்டு மறிக்குதேநந்தீஸ்பரனே. (உஙு)

ஓம்மென்றவீட்டிற்குள் ஒரைந்தெழுத்தடங்கி
நாமென்றுபாக்களென்ன நஷ்டம்நந்தீஸ்பரனே. (உச)

கரணமலமிசைந்தவெளி கட்டொறிகள்விறியபுலை
அரண்கோலியாணிலையு மறிவேன்நந்தீஸ்பரனே. (உரு)

காமமருப்புயறக் கட்புலன்களாசைபுகும்
ஊமமென்னக்காட்சியுனைத் தொழுதால்நந்தீஸ்பரனே. (உசு)

கிருபைக்கடலே கேளாதோஉன்செவிக்குச்
சுருபச்சுடரே சூழொளியேநந்தீஸ்பரனே. (உஎ)

கீச்சுகீச்சென்னுங் கிளிபோல்மனமாயை
பேச்சுவருஞ்சூதென்ன நீபேசாய்நந்தீஸ்பரனே. (உஅ)

கெல்லிகெல்லிமனவரவு கிளருமலப்பாசவழற்
அல்லிற்கிடந்தலைந்து அலையுதேநந்தீஸ்பரனே. (உகூ)

கேசாதிகால்கொண்டு கீழ்மேலுங்கண்டிரங்கி
ரோசம்வைத்துநிஷ்டைசெய்ய உணர்த்தாய்நந்தீஸ்பரனே.

கைப்பொருளைஞானக் கருணைநவநீதமுமே
மெய்ப்பொருளைபேசா விளக்கேநந்தீஸ்பரனே. (௩க)

கோலைபுலைசூழ்காமப் பொறிபுலன்பூதறியகுறி
நிலைபலவாங்கன் மமென்போல் நிகரார்நந்தீஸ்பரனே. (௩உ)

கோதையர்களாசையற்றுக் குருநிஷ்டைச்செய்புமொரு
போதைபூரணமவுனம் போதிப்பாய்நந்தீஸ்பரனே. (௩௩)

கௌவுதேபாசமனங் கலையுதேஒன்றையொன்றாய்
வௌவுதேவந்துபல மலத்தீநந்தீஸ்பரனே. (௩௪)

சாகரஞ்சூழ்கருவிச் சாக்காடென்சாகரந்தீர்
ஏகபரம்பொருளே இறையேநந்தீஸ்பரனே. (௩௫)

சிந்தையசைந்துசித்த பிரமைகொண்டுதினம்
வந்தவழியறியாது வாடினேன்நந்தீஸ்பரனே. (௩௬)

சீமாட்டிஆசையிலுந் தெருத்திண்ணைகுப்பையென்று
பாம்பாட்டிவந்தகுரு பதமறியேன்நந்தீஸ்பரனே. (௩௭)

சீறுபாருண்டுசிவனடியார்த் துயர்தீர்க்கும்
ஆறுதலுமுனக்கதிக மென்பார்அரனேநந்தீஸ்பரனே. (௩௮)

சுகந்தாவென்றுனைக்கேட்க சொன்னால்குறையுமென்று
செகத்தாசைக்குள்வைத் தெங்கிருந்தாய்நந்தீஸ்பரனே (௩௯)

சும்மாவிருக்குஞ் சுதந்திரமெனக்கில்லையோ
அம்மானேபாண்டி அப்பாநந்தீஸ்பரனே. (௪0)

சூதற்றுக்கருவிச் சுழல்கற்றுசூககுரத்துண்
வாதற்றுகாரணத்தை வழுத்தாய்நந்தீஸ்பரனே. (௪௧)

செல்வப்பெருக்கே சித்தமசையாததவக்
கல்விப்பெருக்கைஎன்றுங் காட்டாய்நந்தீஸ்பரனே. (௪௨)

சேத்திறந்துபோகுஞ் சித்தசாபல்யமெனை
பத்திவழிக்காட்டி பக்கம்வைப்பாய்நந்தீஸ்பரனே. (௪௩)

சேண்பாலுங்கற்கண்டாய் செற்றுணர்ந்துசெத்துதவம்
காண்பானுய்வைத்தருகில் கருத்துசொல்நந்தீஸ்பரனே. (௪௪)

சைவச்சிகாமணியே சாஸ்திரமேவேதாந்த
மெய்வாழ்வேஏகபர வெளியேநந்தீஸ்பரனே. (௪௫)

சொல்லுஞ்சுவைபாகே சுத்தசிவசன்மார்க்கக்
கல்லுங்கருத்தொளியே கண்ணேநந்தீஸ்பரனே. (௪௬)

சோதிநடுவீட்டொளியே சுருதிகலைஞானமகிழ்
பாதிமதிச்சூடுஞ் சிவகுருவேநந்தீஸ்பரனே. (௪௭)

ஞாபிறைநவமணிபொன் மலைமேரநாயினுங்கீழ்
வாயாரவாழ்த்திவணங்க வைப்பாய்நந்தீஸ்பரனே. (௪௮)

தாபானவாமம்வைத்து தந்தையுனைப்பூசைசெய்ய
மாயாமனத்தைஅய்யா மடிப்பாய்நந்தீஸ்பரனே. (௪௯)

தனந்தனியாய்ப்பூசைசெப்பும் தன்மதவாரணவீட்டை
எனக்குநீசொந்தமா யீவாய்நந்தீஸ்பரனே. (௫௰)

திண்ணந்தினம்பிறக்குந் திருச்சிற்றம்பலவீட்டில்
எண்ணமெல்லாந்தொலைந்திருக்க இடந்தருவாய்நந்தீஸ்பரனே.

தில்லைமணித்தெருவீட்டில் தினம்பேசுஞ்சிற்பரனே
எல்லைமணிவாயல்வந்து கூப்பாய்நந்தீஸ்பரனே. (௫௨)

தீமொழகாய்சித்தந் திகைத்தழுதுசிதைப்பட்டேன்
வாய்மொழகாயுருகிசொல்ல வருவாய்நந்தீஸ்பரனே. (௫௩)

தீராக்கோபம் பாடாய்முடியுவண்ணம்
பாராதேஅப்பா எழைப்பாவிநந்தீஸ்பரனே. (௫௪)

தீரனுய்ச்சிற்றம்பல வீட்டில்பேசிவர
தாரணுசகலகலை தயையேநந்தீஸ்பரனே. (௫௫)

தெய்வதமேஞானச் சிறப்பேதியானவட்ட
மெய்பதமேவேண்டா விருப்பேநந்தீஸ்பரனே. (௫௬)

தேறித்தெளிவேனோ சிதம்பரத்தைகண்டுறங்கி
மாறிநான்கொள்வேனோ வாசிவைப்பாநந்தீஸ்பரனே. (௫௭)

தைக்குந்தமனமாயைச் சலிப்பினூசியைபோல்
முப்க்குந்தமுடைமையா முழுமுதலைநந்தீஸ்பரனே. (௫௮)

தொல்லைபோம்சொன்னால் சோதிவெளி அண்டபிண்டம்
எல்லாருமெல்லாப் பிணிபோம்நந்தீஸ்பரனே. (௫௯)

தோற்றம்பொய்சும்மா யிருக்குமதிபூரணத்தில்
கூத்தனைஉதைக்கும்வகைக் கூர்வாய்நந்தீஸ்பரனே. (௬௰)

குண்டுணிபொய்க்குறைகூறிக் கூட்டைதினம்நான்வளர்க்க
கண்டாயோஐயாக் கண்மணியேநந்தீஸ்பரனே. (௬௧)

கூச்சமற்றுப்பார்த்துங் குணவண்டத்தெல்லைகடந்
தாட்சிமனோன்மணியை அருகமைப்பாய்நந்தீஸ்பரனே. (௬௨)

தொலையாவிசாரம்பொய் சூதுளம்போராடுலசத்
தலையாகலைமதிவைத் தனைப்பாய்நந்தீஸ்பரனே. (௬௩)

நாட்டமுடநன்றாய் நாதாந்தவீடுகட்டி
தேட்டமுடன்கடக்கும்வகைச் செப்பாய்நந்தீஸ்பரனே. (௬௪)

நானாவிதரூப ஞாதுருவைப்போக்கிசிவ
ஞானாமிர்தங்குடிக்க நவில்வீர்நந்தீஸ்பரனே. (௬௫)

நவநவமாய்பந்திவிட்டு நான்மணிகூடத்திலருள்
சிவமயத்திலுனைப்போற்றத் தினங்கூர்நந்தீஸ்பரனே. (௬௬)

ஓமென்றபூரகத்திலுனைப் போற்றிப்பூரணமாய்
நமமென்றிலாதநடு நாட்டமருள்நந்தீஸ்பரனே, (௬௭)

அணிமாதிசித்திசொல்லு அஷ்டாங்கசூக்ஷமுறைப்
பணித்துவரும்நடுவே மேலென்பீர்நந்தீஸ்பரனே. (௬௮)

ஞானசித்திரைப்பெற்று நவநவமயிரவிபரப்பி
மோனமணித்தாய்மொழிய முன்னுவாய்நந்தீஸ்பரனே. (௬௯)

அஞ்சாக்கரம்பரப்பி ஆதியந்தநடுவீட்டில்
நெஞ்சாரப்போற்றும் நினைவருளாய்நந்தீஸ்பரனே. (௭௰)

வாய்வுபத்துமில்லாமல் வாசிமலர்பரித்திளையை
ஒய்வற்றுபார்க்குமுபதேசஞ்சொல்நந்தீஸ்பரனே. (௭௧)

கற்பகமெய்சோதிநடுக் கலந்தாடப்பிராணையம்
செப்படத்திலிருப்பதுபோல் செய்வாய்நந்தீஸ்பரனே. (௭௨)

முற்பவத்திற்செய்தவினை யில்லாதுமுன்னுன்கும்
கற்பகஞானவடல் கலப்பாய்நந்தீஸ்பரனே. (எங)

வடவாலநிழலில்வளர் மதிகாடுங்கதிர்காடும்
விடவாலகண்டோன் வெளிநிலமும்நந்தீஸ்பரனே. (எச)

பொய்யோபேசுவதும் புலைகருமம்புகலுவதும்
அப்பாஎன்னநியாய மருள்மழையேநந்தீஸ்பரனே. (எரு)

ஏசாயோயென்பொறியும் பூதமலப்புலநெருப்பை
ஆசாபாசங்கெடவா வருகென்நந்தீஸ்பரனே. (எசு)

கற்றவாஞானபழம் பொருளேகற்பகவிளக்கே
உற்றவாயெனைப்பெற்ற வுயிர்க்குயிரேநந்தீஸ்பரனே. (எஎ)

பெற்றவாபேசாப் பெருங்கருணைப்பெருவெளியே
பற்றற்றவருள்ளம் பரிபூரணமேநந்தீஸ்பரனே. (எஅ)

கேசாதிதூரங்கிழக்கருணன் உதயம்வர
மோசாடவியிலதாய் முழ்க்கவைத்தாய்நந்தீஸ்பரனே. (எகூ)

நிராலம்பவெளியாய் நிஷ்களமாய்நினைவாகிப்
பராபரவெளியாய்ப் பகர்ந்தபரமேநந்தீஸ்பரனே. (அ௰)

மூலவிளக்கிட்டு மூத்துபோல்முழத்துயிற
கோலஅழகுஞ்செய்துக் கொடுத்தாய்நந்தீஸ்பரனே. (அக)

மால்மனையைக்காளாக்கி மன்றுளருள்தேடிநிற்க
சேலாகிக்கலந்த அருட்டெளிவேநந்தீஸ்பரனே. (அஉ)

வேதாரணமே விமலாவேதாந்தமுறைப்
போதாரணமேமெய்ப் புகழேநந்தீஸ்பரனே. (அங)

மாறுத்தியான மண்டபத்துளெனைச்சேர்த்து
நேராகப்பேசிநிசம் தந்திருநந்தீஸ்பரனே. (அச)

சித்திரமணிஞானத் தெருவிலலைந்துனைத்தேடும்
நித்திரையில்லைவைப்பாய் நிர்மலனேநந்தீஸ்பரனே. (அரு)

வச்சிரமணி விளக்குவைத்து வாசியிருகால்பொதியும்
உச்சிமணிவிளக்கொளியே உண்மைப்புகலாய்நந்தீஸ்பரனே.
வங்கென்றவீட்டுக்குள் வாசிமலர்கண்டுருவ
நங்கென்றநாதத்தை வைத்தூதாய்நந்தீஸ்பரனே. (அஎ)
நாதமணிபூரகத்தில் நன்றாய்கண்டரவணையில்
சூதமணிச்சோதி சொல்லிவைப்பாய்நந்தீஸ்பரனே. (அஅ)
நீலமணிபூரணமே நிட்களசதாசிவமாய்க்
கோலமணிவெளிபூட்டைக் கூடாய்நந்தீஸ்பரனே. (அகூ)
பேராசையுன்மேல்நான் பித்தாகப்போற்றிநிற்க
பூராகதந்துனதுபொற்பதங் காட்டாய்நந்தீஸ்பரனே. (கூ0)
பேசா அருட்கருணைப் பேசியருளுட்புகுந்தாள்
தேசிகசிவமேஎன்னருள் தேவேநந்தீஸ்பரனே. (கூக)
பூசனையும்போய்ப்பூதப் புரக்கருவிப்பொறிபுலனும்
தூசாய்த்துடைக்குமொரு சோதித்துணைதாநந்தீஸ்பரனே.
போதமதிநீண்கருணைப் பூரணவால்சென்றுரங்கா
வேதாந்தங்காட்டியிரும் நடுவெளியேநந்தீஸ்பரனே. (கூங)
புத்திசற்றுமில்லாப் பொய்யுடற்கொண்டலைந்தாலும்
கர்த்தனேயானந்தவெளிக் கலப்பாய்நந்தீஸ்பரனே. (கூச)
மூடமனமதியால் முற்றிலுங்கண்டுரங்காதக்
கேடனுகிலுந்தேடக் கிருபைதருவாய்நந்தீஸ்பரனே. (கூரு)
மாடமணிவிளக்கேற்றி வாய்மைதினம்பேசுமதி
வீடணிவாயல்திறந்து விடுவாய்நந்தீஸ்பரனே. (கூசு)
கருதியவெலாங்கருணைக் கண்மணிபோல்கடவுளருள்
பொருத்தமெனப்பூரணமாய்ப் பொதிப்பாய்நந்தீஸ்பரனே.
ஆருமற்றப்பாவிஅய்யா நானொருவனுன்போல்
சீருபெற்றச்சித்தர்சிவ ஞானமருள்வீர்நந்தீஸ்பரனே. (கூஅ)

முச்சந்திவெளியில் முடங்கிகேசாதிபதம்
நிச்சயத்தைநினைவுடன் தந்தருள்வாய்நந்தீஸ்பரனே. (௯௯)

பால்பழமுந்தக்ஷணமும் பலபலவாம்பக்ஷணமும்
ஆலடியில்வைத்து அடிபணிவேன்நந்தீஸ்பரனே. (௱)

சந்நிதியில்நீசென்றத் தடவரையில்பலகோடி
சென்னிதிருக்கோவில் சிவகதிகாண்நந்தீஸ்பரனே. (௱௧)

வந்தவருட்சோதிஅடி வாழ்நந்திருமூல
தந்தைசிவமொழிவாழ்கத் தாதாய்நந்தீஸ்பரனே. (௱௨)

ஆக-௱௨.

## மனோன்மணிக் கண்ணி.

அரியாசனம்பரப்பி அரவணையிற்றுயிலொழப்பித்
திரிகோணவீட்டிலுனைத் தியானிப்பேன்மனோன்மணியே.

கண்கலந்தஞானக் கடுவெளியிலுனைவாழ்த்தி
எண்கலந்துயேகமா யிருப்பேனஃமனோன்மணியே. (௨)

பேசாவருஞ்சோதிப் பெருவெளியிலுனையடுத்து
ஏசிறென்றுசொல்லிச் செல்லாக்குறைப்பேன்மனோன்மணி

வாபாரவாழ்த்தி வறுமையுலகென்றேசி
ஆயாமறைநூலே அம்மாவென்பேன்மனோன்மணியே. (௪)

மதியிரவிப்பரப்பி அண்டவான்மேருதலைகணியாய்
துதித்துதுரியாசனத்துள் துதிப்பேனமனோன்மணியே. (௫)

காதல்மிசவாய்க்குழைந்துக் கண்ணீர்ப்பெருகிநினம்
மூதண்டமூலத்துள் முழிப்பேன்மனோன்மணியே. (௬)

ஐந்தெழுத்துப்பெட்டசத்தி லநேகமறையுறைதேட
பிஞ்செழுத்தைப்பேசிமனம் பிர்மிப்பேன்மனோன்மணியே.

கெஞ்சியாழதூங்கிக் கிழக்காதிஉதையமலர்
வஞ்சியழகுண்டோவென்று வாழ்த்துவேன்மனோன்மணியே.

வச்சிரமணிவாசி மனக் கல்லிலருள்மையரைத்து
அச்சமற அஞ்சனமிட் டறிவேன்மனோன்மணியே (௯)

வாசிகால்தூக்கி வடக்குடக்குமாளிகட்டி
தேசிவெளிவீட்டிலுனைத் தேடித்திரிவேன்மனோன்மணியே.

நாசிநடுவீட்டில் நந்திதரிசனங்கண்டுக்
காசிராமேசுரமாய்க் கடுநடைநடப்பேன் மனோன்மணியே.

அம்மாவெனவுறைவாயு ழவ காங்கால்கூப்பிச்
சும்மாயிருக்குமிடம் சொல்சொல்லென்பேன்மனோன்மணியே

தீபவெளிப்பரப்பிச் சின்மயமாய்ச்சிறப்புசெய்துத்
தூபமிட்டுப் பார்த்து துதிச்செய்வேன் மனோன்மணியே. (௧௫)

கஞ்சனுமால்போற்றுங் கற்பூரவிளக்குவைத்து
அஞ்சலிசெய்தாயியென்று மாட்சியென்பேன்மனோன்மணியே

மந்திரங்கள்செபஞ்சொல்லி மங்களஞ்செய்மண்டபத்துள்
செந்தணலிட்டோமதண்டஞ்செய்தாழ்வேன்மனோன்மணியே

பொன்மேருகலைவாசிப் புட்பமலராசனத்தில்
கண்மேருக்கூடலுண்டாய்க் காண்பேன்மனோன்மணியே.

அட்டதிக்குக்கால்பரப்பி ஆணிப்பொன்மஞ்சணையில் [யே
சிட்டர்பதஞ்சலிபோற்றும் தேவிசிறுபெண்ணே மனோன்மணி

ஆலமுண்டக்கூடற்றிரு ஆலவாய்திரந்துபஞ்சக்
கோலமுண்டவாசற் குடியிருப்பேன்மனோன்மணியே. (௧௮)

சின்மயச்சிற்பரவுருவாய்ச் சிறந்தகண்டநிறையுருவாய்
தன்மயஞ்செய்தியாவு மிரசரண்செய்வேன்மனோன்மணியே.

ஏழையுனக்கடிமையென்று எண்ணிமனமிகவேசப்
பாழங்கம்வளர்த்துதினம் பார்ப்பேன்மனோன்மணியே. (௨௰)

மாணிக்கத்தொட்டிலிட்டு மஞ்சணையில்நீயிருக்கக்
காணிக்கைதந்துனையான் காண்பேன்மனோன்மணியே (௨௧)

பூர்ணத்தோரணமோடப் புஷ்பணையில்நின்றதின்கீழ்
நாரணன்மால்தேடுமடி மூலத்தாயேமனோன்மணியே. (உஉ)

கண்டவர்க்குகற்பதிக கருணைவெளிக்கைகூப்பித்
தொண்டுசெய்யும்ஞானத் துரைமாதேமனோன்மணியே.

வேதாந்தக்கலைபயிலும் விண்மணியேகண்மணியே
நாதாந்தநடுமணியே நாமகளேமனோன்மணியே. (உச)

புத்தகியேபுராதனயே போதமதிநீழ்சுடரே
வித்தைபரிபூரணியே மெய்விளக்கேமனோன்மணியே. (உரு)

கர்த்தருட்சந்நிதானங் காட்டிதிருவம்பலவாய்
நிர்த்தனத்தைகாட்டுமரி வடிவேமனோன்மணியே. (உசா)

ஆசைக்கிசைந்துச் சித்தித்தாடுமணி அம்பலத்தில்
கூச்சமற்றுப்பார்க்கவருள் கொடுப்பாய் மனோன்மணியே.

ஆராதப்பெருந்துயராய் அழுதழுதுயெனைபெற்றசிவ
ஆராதாரப்பொருளே அம்மம்மாமனோன்மணியே. (உஅ)

வச்சிரமணிவிளக்குவைத்து வாசியிருகால்பரப்பி
உச்சிதமாய்ப்பூசித்து உனைகேட்பேன்மனோன்மணியே.

மெய்ச்சுடர்க்கண்டானந்த வெளிபரப்பிவேதாந்த
முச்சுடர்பார்த்துனைமுனைவேன் மெய்மொழியேமனோன்மணி [யே

நாற்கலையைபரப்பி நடுநாதாந்தமண்டபத்துள்
சீபநேகஞ்செய்து சிரங்குவிப்பேன்மனோன்மணியே. (௩க)

மின்முகிலும்வெளியுருவும் விந்தெழுத்துமிகபரப்பித்
தன்வெளியிலானந்தத் தடம்புகுவேன்மனோன்மணியே.

வஸ்துவைத்துப்பானமிர்த மணவரையிலுனைவைத்து
பக்ஷணமும்பால்பழமும் படைப்பேன்மனோன்மணியே.

மரகதசெந்தழலெழும்பி வாமம்வைத்துடனமகிழ
சிரகிரியிலரவனைமூலம் தெரிசிப்பேன்மனோன்மணியே.

இரத்தினத்தால்நாதவிந்துங் கடந்தபெருவெளியாக்கி
ஆரத்திவெகுஆபரண முனக்கணிவேன்மனோன்மணியே.

ஓங்காரவீடுகட்டி உடலாறுவீட்டிற்குள்
பாங்காகயிதழ்பரப்பிப் பணிவேன்மனோன்மணியே. (௩௬)

அரம்பைவெகுபேர்வரிசை ஆலாத்திபந்தலிட்டிருக்க
குரம்பைவெளிக்கதிர்மதியைக் குவிப்பேன்மனோன்மணியே.

கதிர்சிந்தமலர்தூவி கால்கழுவிசோடசங்கள்
எதிர்நின்றுபணிவே னென்னம்மாமனோன்மணியே. (௩அ)

நவகதிரும்சிந்தும் நாதமணிமேடையில்நீ
சிவசித்தரோடிருக்கத் தெண்டன்செய்வேன்மனோன்மணியே

கதிர்மதியைப்பழித்தக் கட்டிலிட்டுப்பந்தலிட்டு
சதிர்வைத்துப்பார்த்து தவஞ்செய்வேன்மனோன்மணியே.

சூனியசிம்மாசனத்தில் சோதிரிஷிசூழ்ந்திருக்க
ஏனிறக்கமில்லையென்று கேட்பேன்மனோன்மணியே. (௪௧)

என்றுமொருப்போதா யேகவெளிவிளங்கவரும்
துன்றுமதிசயவிளக்கே துரைதாயேமனோன்மணியே. (௪௨)

வாசிமனவிளக்கிட்டு மரகதமாலரண்மனையில்
பூசித்துப்பூரணமாய்ப் புகழ்வேன்மனோன்மணியே. (௪௩)

பானுமதியேது பலபலவாம்பரவெளியாய்
தோணுமருளாலவாய்ச் சுடரேமனோன்மணியே. (௪௪)

நந்தியுடனாதாந்த ரவிமணிமுன்னோடிவர
செந்திகனல்மூட்டி தெரிசிப்பேன்மனோன்மணியே. (௪௫)

மனமற்றத்தோரணக்கால் வாசிகீழோடவெளி
நினைவற்றச்சோதிமணி நிறைவேமனோன்மணியே. (௪௬)

வேதாந்தம்பேசிவெளி யுதையம்வளர்ந்தமதி
போதமேபுத்தமிர்த நிழலேமனோன்மணியே. (௪எ)

பேசாப்பெருமைபெருங் கருணைவளர்மலையே
வாசன்மணிபூரகத்தின் வாழ்வேமனோன்மணியே. (சஅ)

மனவாசையற்றபரி பூரணத்தில்மல்லாந்து
கனவற்றுகலந்திருக்கக் கருத்தாவாய்மனோன்மணியே. (சகூ)

பொன்மேருகிரிபடைத்து போதமதியுறைத்துநடுத்
தன்மதவாரணங்காட்டும் தாயேமனோன்மணியே. (ருய)

ஆதாரமாறுமடுக் கடுக்காய்காட்டிவெளி
மீதானமுயர்விளக்கே வெளியேமனோன்மணியே. (ருக)

அட்டாங்கசூக்ஷமதி ஆரணமேஞானமலர்
முட்டேபூவாசனையே முழமணியேமனோன்மணியே (ருஉ)

கட்டாதக்காலதச்சன் கட்டுமணிரவிகலையே
முட்டாதப்பூசையே மூலவிளக்கேமனோன்மணியே. (ருங)

மட்டார்க்குழலி மானதமேஞானபதங்
கிட்டாஅருந்தவசே கேளய்மாமனோன்மணியே. (ருச)

ஆயிசிவகாமி அபிராமிஅணங்கிஉமைத்
தாயிங்கமுகவல்லிச் சாமிமனோன்மணியே. (ருரு)

கமலவிதழாயிரத்துள் கற்பூரவிளக்கொளியே
அமலிஅமராபதியே அக்கமியேமனோன்மணியே. (ருசா)

நித்திரையைபோக்கி நிஷ்களானந்தசபை
சித்தரிடம்வைப்பாய் சிவமயமேமனோன்மணியே. (ருஎ)

அத்துவிதஆலயத்தி லங்கென்றுபோதித்துச்
சித்தரியின்வீட்டிலருஞ் சிற்பரியேமனோன்மணியே. (ருஅ)

மும்மலமுண்டு மும்மலமுப்பேக்கி அருள்
தம்பனசுருபமணித் தாயேமனோன்மணியே. (ருகூ)

காணக்கிடைக்குமோ கண்மணிதாயெனனம்மையென
ஞானகுருமொழிந்தநடி வாழிமனோன்மணியே. (சாய)

திட்டிநலவாயடைத்துத் தெருவாறுந்தெண்டனிட்டு
நிட்டைபரிபூரணனாய் நிசத்தையருள்நீயமனோன்மணியே.

ஐந்துமுன்னேகொஞ்சுகின்ற ஆண்டவனார்பரவெளியில்
தஞ்சமென்றுகுடியிருக்க தனித்துரைப்பாய்மனோன்மணியே.

சித்தர்பதினெண்பருடன் சேர்ந்துநினம்போற்றிதர்க்கம்
நித்தியமும்பேசுகிலே நிகர்தந்தாள்மனோன்மணியே. (சங)

வாதுநினம்பேசிவரும் மகனென்றுஅருகில்வைத்து
சூதுகபடெல்லாம் நீசொல்லிவாழ்வாய்மனோன்மணியே.

பாராவிடிலென்மனம் பற்றுமேதெளுணர்ந்துகொண்டால்
தோராதழுதுமனந் தேங்குதேமனோன்மணியே. (சரு)

ஓராயிரங்கோடி யுரைத்துமுனக்கிறக்கமிலே
ஆராதரவம்மா அப்பனுண்டோமனோன்மணியே. (சசு)

## எந்நாள்கண்ணி.

அறிவையுருவாக்கி ஆதியைநான்பூசித்து
தெறிந்துசிவப்பதவியென்றுந் தெளிவுநாளெந்நாளோ. (க)

ஆட்சியெனச்சொல்லி அழகுமணித்தாயென்ற
காட்சிசொன்னகுருபாதங் காண்பதுவுமெந்நாளோ. (உ)

இன்பமுயர்சுகபோத மின்னமென்னசுகஞ்சுகமென்
றன்புரைத்தஅகஸ்த்தியனா ரடிபணிவதெந்நாளோ. (ங)

ஈசனையேசோன்மயப் பொருளை ஆதாரப்
பேசனைபெற்றிருந்து பேணுவதுமெந்நாளோ. (ச)

என்னைப்பிறவா திறவாமருந்தளிக்க
தன்னையறிந்தாயென்ற தாள்பெறுவதெந்நாளோ. (ரு)

எந்தையறுவீடுமிது யிதுவென்றுபதேசித்
திருந்தகுருபாதனையென்றும் போற்றுநாளெந்நாளோ. (சு)

ஏகாந்தசபைவீட்டி லின்னமுதும்பால்பழமாய்
பாகாயுறைத்திருக்கப் பார்ப்பதுவுமெந்நாளோ (எ)

மோகாந்தரமொழிந்து முத்திசித்திவைராக்கிய
தேகாந்தரனுகும் செயல்பெறுவதெந்நாளோ. (அ)

மூலவிளக்கேற்றி முச்சுடர்மாமணிபொருக்கி
காலதிசைக்கடந்து கடைத்தேறுவதுஎந்நாளோ. (கூ)

போகம்போய்போக்கியம்போய் பொல்லாவினைகள்போய்
சாகரச்சாக்கிரந்தொலைந்து தவஞ்செய்வதெந்நாளோ. (ய)

ஆகமநூல்கியானமதி அம்பரமுங்கைலைசித்தர்
தாகமுடன்தவமுறைக்கத் தனித்திருப்பதெந்நாளோ. (கக)

ஐபந்திரிபற்று அஞ்சுமுன்னேகொஞ்சும்வெளிக்
கெஞ்சிகுருச்சொல்லநான் கேழ்ப்பதுவுமெந்நாளேச. (கஉ)

ஆபாமறைபேசு ஆதியந்தநடுச்சபையில்
ஒயாமண்டபத்துள் உட்கார்ந்திருப்பதெந்நாளோ. (கங)

பேசாஅருட்சபையில் பிங்கலையுமிடகலையும்
நேசாநுபூதியாய் நிலைபெறுவதெந்நாளோ. (கச)

பகல்மணிவீட்டில் பத்தெழுத்துமெட்டெழுத்தும்
சகநாதரெந்தைகுரு சாற்றிநிற்பதெந்நாளோ. (கரு)

ஓபாக்கவலையுட னுள்ளுணர்ந்துக்கொள்ளாத
நாயேனைநடுவழைத்து நவிலுவதுமெந்நாளோ. (கசு)

காயாபுரிக்கோட்டைக் கட்டுமெண்மால்வீட்டில்
ஆயாநூல்பரப்பி அறிந்திருப்பதெந்நாளோ. (கஎ)

பட்டப்பகல்வீட்டை பண்ணவர்மாலயன்காணு
சிட்டர்தொழுஞ்சபைவிளக்கை தெரிசிப்பதெந்நாளோ. (கஅ)

ஆதியேஞான அருட்பகலேஅம்பலமே
சோதியேசுடரே துணைமொழிவதெந்நாளோ. (ககூ)

பலநாளமூஞ்சோதிப் பராபரத்தின்பிள்ளையென
கலசப்பால்தாயூட்டக் களிப்பதுவுமெந்நாளோ. (உ௰)

பன்னகசயனமுடன் பகல்மணிவீட்டைத்திறந்து
என்னகங்குளிர்ந்து யீடேறுவதுமெந்நாளோ. (உக)

மாயாதளமூபூமி அவத்தையருட்பூமியென
காயாமதிப்பாலைக் கரந்துண்பதெந்நாளோ. (உஉ)

நந்திதெரிசனங்கண்டு நாதாந்தத்தாய்சொல்ல
கந்துகத்தைகட்டி கலிதீருவதுமெந்நாளோ. (உ௩)

சனனமரணப்படுச் சாக்காடெலாமொழிந்த
கனசமுகமையர் கருவூர்புகுதலெந்நாளோ. (உச)

அப்பாருட்கடல்புகுந்த ஆதுசொல்லியழைத்ததுபோல்
எப்படியாகிலும்பாங்கா யெடுத்துகொள்ளவெந்நாளோ. (உரு)

ஆதியனாதி அருபமணிவெளிபெருகுஞ்
சோதிசுயஞ்சுடர்வீட்டைச் சொல்வதுவுமெந்நாளோ. (உசு)

சித்தர்கணமோடு சிவஞானம்சொல்லக்கேட்
டத்தாரன்பிள்ளையென்று அழைப்பதுவுமெந்நாளோ. (உஎ)

வித்தைமணிவேதாந்தத் தாய்சொல்லமிகத்தெளிந்த
பத்திமிகும்பிள்ளையென்றுப் பகர்வதுவுமெந்நாளோ. (உஅ)

சாகப்பிறந்தவன் முன்சாகாவரம்பேசி
ஏகமாய்விட்டொழிந்த யீசர்வரவெந்நாளோ. (உகூ)

காகமாய்ப்பரந்துக் கடுவெளியில்திரிந்து
ஏகசருவேசுரனு ரிடஞ்சேர்வதெந்நாளோ. (௩௰)

பாகாயுருகி பலநாளுமழுதேங்கி
ஏகாந்தரவுரக்கம் யான்பெறுவதெந்நாளோ. (௩க)

முத்திமுதலே மூடநமன்வருகாத
சித்திவெளிக்காட்டைத் திரப்பதுவுமெந்நாளோ. (௩உ)

சுத்தசிவப்பிரகாசச் சுருபனுர்க்கற்றவழி
சித்தமுறுகிசிவஞ் சேர்ந்ததலைப்பதெந்நாளோ. (௩௩)

காலமொருமூன்றுங் கடந்தவெளிக்கற்பகத்துள்
மூலர்வரமென்று மூலர்மூர்க்கநாளெந்நாளோ. (௩௪)

சீலமுதற்செழுஞ்சோதி சிரகிரிவிலாசமதி
கோலவுடற்கூத்தைக் கொடுக்குநாளெந்நாளோ. (௩௫)

கற்பசத்தைக்கலந்து சிவநித்திரையில்
சொற்பனமிலாததுயில் தோய்வதுவுமெந்நாளோ. (௩௬)

இரவிமதிசோலைநடு இலங்குவெளிப்பூரணத்தில்
புரவிமன்வாசிசெல்ல புகுவதுவுமெந்நாளோ. (௩௭)

கரும்பைக்கறத்து மாலைபோல்கல்நெஞ்சம்
துரும்பைநான்சுட்டெரித்து சொல்வதுவுமெந்நாளோ. (௩௮)

வாயாதென்றுல்வாருமெய்யாறுதிச்சொன்னக்குறை
தோயாதவன்வாய்க்கும் சுகம்பெறுவதெந்நாளோ. (௩௯)

தாதாவொருகோடிபேரி லொருப்பேராகும்
வாதாடிச்சித்தர்சொல்ல மனந்தாழ்வதெந்நாளோ. (௪௰)

ஆதாரமாறுமைந்தும் வசமாகும்மணி
சூதானத்தீபவைக்குந தொழில்பெறுவதெந்நாளோ. (௪௧)

ஆசைபலராக அருவருட்பெலாமொழித்து
ஓசைமணித்தாய்வீட்டி னுள்நுழைவதெந்நாளோ. (௪௨)

பாசாடவித்தொலைந்து பராபரத்தின்வீடுசென்று
பேசாதமவுனநிலைப் பெற்றிருப்பதெந்நாளோ. (௪௩)

காசிக்குவேசைவருங் கனவாசைபோல்கருத்தர்
நீசன்முன்வநதிருக்க நினைவருள்வதெந்நாளோ. (௪௪)

மோசமில்லமசனேமுத்தி துணைவாய்த்ததென்று
ஆசைமொழிவிளக்கை அருளுவதுமெந்நாளோ. (௪௫)

பூதம்போய்ப்பொய்ப்பொறியும் பூசனையுந்தலம்போய்மெய்
வேதம்பொருள்வருக விளங்கிநிற்பதெந்நாளோ. (௪௬)

பாதமடிமுடியும் பகலோனுங்காணாச்
சாதனைமுதண்டவரைச் சதுரடைவதெந்நாளோ. (௪௭)

பொய்வாழ்வைமெய்யென்று பூதலத்தியாகெடுவேன்
மெய்வாழ்வைக்கண்டிருக்க விதிப்பதுவுமெந்நாளோ. (௪௮)

புத்திசொல்லும்பூரணத்தில் பொல்லாமனமாயை
சித்தியழிந்துசிவஞ்செயல் பெறுவதெந்நாளோ. (௪௯)

அத்தனையரூபவெளி ஆநந்தவீட்டில்வருஞ்
சித்தனுர்க்கதிசொல்ல தெளிந்திருப்பதெந்நாளோ. (௫௰)

வஸ்துமிக்கஞானமதி மாற்றுறைக்குமன்றுளொளி
நிச்சயத்தைபபின்று நிஷ்டைநிலைபெறுவதெந்நாளோ. (௫௧)

மும்மணியைதேசிவெளி முச்சந்திக்கனல்மூட்டி
நின்மலத்தாய்பதம்போற்றி நிசம்பெறுநாளெந்நாளோ. (௫௨)

வாசிமனவிளக்கெரிய மாறிகலையோடாமல்
தேசிவிளக்காகிநிற்கும் செயல்பெறுவதெந்நாளோ. (௫௩)

மெய்பபேசிஅல்லல்படும் வினைப்பயனைச்சுட்டெரித்து
கைப்பொருளாய்ஞானமதிக் கலைப்பபில்வதெந்நாளோ. (௫௪)

கைலைமன்னுமாணிக்கக் கர்த்தருட்சபைபார்த்து
வெயில்மஞ்சள்பூசணியாள் விடமறுப்பதெந்நாளோ. (௫௫)

கோவிற்குருநந்திக் குணங்குடியாய்ச்சொல்லிசிவத்
தேவினைவத்துப்பூசிக்குந் திடந்தருவதெந்நாளோ. (௫௬)

வாலைமணித்தாய்வீட்டில் மதிரவிபைக்கூட்டிபெரு
ஆலயத்திலர்ச்சனைசெய் தகமகிழ்வதெந்நாளோ. (௫௭)

ஒருவாபெருஞ்சோதி உண்மைநிருவிளக்கென்று
மருவிமனுவாகிலந்த மலரடிக்காண்பதெந்நாளோ. (௫௮)

பூவார்மதிவிழதார் பொன்மணியைக்கண்மணியை
தேவாரருஞ்சோதி தெருநடப்பதெந்நாளோ. (நிகூ)

நாதவிந்துங்கடந்தநடு நந்திகொலுவீற்றிருக்க
சாதனைகொண்டானந்தந் தனைத்திருப்பதெந்நாளோ. (சூ0)

வங்கென்றவீட்டில் மனவாசிநாலூதமலர்
சிங்கென்றதேவிமணிச் சிறப்பறிவதெந்நாளோ. (சூக)

வாசகத்தைச்சொல்லுமணி மதிமண்டலவீட்டில்
பாசகத்தைசுட்டு பரியேரிநிற்பதெந்நாளோ. (சூஉ)

மூலத்திலங்கென்று முங்கென்றும்பூரித்து
கோலத்தீமூட்டிச்சும்மா பேசிப்பதெந்நாளோ. (சூரு)

அஞ்செழுத்துமூதியென்று மடங்கென்றுலடங்கிநிற்க
பிஞ்செழுத்தைப்பார்த்து நான்பேசிநிற்பதெந்நாளோ. (சூச)

பேசாவநுபூதி மவுனமலாபெட்டகத்தில்
ஆசானுய்வந்துதவ அருள்மொழிவதெந்நாளோ. (சூரு)

கலக்குஞ்சிவானந்த கருணைதிருஞான்மதிப்
பெலத்துப்பேரின்பவெளி பேசிருப்பதெந்நாளோ. (சூசு)

முத்துமணிச்சிந்தும்ரவி மோனமதிவிளக்கேற்றி
சித்தாந்தத்தெளிவைப்பெற்று தேடுவதுமெந்நாளோ. (சூஎ)

தேனைச்சிவானந்தத் தெள்ளமுதைதேசொளியை
வானைவளைப்பூரணத்தை மருவிகொள்வதெந்நாளோ. (சூஅ)

மோனசிவசத்திசொல்ல முன்னான்குவீடுகட்டி
ஞானசிவசித்தர்வர நான்சொல்வதெந்நாளோ. (சூகூ)

முச்சுற்றமும்மணிவாய் முச்சந்திவ்திநகர்
காட்சிக்கண்டுக்கண்குளிர கவலைபறலெந்நாளோ. (எ0)

நிஷ்டூரக்கருவியெலாம் நீங்கிவிட்டதென்றறிந்து
கஷ்டமற்றுக்கடவுள்பதங் கண்டிருப்பதெந்நாளோ. (எக)

ஓதுமணிக்கலைவாணி உண்மைதிருமகள்மனையில்
வாதுசொல்லிமதத்திசந் தீர்த்தருள்மொழிவதெந்நாளோ.

நூலவிடத்தை தொன்னூற்றாறுகருவிக்
காலப்படர்க்கையை கனல்மூட்டலெந்நாளோ. (எங)

வேதச்சுருதிமுறை வெளிபட்டாங்குறைதேடும்
போதத்தைத்தேடும் புத்திவரவெந்நாளோ. (எச)

தன்னையறியேன் தவமறியேன்தற்பரமாய்
என்னையறிந்திருக்க என்றுமருளுமெந்நாளோ. (எரு)

மயாதோமனவாவ மலமூன்றுங்கருவிதுயர்
ஓயாமல்பார்க்குநிலை உணர்த்துநாளெந்நாளோ. (எசா)

காயாபுரிக்கோட்டை காலதச்சன்கொடுபோமுன்
வாயத்துரியாதி வாய்க்குநாளெந்நாளோ. (எஎ)

கருதரியஞானக் கடையூர்சிற்றம்பலத்தி
விருதுகட்டிவேடிக்கைப் பார்க்குநாளெந்நாளோ. (எஅ)

மனவாய்வைரேசித்துப் பூரித்துக்கும்பகமாய்
தினந்தீய்க்குந்தீபம்வளர்த் தில்லைநடைஎந்நாளோ. (எகூ)

தில்லைமணித்தெருப்பாதைத் தேடிநடந்தினித்து
அல்லலெனுமிறப்பிறப்பு மறுக்குநாளெந்நாளோ (அய)

ஆதியேஎன்னறிவி னம்பலமேவேதாந்தச்
சோதிநடுவிளக்கே நின்துலைக்காண்பதெந்நாளோ. (அக)

கல்லாவறிவீனக் காமப்பேய்கருவிமலம்
பொல்லாதப்பேயழியும் பூரணமடுப்பதெந்நாளோ. (அஉ)

வாசிவளர்மீதான மதியிரவிச்சோலைகடந்
தேசிகமேசிவமேயென்றுத் தேறுவதுஎந்நாளோ. (அங)

காணக்கிடைக்குமோ கண்ணைமவுனகுரு
ஞானநடுவிளக்கென்று நாடுவதுஎந்நாளோ. (அச)

நாடுவதும்பாடுவதும் ஞானசபைக்கூடும்வெளி
தேடுவதுஞ்செல்வமாய்த் தேடிக்கொள்வதெந்நாளோ. (அரு)

வேதனன்றுளழுதி வெளிக்காட்டில்தினந்தேடுகின்ற
போதமதியெழுதிடு பூரணமடுப்பதெந்நாளோ. (அசு)

பொய்மதத்தோர்வந்துப் புகலாமல்போதவெளி
மெய்மதத்தோர்வருந்தியென்னை மெய்காட்டலெந்நாளோ (அஎ)

மூலவிளக்கேற்றி மூழித்திரவும்பகலுமற்றுக்
காலதிசைநாள்கடக்குங் கருணைபெறலெந்நாளோ. (அஅ)

சித்தமசையாத் தியானமதிமண்டலத்தில்
நித்தியற்றிருந்துசிவக் கியானவரலெந்நாளோ. (அகூ)

பேசாதஞானப்பெருஞ் செல்வம்பெற்றுவெளிக்
கூசாமல்சித்தரைப்போல் பார்த்துறைப்பதெந்நாளோ. (கூ0)

ஆசைமனக்கிளிகூவ அண்டர்சிவகணம்போற்றும்
ஓசைமணித்தாய்சொல்ல ஓதுவதுமெந்நாளோ. (கூக)

வாராய்மகனென்று வாழ்த்திசிவக்குருநாதர்
பாராப்பரவெளியைப் பகர்ந்திருப்பதெந்நாளோ. (கூஉ)

மாறுத்தியானம்வளர் வாசிமணிமண்டபத்தில்
பாராமல்பார்த்துப் பலனடைவதெந்நாளோ. (கூங)

பொய்யைப்புனைந்துப் பூரணமாயிருப்பவன்முன்
மெய்யைவந்துகாட்டவரும் விளக்கந்தானெந்நாளோ. (கூச)

கருத்துமழிந்துக் கண்பஞ்சுமழிந்திடுதே
விருத்தனுய்வந்துசிவம் விவரிம்பதெந்நாளோ. (கூரு)

அஞ்சிப்பயந்து அம்பலவர்வீடுபுகுந்
துஞ்சிமனபற்றவிடஞ் சுகம்பெறுவதெந்நாளோ. (கூசு)

வாதுகலியுகவறிவு வம்பதிகமென்றுசொல்லி
தீதுமலததாழத்தாதுச் சிவம்வருவதெந்நாளோ. (கூஎ)

தூசியும்வாராதுத் தொடர்ந்திடுகாடேகும்போ
டாசிலாததுவருமுன் அயர்ந்திருப்பதெந்நாளோ. (௯அ)

நீச்சுழச்சற்றுமனப் பிராணயமூராதுக்
காச்சிகண்டுகடவுள் பதங்கண்டிருப்பதெந்நாளோ. (௯௯)

பேசாவருள்வாழி பேரின்பவெளிவாழி
ஆசானெனைப்பெற்ற ஐயாருள்எந்நாளோ. (ச)

பராபரியே.

அரியெழுத்தேஐம்பூதங் கொஞ்சம்வெளி ஆரணமே
பரியெழுத்தேபாதுயிருப்பதென் பாவம்பராபரியே. (௧)

ஏமப்பரியறுப்ப தெக்காலங்கடவுளுடன்
சாமப்பரியெழுப்புஞ் சதிரெப்போபராபரியே. (௨)

காமக்கனல்தொலைந்து கனதவம்நான்செய்வதெப்போ
வாமப்பால்குடித்து மயலொழிவதெப்போபராபரியே. (௩)

நாற்கலையுக்கட்டிநடு நான்முகமால்தேடுவெளி
சீர்ப்புகன்றுஇருப்பதெப்போ சிவகாமிபராபரியே. (௪)

தாயேசரஸ்பதியே தமிழ்பெண்ணேதத்துவியே
ஆயேமனோன்மணியே அம்மாமனோன்மணியே. (௫)

திருச்சிற்றம்பலவீட்டில் சித்தர்சிவகந்தியுடன்
பெருவார்த்தைப்பேசக்கண்டுப் பெலம்பெறுவதெக்காலம். (௬)

மூயுதேமோகனவாலமிர்த மௌனமூலநடுத்
தோயுனுவந்தாளுநதென்ன சொப்பனம்பராபரியே. (௭)

அண்டகோளகமணுவு மறிவிறந்தத்தூயவொளி
கண்டறமோனங்குவிந்துங் கவலைமனந்தான்பராபரியே. (அ)

மோனங்குவிந்தமணி முத்தேமுகிலினஞ்சோ
மானமிதினாலெனக்கு மால்தாயேபராபரியே. (௯)

மாரப்புக்கட்டி வாவெனதுமைந்தாவென்
றாரப்புச்சொல்லாயோ அமச்சிப்பராபரியே. (ய)

நட்டநடுவணைவீட்டில் நந்திசிவசித்தரொடு
கட்டமற்றுப்பார்த்திருக்கக் கதிசொல்பராபரியே. (கக)

## பராபரக்கண்ணி.

கடவுளென்றுப்போற்றி யிருகண்குளிரப்பாராமல்
மடமனதால்மதியிழந்து மறந்தேன்பராபரமே. (க)

வாத்திபாராகதினம் வாய்மைநெறிச்சொல்லும்வெளி
சூத்திரத்தைப்பாராமல் சுழன்றலைந்தேன்பராபரமே. (உ)

சோதிவெளிங்சென்றுறங்கிச் சும்மாயிருக்காமல்
நீதிநெறிவற்ற நினைவானேன்பராபரமே. (ந)

அப்பாவெனக்குழறி அறிவுடன்கண்டுறங்காமல்
தப்புமெத்தஜபாபார் தாதாய்பராபரமே. (ச)

போய்வாழ்வெனவறிந்துப் பூரணத்தைப்போற்றாமல்
மெய்யிழந்துமாந்தர் விழல்வெறியானேன்பராபரமே. (ரு)

சேத்தசவம்போலிருந்து செபதியானங்கடந்தவெளி
பத்திசெய்துப்பணியாமல் பாவியானேன்பராபரமே (சு)

ஆரணசாஸ்த்திரமுறைக்கு மரூபவெளிச்சாராமல்
தாரணந்தமாயைமனத் துடுக்கேன்பராபரமே. (எ)

மெய்விளக்கையேற்றிவைத்து வேதாந்தம்போற்றாமல்
பொய்மலக்கூடொளியாக்கம் பொதிந்தேன்பராபரமே. (அ)

பாராமல்தன்னுடலிற் பத்திமனமாயையற்ற
சீராக்கிஞானவெளித் திரப்படுதன்றேபராபரமே. (கூ)

நினையாமல்நிஷ்களங்க நிஷ்டைமதியூடுருகத்
தனைப்பார்த்துறங்கவழித் தருவாய்ப்பராபரமே. (ய)

கருத்தரென்றுப்பேசிமனக் கருத்துடன்கண்டிரங்காமல்
வருத்தமெனக்கதிகமல வாழ்வில்பராபரமே. கக

சிந்தையசையாக்கருணைத் தெப்பத்தருளேறிநின
மெந்தையுனைக்காணு தறிவிழந்தேன்பராபரமே. கஉ

பிராணயந்தானே பேசர்க்கலையொளியாய்
நிராமயமாய்க்காணுமொரு நிலைதருவாய்ப்பராபரமே. (கங)

கண்மூடிப்பேசாக் கருணையின்பஞ்சேராது
எண்ணியெண்ணிப்பொய்மலத் தாவிழிந்தேன்பராபரமே (கச)

பூரணத்தைப்போற்றிப் பொறிபுலனைப்போக்காமல்
காரணத்தைதக்கடக்குஞ் சிவக்கருத்துண்டோபராபரமே (கரு)

வாய்மைநெறியகிறுமன மாயைவிளைப்பேசியருள்
தூய்மைச்சுகச்சோதி துணைசேர்க்கிக்கேனபராபரமே. (கசு)

கண்கலக்குஞானமதிக் கற்பகத்துள்செல்லாமல்
எண்பலவாமாயை நினைவானேன்பராபரமே. (கள)

போர்புரியுமைந்துபுலன் பொறிப்பூதபூலகுறைவால்
சீர்பெற்றவுன்னன்பர் நிலைச்சிறப்பிலைப்பராபரமே. (கஅ)

கண்டேங்கிப்பார்ப்பதெப்போ கவலையெலாமொழிந்தசிவ
எண்டேங்கிஞானமுளையிட மிருப்பதெப்போபராபரமே (ககூ)

ஆபாமறைநூல்களொளி வாய்விளங்கும்வெளித்
தாயாயமுதூட்டித்தவந் தருவதெப்போபராபரமே. (உ0)

மாயாமனத்தால் மறந்துருகிப்போற்றாமல்
வாயாதோஞானமென்று வாடினேன்பராபரமே. (உக)

வெற்றிநெறித்தர்க்க வீண்வாதநூல்பேசி
சத்தியநெறிச்சொல்லும் சதிரிழந்தேன்பராபரமே. (உஉ)

ஓயாதோயிருவினையா லுழலும்நினைவற்றவனுஞ்
சேயாயிருந்துதவஞ் செய்தாள்பராபரமே. (உங)

வாசியழநிட்டுமன வாய்வற்றப்பரவெளியில்
தேசிகனேஞானச்செய்தி செப்பும்பராபரமே. (௨௪)

கோலைபுலைநோயற்றக் குணவிரதநோன்பொன்றே
நிலையெனவைத்துன்னை நினைவிப்பாய்பராபரமே. (௨௫)

பார்த்தென்பூடுறுவப் பதைத்துபரவெளிபணிந்து
காத்துக்கிடக்கதவங் காட்டும்பராபரமே. (௨௬)

நேத்திரம்போலுனைநியம நேமமுடன்சொல்லி தினம்
சூத்திரங்கண்டுரங்கா நிலைச்சொல்பராபரமே. (௨௭)

சொல்லாமல்சொல்லும் சுருதிமறைத்தேடும்வெளிக்
கல்லாதநானொருநாய்க் காட்டாய்பராபரமே. (௨௮)

ஞானவிளக்கிட்டு நன்றுநத்தெரிசனைசெய்
தீனமலயிருவினையைப் போக்காய்பராபரமே. (௨௯)

மதிப்பால்கறந்துமன மற்றப்போதனைசொல்
கதிக்கற்றுக்கண்டுங்காத் துரங்காய்பராபரமே. (௩௰)

சோமகலைச்சோடசோபச் சாந்தமிகநான்செய்து
வாமகலைப்பெற்றிருக்க வைப்பாய்பராபரமே. (௩௧)

பேசாயோயின்னொருகால் பேரின்பப்பெருவெளியை
தேசிகசின்மயம்பூக்கத் தேவேபராபரமே. (௩௨

ஆசையென்றும்வளரணிமா அட்டசித்துமற்றவெளி
பேசியருளுபர்வளமைப் பெற்றேருய்பராபரமே. (௩௩)

பேதைமனந்துஞ்சியென்றும் மிறப்பிறப்புமற்றவருள்
போதைபரிபூரணமாய்ப் போற்றப்பராபரமே. (௩௪)

சுத்தவசுத்தங்களறத் தோடுநடுப்பூரணத்தில்
நித்தியமும்பணிந்தறிய நினைவாய்ப்பராபரமே. (௩௫)

மாசுமருவற்றமன வாழ்வாகிமலமருக்கும்
தேசிகசின்மயவிளக்கே சிவமேபராபரமே. (௩௬)

சாதனையோர்நான்குந் தானாய்விளங்கறியும்
போதனைமேலத்துவிதப் பூரணமேபராபரமே. (௩௭)

பூரணத்தைப்பார்த்து புலன்பொறிபூதக்கருவியற்ற
காரணத்தைகாட்டிவையுங் கண்ணேபராபரமே. (௩௮)

காட்டியிருகண்குவிந்தக் கற்பகத்துளாதியந்தம்
பூட்டிநடுவிளைகருணை புத்தமுதேபராபரமே. (௩௯)

கருணைதினம்விளையுமருட் கடவுளுனைவாழ்த்திபுனைந்
திருளைதினம்றுக்க வருமின்பேபராபரமே. (௪௰)

வாதவூரப்பர்திரு நாவுக்கர்மனமற்ற
வேதனுமால்தேடும் வெளிமதிதாபராபரமே. (௪௧)

வாயாதோஎனக்குசிவ வாய்மைசொல்லுஞ்ஞானவெளி
தேயாபிறையணிந்த மெய்த்தேவேபராபரமே. (௪௨)

காணாதோவண்ணா கருணைவெளிக்கண்ணுரங்க
தோணாதோசோதிவெளித் தூரம்பராபரமே. (௪௩)

தானாகவருள்திரக்குந் தற்பரந்தன்னிலைப்போதம்
வாணாடாநான்மறைசொல் வாழ்வேபராபரமே. (௪௪)

அவத்தாதிபூமி அணுகாமலறிவொழுகுமதி
நிசத்தையென்றுபோதிக்க நினைவாய்பராபரமே. (௪௫)

பேய்மனஞ்செல்விடமேலாம் பேதிக்கபகர்ந்தறிய
வாய்பேசும்வம்புமிக வரலாற்பராபரமே. (௪௬)

சேண்கலங்கசிற்பற சின்மயம்பூத்ததில்லைநகர்
காண்பானுங்காக்ஷிபுலைக் காவேபராபரமே. (௪௭)

நானெனன்றும்நீயென்றும் நடுநடுநீழற்புதஞ்செல்
தேனென்றுந்தேடாத் தெளிவேபராபரமே. (௪௮)

அத்துவிதப்பாழாயறுமறை மூப்த்திருக்கும்வெளி
வஸ்துமிக்கவளர்கருணை வைப்பேபராபரமே. (௪௯)

சாதிகுலசமயமற்று தத்துவனார்பெற்றநெறி
சோதிசொல்கவருதுஞ் சுரூபாபராபரமே. (௫௰)

பாலமிர்தம்போல்ஞானம் பகர்ந்தகுணங்குடியார்போல்
ஜாலமற்றதனிவழக்கு சாற்றாய்பராபரமே. (௫௧)

கண்ணுக்குள்மணிபாய கலக்குமருள்கற்பகத்துள்
எண்ணியெண்ணிகண்ணுறங்கா திருக்கபராபரமே. (௫௨)

வாயாறவம்பெலாஞ் சொல்லிசொல்லியானழுதுத்
தாயானவாமம்பெறத் தருவாய்பராபரமே. (௫௩)

தேடாவரும்பொருளே தேடிபிருகண்ணுங்கா
வாடாவெளிபூக்கும்மலர் தருவாய்பராபரமே. (௫௪)

பேதைமனத்தாலஞ்சி பிதற்றிபிதற்றாதழுது
சூதைமனத்தூதையென்று துடைப்பேன்பராபரமே. (௫௫)

கோழைபடுங்கன்னெஞ்ச கூத்தைவசமாக்கிஎன்று
ஏழைநானென்றுறங்கி யெழவேன்பராபரமே. (௫௬)

வாமப்பால்பெருகி மதியுருகியுளங்காணாமல்
காமப்பால்பெருகுமனக் களவேன்பராபரமே. (௫௭)

சோமப்பால்குடித்துசுக நிஷ்டைபெற்றுத்தூங்காமல்
காமப்பால்பருசவைத்த கள்ளமேன்பராபரமே. (௫௮)

கண்மூடியுருகியென்றுங் ககனவட்டத்தானைப்பார்த்து
எண்ணியுருகிடா னேழையென்பேன்பராபரமே (௫௯)

குந்திசிவயோகங் குறித்தாநி அந்தமிலாச்
செந்தழலினடுவூகிச் செத்துசெபிக்கவருள்பராபரமே. (௬௰)

பெற்றவாஞானப் பேரின்பப்பெருவிளக்கே
கற்றவாகல்லால்மெய்க் கடவுள்பராபரமே. (௬௧)

உற்றார்மற்றென்னுயிர்க்கு வுண்டென்றுரைத்துவிட்டால்
பித்தராவுனைப்பேசா திருப்பேன்பராபரமே. (௬௨)

வ்யாபாரகான்பேசி வம்பெல்லாஞ்சொல்லிசொல்லி
ஆயாமறைநூலென் றழதறிமேயன்பராபரமே. (௬௩)

உராங்குரங்குக்கண்ணே வுன்னுல்படுந்துயர்க்கு
இறங்கிறங்குகல்லால்கீ ழிருக்கப்பராபரமே. (௬௪)

பெற்றவனென்றுலருமைப் பேசுவான்மிக்கதென்று
கற்றவாஉனேவேதங் கருதியழும்பராபரமே. (௬௫)

செல்வமுண்டோஉன்னேயல்லால் தேவேயிவ்வுலகிலொரு
சொல்லில்லேயென்றதுண்டோ என்னசொல்வேன்பராபரமே.

நினைந்துநினைந்தாராதத் துயரமையாவுனைநினைத்து
எனைப்பார்த்தென் செய்வேனென் னெந்தாய்பராபரமே.

கேளாமலென்செவியே கேசாதிபதம்புணைந்து
ஆளாயேஐங்குறைகெட் டப்பாபராபரமே. (௬௮)

காற்றுடுந்துருத்தியுடல் கம்பதிசைகரண்கட்டி
மாற்றுடும்வேதமுறை மருப்பேன்பராபரமே. (௬௯)

பற்பலவாம்யோசனைசூழ் பாழாகிப்பரவெளியில்
கற்பனைகள்பேசிபென்றுக் கலப்பாய்பராபரமே. (௭0)

கார்முகிலுங்கனல்முகிலுங் கற்பகநன்கிழல்முகிலுந்
தார்முகிலுங்கதிர்மதிகண் முகிலேபராபரமே. (௭௧)

போதுமென்றுஆசைமல மாதர்புலேப்போக்குசெட்டு
தோதுகட்டிஉனேதொழுவ தெந்நாள்பராபரமே. (௭௨)

கருதுமோகட்பொறிகள் கருவிகாலறவென்றும்
விருதுகட்டிவிணுளில் விடுவதேன்பராபரமே. (௭௩)

அப்பனெங்களாதிபிரா னருள்மறைசொல்வேதமென்றும்
செப்பின துஉண்டோசொல் தேவேபராபரமே. (௭௪)

சொல்லரியஞானதொழில் படைத்திருந்தபெரியவர்போல்
அல்லிறியவந்தகன்ச வறிவுதருவாய்பராபரமே. (௭௫)

கல்லுமுருகுமென்கன் னெஞ்சமுருகவில்லை
வல்லாயீதென்னமுறை வழக்தாய்பராபரமே. (எசு)

பெற்றவனென்றஞ்சியுந்தன் பெருமைதினம்பேசுதற்கு
கற்றவனென்றேவருமென் கண்ணேபராபரமே. (எஎ)

ஓயாதருள்கவலை யுள்ளுளாய்ப்பார்க்கவரும்
ஆயாக்கலைமதியே யென்னப்பாபராபரமே. (எஅ)

மாயாப்பிறவிதுயர் மலமறுக்கவருங்கருணைத்
தேயத்தருள்வெளியே சிவசிறப்பேபராபரமே. (எகூ)

சீருண்டோஐயாஎன் சிந்தையற்றுன்னன்பர்நிலைப்
பேருண்டப்பெருவெளியி லுன்பேச்சைப்பராபரமே. (அ0)

தேசிகராய்வந்தெனக்குச் சித்தாந்தவேதாந்த
மாசிலாவாசிவசம் வழுத்தாய்ப்பராபரமே. (அக)

தூசிப்போல்மனக்கருவித் துஷ்டமெலாம்பொசுங்குமருள்
வாசிகனலூதியிற வந்துவழுத்தாய்ப்பராபரமே. (அஉ)

ஆருமற்றப்பாவியுனக் காளலவோஅலையுமென்னை
சீரற்றச்சிறுவனென்றுத் திடஞ்சொல்பராபரமே. (அங)

எல்லாமறிந்து மிறக்கமுனக்கில்லாத
வல்லாமையேயென்மேல் வழுத்தாய்ப்பராபரமே. (அச)

பொல்லேன்முன்னரசே யிரப்பூரவிற்குருமனுவாகிக்
கல்லாமைக்காட்டவந்தக் கண்ணிலமேபராபரமே. (அரு)

பூதம்பொறிப்பொல்லாப் புலன்கருவிப்பொல்லாது
வாதமிதுவென்றுமல மறுப்பாய்ப்பராபரமே. (அசு)

ஆராதேயென்றுயர மழுதழுதுச்சொன்னாலுங்
தீராதேஐயாஎன் செய்வேன்பராபரமே. (அஎ)

புத்தியுடன்போற்றிடப் பூரணத்தில்கண்டுயிலும்
சித்திதரவருமாதிச் சிவமேபராபரமே. (அஅ)

வெளியேவேதாந்தமுறை மேருநடுவீடொளியே
தெளிவேநான்தேடுதிரு வழகேபராபரமே. (அகூ)

படைத்தாயுன்னறிவாகிப் பாருயிரெலாமொன்ருய்த்
துடைத்தாயீதெல்லாமென் சொல்வேன்பராபரமே. (கூ0)

ஒன்றென்றடுத்து வொன்றென்றுண்டெண்ணுமுனே
நன்றெனுநற்குருவந்து நவில்வாய்பராபரமே. (கூக)

ஆராதோ துபரமெல்லா மப்பாவுனைநினைந்தால்
பேராதோமாயைவிட்டு வுனைப்பேசப்பராபரமே. (கூஉ)

மைப்பொடியாளாசைவிட்டு மனமற்றபூரணனாய்
கைப்பிடியாயழைத்து னருள்காட்டாய்ப்பராபரமே. (கூங)

பொய்யுலகப்பேச்சைவிட்டுப் பூரணத்தைப்புருவவெளி
மெய்யுலகப்பேச்சைசொல்லி யிருப்பாய்பராபரமே. (கூச)

போராய்விடியுதையாய் பூரணத்தைப்பாராமல்
நேராயென்முன்னிதென நிகழ்த்தாய்பராபரமே, (கூரு)

வல்லான்வகுத்த வாய்மைமொழியொன்றன்றிப்
பொல்லேனெனக்குதுணைப் புணைசொல்பராபரமே. (கூசு)

அருமைதினம்போதிக்கு மத்துவிதவெளிவீட்டில்
ஒருவனெனக்கிடமிலையோ வுரைப்பாய்பராபரமே. (கூஎ)

என்றுவருமோஏழை யெனக்குண்கதிக்கீழ்
துன்றுமருளாநந்தச் சுகநிஷ்டைப்பராபரமே. (கூஅ)

மறப்பேனென்றுலு மறப்பேனோவுன்னடியைத்
திறப்பேமெய்வெளிதிறக்குந் தேவேபராபரமே. (கூகூ)

கண்ணாக்கண்டையா வுன்கருணையெலாங்காட்டதினம்
எண்ணாவழுதிருக்க பிரங்காய்பராபரமே (ௗ)

கண்டுகளிக்கூர்ந்துமனங் கருவிபெலாம்பொசுங்கிவெளி
உண்டிளைப்புதீர்ந்துதிரிந் துயில்வேமாபராபரமே. (ௗக)

வாழ்த்தித்துதித்து வம்பொலாமறுத்துமனம்
போற்றிமுடங்கிவெளிப் புகுமோபராபரமே (௱௨)

வைத்தவருளாசைதின மருவினவர்விடுவாரோ
பொய்த்தமலஆசையொடுப் புகுவாரோபராபரமே. (௱௩)

வந்தவருள்வாழ்வை மனமாயையற்றசிவ
சிந்தையசையாப் பொருளைத் திறப்பாய்பராபரமே, (௱௪)

பாழாதுபிராசைவந்து பற்றுதுபாயுமிருள்
கோழைமனமடாதக் குணக்கடல்தாபராபரமே. (௱௫)

ஆசைபற்றிஅலையுமன ஐம்பூதவழக்கறுத்தப்
பூசனையெனக்குளருள் பொதுவேபராபரமே. (௱௬)

சிற்சுகத்தைகண்டுவெளி தேடுந்திருவம்பலத்துள்
நற்சுகம்பெற்றிருநடுவை நவில்வாய்பராபரமே. (௱௭)

புலைவாய்வடங்கவுண்டுப் பூரித்துரங்குமனக்
கலையருவாதென்னையினி காட்டாய்ப்பராபரமே. (௱௮)

சோம்பலுந்தூக்கந் துன்பெலாம்தொலைந்திதென்று
வாம்பொருளைபார்த்திருக்க வைப்பாய்பராபரமே (௱௯)

ஆதரவுஅற்றபுலை நாயினேனென்னசெய்வேன்
பூதரவுமனக்குறையால் பொழுதுப்போகுதேபராபரமே.

நாய்பெற்றச்சுகம்நன்று நல்லறிவிலாதமனப்
பேய்ப்புலையனுடல்என்னப் பேதம்பராபரமே (௱௧௧)

பேதஞ்செய்யென்மனப்போர் பிறற்கருவிகுறை
வாதம்போயுனைப்போற்ற வைப்பாய்பராபரமே (௱௧௨)

தன்னையறிவாக்குஞ் சற்குருவைகாணமல்
பொன்னைமண்பெண்ணாசைப் போதிந்தேன்பராபரமே.

எட்டாதருஞ்சோதி யிடமிருந்து கொள்வெனென்றால்
கொட்டாவியிட்டைந்துங் கூடேனென்றுசொல்லி
தொட்டாலுமுட்டுதையா தொண்ணூற்றருதுள்ளர்
விட்டாலுன்பாதம் வேண்டிக்கொள்வேன்பராபரமே. (௧)

புலப்பேய்களைவர்ப் பொன்னம்பலத்தாடல்
விலகிபுரம்பிருக்காமல் விடமாட்டேனென்றுசொல்லிக்
குலப்பேய்கள்குறித்தொன்றைக் கூறும்பேய்காறும்பேய்
மலமற்றுப்போனால்நான் வணங்குவேன்பராபரமே. (௨)

போறிப்பேய்கள் பூதப்படைப்பேய்கள் புண்சடலம்
சிறிப்பேய்கள் சீ சீ யென்றலட்டிமன ஆசையிலே
வெறிப்பேயாய்விண்ணப்பம் செய்தடியேன் போற்றாமல்
திறிந்தலையுதததுவற்றால் சிந்தைசெய்வேன் பராபரமே. (௩)

சிந்தையிடைக்காட்டை தீயாற்றையான் கடந்து
சுந்தரமனவூசித் துரியாதிச்சோதி வெளி
எந்தைசிவமே ஏகமேயென் னுயிர்க்கொளியே
சொந்தமெனக்காகிலுனை தொழுவேன் பராபரமே. (௪)

எனக்கென்று மாயா மனக்காலனேய்க்கதினம்
சினக்கென்னச்சொல்வேனிச் செபலெல்லாம் வைத்திருக்கும்
கனமே மகராஜக் கருணைநிதித்துரையே
தினந்தோறும்கேட்டிருந்து திகைக்க விட்டாய் பராபரமே.

திகைத்தப்பிசென்றபெருங் கடற்கப்பல் சென்றதுபோல்
வகைத்தப்பி வுனைதினமு மறந்துமயற்குள்ளானேன்
மிகையொப்பியானெனும்பொய் வெகுளிமலப் பூதப்பேய்
பகைச்செப்பிடாமல் நின்றால் நினைப்பணிவேன் பராபரமே.

நின்றவருள் நிலைப்பிடித்து நீங்காச் சிவநிஷ்டை
என்றருள்வாயப்பாநா னேமப்படைக்காலன்

வென்றருகே வருமுன்னே வேதாந்தவெளி முடங்கி
மன்றுவருன்பேசிநிற்பாய் மவுனகுருவே பராபரமே. (எ)

நிற்கும் நிலைபறியே னீச்சுழுச்சாய் நினைவோ
கற்றுமருள் காளத்திக் கடவுளை முன் வணங்காமல்
தற்கமிட்டு வெளிமாவைத் தூது சொல்லுமனமாரன்
துற்கருமமற்றொழிந்தால் தொழுவேன் பராபரமே. (அ)

ஒழியாப்பெருங்கவலை வொழியென்றுலொழியவில்லை
வழியேதுந்தெரியாத நாளில்மனுவாகிவந்து
அழியாப்பெருங்கருணை அத்துவித வீட்டில் சொல்லும்
மொழியே நீ முன்னிருந்தால் மோசமுண்டோ பராபரமே.

முன்னிருந்த ஞானவடிவை முக்கண் கருணை
தென்னிருந்த மௌனத்தேசிகனை சிற்பரவெளியில்
பொன்னிருந்தக்கயிலை புத்தமுதைப் புராதனத்தை
என்னுளிரும் தாரகத்தை யென்று அருள்வாய் பராபரமே.

அருளாலவாயிருக்கும் ஆண்டவனே யானஞ்சா
மருளாலமென்னே மாறிமனக்காலலைசந்து
இருளாலளாவி யேமாந்து நின்றிடைந்தேன்.
தெருளை யிச்சூதெந்தோ தேவ தேவே பராபரமே. (கக)

சூதாடித் தோற்றவன் போல் சுகவீட்டைப் பாராமல்
வாதாடிப் போராடி மனமாயை யென்றவம்பால்
காதாடிக் கண்ணாடிக் கருத்தாடிக் கருதாமல்
போதாடிப்போகுதென்ன புதுமைப் பராபரமே. (கஉ)

என்ன வருட்புதுமை யிவ்வுலகெலாம் படைத்த சிவ
யின்னருபவத்துவித யிறைகடவையுறையுணர்வை
கன்னவரும் பாகாய்க் கண்டுணர்ந்துக் கொள்ளாமல்
முன்னமெனுமல மொழித்தால் முத்திபெறுவேன் பராபரமே.

முத்திமுதமேல மூலக்கனல்மூட்டி முச்சந்திவெளி சென்று
பத்திமுதலெடுத்தறியப் பரமேனை நினைந்தால்
சித்திரமணி திருசிற்றம்பலவாசல் திறக்கேனே
மந்திசங்கள்பேசி என்முன்வருவாய் பராபரமே. (௧௪)

பேசியருளாலவாய் பிரமாந்தரவெளியில்
வாசிகனல்மூட்டியுடல் வரிக்கயறைக் கட்டிருக்குந்
தேசிக சிம்மாசனத்தில் தெருவாழும் பார்த்தழுது
பூசித்திருக்கவரும் பூரணப்பொழுதே பராபரமே. (௧௫)

பொழுந்தொழுந்ததுப் பூரணம் விளைந்தது புராதனவீ
டொழுதிருந்கிடத் துவாதச சாந்தத்தி லருள் துவித
விழப்பொருள்முன் னின்று விளக்கமுறைத்தன யென்றடியே
னழதென்று மிருந்திடவைப்பா யென்முன்பில் பராபரமே.

என்முன்பிலேலதும் எண்ணிய பொய்க்கருமமெலாம்
நன்றாகவைத்து ஞானியற்றிருக்கவருள்
குன்றாகவைத்துக் கொடிமுடியைப் பார்த்திருக்க
கன்றாலின் கடவுளேபார் கண்ணே பராபரமே. (௧௭)

பாரையா என்னைமுகம் பாராமல் விட்டுவிட்டால்
யாரையா எனமுனன்பா யருளால வாயல்வெளி
பேரையாசொல்லிப் பேசாதமவுனசுகச்
சீரையாசெப்புவரென்செய்வேன் பராபரமே. (௧௮)

சோல்விருந்தவாசிச் சுகசோதிவீட்டிலென்னை
அல்லுபகலற்றாதி அப்பாவுனைத் தொழுமெய்
நல்லருளைப்பேசி வெளிநாலாம் பதவிகடந்
தெல்லைக்கடந்த வருளியம்பாய்ப் பராபரமே. (௧௯)

கடந்தவராரற்புதமாய்க் கண்முன்றுடையவருள்
இடந்தவஞ் செய்தழியா தின்பநிலைப்பெற்றவரார்
அடர்ந்தடர்ந்துவரும்பாச மச்சோஒழிவதற்கு
திடந்தருவாய்வரன்புத் தியானம்பராபரமே. (௨௰)

தியானத்தைச்சித்தாந்த வேதியர்கேடும் சிதம்பரத்தை
மயானமட்டே வருமாதர் பொன்னாசை மயக்கமற்று
கியான மிட்டாரு ரம்பலத்தே செல்லுங்கேசரத்தை
தயாளமிட்டே யருள் பேசாதவானந்தந்திடுமே. (உக)

பேசாதஅறிவிற்கு மானந்தமெது அதைபெற்றிருக்க
கேசாதிடாதங்கிட்டுமோ கிட்டாதலைந்திடுமோ
பாசாடவமென்றும் பற்றாது தன்னுள்பரமவெளி
நேசானுபூதிமுன்னிற்க வைப்பாய்நீ சுநினைவறுக்கே. (உஉ)

நினைவற்றப்பூரணத் தொட்டியிற்சென்றுநீஞ்சுவது
தனைசுற்றுஞானக்கருணை யானந்தத்தற்பரத்துள்
வினையற்றுவித்தக விதரணத்தென்றுவிளங்கிநிற்ப
தெனைபெற்றச்சோதி நிராலம்பவாரியொழமிடமே. (உ௩)

இடம்பொருளேவலைப்பற்றியா னேதமிலாதவனாய்
படந்தருமாயைமனத்தா லலைந்துமருவுமெனைத்
திடந்தருநாளெந்த நாளோயியம்பாய்தேசிகனே
சடம்பெற்றகாலங்கொண்டின்றை நாள்வரையில்பொய்சஞ்ச
லமே,

## ஆ தா ர ம்.

ஆதாரமன்றிநடுவாதாய் மூளைத்தமன
மளவிலா நினைவுகோடி
நீதாகவரும்பூதப் படைக்கருவித்துணைக்கூட்டி
தினநாளுமல்சாகரம்
தூதாகயிருந்து செயலேதுளவுகருமமோ
சுகமென்றிருப்பதெதினால்
ஏதாதியந்தமே வுயிரானதெய்வநீ
ரேழையெனையாண்டுகொள்ளே. (க)

கொள்ளுங்கருணை எனக்கிலையேல்
குறையாவமிர்தே கொடியனுக்கோர்
தெள்ளுமருளை விளக்குமின்
பந்திகழுச்சிந்தைச் சென்றலையாது
உள்ளும்புறம்புமின்றுதி
உடலாதாரத்தொளிர்விளக்கை
கள்ளப்புலமற் றூரணமாய்க்
காண்பதென்னாள்கண்ணுதலே. (உ)

காண்பானுங்காட்சியுமாய்க்
கலந்தானந்தஅற்புதமுன்
பூண்டொனுக் கலைகளற்றப்
புனிதவீட்டில்புணர்ந்திருமை
மீண்டெனன்பே வேதாந்தம்
விளங்கும்வெளியேவிண்ணுயர்ந்த
தூண்டாச் சோதிசுகவிளக்கோ
தொண்டாய்த் தொழுநாளென்னாளோ. (௩)

என்னாளென்னுயிர்க் குயிராகி
யிருந்தயின்ப மீதென்பேன்
முன்னாள்கருமமென் றெருப்பேய்
மொத்தநினைவால் மூண்டவினைத்
தன்னால் தானுய்தழுவிட நொந்
தழுதேமறந்துச்சாக்காட்டில்
பின்னாப்பின்னமடைவதற்கோ
பேசியிருந்தே னென்புகழே. (௪)

பேசியிருந்தவருட்செல்வம்
பெற்றூருபப் பிணக்கன்றிப்
பூசித்தறியவருபசுகவனந்த

லுடல்யான்புணர்ந்தாதி
நேசித்திருந்தலாகாதோ
நீகனுன்மூடமனத்துயரால்
தேசிகோத்தமமே அலைந்தலுத்தேன்
சிவமேமறைதேடியமுதலே. (ரு)

மறைத்தேடுமுழுமுதலேவா வென்றம்பலத்துள்
வாழ்விப்பாயான்தானோ மலவாயிற்புண்ணாய்
உறைமூடிநினைந்தலுத்தே னெவ்வாமறக்கருவி
யுன்யதத்தாலூடாடி வாதாடி நிற்க
குறையெவர்பாலுறைத் திடுவேன்
கோவென நெட்டயர்ந்து
நிறையருளே நிஷ்களசாதனமுடனுனென்றும்
நீங்காதப் பரிபூரணானந்தம்பெற்றே. (சு)

நீங்காதசுகாரம்ப வீட்டிலெழுங்கருணை
நித்தியத்தைப் பார்த்தறியாவறிவொடுநான்மகிழ்ந்து,
தூங்காத அத்துவிதத்தானந்தத் துயிலில்
சும்மாநான் சுகமாகத்துன்னு மிராப்பகல்போய்
பாங்காகத்தன்னுறுவீட்டையும் பாங்காக்கிப்
பசிதாகமின்றுருமதிய மிர்தமுண்டு
தேங்காமல் திருசிற்றம்பலவீட்டில்வாழும்
திறமையெனக்கென்றளிப்பாய்ச் சின்மயதாருகமே (எ)

சின்மயந்தாருகம் விளைந்தச்சித்தரந்தத்திகழே
தேவரயன்மால்தேடுஞ் சிவானந்தவருளே
தன்மயமேசதானந்தச் சமரசபோதகமே
தாதையேஎன்குற்றமெலாம் பொருத்தருள்வீரென்று
உன்மயவாரென்னுளத்தி லுண்டென்றுடார்த்து
முனுந்தமனஞ்சென்றலைவ தன்றியொன்றுமிலையான்

என்மயக்கையென்னென்பேனெவரிடஞ் சென்றுரைப்பே
னேதுசெய்வேனென்னப் பாயெங்குநிறைப்பொருளே.

ஏதேதுசொன்னாலு மெக்கதைதயாபரனே
இருமையின்பத்தழுத்தி மலயிழக்கொடுகானிருக்க
சூதேதுவிளைவித்தா யீதென்னச்சுமைக்காண்
தொடக்குடமைச் சுழிகாற்றில் விழித்தழியவிட்டாய்
வாதேதுயென்மேல்நின் செயலன்றியுண்டோ
மறவாமலாதாரத் தருள்பாங்கைப்பெற்று
மூதேவிமனமசையா தரண்கட்டிக்கொள்வேன்
முக்கணுடனன்பருள மிருக்குமரும்பொருளே. (கூ)

அன்பருளமினிக்கின்ற ஆதிபராபரமே
ஐம்பெரியப்பூதத்தால் புலன்பொறிபொய்க்கருவித்
துன்பருடல் தூதாகவெருட்டுமெதக்கவரால்
தொலைபாதப்பிணிமூப்பைப் பெற்றீமங்கிடக்கும்
இன்பருந்தயியல்பன்றி நின்னாசைக்கமிழ
யேக்கமிலேனேதமல மூய்க்கிளறயிருள,
னென்பவமாரீர்த்தறிய வம்பவவீடளிப்பா
ரென்னுளோயிப்பவமழிந்துன் னன்பாவதற்கே. (ம)

பவச்சாகரச்சுழரில் பற்றிமடமாதர்
பாசத்தால்பந்துசுற்றப் படுவினையால் பலநாள்,
அபஞ்சார அலுத்திளைப்பே னுயென்னக்கொடுமை
அந்தகனென்றொருபொல்லா ஆசடியன்வந்தால்
எவர்வந்தென் றுன்பமெலா மெடுத்தறியமேலா
மேகாந்தப்பெருவெளியம்பலத் திருக்கணவப்பார்
தவசாந்தகுணவகண்ட நிர்க்குணவாதாரச்
சச்சிதானந்தசுக சண் டார்க்கநிலையே. (௧௧)

சன்மார்க்கநிலையெனுந்தா னதினால்நான்தானே
சதானந்தநிஷ்டை அனுபவசாதனைக்குள்
துன்மார்க்கமன்றியொரு தூரசுண்டோ சொல்லா
சுகவாரிப்பேரின்பக் கடலில்துயின்றந்தோ
நின்மார்க்கம்வளங்கவரும் நிர்மலவிதேக
நித்தியதவஅருள் முத்திநீதகைவல்லியம்
தன்மார்க்கவத்துவிதயிடம் பெறுநாளென்றோ
சாக்காடென்பேய்க்காடென் செய்வேன்மெய்ச்சிவமே.

பேய்க்காட்டைப் பெற்றின்னாள்வரைக்குமிந்திரஜாலப்
பிணக்கிவ்யான் மருண்டடைந்தப்பாடுவெகுபாடு
நாய்க்கூட்டைப்பெற்றாலுஞ் சுகமுண்டோநானோ
நன்கடைவேனென்கடவே ளுட்டமுடன்ஞானத்
தாய்வீட்டில் சுத்தவசுத்தங்களறச்சும்மா
தூங்கிசுகம்விளங்குமருள் தோணியில்நான்முடங்கி
வாய்க்காட்டை மனமற்றப்பூரணத்தின்காட்டை
மருவியிருந்தானந்த அருள்பெறுநாளென்றே. (கங)

என்றுவருமென்றே மாந்தறிவேயாதியந்த
மிலாஅருளேயாரமிர்தே அன்பே
வென்றுவென்று வருங்கருவியிடையூராலே
வித்தகமேயானொந்து வெறுண்டுநின்றேன்
மன்றுலருளற்புதவரூபாரூப
வத்துவிதவீட்டில் மனமற்றுதந்தோ
துன்றுமிடந்தெரமிலாகப் பார்த்தானந்தச்
சுகவீட்டிலிருந்திட முன்துணைநீதானே. (கச)

துணைநீயெல்லா வுயிர்க்கொளியாய்
துலங்கும் ஞானச்சுகவாரிக்,
கணைநீகாமக்கடுந்தழலைக்
காய்ந்துகருணாகரச் செல்வம்,

புணைந்துளா திநீ நிகழ்ந்து
போதித்தரு ளானந்தவெள்ளம்,
இணைந்தென்னுள்ள மிருப்பதெனது
ளீசாமாசிலாமணியே (கரு)

மாசிலாவம்பலத் தெனைநீயும்
வாழ்வாய் மகனேயென்றுரைத்தால்
பேசிலாசிவமே உனக்கென்னக்
குறைதான்வருமோ பேதைமனம்,
தேசிகோத்தமமே சிவானந்தத்
தேனேபாலே திகழ்ந்தநடு
வாசிதாரகமே வம்பனையா
வருவீர்திருசிற்றம்பலத்தே. (கசு)

ஐயாபோற்றி யானொருநா
யகந்தைகொள்வேன் புலைவாழ்வை
மெய்யென்றழுந்தியுனை மறந்தேன்
வேதமறை நாலுரைக்குமுனை,
பொய்யென்றெண்ணிப் போதகலப்
புரம்பேமனப்பே யுடன்சென்று,
வையத்திருக்குமென்முன்னும்
வருவீர்திருச்சிற்றம்பலத்தே. (கஎ)

முன்னந்தழலாயடிமுடியும்
நடுவுமயன்மால் தேடிச்சொன்னக்,
கன்னற்பாகே கலைஞானங்
கலந்துபேசுங் கண்மணியே,
இன்னமென்னுள் வருமோநீ
ரேழையடியேனிருமையற்கச்,
சின்னங்கொலியயென்முன்னே
வருவீர் திருச்சிற்றம்பலத்தே. (கஅ)

சிற்றம்பலத்தி ருட்சத்தி
தேவர்குழாங்கச்சித்திரமணி,
முற்றமிருக்க யான்கண்டு
முறைதான் கோடிச்சொல்லிநிற்கப்

பற்றறப்பற்றிப் பிடிப்பதென்று
பதராய்ஞானப் பழஞ்சுடரே,
குற்றங் கோடி செய்தாலுங்
குருவேவருவீர் அம்பலத்தே. (சக)

கோடிமறையாகமங் குறித்து
முறைத்துமறிதற்கறிதாகும்
பாடிநால்வரடைந்த முத்திப்
பாத்தைபாவி நாயனென்றும்

நாடிப்பேசா அருளின்ப
மறியுந்திறமொன்றடுத்திருக்கும்
நீடித்திருந்தன மனமையோநிலையாத லைந்தாதலினல்
வருவீர்திருச்சிற்றம்பலத்தே. (உ௦)

அலைந்தமனத்தைபுலன்பொறியோ டடராதத்துவித வீட்டில்.
நிலைந்தன்புடனேநிருவிகற்பநிலையாய் நிற்பதென்று கொலோ,
தொலைந்ததென்றுச் சுகமாகிச்சுடரேசோதிச் சுகாரம்பம்
கலைந்துகொள்ளாதருட்கருணைக் கலக்கவருவீ ரம்பலத்தே.
கலக்கவருங்கண்ணேயானென்செய்வேன் கருவிக்காயு மலக்
காமியர்தால் பலபலவிசாரம், விலக்கவருமின்பிதுதா னென்ற
றியவிபரம், வித்தகமே வேண்டுமெடியேனெனக்குமளித்தால்,
துலக்குமருளேனின்னம் தூண்டாமவிருப்பீர் தூதலவோ
நானே நானேன ப்பேசும்நினைவு, பிலக்குமோ பேய்பாடாய்
பிணங்குதெனைப்பெற்றப் பெரியோயெம்பெருமானே வருவீ
ரம்பலத்தே. (உஉ)

பேதையையா நானொரு நாயிற்கடைநுன்னைப் பேசுகிறே னென்புலைநோயுடலைநிசமென்று, கோதையர்நோய் புலன்சிந் தப்பொறிப்பூதஞ் சிந்தக், குறைமுடிந்த தன்றியுனைக் குணக் கடலேயென்று, சூதையளவற்றவுயிரண்டமெலாம் நிறைந்து துயர்செய்யுமனமாயையான் தானேமீட்பேன், காதை யிதற்கென்னேரம் பழக்கமிதற்கஞ்சுங்களவனுக் கென்கடவீ ரென் கடவுள்பரராபரமே. (உரு)

என்கடவீருன்னன் பர்க்கிருந்ததெலாங் கொடுத்தீரிரந்தாமிந் தாதாணீரெனக்கந்தோவரசே, நன்கடையுநின்னறிஞர் புரங்க டையொன்றருள் வீர்நாறுமலச்சேறு சிந்தும்நாயகியாள் பின் னே, தென்கடன் றீரறிவாளனுக்கியதுங்கண்டேன் றீயிலிட்ட மெழுகாகிதினஞ்கடிய யிறந்தேன், தன்கடனென்றிலையோ வெட்டபெரியவருட் குருவேதந்தையே தற்பரசதாநந்தச்சுகமே.

சின்மயானந்த மிலகநடுந்நிரவுகோ லுண்டாய்த் தெருவாறும், தன்மயானந்தத்தருவிசையச் சகலகேவலமுமறவெளியாய், நின்மயானந்தநிட்களத்தை நினைவாய்ஞானநிலையுணர்த்தும், உன்மயந்தானே வுயிரனைத்து மொளிர்விடுஞ் சோதிமணி விளக்கே. (க)

ஒளிர்விடுந்தாரகமோங்கு மணிருத்திர பூந்தருவே என்மனப் போர், வெளிபடும்நாளென்னுளப்போன் விளங்குமெல்லாம் விருதாவில், துளிர்வி மாசாபாசவின்பந் தொழிலாபமுடியு தெண்ணியெண்ணி, தெளிவிடு மரசேயுனக்கபயம் சிறியே னென்னச் செய்வேனே. (உ)

என்னறிவனைத்துமுனதுசெயலிருமைக் கடவோயிடைக்காடு நின்னருளாகிநிகழ்த்திவிடில் நினையாமுத்தி நிறைஞ்சனத்தை தன்னறிவாகும்விளக்கொளியைத் தானாய்தழுவுஞ்சதசத்தை ..ன்னறிவ..கிப்பார்த்திருப்பேனுயினேன்குறையுந்தீர்ந்திடுமே.

பாரவழக்காய் வைத்துவிட்டாய் சிவமே தெள்ளாவாரமுதே, போராய் மனமிட்டத் தொழிலாகிப் புலையுங் கொலையுமேலாகு, மோராமலசாக்கிர குப்பைவொரு வாயெனக் கென்றோ நிறைத்தீர், பாராய்ப் பாவிப்படும்பாட்டை பரமாதீதப் பழஞ்சுடரே. ௫.

தீதமாதீதம் பரசமயம் பரசிவம் பரவெளிப்பரஞ்சுத்தம், பிரமாதீதம் பேரின்பம் பிராணாதீதம் பிரமாணடம் பேசாமவுனப் பிருதுமயம், இபவாதீதம் ஏகநித்தியமீ சுராமிகபரத்திருநிதியம்பிரவாதீதம் பேதகமத்து விதவானந்தமெம்பராபரமே.

அத்துவிதமார்க்கமென்றுலென்னென்று அறிவேனுலுடனுன்ருடனுன்சொல்லியருள்பெருளை மறவாமல், பத்துவிதவாய்வடங்கும்பரத்தினிலையறிவேன் பராபரமென்றழுது யிருகை கூப்பித் தொழுவேன். நித்திமைதுனங்க ளற்றநினேவோடு நீங்காதநிறைஞ்சனத்தை பார்த்நினித்து நீங்காதமுக்தி, சித்திநிலைபெறுவேனிம் மூடனுக்கோர்தருமச் செயலிலையோ நானெம்மாத்திரஞ் சொல்லுவேனே. (௬)

சேபலிலன்று நான்முகனுர் வகுத்தபடிதானே சித்திரமாய் படைத்தானத்தாதலினுற்சிவமே, கயலிமெலாங்காட்டி அருட் கருணையொடுமகிழக் கருவிமனக்கருமமெலாங் கட்டோடே எரிய. மயலிலற்றை நாள்வரையு மயங்குமனக்கண்ணுமவுன நித்திரை வளரும்படிக்காதிநீயே, துயலுமிருணீங்கிசுகச மாஸ வேதாந்த சுத்தவருட்சோதியரண்கட்டியென்றுமிருமே. (௭)

இருமிருமென்றேயன்று மின்றுமுனையலட்ட அப்பாநீர்கேட்டந்தோ ஆரணமார்க்கமுமாய், திருவோலக்கத்துடனேசிறியேனைப்பார்த்து திருவுளந்தானிரங்கவிலை தெய்வசபைவிளக்கே, ஒருவருமிப்பாரனேத்துமென்போல் பொய்கருமனுண்

டிலைகண்டா யமரரொடு புரத்தை எரித்தக், குரு பரனேயெவ் வகையால் சிந்தையசைவற்றக் குன்றேறிக் கூப்பிட்டு குறை யொழிவேனறிவே. (அ)

அறிவே யாசையற்றவனுயழதழதேக்கமிகவாகியப்பா அண் ணுஐயாவென்றாலை, தெறிவேனைம்புலவேடரை வென்றெம் மனேதுயரம் தீர்ந்ததென சித்தமசையாவருளூற்றி, பிறிவா ருமல்பேரின்பக்கடலில்முழகிபேயுலகப் பேச்சிற்பேசாதிருப் பதற்கே, நெறிதானெந்தனெறிதானே நின்னடியாளர் பிடித் துக்கொண்டார் நிர்மலானந்தநிறைஞ்சனமே. (கூ)

பிடித்துனைக்கொண்டார் பெற்று கொண்டார் பிர்மானந்தத் தாசைபட்டுப்பேசேலுன்னைப் பேயாசை, நடித்துமடிந்துங்கூ ண்டுமெள்ள நழுவவிட்டு நாத்தடிர நமசிவமென்று உறையாத துடித்தமாரன்கணைக்கேவல் தொடர்ந்து பூதத்தால்புரிவேன் தொண்டர் கண்டாலின்னெறிக்கே, படித்துவிடுவாரிப்பழு தால் பாவியா ஞவேன் பரமகுருவாகியென்முன்னே வந்து முழமுதலே பாராய்க்கடைக்கண்ணே. (ய)

முழமுதலே எத்தனைநாளிம்முடமனத்துடனே முமமலவா யிற்சிறக்கமோக மதச்சாலை, நழுங்கருமட்புலைநோயால்நண்ணி மெலிந்தந்தோ நான்சாவேன் பிறப்பேனின் ஞயனுக்கார் துணையோ, தொழும்பெரியச் சோதிசுகாரம்ப வெள்ளக்கரு ணைச்சுத்தவசுத்தங்களிரண் டறவறிவாய்நிறையும், விழுப் பொருளே யித்துயரமெலாந் தீர்த்திடுவாய்கண்டய் வேதாந்த சித்தாந்தம் விளங்குப ருள்வெளியே. (கக)

கண்டனவெலாமருளாய் கலந்தாதியந்தநடுநீகழும் கற்பகவா ரணநீழிற்சும்மா, தொண்டனெனைச் சுகமாகவைத்திந்திரஜா லத்தொழில்படையாதறுமறையைச் சூட்டிமொழிந்திருப்பீர் தெண்டமையாவுனக்கு நிதங்கோடி செய்பவ வப்பீர் சிவசிவா

திருசிற்றம்பலத்தி லன்பருடனே, பண்டலையாபரமார்க்கம் பற்றிடயிப்பாவிப் பாசமெலாம் தீர்த்தறியபக்குவனென்றிடவே, (கஉ)

பற்றற்ற யின்பநிலைப் பற்றிடுநாளென்றோ பராபரமே பத்திநிலையற்ற புலையனுக்கோர், நற்றவமே புரிந்தாரா வருளமுதங்குடித்து நாறிய சேறடைக் காமல் நடுநின்ற மதியை, குற்றமறபிடித்துண்டுக்குறைவற பேசாமல் குருபரனே கொடியன் மனக்கருவியெலாந் தீர்ந்து, உற்றபடி சனகாதி பெரியோர்கள் பெற்ற உண்மையெனக்குணர்த்திடுவா யொருபெரியப்பொருளே. (கங)

எனக்கென்று முணர்த்து மிடமெதுதானாய் நிலைத்து யேகபரிபூரணத்தில் கலக்கு மிதுவன்றி, சினக்கென்று வரும்லோப மதமெது பொல்லாதச் சிற்றின்ப பிணக்கெது தேவோமய முன்திகழ, மனக்குன்றே மரசத சட்டிளைத்தவன்குன்றே வாயாரவாழ்த்தியுனை யழுதழுதுபோற்றும், தனக்கென்று அழியாத நிஷ்டைகைகூடும் சத்தெது மெய்கலந்துரைக்குஞ் சைவபழம்பொருளே. (கச)

எதுதானாய் கலந்தறிய இன்பநிலையுணர்த்து மிருமைபோமிடமறியச் சுகமாகுமானால், அது தானென்றிடுஞ்சங்கை யிலையென நூல்கூறு மன்பைவசமாக்கி மனஞ்சென்ற கருமங்கள், பொதுவாகு மனைத்துயிர்க்கு மதினால் நான்வாடிப் புரநின்றே னீசனுய்ப் புத்தியெலாந்தூர்ந்து, சதுர்வேதன் வஞ்சனையென்றேவுறைத்து விடுமேவன் சத்தியமுன் சற்பனைபோலிலை கருணாநிதியே. (கரு)

கருணாநிதியைக்கலந்தடியார் கற்பகநிழற்கீழ் கற்குமருள் கண்ணே பேசாமதிவிளக்கே, குருநாமத்தை குஞ்சரமுன்

குறைய யிருந்தகோசுழியான் கூவுஞ் சுகத்தை நினைக்கை யா, அருணாலயமுன் விடியவருஞ்சோதிச் சுருபானந்தர்சொல் லு மறிவையானே பெருமபோன், திருணாச்சுரத்துஞ்சென்னி அடிமூல நிலத்தும் சிவானந்தம் தேக்கியுறைக்குஞ் சிவமென் றே. (கசு)

சிவமென்றுரைக்குந்திரமில்லை சியும்பினோமலச்சேறும் சிவந்த நீருந்தியானயற்றப், பவமும்பாசவஞ்சநெஞ்சம்பற்றுமிடரும் பலநாளும் பணியாகுறையும்பொய்யுரையும், சவம்போல் துயிலுஞ்சாகரசாக்கிரத்தைவீடும்சாலரத்தில் தசவாய்வெழு ந்துதிரக்குமின்பம், நுவலுமாயைச் சேகரமும் மப்பாபெற்ற தன்றிநுதல் நடுவாய்விளங்குமரும்பொருளை நோக்கற் பறியே ன்ம் மானே. (கஎ)

நோக்கும்நோக்கத்தருணேக்காய் நோக்கும் ஞானவிட்டிலே னைநோக்கணுகிநுண்ணியமெய்த், தேக்குஞ்சின்மயானந்தபரி பூரணத்திராகலையுருவுந் திசைகால்விரிவு மட்டவெற்பும், போக்கும்பூதப்படையாளர் புரம்பேசெல்லாப்புண்ணியமும் புத்தேனமுதாய்புளித்து போற்றுமழியா தானேக்கியமும், நேக்குப்பரிசாய் நினையாயோ நிர்திஸானந்தநிஷ்களங்கநிறை ஞ்சனநித்தியநிர்மலமே. (கஅ)

நினையாவிடிலென்செய்வேன்பொய் யுடலோகருமப்பழிகண் டாய் நீக்கற்றெரிர்ந்த நிராமயத்தை, எனைநீமனுவாய்வந்தடு மைக்கொண்டதாலென்றுஞ் சுதந்தரந்தானெந்தாயே மாற்றி விடவேண்டாம், வினைதான்தானாய் சுமையாகி வெறுநாளாச் சிவ்விநிநினைந்தால் விமலாவேதகுருமூர்த்தி, தனைதான்காட் டிச்சமரையா சச்சிதானந்தத்தனிமன்றில் தாதாயாடுமுளா கழல் சரணம். (கசு)

ஆடுந்திருசிற்றம்பலத்தி லரகராவென்றப் போரிறைந்தா வறிவும் பணியுமன்பாகும், தேடும்வெளியுந் திருவுருவுந் திகழுமருபாரூபவின்பந் தேக்குஞ் சித்தமசைந்தலையா, தோடுங்கலையு முயர்வாசியழகாய் நிறையுமுன்னத்துவித வுறையுநீழுமூழ்வினைநாய்க்கு, நாடுந்தொழில் சேனுலகாசை நாணுவாத விபகாரம் நாறுஞ்சேறும் நீரடைப்பே னுனென்கடவேன் பராபரமே. (உ0)

உலகாசையன்றி யுனைத்தொழுமாசையில்லை வுள்ளபடி விவகரிக்கும் வசனுதிவுடைமை நினைவன்றே அாசிந்தவுடலுக்குளவு, மலமூசைக் சட்டி குடியிருந்துபவாசகமாய் மதிமலரப்பொடிசாந்துயிட்ட மகளாசை மருவிப்பேய்போல்வாது மற்றுமுள திதினுல், பலநாளுமோசகாமயா பாவிக்கோர்துணையார்பற்றியான் பேசிபணிந்திருளற்றுதாரப் பதியிலிருகண்மூடி பசிதாகங்கனவு, நிலமாதி அவஸ்த்தை பூமிகளற்ற யிடமே நின்று பேரானந்த வீடுண்டு செய்து நீசமனைப் புலேனயேனிற்கவரமருளே. (உக)

## ஆகமம்.

ஆகமாதிகளெலா மறிவெனவிளங்குமாதலினுல், ஏகனேபராபரயீசனேயென் னுடல்கருமமென்றால், மோசனுய்கருணைமுத்தியிலாத மூடனு யிருந்திடக்கண்டேன், தாகனுயுன்னை அண்டினேன் கண்டாய் சச்சிதானந்த தேசிகனே. (க)

அண்டினேனண்ணு அப்பனே அறிவா லன்பெனுமாக்கனுன்பெற்று, தொண்டிலாதிருக்க வைத்ததேன் குற்றம் சோதியேசுருதிசொல்யமே, பண்டுதேடியசன சாதிபர்வழியே பற்றறப் பற்றிநான்பார்க்க, விண்டிலேயென்மனக் கருவிப்பேயென்னுள் வேண்டுமோ அருள்வெளிநிறைவே. (உ)

அருள்வெளிநிறைய அஞ்ஞானமென்றதணைத்துமுன் கதிர்வரப்பனி யினீர் விண்ட, பொருளிலர்ஞானப் புத்தமுதுளத்தே

பொதிந்திருளற்றினின்றுணையெனக்காகி, தெருளமெய்ஞ்ஞான தேனமுதூறி திருப்பெருங்கருணை வாருதிகடவாக, மருட் பெறுவே ஞானேதிலேனந்தோ வணங்கிலேன்வாழ்கநின்கழல் தருமராசே. (௩)

தருபெருந்தருமநடராச சிவமே தாள்படமண்ணிலென்தலை யிருந்தறிவாம், திருப்பெரும்படியெதிர் வரவினைக்கண்டுதெண் டம்நான் செய்தருள்சபையில், குருப்பெருங்கருணை மவுன தேசிகமாய்க் கூரப்பேய்மனம்பிணக்கற்று, அருட்பெருநாளெ ந்த நாளெனக்குடைய அந்தணாயருமறைப்பொருளே. (௪)

மறையதுமொழிந்த மார்க்கட்நன்னூலர் வளங்கினதுறை மொழிக்கேட்டு, திறையதுவிளங்கத்தெளிந்தனானில்லைதேவர் தன்தேவனைதிருவால். நிறைவளர்ச்சோதிநீழ்வெளிசிவமே நித்திரைமாதர்மைதுனத்தால், குறையதுபெற்று வினையதைச் சுமந்துகோள்பொறைமனத்தனாகினனே. (௫)

பொறை மனக் கொடுமைப் புன்புலாலாக்கை பூதபேய் நினைவொடுப் புலறப், பிறைமதி சூடியபெருவருட்கோவே பிள்ளைகள் செய்பலகுற்றமோபேசி, உறைசூழ்ந்தப்பாழ்வினை உயர்வெனவொப்பி உள்ளபோதானந்தக்கடலில்,பறை முழங் கிட சச்சிதானந்தச் சபையில் பல்லாண்டுவாழ்த்திடப்பரிவீர். பரிமனவாசி பகலென நிறைந்தபரிபூரணானந்தப் பரவெளிப் பார்த்து, திரிமலகாண வாயலசாக்காடு பூமியுமற்றபே ரின் பம், துரியவேதாந்தச் சமரஸபோதம் துவாதசகலை வெளி மருவி, திரிபுரத்தப் புரம்சென்று மெய்விளக்கொடு சேர்ந்தி ராப் பகலறத்திகழே. (௭)

மெய்விளக்கே விரகமணப்பெண்ணை மணந்தையையோவெ யின் மினுக்கும் மஞ்சளரும் பூண்பணிபாடகங்கள், கையில் விளக்கெடுத்து நெருப்பில்லையென்று யலைந்தக்கதைபோலுங்

காமாதிக்கருமத்துக்கேயான், துய்பவருட்டோணியில் யான் முழுகி சுகவாரிதுணைகாணே னுனைநாடி தோத்திரம் நான் செய்கேன், பொய்புலகவாழ்க்கையினிலேயெனக்குவாதம்புரி கின்றீரெரிந்துமனம் புழுக்கடாய் புரம்பே. (அ)

## ஆனந்தக்களிப்பு.

சோதிதுணங்கொடியானே இன்னஞ்
சொல்லாமற் சொல்லிச் சுகந்தருவானே.

ஆதிபராபரந்தானே என்னு
ளநாதிமுன்னனாதியா யிருந்திடந்தானே
சோதியுட்சுருபாய்வந்து தினந்
தோன்றிசுகானந்தஞ்சொல்லிநின்றாண்டி. சோதி (க)

வளர்ந்தாதி யந்தமுமாகி நடு
வஸ்துவாய்மாயாவிசாரங்களெல்லாம்
கிளர்ந்திடயென்முனே பேசிப் பொல்லா
கேள்வியுமாக்கிமுன்கேட்டிருந்தாண்டி சோதி (உ)

ஆக்கிப்பிரிப்பதுந்தானே அழித்
தானந்தமாவதுமவன்செயல்தானே
போக்கிக்கொண்டானுளந்தானே என்றும்
பூரணவஸ்த்தாகிப்போதிக்கதானே சோதி. (ங)

போதிக்கத்தானதுவாகி சோதி
புத்தமிர்தக்கலை பூரணவீட்டில்
சாதிக்கசொல்லியபோது என்றுஞ்
சாகாவீட்டினில் சாடினன்தோழி சோதி (ச)

வீட்டைக்கொடுப்பதுந்தானே வெளி
வீட்டைத்திரந்துமேல் வீட்டையுங்காட்டிப்
பூட்டைத்திரப்பதுந்தானே பொல்லா
கேட்டைமுன்பேசி நெடுத்திருந்தாண்டி. சோதி (ரு)

பொல்லாதமாயையைபூட்டி புத்திப்
போதித்திடும்பையை பேசியெப்போதும்
கல்லாதவென்னுளங்கலந்து மனப்
பேயங்கமாக்கியும் கற்பித்தான்தோழி. சோதி (சு)

கற்பித்தகற்பனைத்தானே மூன்று
கண்ணுடன் கற்பகச்சோதிநீழிருந்து
துற்புத்திசூழமுன்பேச ஞாய
மொப்பித்துரூபிப்பை சொல்லிநின்றாண்டி சோதி (எ)

ஞாயத்தையென்னென்றுசொல்வேன் புவி
ஞாதுருபேதபேதங்களும்பேசி
தூயப்பொருளெலாந்தானே தூர
வழக்கிட்டுப்பேசிமுன்சமர்த்துசெய்தாண்டி. சோதி (அ)

பேசியபேச்சைநீகேளும் பொல்லாப்
பேயங்கமாகிப்பொய்ப்பேதரூபங்கள்
ஏசியெவருங்கண்டறியா திருந்
தேளனஞ்செய்தெனை ஏமாற்றினாண்டி. சோதி (கூ)

செய்தகொடுமையென் சொல்வேன் தீயி
விட்டமெழுகாகியுருகிநான்கேட்டேன்,
வைதெனைவம்புகள்பேசி மன
மாயையுண்டாக்கி வணங்ககேட்டாண்டி. சோதி (௰)

யணக்கமிணக்கமுமாகி மாதர்
மக்களென்றுமுரணுசையுண்டாக்கி
பிணக்கிபேதனங்களுண்டாகப் பீந்தை
வீட்டுக்சேளும்சோதி விவேகமானுண்டி. சோதி (கக)

உண்டானவற்புதந்தானே வுலகி
லோடியும்பாடியுமுணறுவாருண்டோ
கண்டாறுவீட்டிலுந்தானே ஞானக்
கண்கொண்டுபார்த்திடுங்காட்சிபார்தோழி. சோதி (கஉ)

காட்சிநால்வேதமுங்கோடி சிவ
சாத்திரஞ்சொல்லினுங்காணுசோதி
சூக்ஷவாதாரமெய்வீட்டில் ஐயன்
சொல்லாமற்சொல்லியசூத்திரந்தானே. சோதி (கந)

சூத்திரமாகியகட்டை சூக்ஷ
வேதமுரைத்திடும்பேசிடும்தானே
நேத்திரஞ்செவிவேறுபோல ஐய
னின்றதை உணர்ந்திலா நிர்மூடந்தானே. சோதி (கச)

நின்றதைக்கண்டிடத்தானே எல்லா
நினைவாதி யிருமையுண்டாமிடந்தானே
துன்றியசோதிசுகத்தை யீசன்
துணையென்றுகண்டிடாதூர்வுலகீரே, சோதி (கரு)

சோதிசுகத்தையென்சொல்வேன் சும்மா
பார்த்துச்சுகானந்தம்பேசிடத்தானே
நீதிமனுவாகிவந்து தெய்வ
மில்லையோவென்றுநிசத்தைச்சொன்னுண்டிசோதி (கசு)

நிசத்தைகண்டாலெனக்கண்டோர் பர
நிர்மலானந்தநிஷ்களவீட்டை
நிசங்கட்டிஎன்னுடன்திரிந்து சொன்ன
சோதிசுகானந்த சுகாம்பரந்தானே. சோதி (கஎ).

சொன்னசொல்லானமேதோர்சொல்லே அருட்
சோதிவெளியில் சுருபனாய்நின்று
இன்னதினியதென்றுசொல்லா சூக்ஷ
டாதாரமாயுலகாகிநின்றாண்டி. சோதி (கஅ)

உலகாகிநின்றவர்தானே உட
லாதாரமாயைந்து மடுக்கெனக்காட்டி
பலமதம்சமயம்பாழென்று என்னை
பற்றறநின்றுபார்க்கசொன்னாண்டி. சோதி (ககூ)

பார்க்கசொன்னதைப்பற்றியப்போது
பாருலகாசையைபேசி சுத்த
பாஷாண்டியாக்கி பகடிசொன்னாண்டி சோதி (உ0)

ஆசைவளர்ந்ததுமாங்கே அறி
வானந்தபூரணம் விளைந்ததுமாங்கே
அத்துவிதானந்தமாங்கே வுட
லங்கதேசத்திலவ னற்புந்தாண்டி சோதி (உக)

உடற்குளறியாதவுலகீர் ஐய
னுண்மையைக்காணாதுருண்டலைந்தீர்கள்
சுடர்க்குள்சுடரெனத்தோன்றி நின்ற
சுகங்கண்டிலாதபொய்துன்புரைப்பீரே. சோதி உஉ)

கண்டதுங்கேட்டிலீர்தன்னு ளாதி
கற்பனைக்கெட்டா கடவுள்தன்னருளை

தொண்டவர்செய்திடவலியச் சோதி
சுகங்கண்டுபேசியுள் சொப்பனித்தாண்டி. சோதி (உ௩)

கண்டதுமென்னபார்தோழி வெளி
கற்பனேக்கெட்டாவதீதசித்தாந்தம்
பண்டலேயாவீடுயென்று தன்னுள்
பார்க்கவைத்தேயுரைத்தேயிருந்தாண்டி. சோதி (உ௪)

தன்னுளருட்குருகாட்டி சிவ
சாக்ஷியாய்சர்க்குரீதல்லவோபிள்ளாய்
மன்னுமுப்பொருளெலாஞ்சொல்ல சுத்த
மனுவாகிகூப்பிவலியசொன்னுண்டி. சோதி (உ௫)

சொன்னதை யென்னென்றுசொல்வேன் வாசி
பாயமல்வாரணக்கடவுணீழ்விடிய
இன்னமுதாய்சும்மாபார்க்க கலே
யீாருங்கட்டியிருக்கிவைத்தாண்டி. சோதி (உ௬)

வைத்தவருளிடக்தானே நந்தி
வாரிட்டிருக்கும் வரிசைசெய்தாண்டி
பொய்த்தவமாதரினுசை மலப்
போக்கினுல்வாடினேன் புனிதம்வைத்தாண்டி. சோதி

பூரித்தபூரணங்களும் ஞான
போதகமாய்மணிபூரகந்தானே
தேரித்தெளிந்திடத்தானே தன்னுள்
தெரிசனமாக்கிசெப்பிநின்ருண்டி. சோதி (உ௮)

தன்னுளே தானறச்சைவ சிவ
சித்தாந்த மாதவஞ் செய்திருமென்றும்
என்னுளே எப்படியாவ தினி
யீடேற்றவானவனிட்சயந்தானே. சோதி (உ௯)

மாதவஞ்செய்பினுங்காணு வாசி
யழகிட்டவெளியென்றுமகமேருவென்றும்
போதங்கள்சொல்லிடக்கண்டே னிதைப்
பொன்போலும்வைத்துநான் பூசைசெய்தேண்டி. சோதி

மாதரினுசையால்மயங்க சுக
மார்க்கம்வைத்தேசகமார்க்கம் வைத்தாண்டி
பூதபேயுரவுநீயல்ல வேத
பூட்டகமென்றுநான்பூரிக்கத்தானே. சோதி (௩௧)

என்றுமிருப்பதுபொய்யே வுட
லேதுக்குநிட்சயமில்லையென்றுணர்ந்தோம்
நன்றுலகாதியழிந்தும் ஐய
னழியாதவஸ்துவென்றறிந்தேண்டிதோழி-சோதி(௩௨)

அழியாதவரூபரூபங்க ளைய
னற்புதமாயெனக்கன்புபாராட்டி
பொழியுமாரணநூல்கள்சொல்லும் சுக
பூரணவெளிநின்றுபோதித்தான்தோழி சோதி (௩௨)

வெளியென்றபூரணவீடு விந்து
நாதமுங்கீதமும்பேசியசபையில்
ஒளிவிந்துமதிமண்டலங்க ளுநித்
தோயாமல்சொல்லியுகர்துநின்ருண்டி சோதி (௩௪)

உகந்துபாராதிபடைப்பை உசித
சித்திரபொம்மைபோலசையாமல்நிற்க
சகத்தைப்பாரொன்றெனவாத்ம சரீர
தற்பரநில்லையிதெனசாக்ஷியாளுண்டி. சோதி (௩௫)

ஆத்மசரீரமுமாக்கி அசை
யாதபிர்மானந்தசிற்பரரூபம்
கோத்துவைத்தானுடலுயிராய் குரு
காட்டுமோதாரமுங்காட்சிபார்தோழி, சோதி (நகூ)

ஆதாரமானதுங்கேளு மறி
வானந்தஞ்சின்மயநிலையசையாமல்
போதமுந்தீபமுமாகி பூத
பேதரூபங்களொன்ருமெனப்பூட்டி சோதி (நஎ)

பூட்டைதிறப்பதுந்தானே மனப்
பூட்டையும்பூட்டியிருப்பதுந்தானே
காட்டியும்வைப்பதுந்தானே ஞான
கண்கொண்டபூரணகற்பனைபாரே. சோதி (நஅ)

பூரணகற்பனைசொல்லி பின்னும்
பொய்புறவாகினள் போக்கினன்தோழி
காரணகாரியமாகி ஞானக்
கடவுளைகண்டுகளிப்பதெவ்வாறே. சோதி (நகூ)

பாயுமீருறுக்கலைவீட்டில் வாசி
பங்கிட்டுப்பாராமல் பார்த்திடத்தன்னுள்
தோயுமானந்தவெளிதீபம் தன்னுள்
சொல்லமுன்குருவந்து தோன்றுவான்தோழி சோ

மோனவுருவாக்கிப்பாரும் தன்னுள்
முத்தியும்சித்தியுமெமக்குமானந்த
ஞானவெளியாகிநாடும் ஐயன்
நியர்யமும்பேசிநலம்புரிவானே சோதி (சக)

பாழுலகாசையில்விழுந்து பவம்
பற்றியாம்மாய்வதுதிண்ணம்பாருலகீர்
வாழும்படிக்காசையேது ஐயன்
மலர்பதம்போற்றியுள்ளறிவதுதானே. சோதி (சஉ)

நீடியஞானவைராக்யம் இந்த
நீணிலத்தேபிறந்தேனிலையோக்கியம்
தேடியலைவதென்சிலாக்கியம் ஐயன்
செயலன்றியில்லைபார் நமக்கானபாக்யம். சோதி (சங)

பாராசைவிடுவதேபாக்யம் தன்னுள்
பராபரந்தன்னைநீபார்த்திடநேர்க்கும்
ஆராவமுதவாரோக்கியம் அசை
வற்றமெய்பூரணமறியார்களுலகோர். சோதி (சச)

தேனும்பால்கண்டிதற்காமோ தன்னை
தெரிசியார்க்கென்னவுரைக்குனுமாசை
ஏனுணர்ந்தவர்விடுவார்க ளினி
யேதுக்குசொல்கிறீரேகனைத்தானே. சோதி (சரு)

வேதமுமபோதமுமாமோ வெளி
நாதவிந்தாயுருவாகியவீடு
சாதனைசெய்வதுமாமோ சகத்
தாசைவிட்டேயறிவாசைபட்டிலங்கும். சோதி (சசு)

அழியாதிருப்பதோருபாயம் வல்ல
பாராருட்குருசொல்லுமோர்ஞாயம்
ஒழியாதவன்பைபெருக்கி உள்ளே
ஊசறவாய்வறசெய்புமெய்தீபம். சோதி (சஎ)

வாய்வறசெய்யுமவ்வீடு வாசி
பழகெனல்சொல்லவும்வாயுண்டோதோழி
தாய்மனேன்மணிவீட்டுக்குள்ளே சகல
சாஸ்வதசித்தாந்தபோதகமாமே. சோதி (சஅ)

சாஸ்வதசமரஸவீடு ஞான
தற்பரநிலைகண்டாலேன்குறைநாடு
தீக்ஷைபெற்றார்கெவரீடு திரு
சிற்றம்பலத்தினில்செப்பிநிற்பாண்டி. சோதி (சகூ)

கருணைபராபரம்வாழி தன்னை
காட்டிஆதாரவெளிச்சொல்லாமற்சொன்ன
குருவாம்பராபரம்வாழி ஞானக்
கண்கொண்டுபார்த்திங்கடவுள்பார் தோழி. சோதி

உற்றதுணர்த்தினன்தோழி சித்த
ருணர்த்திட்டஉண்மையீதென்று என்முன்னே
ஒருவர்பராபரந்தன்னை உற்று
பாரத்திறவந்துறைப்பேனென்றுசொன்ன. சோதி (ருக)

அழியாதபொருளிதென்றுணர்த்தி ஐய
னருகழைத்தேயென்னைவாழ்த்தினபாதம்
தொழிலாகஎன்றுநான்போற்றி சுத்த
வேதன்குணங்குடிவிமலர்தாள்வாழி சோதி (ருஉ)

சாவதுமில்லைபார்தோழி தன்னு
டற்கண்டுபேதேசித்தக்கற்பனையானல்
மூவருந்தேவருஞ்சொல்லா முத்தி
மோனமுதலென்றுமொழிந்தனன்மவுனி. சோதி (ருங)

மூச்சற்றதீபம்பார்தோழி தன்னுள்
முடங்கிக்குடிபெறசொன்னதுதானே
காட்சிபாரீடதற்காரே ஞான
காரணசற்குருநாதன்றுள்வாழி சோதி (ருச)

எங்கும்நிறைஞ்சனம்வாழி என்னை
யாட்கொண்டசற்குருஜயர்தான்வாழி
கங்குல்பகலறமோன வருட்
காட்சியாய்நின்றமெய்காரணம் வாழி. சோதி (ருரு)

அத்துவிதப்பொருள் வாழி அறி
வானந்தசின்மயம் அற்புதம்வாழி,
சித்தர்பதினெண்மர்வாழி திரு
மூலராய்மனுவாகிவந்தசீர்வாழி சோதி (ருசா)

ஆதிபராபரம்வாழி எனக்
கறிவாய்மூளைத்தருள் சொன்னவர்வாழி
நீதிமெய்ஞானநூல்கற்று தன்னை
நினைந்துதரிசனம் செய்தவர்வாழி. சோதி (ருஎ)

மோனவுருவாகியெங்கும் முத்தி
ஞானவித்தாகிமுளைத்ததுவாழி
சனகாதிபரம்பரைவாழி
சச்சிதானந்ததற்பரச்சந்நிதிவாழி. சோதி (ருஅ)

பரிபூரணனந்தம்வாழி தன்னை
பார்த்தாசைவிடவைக்கும் பரஞ்சுடர்வாழி
பெரியோர்கள்தன்பதம்வாழி என்றும்
பேசாதஞானமே பேரின்பம்வாழி. சோதி (ருகூ)

தன்னையறிவதேவாழி சர்வ
ஜீவதயாபராராகிபடைத்த
சம்புசதாசிவம்வாழி என்றும்
தாயிலுமன்பான சற்குருவாழி. சோதி (௬௰)

## பலவகை கண்ணிகள்.

வானாள்மடக்கி வையத்தினாசையற்று
நானாகத்தேடியுனை நம்பிகண்டுஇருக்கேனோ. (௧)

மானார்மலமொழிந்து வாழ்த்தி துதிக்குமருள்
தேனாறுபொழிய வழிந்துண்டுசுகம்பெறுகேனோ. (௨)

கண்டுகண்டுமனந்தெளிந்து கருணைமனப்படதேறி
தெண்டிரையில்தேடியென்றும் திரியேனோசதாசிவமே.

மெழுகாயுருகிமனம் வெந்துதணலாய்நீறி
அழுதுனையானண்டியென்று மிருக்கேனோசதாசிவமே

வீணாள்கழிக்காமல் வெளிநாளெனக்குண்டாய்
சாணாள்தொலைத்து சபைசாரேனோசதாசிவமே (௫)

வண்டர்கள்தன்புத்தியற்று வாய்வற்றவீடுகட்டி
கொண்டாட்டமாயுனையான் கூரேனோசதாசிவமே. (௬)

பாழுஞ்சடம்பெற்றுப் பாவியாயலையாமல்
வாழும்படிக்கென்று வைப்பாய்சதாசிவமே. (௭)

கண்கண்டமாந்தர்மல வாழ்க்கையைநான்பாராமல்
விண்கண்டுவாசிமலர் விரித்திருக்கப்பாரேனோ. (௮)

பாவியென்றுசொல்லாபர மாய்பரவெளியில்
தேவிசொல்லகேட்டு தெளிவதினிஎந்நாளோ. (௯)

ஆவிபோமுன்னமண்ணல் வந்துபுத்திசொல்ல
தாவிதுணைப்பெற்றிருக்க தனையறிவதென்னாளோ. (௰)

பேசாமவுனத்தை பெற்றடியாருடன்சேர்ந்து
ஆசாபிசாசற்று அறிந்திருக்கக்காண்பேனோ. (கக)

அஷ்டாங்கசூக்ஷ அருட்சோதிசமாதியிலே
இஷ்டமுடன்பெற்றழுது இருக்கநான்பாரேனோ. (கஉ)

சாதல்பிறப்பற்ற தவமிதென்றுதனைப்பார்த்து
மாதர்மயக்கமற்று மனந்திருப்பிபாரேனோ. (கங)

மூலக்கனல்மூட்டி முச்சந்திவீதிவெளி
காலதிசைகடந்துசிவக் கடவுளைநான்பாரேனோ. (கச)

போசைப்பட்டுப் பிணமாகிச்சாகாமல்
சீரானசிவஞானம் தெளிந்திருந்துபாரேனோ. (கரு)

கரணப்பொறிவாயல் காலற்றுகருணையொளி
அரண்கட்டி ஆதியந்த நடுநின்றுப்பாரேனோ. (கசு)

பித்தாகிபேசாபெருவருளைப் பார்த்தென்றும்
சுத்தனையென்றழுது கண்டுகளித்திருக்கேனோ (கஎ)

மாயக்கலவியற்று மதிமண்டலங்கட்டி
தேயத்துடன் செத்த தவம்செய்துபாரேனோ. (கஅ)

ஓயாயலுருகி உள்வீட்டுக்குள்ளிருந்து
தாயாயமுதூட்டும் தற்பரத்தைபாரேனோ. (ககூ)

வாலைமணிவிளக்கேற்றி வாய்மையனுபிரளாது
காலைகதிர்மதிவட்டம் கண்குளிர்ந்துபாரேனோ. (உ௰)

சித்திரக்கூத்தை தியானநித்திரையுடனே
பத்தியாய்போற்றி பராபரத்தைசேரெனோ. (உக)

ஆரிருந்தாருலகில்ஐயா அழியாமல்
சீரிருந்தாலாகும் சிவமேநிராமயமே. (உஉ)

மனப்போரேபோரையா மற்றென்னபோருண்டு
தினம்பாடெனக்கதினால் சீர்படுமோநிராமயமே (உ௩)

வெறிகொண்டநாய்போலும் வீணாயுறைத்திருந்த
தறியாயோஐயா யார்துணைகாண்பராமயமே. (உச)

மடைவாயிற்பக்ஷிபோல் மாதர்மயக்கினுக்கே [மே
கிடைக்குமோவென்றிருந் தேனென்னகேடோபராமய

இடைந்திடைந்துமாறு மனத்தையானேமாற்றி
துடர்ந்துடர்ந்தறியதுணை பெறுகுநாளெந்நாளோ. (உசு)

சுநுபமணிவிளக்கை சூழிந்திரஜாலம்
மருவுமனக்கயராறுத்து மகிழுநாளெந்நாளோ. (உஎ)

செவியொன்றைகேட்டு சிந்தையசையாவருளே
நவின்றுறைக்குஞ் சித்தருறைநான்கேட்டுமகிழேனே.

கண்ணொன்றைபார்த்து கருதாதுசருணைவெளி
விண்ணூன்றிவித்தகர்வருக வேண்டியான்பணியேனே.

நாக்கொன்றைநவிலாது நடுவீட்டில்நவின்றிருக்க
பாக்கியத்தைபராபரத்தை பணியனான்காண்பேனே

மூக்கொன்றைமுகராது முன்னூன்குகலைகட்டி
சாக்கற்றசவ்வாதணிந்து தவம்பெருகக்காணேனே.

மாயாதோமாயை மருவாமல்மதிவீட்டில்
தொயாதோஅருபசுக மாகாதோசாகாதோ. (௩உ)

பாயாதோபன்னிருகால் பாவிபடுந்துயர்பார்த்து
ஆயர்தநூலறிவு அடர்ந்தென்றும்தொடராதோ. (௩௩)

தோடர்ந்தறியதுரியாதி சுத்தவத்துவிதவீட்டில்
இடந்தந்துகொள்ளாதோ என்னறிவேமெய்பூரணமே.

வாயுவைமணிநாதத் தீபமாயுண்டுண்டு
பாயுருபஸ்தங்களற பார்ப்பேனோமெய்பூரணமே (௩௫)

அந்தகரணங்களற ஆதியந்தநடுவீட்டில்
அந்தரமனவாசியொடு சுகித்தணையப்பாரேனே. (௩௬)

அத்திமதக்கரியை அடிமூலத்தியான்பார்த்து
வைத்துமறந்திருக்களென்ன வகையோ அறியேனே

பொல்லாகருவிதினம் பொருமும் அனலாலுருகி
சொல்லாவரும்பொருளை தோணுதுசோர்ந்தேனே.

யாருநியானம் மனத்தில்நினைந்தறியுமெனை
ஆருசைபடவைத்தார் அறியேன்மெய்பூரணமே (௩௯)

வேதாந்தசபைபார்த்து விண்ணப்பம்சொல்லுமெனை
வாதாய்வழக்குறைக்கும் வகையார்மெய்பூரணமே.

தோரணத்துலேகூட்டி சும்மாதுயிலுமெனை
மாரணத்தின்வலைமாட்டிமறித்ததார்பூரணமே. (௪௧)

காரணத்தைபார்த்து கருத்தோடிருக்குமெனை
போரனைத்தும்பேசிபுணை யிட்டதார்பூரணமே. (௪௨)

வாரணத்தைபார்த்து வாசியொடுமகிழுமெனை
தூரிணைத்துதூமதுயில் சூடினதாரறியேனே. (௪௩)

அஞ்சுமுன்னேகொஞ்சும் ஆரணத்தைபார்க்குமெனை
கெஞ்சியுறைத்துகே டாக்கினதாரறியேனே. (௪௪)

துஞ்சாமலஞ்செழுத்தை சும்மாயுணருமெனை
வஞ்சமனவாசைபிலே மயக்கினர்யாரறியேனே. (௪௫)

மதியுதையமாக்கிவைத்து மவுனமணிசித்தாந்தக்
கதியறிவைச்சொல்லிவைக்குங் கண்ணேபராபரமே.

வாயாமல்போனசுகம் வாடியான்திரிந்தலைந்து
தேயாமதிவாரி தேக்கிகொள்ளகாண்பேனோ (௪௭)

மூச்சைபிடிந்து முடங்காமல்மூச்சற்ற
காச்சிபடைத்தவெளி கண்ணுறங்கிகலப்பேனோ. (௪௮)

படைத்தவெளியை பாழ்மூன்றுங்கடந்தசுகம்
கிடைத்தலரிதோவென் கிருபாநிதிபொருளே. (௪௯)

வாக்காலுஞ்சொல்லாலு மடங்காசிவகருணை
வாக்காலுஞ்சொல்லாலும் வாருநாளெந்நாளோ. (ருய)

ஆரூரில்கச்சி மூலக்குடியாரை
நேரூரில்வரக்கண்டு நினைவடுப்பதெந்நாளோ. (ருக)

கண்டுநினைவடுத்து காட்சிபரவெளிமுடங்கி
உண்டுடுத்திதிரியா தொடுங்கிநிற்பதெந்நாளோ. (ருஉ)

மாயாமனக்காலன் விசாரமென்றுதொலைவதையா
ஆயாமறைநூலே அறிவேபராபரமே. (ருங)

கண்மூன்றுடனுறங்கும் கனகமணிமதில்வீட்டில்
எண்ணிஎழுந்தழுது யேக்கமற்றுயிருக்கேனே. (ருச)

ஏக்கமற்றபூரணமே என்றுஞ்சிரஞ்சீவியாய்
மார்க்கண்டாவென்ற மவுனகுருவேசதாசிவமே. (ருரு)

தூக்கமற்றதுரியாதி சோதிவெளிசோடசத்தில்
சாக்குசவிப்பரபெற்று சரணடைவதெந்நாளோ. (ருசா)

தேனில்விழுந்தயீ திக்கற்றுசெத்ததுபோல்
வானிலத்தில்குடியிருக்கவகையேன்பராபரமே. (ருஎ)

இருக்காதிமறைமுடிவே ஏக்கமற்றபூரணத்தில்
தருக்கமிகபேசியெனை சபைசேர்ப்பதெந்நாளோ. (ருஅ)

சச்சிதானந்தநடுசபையைசமரஸவேதம்
மெச்சிவெளிவிளக்கெறியும் வீட்டைநான்பாரேனோ.

பெண்ணாசைபோலாதிபிஞ்சகன் றன்னாசைபெற்று
கண்ணாசைப்படக்கண்டு கருணைவெளியுறங்கேனோ.

பீநாறுந்துருத்தியை பிணக்கடத்தைபேய்சோற்கூற
வாய்நாறும்வாய்வற்று வாடித்திரிவேனோ. (சாக)

அத்துவிதவீட்டை அறுமறைகளுறைகாட்டை
சித்துருவஞ்சொல்ல தெளிவதுவுமெந்நாளோ. (சாஉ)

தெளிவேசித்தாந்தத் திகழ்வீட்டுக்குள்ளாதி
ஒளிவுயர்ந்துவாவென்று உணர்த்துநாளெந்நாளோ. (சுங)

என்றுவருமோஎனக்குனது அன்பர்கதி
நன்றுபாராட்டுநடு வீட்டிலிரநாடேனே. (சுச)

ஆரணக்கால்பூட்டி அத்துவிதவீடடுத்து
தோரணகாலோடமனஞ் சுகம்பெருவதெந்நாளோ. (சுரு)

ஆரியனைஉதையமாக்கிவைத்து ஐந்தொளிவின்
சூரியன்வீடாகிமதி தொழில்புரிவதெந்நாளோ. (சுசு)

கவடற்றசற்குருவைகண்டு பணிந்தருள்சொல்ல
பவமற்றுபார்ப்பதெந்நாள் பகராய்பராபரமே. (சுஎ)

ஐந்துமகஞ்சிரித்து அத்துவிதம்தெரியாமல்
நோந்துமலமூடாமல் நோக்குளிப்பதெந்நாளோ. (சுஅ)

காற்றையடைத்து கனபசிக்குசோறுதின்று
ஊத்தையுடல்நழுவாதஉண்மைபெறலெந்நாளோ. (சுகூ)

அஞ்சுபஞ்சுபூதம் அகண்டவெளியாய்நிறைந்து
துஞ்சிசுகவெளிநடக்கு சதுறைபெறுநாளெந்நாளோ.

தேகமுத்திபெற்று சிவஞானமோதுவிக்கும்
ஆகமத்தின்வீட்டில் குடியாயிருப்பதெந்நாளோ. (எக)

தனையறியநினையாமல் தட்டாமல்தட்டியெனை
வினையுறைத்துவீணாய் விட்டதென்னஅறியேனே. (எஉ)

விட்டகுறையில்லாமற்போனாலும் இன்றுநான்
தொட்டகுறைபாவதுண்டோ சொல்லாய்பராபரமே.

காணாதகாட்சியெலாங் கண்டுகளித்துறங்கேனே
தோணாமற்தோன்றிசுகம் பெற்றிருக்கவறியேனே. (எச)

நாலாம்பதவிபெற்று நானியுமற்றுசுக
மேலாம்பதவிதினம் விளையுநாளெந்நாளோ. (எரு)

மூலாதாரத்துள்முடங்கி மலவாசையற்று
காலீருரற்றவருள்கண்பார்த்துக்கருதேனே, (எசு)

மூச்சற்றதீபமுளைத்து சுகமோனநடு
கூச்சமற்றுபார்க்குமருள் கண்குளிர்வதெந்நாளோ (எஎ)

வாய்சமர்த்துபேசாத வாய்மையருள்சமர்த்து
தாய்சொல்லகேட்டு தவம்செய்தவதெந்நாளோ. (எஅ)

நினையாவருணிஷ்டை நித்திரைபெற்றிருக்காமல்
மனையென்றுமக்களென்று மருவினேன்பூரணமே. (எகூ)

தாரணத்தைபார்த்து சமாதிவசமாக்காமல்
தாரணைத்தும்செய்துசுக வறிவிழந்தேன்பூரணமே (அ0)

போய்வாழ்விலாசைபட்டு போக்கிலேபோவேனும்
மெய்வாழ்விலாசைபட்டு விரும்புவனோவிரும்பேனே.

ஆடியகூத்தாடிடினும் காரியத்தில்கண்ணென்று
நாடிநடுவாழாமல் நலமிழந்தேன்பூரணமே. (அ௨)

சித்தியெலாம்வல்ல சிவத்தருளைப்பாராமல்
புத்திகெட்டுபோனேனென் புரிவேன்மெய்பூரணமே.

கத்தபத்தைபோல்தின்று கடுநரகில்சேருமெனை
வித்தகம்வந்தழைக்க வெளிபடுமோபூரணமே. (அச)

நாசிநடுவொளிவெளியாய் நாதவிந்துருவாதி
பேசினும்பேசாதிருக்கும் பெருவீட்டைதிரக்கேனே.

வாசியொளியழுகிட்டு வாழ்த்திதுதிக்காமல்
பேசிபலனிழந்துநான் பேயங்கமானேனே. (அகூ)

வான்மலர்ந்தவாசி வையாளிவீட்டிலெனை
என்புணர்ந்துவாழாம லிருக்கிறாய்நன்மனமே (அஎ)

மனத்தாசையற்று வஸ்துவைபார்த்திருக்காமல்
சினத்துவருமாயைச் சிக்குபட்டாய்நெஞ்சகமே (அஅ)

பட்டபாடையோதபோதாதோ பராபரமே
துட்டபாடென்மனந்தான் தொலையேனென்குதே.

சிந்தித்திருக்கும்போ தென்னைசிறுகாலைவந்து
சந்தித்துபேசிநின்றத் தாதாய்நிராமயமே. (கூ0)

கண்பஞ்சடையுமுன்னே காலதச்சன்வருகாது
அண்ணல்வந்துசொல்லி ஆதரிக்கப்பாரேனே. (கூக)

திருவேஅருளுறையே செல்வமேதிருமூலக்
குருவேஎன்கண்ணிறைந்த கோவேநிராமயமே (கூ௨)

நிறைந்தபரிபூரணமே நினைவற்றநிற்குணமே
குறைவிலாநிறைவே குணக்குன்றேநிராமயமே. (கூ௩)

புத்திசற்றுமில்லாதபுலையே னெவ்விதத்தில்
பத்தியற்றநாயேன் பணிந்தறிவேநிராமயமே. (கூ௪)

ச்சிக்குமேலேஉயர்ந்த தரிசனங்கண்டு
மெச்சிகுருமவுனிசொல்ல விளங்குநாளெந்நாளோ. (கூ௫)

இடைகலையும்பிங்கலையு மேணிபோல்சாத்திவைத்து
நடுகலைமேல்நின்றுதி நடம்பெறுவதெந்நாளோ. (கூ௬)

கூச்சமற்று ஞானக் கொள்ளி கொண்டு பாராமல்
நீச்சமனநினைவாலே நின்றுதவித்திருந்தேனே. (கூ௭)

தோணுவருள்தினமுந் தூண்டிதிருத்தில்லைவெளி
காணுதவருங்கருணைக்கண்டுகொண்டேனென்பேனே.

போய்க்கவிதைபேசிபுலை நாயேனும்வாடாமல்
மெய்க்கவிதைபேசிவெளி விளையாட்டைபாரேனே.

ஞானவெளியைநாலாம்பதங்கடந்த்
மோனசிம்மாசனத்தில் முத்திசொல்லியிருக்கேனே. (௱

தானகஞானவெளிதடங்காட்டுமவுனமதி
கோனகவந்தகுரு கொடுக்கநான்பெறுகேனே. (௱க)

மாணுவெனவாசி மதிமண்டலத்தழைத்து
தேனுகப்பேசியெனைச் சித்தமொடுசேர்ப்பாரோ. (௱௨)

சித்தம்சையாத திருமந்திரமுரைத்து
பத்தியளித்தெனுளம்பர வெளியாய்படாரோ. (௱௩)

சத்திசடாதரியாள் தாய்வந்துபதேசம்
வித்தைபுத்திமுத்திசொல்லி விளங்கிநிற்பதெந்நாளோ.

தேவாசைப்பெற்று சிந்தைநிலைத்திருக்காமல்
பூவாசைபெண்ணாசை புகழ்ந்தேன் நிராமயமே. (௱௫)

ஐந்துமடங்கும் அறிவானவாதியந்தச்
சந்திரவீட்டிலுனைத்தரிசிப்பதெந்நாளோ. (௱௬)

தேவேநிராலம்பத்திருவேசின்மயவெளியின்
கோவேகுருமவுனிக் கோனேநிராமயமே. (௱௭)

பாகாயுருகிப் பலநாளுமழுதழுது
மோகாசைதொலைக்கமுழுதழுதேன்பராபரமே. (௱௮)

தெய்வதவாரணக்குருவைத்தெரிசித்துகலங்காத
பொய்தவஞ்செய்யாது பூரணிப்பதெந்நாளோ. (௱௯)

வேதப்பொருள்விளங்கும் வெட்டவெளியான்கண்டு
போதபரிபூரணத்தால் புறப்படுவதெந்நாளோ. (௱௰)

வாதாய்விளையுதையா மனக்காமக்கருவிபுலே
தோதாகவிளையுதென்ன துன்பம்நிராமயமே. (௱௧௧)

மாதவஞ்செய்பூரகத்தில் வாசிவந்துகும்பித்து
வேதாந்தத்தாய்சொல்ல வெளிபடுவதெந்நாளோ. (௱௧௨)

மானார்விழிமயக்கில் மல்லுகட்டிச்சாவேனோ
கோனார்விழிபரப்பிக்கொடுத்தணைப்பதெந்நாளோ.

கருத்தாருட்சபையில் கல்லாலின்சங்கமனூர்
விருத்தர்வரக்கண்டு விண்ணப்பஞ்சொல்லேனோ. (௱௧௪)

சொன்னசொல்சரியென்றுதுரியாதி வீட்டின்வெளி
துன்னமணித் தாய்வந்துசொல்லுநாளெந்நாளோ (௱௧௪)
செத்துப்பிறந்துழவாத திருச்சிற்றம் பலவெளியில்
கற்றுகளிந்துக் கண்டுங்கலெந்நாளோ (௱௧௫)
குண்டலிக்குள்விளக்கேற்றிருந்திதவம்செய்யாமல்
கண்டபடிமனக்கண்ணே கருதாமலலைந்தாயே (௱௧௬)
அச்சமற்றக்கோட்டை வெளியாராமோவந்துநின்று
துச்சகுணம்பேசுகிறுரென்னத்தாதோபராபரமே ()
ஓசைமணிபூரகத்திலுட்கார்ந்துதவஞ்சொல்லும்
ஆசைமனக்கண்குருவை அழைத்தறிவதெந்நாளோ ()
ஆதியேவாழி அனைத்துயிர்க்கு மறிவான
சோதியேவாழிசுகவிளக்கே வாழிவாழி. (௱௧௯)
அகத்தீஷனுமிரு கண்ணறிவானகுருவாழி
• குகநமசிவாயனென்குருவன்றும் வாழிவாழி, (௱௨௰)

திருப்பாடற்றிரட்டு
சம்பூரணம்